No. M. 1597. WHOLE NUMBERS 35 & 36. VOL. III, NOS. 11 & 12.

# சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய

மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

23 AUG 192 ... MADRAS

மலர் III. அக்ஷய—ஆனி-ஆடி. June-July 1927. [இதழ் 11-12.

## சிந்தாமணி வருஷ சந்தா விவரம்.

நிரந்தர (சாசுவத) சந்தாதார்க்கு உள்நாடு ரூ. 50-0-0. வெளிநாடு டாலர் 40.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| மகா ராஜாக்களுக்கு வருஷ சந்தா ... ... | 50 | 0 | 0 |
| ஜமீந்தார்களுக்கு ... ... ... | 30 | 0 | 0 |
| போஷகர்களுக்கு ... ... ... | 25 | 0 | 0 |
| நன்கொடையாளருக்கு... ... ... | 15 | 0 | 0 |
| அபிமானிகளுக்கு ... ... ... | 10 | 0 | 0 |
| உள்நாடுகளுக்கு ... ... ... | 5 | 0 | 0 |
| வெளி நாடுகளுக்கு ... ... ... | 6 | 0 | 0 |

சந்தா.—உள் நாடு ரூ. 5. *All Rights Reserved.* வெளி நாடு $ 4.

### ஸ்ரீமான் கரு. கும. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் மைடான் டெல்லியி லிருந்து 12-4-26ல் எழுதுவது:—

**அன்பார்ந்த சகோதரியே!**

நமது அருமை நாட்டிற்கும் மொழிக்கும் சமயத்திற்கும் விண்ணவரும் போற்றத் தக்க வீர புதல்வர்களை-உலகம் புகழத் தக்க உத்தமர்களை-கவியாசர்களைப் பெற்று உதவவேண்டிய தாய்மார்கள் இந்நாள் அடிமைகளாய், கண்ணிருந்தும் குருடராய்ச் சிற்றின்பப் பொருள்களாய் மிளிர்வது வருந்தத் தக்கதே. அவர்களை-உலகிற்குப் பராசக்தி அம்சமாயிலங்கும் பெண்மணிகளை-இவ்விழிய நிலைக்குக்கொண்டு வந்த ஆடவர் செயலும் கண்டிக்கத் தக்கதாகும். இவர்கள் இந்நிலையை யடைந்ததாலன்றோ, நமது பாரத நாடு ஒளிமழுங்கிக் கிடக்கின்றது. இறைவனருளாலும் தம கூரிய மதியாலும் உணர்ப்பெற்ற பெரியார் பலர் இப்பொழுது ஆடவரால் ஒதுக்கித்தள்ளப் பெற்ற அருமைத் தாய்மார்களும் தீண்டாத வகுப்பாரெனப் படுவாரும் முன்னேற்றமடைவதற்கான முயற்சியைச் செய்து வருகின்றனர். இச்சமயத்தில் தாங்களும் தங்கள் "சிந்தாமணியும்" செய்து வரும் தொண்டினும் உயர்ந்தது வேறுண்டோ? ஒவ்வொரு மாதமும் பல திறம்பட்ட மக்களையும் தங்கள் கொள்கையில் ஈடுபடுத்தும் முறையில் நாவல், கதை, விகடம் ஆகிய பல வழிகளிலும் விஷயங்களைப் புகுத்தி எழுதி வருவது பற்றி அளவில்லா மகிழ்ச்சியடைகின்றேன். நமது சிந்தாமணியின் போதனையாலேயே 'பெண்கள் படிக்கக் கூடாது' என்று பேசிய ஆண்டில் முதிர்ந்த பெரியார் பலர் இப்பொழுது பெண் பாலர்மீது அனுதாபங்காட்டி வருவதையும் அடிக்கடி "சிந்தாமணி வந்து விட்டதா", "சிந்தாமணி வந்து விட்டதா" என்று வினவுவதையும் நான் நேரில் கண்டிருக்கிறேன். இங்ஙனமாக நற்றொண்டாற்றி வரும் நமது "சிந்தாமணி" பல்லூழி வாழப் பரமன் துணை கூடுவதாக. இத்துடன் இரண்டு புதிய சந்தாதார்களின் விலாசமும் அனுப்பி யிருக்கிறேன். நமது "சிந்தாமணி" நாடெங்கும் பரவ என்னாலியன்ற தொண்டியற்றுவேன்.

---

### ஸ்ரீமான் C. V. சங்கரநாராயண ஐயர் அவர்கள், மெடிகல் ஆபீசர், 28—5—25ல் அலஸ்டாரி விருந்து எழுதுவது.

**அன்பார்ந்த சகோதரியே,**

தாங்கள் அன்புடன் விடுத்த "சிந்தாமணி" இதழ்கள் வரப்பெற்றேன். படித்து மனமகிழ்ந்தேன். நம் மடந்தையர் முன்னேற்றத்துக்கு நம் பெண் பாலரே வழிதேடல் அவசியம். அந்தப் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொண்டிருப்பது ஒரு பெருந்தகையும் பெண்மக்களுக்கே ஓர் பெருமையுமாகும். எனவே இன்னும் எவ்வளவு விரித்துரைத்தாலும் மிகையாகாது. சமயமின்மையால் இத்துடன் விடுத்தனன்.

---

### ஸ்ரீமான் S. B. பத்தர் அவர்கள் 23—5—'25ல் டர்பனிலிருந்து எழுதுவது.

அன்புள்ள சகோதரி அவர்களுக்கு உபயக்ஷேமம். தாங்கள் அனுப்பிய கடிதமும் சிந்தாமணி பத்திரிகையும் கிடைத்தன. வந்தனத்துடன் பெற்றுக்கொண்டேன். தாங்கள் நம் தேசம் முன்னேற வேண்டுமென்ப பேரவாக்கொண்டவர்களென்பதைத் தாங்கள் ஆரம்பித்துள்ள சிந்தாமணி பத்திரிகையைக்கொண்டு அறிந்து கொண்டேன். அதற்காக யான் வந்தனமும் செலுத்துகின்றேன். கடவுளும் தங்கள் முயற்சி விருத்தியுறக் கருணைபுரிவார்.

---

### ஸ்ரீமான் M. S. ரத்தினசாமி அவர்கள் 25—9—25ல் தைப்பிங்கிலிருந்து எழுதுவது.

**சகோதரீ!**

தங்களால் நடத்தப்படும் "சிந்தாமணி" என்ற மாத சஞ்சிகையைக் கண்ணுற்றேன். படிக்க மிகவும் ஆனந்தமாயிருந்தது. தாங்கள் பெண்களுக்கோர் தலைமை நாயகமாய் விளங்குவது பற்றி நாட்டிலுள்ள பெண்கள் கூடிய சீக்கிரம் மேன்மையடைவார்களென்பதில் சந்தேகம் உண்டோ? எல்லாம் வல்ல ஈசன் செயலும் அப்படியே முடிக்கும். நான் இன்று ஒரு வருஷ சந்தா அனுப்பியிருப்பதைப் பெற்றுக்கொண்டு தயவுசெய்து எனக்குப் பத்திரிகையை யனுப்பிவரவும்.

# பொருளடக்கம்.

28 AUG 1927


| | பக்கம். |
|---|---|
| சுபோதராம சரிதம்—அர்த்தத்துடன் (சகோதரி வி. பாலம்மாள்) | ... 642 |
| பெண்மக்களின் தேவைகள் (பத்திராதிபர்) | ... 643 |
| சாந்தா அல்லது தன் கையே தனக்கு உதவி சிறு கதை (ஸ்ரீமதி P. மங்களாபாயி) | ... 645 |
| நூர்ஜஹான் அல்லது பாரத கண்டத்துச் சௌந்தரியக் கொடி (ஸ்ரீமதி பாகீரதியம்மாள்) | ... 664 |
| விடாமுயற்சி (ஸ்ரீமதி S. பார்வதியம்மாள்) | ... 668 |
| இராமனும் காக்கையும் (ஸ்ரீமதி செ. ராசம்மாள்) | ... 670 |
| மார்க்கோ போலோவின் யாத்திரைகள் (ஸ்ரீமான் S R அனந்த நாராயணய்யர்) | ... 672, 745 |
| சுபத்திரா கலியாணம் (ஓர் சிறிய நாடகம்) (ஸ்ரீமான் S. N. கோபாலகிருஷ்ண அய்யர்) | ... 673 |
| ஒரு சம்பாஷணை (ஸ்ரீமதி குசப்ரியை) | ... 677 |
| ஆகாரமும் அதன் உபயோகமும் (ஸ்ரீமான் வ. சொக்கலிங்கம் பிள்ளை) | ... 681 |
| ஜோன் ஆப் ஆர்க் (ஜனாப் A. M. அல்லாபிச்சை) | 685 |
| பர்வத குமாரி (ஸ்ரீமான் மகேச குமார சர்மா) | ... 691 |

| | பக்கம். |
|---|---|
| எங்கள் தீர்த்த யாத்திரை (ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.) | ... 695 |
| மலையே நாடு (சுவாமி அற்புதானந்தர்) | ... 698 |
| நீதிக் கொத்து (ஸ்ரீமான் மா. அருணாசல முதலியார்) | ... 702 |
| இந்திய சங்கீதம் (ஸ்ரீமதி சேஷகன்னிகை) | ... 704 |
| பிரதியுபகாரம் (ஸ்ரீமதி பி. மங்களாபாயி) | ... 705 |
| In Memoriam. ஞாபகார்த்தம் (ஸ்ரீமதி எஸ். அம்புஜவல்லி) | ... 716 |
| இரு வீர ரமணிகள் (ஸ்ரீமான் T. S K. சுவாமி) | ... 719 |
| இந்தியச் சிற்பிகள் பெருமை (ஸ்ரீமான் S. R. அனந்த நாராயணய்யர்) | ... 726 |
| நம் பெண்கள் அடிமைகளா? (ஸ்ரீமான் வி. சீனிவாஸன்) | ... 729 |
| கோமளம் விற்ற கும்பம் (சிறு கதை) (ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள்) | ... 732 |
| ஹென்றி பெஸ்டலோஸி. Henry Pestalozzi ஒரு பெரிய உபாத்தியாயர் (ஸ்ரீமான் S. R A. அய்யர்) | .. 747 |
| வறுமையும் வாணரும் (ஸ்ரீமதி ராம. கோமதியம்மாள்) | ... 751 |
| பலமணிக் கோவை (ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.) | ... 752 |


***M. R. Ry. K. V. Sesha Aiyangar Avl., M. A., B. L., High Court Vakil, 23, Nadu Street, Mylapore, writes under date 9th January 1927 :—***

**I have always looked forward to the next issue of the "Chintamani" with much interest and its articles have been read by myself and my friends with pleasure and instruction. Though perhaps primarily intended for ladies, its contents will amply repay perusal to gentlemen also. I have no doubt that the journal will grow in popularity and usefulness.**

# Some Select Opinions on "Chinthamani.

*The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date 5th February 1926 :—*

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani.'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani.* From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and regular contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

*Rao Bahadur M.R.Ry. P.R. Vengu Aiyar, Avl.,* M.B.E., *Bangalore, under date 1-5-1926 :—*

I have perused the copies of the Journal issued last year which you have so kindly sent me. The articles are well written and I found them interesting and instructive. The aim of the Journal, viz, the improvement of the present status of Tamil-Nadu Ladies, is well kept up and the consistent manner in which the high standard is maintained each month, is indeed praiseworthy. The sincere thanks of the public are due to you for the splendid and useful service you are rendering. I wish the Journal a bright future.

*M. R. Ry. G. Ganapati Sastriar Avl., Chief Judge, Pudukotah State, writes under date 12th Feb. 1926.*

I am a regular subscriber for 'Chintamani,' the Tamil journal, edited by Sister V. Balammal. It is eagerly read from cover to cover by the women-folk of my house and I have myself gone through considerable portions of it with great interest. It contains, besides a number of well-written and interesting stories, several articles on a variety of important and useful subjects written in a simple, yet elegant style, which are very interesting, informative, and instructive. The journal is in every way a really high-class production and the talented Editress deserves our grateful thanks for her valuable services through its medium in spreading education, especially among women, in the Tamil *Nadu*. The journal deserves to be widely patronised by all lovers of Tamil and by all those who have at heart the advancement of our women, on whom alone depends ultimately the uplift of our country, and I think that it ought to find a place in every Tamil home. I wish the journal every success.

*Mr. P. Krishnamurthi Aiyar, B.A., B.L., Chief Court Vakil, Pudukotah,* writes under date *12-8-26,* as follows:—

**Education of women is the greatest need of the day and to that end every effort should be made. To achieve it, Sister V. Balammal who is highly talented, and fairly advanced in her ideas, moral, intellectual and social, has taken on herself the onerous task of editing and pulishing the vernacular Journal "Chintamani" which from its very commencement has been maintaining a very high standard both in its contribution and its get-up. The success is entirely due to the indefatigable energies of the learned Editor, and Tamil Nadu offers its thanks to her. To the women whom it is generally intended to serve, the Journal is highly interesting, educative, and reforming, placing before them the high ideals of woman-hood set up in our ancient-books of guidance. The Journal deserves to be subscribed for, by every Tamil-knowing household of India, and by those to whom advancement of the womanhood of India is of great interest.**

Sister V. Balammal is also anxious to establish a fairly well-equipped Printing Press to be run solely by women, purposely to offer opportunities of service to some of our educated sisters who may be willing to take up literary work. The movement deserves to succeed. It requires the co-operation of all our patriots and it is earnestly hoped that such co-operation will be forthcoming when the appeal is made.

*Mr. N. P. Subrahmanya Iyer, Assistant Secretary to the Government of Mysore, P. W. D. (Retired), under date 30-4-1926.*

I have had the pleasure of going through six issues of "CHINTAMANI" which has run into second volume, and am gratified to observe that its talented Editor has striven to keep up the standard of excellence she has originally set before her. It is a high class monthly, as announced on its title page, primarily intended to raise the status of our women, morally, intellectually and socially, and emancipate them from the trammels of unmeaning and pernicious customs which pass for shastric injunctions; as well as from the tyranny of monstrous opinions which consciously or otherwise seek to hold them in perpetual bondage. The crudities of some of their conceptions are exposed, through the medium of simple stories, in a quiet, inoffensive manner. I am sure that, after a perusal of the journal, no woman, for that matter none of its readers, would rest satisfied with the present state of Hindu Society and would fail to be inspired to make an effort, however humble, to set our house in order. I am indeed thankful that one of the Hindu ladies, eminently qualified for the task by her scholarship, both in Tamil and Sanskrit, has come forward to and set her mind on, removing abuses which cloud the vision of our women and and are prejudical to their own interests. Every Tamil home should have a copy of the journal. I heartily wish the scholarly Editor success in her bold and timely endeavour to reform our society.

M. K. ACHARYA AVL., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simpilicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home,as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTIHARA AYYAR AVL., I. S. O., Kilpauk writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

*Chinthamani* contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.—*West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

**

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras*.

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini*.



*The Hindu under date 11-4-'25 writes:—*

Sister V. Balammal has done a service to the cause of the women of this Presidency by her starting "CHINTHAMANI," a Tamil Monthly, intended to raise the present status of women both politically and socially. "CHINTHAMANI" promises to fulfil that function under the able editorship of the scholarly lady. The current number of the Journal which is before us, opens with an editorial which emphasises the need for convincing the opponents of women-emancipation by explaining to them what the new movement really means, and by clearing certain very common misconceptions regarding it. A special feature of the Journal is that moral, national and domestic ideals are brought before the readers in a quiet, unobtrusive way, through the medium of stories and dialogues. This number contains contributions on a variety of subjects, including one on the Baby-Welfare Movement in the Western countries.

Mr. G. SRINIVASA AYYAR, B.A., L.T., *Headmaster, Ramaswamy Chettiar's Town High School, Chidambaram*, writes under date 2-3-'25, as follows:—

**I find "Chinthamani" very suitable for school pupils. Its Contents are educative as well as instructive; and its language may be taken as a model of expression in Tamil.**

I have read through some of the numbers of the *Chintamani* edited by Sister Balammal and I am of opinion that in respect to the subjects treated they are of vital interest to the Tamil women of the present generation and that in matter of style and language this is not in any way inferior to the journals of this kind, This is a journal that should be read by women of all classes and creeds in their homes and by the girls in their schools.—Rev. FRANCIS KINGSBURY, Kilpauk, 25th July 1925.

I have read with pleasure the first chapter of your journal. There is need for intensive work among the women of Madras. I am glad you have taken up the task. The contents are very interesting. If the succeeding ladies take up the standard, it would be of great service to Madras ladies.—Mr. T. V. SESHAGIRI AIYAR, *Retired High Court Judge, Madras*, 24-8-24.

Of the many magazines in Tamil I have come across, 'Chintamani' is by far the best. Let me tell you why. Its Tamil is simple, homely, diomatic. Its articles are well conceived and short, making it possible for the most laborious lady to read and finish one of them in a single day. The subjects written upon are such as our girls ought to be very much interested in.—Mr. S. V. RANGASWAMI AIYANGAR, B. A., *Manager, Oxford University Press, Madras*, Sept. 4, 1924.

# Some Select Opinions on "Chinthamani."

Dewan Bahadur T. RANGACHARIAR, C. I. E., Dy. President, Indian Legislative Assembly, writes under date 29th Dec. '25 as follows:—

I have been a regular subscriber to the monthly magazine "*Chinthamani*" edited by that talented and well-known lady Sister Balammal and occasionally read it also. My daughters take a copy each and read it regularly. The magazine is written in homely and beautiful Tamil. The choice of the subjects is most appropriate and well conceived for educating our ladies in worldly knowledge and social evils. The magazine is run on advanced conservative lines,—neither too radical nor violently reactionary. It is thoroughly readable from page to page. It deserves large support at the hands of the Tamil reading public. It will be a very useful magazine for students of both sexes.

K. A. NARAYAN, Esq., c/o Messrs. Paterson Simons & Co, Ltd., Kuala Lumpur, writes:—

I may say that those who have been regular readers of "Chintamani" are very appreciative, especially womenfolk are jubilant over some of your picturesque and telling articles.

Wishing you continued prosperity and rapid increase in subscribers.

T. S. SANKARASUBBU, Esq., M.A., B.L., Law Officer, Ramnad, writes under date 30—12—1925 as follows:—

I had an occasion to go through one of the volumes of your most invaluable and interesting magazine. I am sorry I did not make my acquaintance with it sufficiently early. "Your Chintamani is a beacon-light to Indian womanhood."

*P. G. Naicker Esq., Durban; 25th April 1925.*

Sister Balammal,

I thank you for your letter of the 20th March and in enclosing herewith Postal Order for 6/8 being the year's subscription, I desire to place on record my deep appreciation of your services to the womanhood of India.

The necessity of a journal as that edited by you has been keenly felt for some time and consequently the appearence of your Journal is at a most opportune moment.

In wishing you every success, it is my fervent wish that you will long be spared to continue that noble work before you.

*Goonaruthinum, Esq., Durban, Natal; 14th March 1925.*

Dear Sister,

I have been endeavouring to procure orders for your journal and so far have been successful in persuading a few to become subscribers. I may add that "Chinthamani" is very interesting and fills a long-felt want in the home life of our Tamil Sisters both in India and abroad.


# CHINTHAMANI.

**A HIGH CLASS TAMIL MONTHLY**

*(Devoted mainly to the cause of Indian Women.)*

EDITOR SISTER V. BALAMMAL.

**Vol. III.] June 1927. [No. 11.**


श्रीशारदायै नमः ।



श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

# சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M.A., M.B. & C.M.

(*All Rights reserved by the Authoress*)

207615

सुबोधरामचरिते

॥ किष्किन्धाकाण्डः ॥

तदाशयज्ञो हनुमान्मतङ्गाश्रमवासिनः ।
चकार सख्यं रामेण सुग्रीवस्याग्निसाक्षिकम् ॥ ४ ॥

तदा அப்பொழுது आशयज्ञ அபிப்பிராயமறிவதில் வல்லவரான हनुमान् ஆஞ்சநேயர் मतङ्गाश्रमवासिनः மதங்காச்சிரமத்தில் வசிக்கும் सुग्रीवस्य சுக்கிரீவனுக்கு रामेण ஸ்ரீராமருடன் अग्निसाक्षिकं அக்கினி சாக்ஷியாக सख्यं நட்பை चकार செய்வித்தார் ॥ ४ ॥

सीतया पातितं पूर्वं सुग्रीवेण प्रदर्शितम् ।
दृष्ट्वाऽऽभरणजालं स मुमोचाश्रूणि राघवः ॥ ५ ॥

सः அந்த राघवः ஸ்ரீராமர் पूर्वं முன்னால் सीतया சீதையால் पातितं போடப்பட்டதும் सुग्रीवेण சுக்கிரீவனால் प्रदर्शितं காட்டப்பட்டதுமான आभरणजालं ஆபரணத்தை दृष्ट्वा பார்த்து अश्रूणि கண்ணீர்களை मुमोच விட்டார் ॥ ५ ॥

सुग्रीवेणाथ मित्रेण संलपन्रघुनन्दनः ।
कथयेति तमप्राक्षीद्वालिविद्वेषकारणम् ॥ ६ ॥

अथ பிறகு रघुनन्दनः ஸ்ரீராமர் मित्रेण நண்பனான सुग्रीवेण சுக்கிரீவனோடு संलपन् (सन्) வார்த்தையாடிக் கொண்டிருக்கும்போது वालिविद्वेषकारणं வாலியுடன் பகை யேற்பட்ட காரணத்தை कथय சொல் इति என்று तं சுக்கிரீவனை अप्राक्षीत् வினவினார் ॥ ६ ॥

सुग्रीवकथितं श्रुत्वा कृतं दुष्कर्म वालिना ।
सोऽवदद्वालिनं हत्वा राज्यं दास्यामि तेऽचिरात् ॥ ७ ॥

वालिना வாலியினால் कृतं செய்யப்பட்ட दुष्कर्म துஷ்ட காரியங்களை सुग्रीवकथितं சுக்கிரீவன் சொல்லக்கேட்டு सः ஸ்ரீராமரானவர் वालिनं அந்த வாலியை अचिरात् நெடுப்பொழுதில் हत्वा வதம் செய்து राज्यं ராஜ்யத்தை ते உனக்கு दास्यामि கொடுக்கிறேன் इति என்று अवदत् சொன்னார் ॥ ७ ॥

(*To be continued*)

ஸ்ரீராமஜயம்.

# சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் III.] அக்ஷய—ஆனி. June 1927. [இதழ் 11.

## பெண்மக்களின் தேவைகள்.

(பத்திராதிபர்.)

தேசத்தில் மக்கள் சுகஜீவிகளாக வாழ்வதற்கு அனுகூலமான தேவைகள் பல உள. தேசமக்கள் என்ற ஸ்தானத்தில் ஆடவர்கள் என்றவர்களே குறிக்கப்படுவதன்றி பெண் மக்களும் அதில் சேர்ந்தவர்கள்தாம் என்ற எண்ணம் இவ்விருபதாம் நூற்றாண்டிலும் இன்றுவரையிலும் ஏற்படாமற் போமானால் இந்தியப் பெண்களின் தேவைகளையுணர்ந்து அதற்கேற்ற வழியைத் தேடுதல் முடியாத காரியமாகும். ஆடவர்களுக்குரிய தேவைகள் குறைவுபடினும் அவர்கள் அதனாலதிகக் கஷ்டப்பட நேரிடாது. ஆனால் பெண்மக்களுக்குரிய தேவைகள் இல்லாது இருந்தால் இதனால் பெண் பாலார் அடையுந் துன்ப மதிகமே. பெண்மக்களின் தேவைகளில் மிக முக்கியமானவை பெண் மக்கட் குரிய படிப்பை போதிக்கக்கூடிய பெண்பாடசாலைகள், தாய் மொழிப்பயிற்சி, தேக திடம் இவைகளேயாம். இவற்றுள் முதன் முதலாகப் பெண்மக்கட் குரிய படிப்பைப்பற்றி கவனிப்போமானால் தற்காலம் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கும் படிப்பு ஆடவர்கள் படிக்கும் படிப்பாகவே இருக்கின்றது. இரண்டாவதாகத் தாய்மொழிப் பயிற்சியை நோக்கின் இதுவும் மிகக் குறைவே. மூன்றாவதாக இவர்களின் தேக திடம்பற்றி சொல்லவே தேவையில்லை. பன்னிரண்டு வயதிலிருந்து மக்களைப் பெறவாரம்பித்து பதினெட்டு வயதிற்குள் நான்கு குழந்தைகளுக்குத் தாயாக ஏற்பட்டு அரைகுறைப் பிரசவம் இரண்டு மூன்றிலேனுமீடுபட்டுக் கண் குழி விழுந்து கைகால்கள் சோர்வுற்று நல்ல ரத்த மற்று நடக்கச் சக்தியற்று தேகத்தில் பலமற்று

Y15m 24, N 24 CM
N 24.2.11-12

முகத்தில் ஒளியற்று குடும்ப நிர்வாகத்தில் உற்சாகமற்றுக் காலங்கழிக்கும் பெண்மணிகள் மிகுந்து வருவதை ஆங்காங்கு கண்கூடாகக் காணலாம். இவ்வாறு பெண்மக்களின் தேவைகளில் முக்கியமாயுள்ள கல்வி, தாய்மொழிப் பயிற்சி, திடசரீரம் இம்மூன்றுமே கவனிப்பாரின்றிக் கிடக்குமானால் மற்றவைகளைப் பற்றி விவரித்துக்கூறவும் வேண்டுமோ? சமூக வாழ்க்கையில் பெண்களுக்குரிய தேவைகள் அளவு கடந்தனவானாலும் முக்கியமாயுள்ள இம்மூன்று தேவைகளைப் பற்றி மட்டும் இச்சமயம் ஆராய்வோம்.

இந்தியப் பெண் எனப்படுவோள் குடும்பத் தலைவி என்ற ஸ்தானத்திற்குரியவளானது பற்றி அவளுக்குரிய கல்வியைப் புகட்டாவிடின் அவள் தனது மிகப்பொறுப்பு வாய்ந்த ஸ்தானத்தில் பெருமதிப்புடனும் உயர் நோக்கத்துடனும் உள்ளன்புடனும் உண்மை யுற்சாகத்துடனும் காலங்கழித்தல் எவ்வாறு சாத்தியப்படும். குறுகிய காலத்தில் கல்விப் பயிற்சியடைய வேண்டியவளான பெண்மணிக்குத் தாய் மொழிப் பயிற்சியில்லாமற் போமானால் அவள் வீட்டிலிருந்தவாறு சிறந்த நூல்களைப் படித்து அதனால் அறிவை விசாலப்படுத்திக் கொள்ள எங்ஙனம் இயலும். மனவூக்கத்தாலும் சரீர உழைப்பினாலும் குடும்பத்தை நடத்திச் செல்பவளான பெண்மகளுக்கு இளம் வயதிலேயே தேக திடமற்றுப் போமானால் அவள் இல்லாள் என்ற அந்தஸ்தை நிலை நிறுத்திக் கொள்ளல் எங்ஙனம்?

இவை தீரவேண்டுமானால் ஆடவர்கள் சீர்திருத்த மடைந்தாலன்றிப் பெண்ணுலகம் தன் தேவைகளையடைய முடியாதென்பது நிச்சயம். ஆடவர்களிடையே நிலைத்துள்ள நவநாகரிக வாழ்க்கை குறையாதவரை பெண் மக்கட்குரிய படிப்பின் அவசியத்தை அவர்கள் நன்குணர்ந்து அதற்கேற்ற பெண் பாடசாலைகளை ஏற்படுத்த முன்வரப் போவதில்லை. ஆடவர்கள் தாய் மொழிப் பயிற்சியின் உயர்வையறியாதவரை பெண் மக்களுக்கு அதைப் போதிக்கப் போவதில்லை. ஆடவர்கள் பிரம்மசரியத்தைக் கொண்டு குறிப்பிட்ட வயதுவரை விவாகம் செய்து கொள்வதில்லை என்று தீர்மானிக்காதவரை பெண்மக்களின் தேகதிடம் பாதுகாக்கப் படமாட்டாதென்பதும் உண்மை. பெண்மக்கள் தங்கட்குரிய படிப்பைப் படிப்பதற்கும் தாய் மொழியில் பயிற்சி பெறுவதற்கும், திடசரீரத்துடன் வாழ்வதற்கும் பெண்களின் விவாக வயதையும் சம்மத வயதையும் உயர்த்தி அதை அரசாங்கச் சட்டமாக்குதல் அவசியமென்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் பெண்மணிகளின் இம்மூன்று தேவைகளும் கிடைப்பதற்கு அதிகம் சிரமப்படத் தேவையில்லை.

ஆடவர்களிடையே கட்டாயமாக மதக்கல்வி போதிக்கப்படுமாயின் பெண்மக்கட் குரிய படிப்பின் உயர்வை அவர்கள் உணர்ந்து அதற்கேற்ற வழிதேடவும் அதைப் பரவச் செய்யவும் முற்படுவார்கள். ஆடவர்கள் இளமைப் பருவத்தில் கட்டாயமாகத் தாய் மொழி போதிக்கப்படுவார்களாயின் பெண்மக்களுக்கும் இதைப்போதிக்கவேண்டிய அவசியத்தை அறிந்து கொள்வார்கள். இருபத்தைந்து வயதுக்கு முன் ஆடவர் விவாகம் செய்து கொள்ளக் கூடாதென்றதோர் சட்டம் இயற்றப்படின், பெண்களின் விவாக வயதும், சம்மத வயதும் தனக்குத் தானாகவே உயர்ந்து விடுவதுடன் குடும்பவாழ்க்கையில் பெண்மணிகளின் தேகநலனும் நன்கு போற்றப்படு மென்பதில் சந்தேகமே கிடையாது. ஆடவர்கள்நவநாகரிக வாழ்க்கையையும், உத்தியோகக் கல்வி ஒன்றையும் சதமெனக்கொண்டு காலங் கழிக்கும்வரை



பெண்மக்களின் நிலை நாளுக்குநாள் தாழ்வுற்று அவர்களின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டு இந்தியக்குடும்ப வாழ்க்கையின் உயர்வு உருவற்று விடுமோவென்றும் அஞ்சவேண்டியிருக்கின்றது. அயல் நாட்டுப் பெண்களைப்போல நம் நாட்டுப் பெண்மணிகள் தங்கள் தேவைகளைப் பெறுவதில் வரம்புமீறிய கிளர்ச்சியைச் செய்யத் துணியார்களென்ற காரணத்தால் ஆடவர்கள் இன்றளவும் பெண்மக்களின் தேவைகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தாது காலங்கழிக்கின்றார்கள்போலும்.

# சாந்தா அல்லது தன் கையே தனக்கு உதவி.

(சிறு கதை)

(ஸ்ரீமதி P. மங்களாபாயி)

ரத்னபுரத்தைப் பெரிய நகரமென்று சொல்ல முடியாது. ஆனாலும் அது ஒரு ஜில்லாவாயிருந்தது. தற்காலம் அங்கு ஒரு கல்லூரி ஏற்பட்டிருந்தது. அதனால் அங்கு கிராமம், நகரம் இவ்விரண்டின் மிக இனிமையான சேர்க்கையைப் பார்க்கலாம். ஏற்கனவே அது கிராமமாயிருந்தபடியால் ஊருக்கு அடுத்தாற்போலிருக்கும் வயல்கள் தோட்டந்துரவுகள் ஒரு புறம்; நாளுக்கு நாள் வளரும் ஜன சமூகம் வசிப்பதற்காகக் கட்டப்படும் புதிய புதிய கட்டிடங்கள் ஒரு பக்கம்; உத்தியோகத்தின் பொருட்டு வந்து வசிக்கும் சட்டைக்காரர், வெள்ளைக்காரர் முதலிய வகுப்பார் இவர்களுக்கெல்லாம் தேவையான சாமான்களைக் கொடுத்து லாபத்தின் பொருட்டு வியாபாரத்தை விருத்தி செய்யும் பெருந் தோரணையுள்ள குஜாராத்தியர், மார்வாடியர்களுடைய புதிய் புதிய கடைகள் ஒரு பக்கம்; இவர்களெல்லோரைப் பற்றிக் கவலை எடுத்துக் கொள்ளும் உபகார கிருகங்கள், போஜனசாலைகள் ஸினிமா, தியேடர் முதலிய ஸாதனங்கள் ஒரு பக்கம்; இவைகளால் இந்த நகரம் அமைக்கப்பட்டிருந்தது. கல்வி அறிவும் இந்த பாகத்தில் தீவிரமாய்ப் பரவிக்கொண்டிருந்தது. அதனாற்றான் கல்லூரி (காலேஜ்) இந்தப் பாகத்திற்குச் சேர்ந்திருந்தது. இங்கு வசிக்கும் சீமான் வியாபாரி நாகலிங்கமையர் இவ்விடத்தில் ஏராளமான பொருளும், புகழும் பெற்றிருந்தனர். ஆனால் அவருக்குப் புத்திர சந்ததி இல்லாமல் ஒரே ஒரு புதல்வியாகிய சாந்தா மாத்திரம் ஆறுதலுக்கு இருந்தனள். இருந்தபோதிலும் சமாதானமுள்ள இத்தம்பதிகளிருவரும் இந்த மகளுக்கு நன்றாகக் கல்விகற்பித்து அவளைப் புதல்வனாகவே பாவித்து, ஆனந்தமாய் ஈச்வர சிந்தனையில் காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தனர். அவருடைய குடிகள் அவரிடத்தில் மக்களைப்போல் அன்பு பாராட்டுவதும், இந்தப் பெண் அவர்களுக்கு உயிருக்குயிராய் இருந்துகொண்டிருப்பதுமாயிருந்தது. எல்லோரும் நாகலிங்கமையர் தம் குடிகள் நிமித்தமாய் ஒரு நாளும் நியாயஸ்தலத்தின் படிகள் ஏறியதே இல்லை என்று பேசிக்கொள்ளுவார்கள். அவருடைய பத்தினி படித்தவளாயில்லாவிடினும் ஸ்திரீகளுக்குரிய அச்சம், மடம், நாணம், கற்பு இவைகளையுடைய அன்பும், பரோபகார சிந்தையுமுள்ள இல்லாளாகவிருந்தனள். அவளுக்கு அதிகமாகப்பேசப் பிடிக்காது. ஆனால் சமயத்தில் ஆப்தர், இஷ்டர், குடிகள் முதலியவர்களுக்கு உபகாரம் செய்வாள். இதே விதமான அறிவுதான் சிறு பருவம்முதல் சாந்தைக்குப்புகட்டப்பட்டிருந்தது. அன்றி புதிய காலத்தின்படி அவர்

கள் அவனைப் பாடசாலைக்கும் அனுப்பிக்கொண்டிருந்தனர். தற்காலம் அவள் நான்காவது (IV form) பாரத்தில் படித்துக்கொண்டிருந்தனள். அதன்றிப் புராணங்கள் முதலிய சமய நூல்களும், இதர நூல் பலவும் அவள் நன்றாகப் படித்திருந்தனள். தான் யார், தன் தகப்பனார் உத்தியோகம் என்ன வென்பவைகளும் அவளுக்கு நன்கு விளங்கிக்கொண்டிருந்தது. பல தடவைகளில் தந்தைக்கும் குடியானவர்களுக்கும் விவகாரம் நடந்துகொண்டிருக்கும்பொழுது அவள் அருகிலிருந்து கவனித்துக்கொண்டிருப்பாள். அதனால் அவ்விவகாரங் கூட அவளுக்குச்கொஞ்சங் கொஞ்சம் விளங்கிக்கொண்டிருந்தது. பெற்றோர்கள் அவளை மிகவும் செல்வமாக நடத்தி வந்தார்கள். இருந்தபோதிலும் அவள் மனதின் போக்கே மிகவும் பெருந்தன்மையுடையதாயும் பரிசுத்தமானதாயுமிருந்தது.

சாந்தையின் மாமாவும் அதே வூரில் வசித்துக்கொண்டிருந்தனர். அவர் பெயர் பஞ்சநத அய்யர். அவர் ஒரு கம்பெனியின் ஏஜெண்டாயிருந்தனர். அவர் வீட்டிலிருப்பவர்கள் மூன்றே பெயர்கள். அதாவது, மாமா, மாமி, அவர்களுடைய மகள் நளினி, மற்றும் மாமியின் தமயன் மகன் வெங்குட்டு. அவர்களுக்கு சௌக்கியமாயிருக்கப் போதுமான வரும்படி இருந்தது. அன்றியும் மாமிக்குத் தன் மகள் சாந்தைக்குச் சரி சமானமாய் இருக்க வேண்டுமென்கிற ஆசை மிகுதியாயிருந்தது. அதனால் சில சமயங்களில் தான் கூட நல்ல உடைகளை வாங்கிக்கொள்ளாமல் சிக்கனஞ் செய்து, நளினியை நல்ல உடைகளாலும், நகைகளாலும் அலங்கரிப்பாள். அதனால் நகை நட்டு உடை முதலியவைகளில் நளினிக்கு சாந்தையை விட ஒரு விதத்திலும் குறைவில்லை. இன்னும் சாந்தையை விட நளினி தான் மேன்மை வாய்ந்தவளைப்போல் காணப்படுவாள். அதுவுமன்றி அவளுக்கு இயற்கையாகவே சற்று தளுக்கு மினுக்காயிருப்பதில் பிரியம் அதிகம். பார்ப்பவர் மனதை அவள் கவரக்கூடியவள், அதிலும் சாந்தையை விடத் தான் சீமாட்டி என ஜனங்களுக்குத் தோன்ற வேண்டுமென்று வீண் டம்பம் பாராட்டும் வழக்கம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது. அதனால் பல தடவைகளில் அவளுடைய தோழிகளும், மற்றவர்களும் அவள் பெரிய சீமாட்டி என்றெண்ணி அதற்குத் தக்க தோரணையுடன் அவளிடம் நடந்து கொள்ளலாயினர். ஆகையால் தான் பெரிய சீமாட்டி என்று அவளுக்குத் தோன்றலாயிற்று, அவள் சுபாவத்தில் இதன் பரிணமம் அனுகாமலிருக்கவில்லை.

இவ்வாறாகக் காலம் நடந்துகொண்டிருக்கும்பொழுது தெய்வச் செயலால் நாகலிங்கமையர் நோயினால் வருந்தலானார். நோய் குணப்படுவது அரிதென்று புலப்பட்டவுடன், அவர் வெளி ஊரிலிருக்கும் ஓர் நண்பரை வரவழைத்து, தம் மரண சாசனத்தை எழுதி அதை ரிஜிஸ்டர்செய்து அதன் பிரதியைத் தம் நண்பரிடத்திலும், மற்றொரு பிரதியை சுயமாகச் சாந்தையிடத்திலும் கொடுத்து பத்திரமாக வைக்கச் சொன்னார். ஆனால் அதைக் கொடுக்கும்போது அவர் சொன்னதாவது :— “இந்தக் கடிதம் உன்னிடத்திலிருப்பதாக நீ ஒருவரிடமும் சொல்லாதே ; உனக்கு எவ்வளவு ஆவலாயிருந்தபோதிலும், உன்னுடைய பதினெட்டாவது வயது முடியும் வரையில் இதை நீ திறந்து பார்க்காதே.” பிறகு அவர் தன் மைத்துனரான பஞ்சநதஅய்யரைக் கூப்பிட்டு சொத்தையும், மகளையும் அவர் வசம் ஒப்புவித்து, “இவளுக்குப் பதினெட்டு வயது முடிகிற வரையில் விவாகம் செய்யக்கூடாது”



என்று சொல்லி, இவ்வுலகத்தை விட்டகன்றனர்! இக்கொடும் துக்கத்தைச் சகிக்க அவர் மனைவியால் முடியவில்லை. தேகத்திற்குப் பிறகு நிழல் தேகமின்றி எப்படி யிருக்கும்? பதி மரணமடைந்த ஒன்பதாவது நாள் கற்புக்கரசியாகிய அம்மாது சுரத்தினால் பொன்னுலகஞ் சென்றனள்! அன்பெனும் போர்வை இல்லாமற்போயிற்று. சாந்தா என்று கூப்பிடும் தாயின் அன்பான வாக்கு மறைந்தது! தந்தையின் அருமையான குரல் காணாமற் போயிற்று! இப்பொழுது என்ன செய்வது? இந்தப் பணம், இந்த நிலம், இந்தத் தோட்டந் தொரவுகள் உன் துக்கத்தைக் குறைக்குமா? இல்லை, ஒன்றுமில்லை. துக்கம் ஏற்பட்ட காலத்தில் ராஜா, பிச்சைக்காரன் இருவரும் ஒன்று தான். ஆனால் சாந்தையைச் சமாதானப்படுத்த நாகலிங்கமையருடைய குடிகளெல்லாம் ஓடி வந்தனர். தம்முடைய முரட்டு பக்தியினாலும், அன்பு நிறைந்த வார்த்தைகளாலும் தம்முடைய யஜமானி அம்மாளை சமாதானப் படுத்தலாயினர். காலமும் அவளுக்கு உதவி புரிந்தது. வயதின் வளர்ச்சியுடன் சாந்தாவும் சற்று சாந்தமடைந்து காரியத்தை கவனிக்கலாயினள்.

* * * * *

“நாகலிங்கமையருடைய மரணத்தின் பிறகு மாமா சாந்தையைத் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்தனர். அவ்விடத்தில் அவளும் நளினியும் சேர்ந்து பாடசாலைக்குப் போகலாயினர். இருவருடைய படிப்பும் இடையூறின்றி நடந்துகொண்டிருந்தது. நளினிக்குத் தளுக்கு மினுக்கிலும், நகை நட்டுகளிலும் பிரியம் அதிகமாயிருந்தது. சாந்தைக்கு அதில்லை. நளினிக்கு கர்வமும், அகங்காரமும் அதிகமாயிருந்தது. அதிக வாயாடியாயிருந்தாள். சாந்தையோ நிர்கர்வியாயும், அடக்கமுடையவளாயும், வினயத்துடன் கூடி கம்பீரமாயுமிருந்தாள். இவ்வாறே அவ்விருவரில் இன்னும் பல தாரதம்மியங்கள் இருந்தன. தாயின் செல்லத்தினால் நளினியிடத்தில் அநேக துர்க்குணங்கள் அமைந்திருந்தன. தன் ஒரே மகளாகிய நளினி புத்திசாலியாயிருந்து, உண்மையையே பேசப்பட்டவளென்ற எண்ணங் கொண்டிருந்தமையால், தன் எதிரில் அவள் யாரை என்ன பேசிய போதிலும் தாயார் அவளைக் கண்டிப்பதுமில்லை, இப்படி செய்யலாகாதென்று சொல்வதுமில்லை. அதனால் அவளுடைய உண்மைக்கு அடியில் அசாத்திய துஷ்டத்தனம் நிறைந்திருந்தது. இணக்கம் என்பது அவள் கனவிலும் அறியாள். பேசும் ஆவேசத்தில் என்ன வேண்டுமானாலும் பேசித் தான் சொல்வதுதான் உண்மையென்று சாதித்து விடுவாள். அப்படி ஏதாவது தனக்கு அபஜயம் கிடைக்கும் போலிருந்தால் அவளுக்குக் கோபம் வந்து விடும். இருந்தபோதிலும் தனக்குப் பிரியமான ஜனங்களிடத்திலும் சீமான்களிடத்திலும் மதுரமாகப் பேசும் கலையை அவள் கற்றிருந்தாள்.

மாமியின் மருமகனான வெங்குட்டு இங்கு கலேஜ் இருப்பதனால் அத்தையினிடம் வந்திருந்தான். அவன் சீமானல்ல. சுபாவத்தில் சாதாரணமாயிருந்து எல்லோருடனும் வினயமாய் நடந்து கொள்வான். சாந்தா இங்கு வந்த பிறகு சிற்சில சமயங்களில் சாந்தையை வெங்குட்டுவுக்குக் கொடுத்து விவாகம் செய்ய வேண்டுமென்றும் அப்படிச் செய்தால் அவளுடைய சொத்து வெளியிற் போகாமல் தன் தமயனார் வீட்டிற்குப்போகும் என்றும் மாமிக்குத் தோன்றும். இவ்வெண்ணத்தை இரண்டொரு முறைகளில் தன் யஜமானரிடம் வெளியிட்டதும் உண்டு. அதைப்பற்றி தற்காலம் ஒன்றும் யோசிக்கப்போவதில்லை என்று அவர் சொன்னமையால் அச்சங்கதி ரகசியமாகவே யிருந்

தது. வெங்குட்டுவுக்குக் காலேஜில் படிப்புடன் நண்பர்களும் வளர்ந்துக்கொண்டு வந்தனர். காலேஜில் படிக்கும் இரண்டு மூன்று வாலிபர்கள் அடிக்கடி அவர் வீட்டிற்கு வந்து போய்க்கொண்டிருந்தனர் வீட்டிலிருப்பவர்களுக்கும் மெல்ல மெல்ல அவர்கள் பரிசயமானார்கள். காரணம், மாமா அவர்கள் எண்ணம் என்னவாயிருந்தாலுஞ்சரி, அவருடைய நடவடிக்கை பெரும்பாலும் மேனாட்டு நாகரிகத்தைத் தழுவியதாயிருந்தது. ஆதலால் வெங்குட்டுவுடனும் அவனுடைய நண்பர்களுடனும் நளினியும் பேசுவதில் அவருக்கு யாதொரு ஆக்ஷேபமுமிருக்கவில்லை. அந்நண்பர்களில் கிருஷ்ணகுமாரன் ஓர்ஜமீன்தாருடையசகோதரன் மகனாவான். அவருக்கு மக்கள் இல்லாமையால் அவர் கிருஷ்ண குமாரனுக்கு மாதம் ஐம்பது ரூபாய் படிப்பிற்காக அனுப்பிக் கொண்டிருந்தனர். அவருக்கு மக்கள் இல்லாமையால் இவன் தான் வார்சு ஆவான் என்று ஜனங்களுக்குத் தோன்றிக்கொண்டிருந்தது. அன்றி அவனும் அப்படிப் பெருமை பாராட்டிக் கொண்டிருந்ததனால் அவனுடைய சிநேகிதர்கள் எல்லோரும் அவனை ஜமீன்தார் என்றே கூப்பிட்டுக்கொண்டிருந்தனர். அந்தப் பெயரே பிரசித்தமாயிருந்தது. அதே பெயரால் கிருஷ்ண குமாரனை வெங்குட்டு அப்பெண்களை பரிசயப்படுத்திக் கொடுத்திருந்தான். இப்பொழுது அவன் அடிக்கடி அவர்களிடம் வந்து போய்க்கொண்டிருந்தான். ஆனால் சாந்தா இயற்கையாகவே அதிகமாகப் பேசமாட்டாள். ஆகலால் அவனுடைய நேரம் வெகுவாய் நளினியுடன் வம்பளப்பதில் போய்க் கொண்டிருந்தது. இவ்விருவரும் இப்பொழுது (VI Form) பாரத்தில் படித்துக் கொண்டிருந்தனர், நளினிக்குப்படிப்பில் அதிக அபிருசி இல்லாமற் போனபோதிலும், நாவல்களைமாத்திரம் சும்மாப்படிப்பான். வீட்டில் எல்லோருமே படிக்கத்தெரிந்தவர்களாயிருந்தமையால் சமாசாரப் பத்திரிகையிலிருக்கும் முக்கியமான வம்பெல்லாம் சகஜமாகவே அவளுடைய காதிற்கெட்டும். அதனால் அவள் கிருஷ்ண குமாரனுடன் வெகு நேரம் வம்பளந்து தன்னுடைய பொது அறிவை வளர்த்துக்கொள்ள முடிந்து கொண்டிருந்தது. கிருஷ்ண குமாரன் ஜமீன்தார் என்று தெரிந்தமையால் இத்தகைய மனிதனுடைய மனதைத் தான் கவர்ந்துக்கொள்ள வேண்டுமென்று நளினிக்கு சகஜமாகவே தோன்றும். சிற்சில சமயங்களில் எதிர்காலத்தில் தான் தான் ஜமீன்தார் மனைவியானாற் போன்ற சித்திரம் அவள் கண்களுக்கு முன் நிற்கும். அவளுடைய அன்னைக்கும் எதிர்கால யோசனை மனதில் வந்துகொண்டிருந்தமையால், இவர்களுடைய நட்பிற்கு இடையூறு செய்யவேண்டுமென்று தோன்றவில்லை. பல தடவைகளில் கிருஷ்ணகுமாரன் சிறிய தந்தை, சிறிய தாய் இவர்களுடைய பெருந்தோரணையைப்பற்றி வர்ணிப்பதைக்கேட்டு அவளுக்குக் கிருஷ்ண குமாரனிடம் பற்று அதிகப்படலாயிற்று. இதன் பரிணாமம் மெல்ல மெல்ல அவன் பேரிலும் செல்லலாயிற்று. விடுமுறை வந்தால் கிருஷ்ணகுமாரனுடைய கால்கள் சகஜமாகவே இவர்கள் பங்களாவை நாடும். அன்றையதினம் நளினியும் நல்ல உடை உடுத்து அழகிய ஜாகெட் போட்டு, கூந்தலை அழகாய் வாரிக்கட்டி டிராயிங் ரூமுக்குச் சென்று வாயிலுக்கு எதிரில் உட்காருவான். ஆனால் நுட்பமாகப் பார்ப்பவர்கள் மாத்திரம் அவளுடைய கவனம் புஸ்தகத்தின்கண் இல்லாமற் சாலையின்கண் இருந்ததென்று அப்பொழுதே உணர்ந்திருப்பார்கள். வெகுவாய் ஞாயிற்றுக்கிழமைகளில் மத்தியானம் காப்பி இவர்கள் இங்குதான் அருந்துவார்கள். தற்சமயத்தில் மாமா மாமியுங்கூட சற்று சிரத்தையுடனும் அன்புடனும் கிருஷ்ண



குமாரனை விசாரித்துக் கொள்வார்கள். மாலையில் இவ்வெல்லா வாலிபர்களும் யுவதிகளும் நவநாகரிகத்தை யனுசரித்து உலாற்றி வரப் போவார்கள். ஆனால் பங்களாவின் எல்லைக்கு வெளியில் வந்ததும், சாந்தா தன் சேவகனை அழைத்துக்கொண்டு தன் வயலண்டை செல்வாள். கிருஷ்ணகுமாரனும் நளினியும் வேறு வழி செல்வார்கள். வெங்குட்டு சில சமயத்தில் வருவான், சில சமயத்தில் வரமாட்டான். இவ்விருவரும் தனித்திருக்கும்பொழுது ஒருவருக்கொருவர் தம் காதலை வெளியிட்டுக் கொள்ளுவார்கள். ஒருநாள் இத்தகைய சமயத்தில் இருவரும் ஒருவருக்கொருவர் மணம் புரிவதாக மொழிகொடுத்துக் கிட்டத்தட்ட பந்தப்பட்டிருந்தனர். சமயம் பார்த்து மாமா அவர்களிடம் தெரிவிப்பது தான் பாக்கி.

* * *

மேற் கூறிய சங்கதிகள் நடந்து எட்டு நாளாகின்றன. இப்பொழுது கிருஷ்ணகுமாரன் வந்தால் நளினியின் முகத்தில் வேறுவிதமான குறிகள் காணலாயின. கிருஷ்ணகுமாரனும் வந்தவுடன் யாருடன் பேசிக் கொண்டிருந்தபோதிலும் அவனுடைய கண்கள் நளினியைத் தேடிக்கொண்டிருக்கும். ஒருநாள் ஒரு வேடிக்கை நடந்தது. அதாவது சாந்தா நளினியைப்போல் புடவை உடுத்துக்கொண்டு வாயிலிலிருக்கும் ஒரு பூந்தொட்டியிலிருக்கும் புஷ்பங்களைக் குனிந்து பார்த்துக்கொண்டிருந்தாள். இதற்குள் கிருஷ்ணகுமாரன் வந்தான். அவனுடைய மூளையில் நளினியைப்பற்றிய யோசனை குடிகொண்டிருந்தது. அதனால் சாந்தையை உற்றுப் பார்க்க அவனால் முடியவில்லை. அப்பொழுது அவன் உடனே சொன்னான் :—'ஏன் இன்று இங்கு நின்றுகொண்டிருக்கிறாய் ? நான் வருவதற்குச் சற்று தாமதமாய் விட்டதல்லவா ?'

சாந்தை சட்டென்று திரும்பிப் பார்த்தாள். அப்பொழுது தான் கிருஷ்ணகுமாரனுக்குத் தான் செய்த குற்றம் நன்றாய் விளங்கிற்று. அவன் ஏகவசனமாய்ப்பேசியதைக்கண்டு சகஜமாகவே சாந்தைக்குச் சிரிப்பு வந்தது, "நளினி உள்ளே இருக்கிறாள்." இவ்வளவு தான் அவள் சொன்னாள். கிருஷ்ணகுமாரன் அவமானமடைந்து உள்ளே சென்றான். சாந்தைக்கு மாத்திரம் இவ்விருவருடைய காதலைப்பற்றி உறுதியாயிற்று.

யோகாவியோகம் மாத்திரம் விசித்திரமாகத் தான் இருக்கிறது. இவ்விடத்தில் கிருஷ்ண குமாரனும் நளினியும் தம் காதற் கதையை மாமாவுக்குத் தெரிவிப்பதாகத் தீர்மானித்துக் கொண்டிருக்கையில், ஒரு சமத்காரமான சங்கதி நேர்ந்தது. ஊரில் ஒரு சங்கம் இருந்தது. அன்றையதினம் காலேஜிலிருந்து நான்கைந்து மாணாக்கர்கள் ஊருக்குள் போயிருந்தனர். அவர்கள் இச்சங்கமிருக்கும் தெருவுடன் திரும்பி வந்தனர். அதே சமயத்தில் ஒரு ப்ரொபெஸர் (Professer) வந்துகொண்டிருந்தனர். அவர் இம்மாணாக்கர்களைப் பார்த்தார். மறுநாள் காலேஜில் சபைக்குப் (சங்கத்திற்கு) போயிருந்தவர்களெல்லோரும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டது] ஆனால் இவர்களெல்லோரும் 'நாங்கள் சங்கத்திற்குப் போகவில்லை. அதனால் மன்னிப்புக் கேட்கமாட்டோம்' என்றனர். இவ்வாறாக அந்த வாதம் விளையாகமுடிந்தது. கடைசியில் எட்டு நாள் கெடுவு கொடுத்து இவ்வெட்டு நாட்களில் மாணாக்கர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும், இல்லாவிட்டால் காலேஜைவிட்டகல வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இக்கெடுவில் மாணாக்கர்களிடை வாக்குவாதம் உண்டாயிற்று. 'எம்பேரில் குற்றமில்லாமலிருக்கும்பொழுது யாம் மன்னிப்புக் கேட்கமாட்டோம்' என்பவருள் கிருஷ்ணகுமாரனும் வெங்குட்டுவும் இருந்தனர். இவர்கள் காலேஜிலிருந்து

வெளிப்படுத்தப்பட்டாலும் சரி, மன்னிப்புக் கேட்கப் போவதில்லை என்று தீர்மானித்தனர். இதைக் கிருஷ்ணகுமாரன் தன்னுடைய பல நண்பர்களிடத்திலும் அவர்களுடைய பெற்றோர்களிடத்திலும் சொன்னான். அவர்களுள் பலர் படிப்பில்லாவிட்டாலும் வேண்டாம், ப்ரொபெஸருடைய இந்த அநியாயத்தை ஏற்றுக்கொள்ளவேமாட்டோம்என்றனர். கிருஷ்ணகுமாரன் தன் எண்ணத்தை நளினிக்குத் தெரிவித்தான். ஆனால் அவளுக்குஅது திருப்திகரமாயிருக்கவில்லை, அவள் சொன்னாள், 'அதற்கென்ன சற்று தவறினோம் என்றால் போச்சு.' கிருஷ்ண குமாரனுக்கு இது கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை.

காலேஜுக்குப்போய் ஏற்கனவே நிச்சயித்தபடி மறுமொழி யளித்தான். மற்ற மாணாக்கர்கள் ஒன்றும்பேசாமல் மெய்சோர்ந்து நின்றனர். அதைக்கண்டு அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. ப்ரொபெஸர் மற்ற மாணாக்கர்களை மெச்சிக்கொண்டு கிருஷ்ணகுமாரனுக்கு இரண்டு இதமொழி கூறி, மறுபடியும் இரண்டு தினம் கெடு கொடுத்தார். இதெல்லாமாகிக் கிருஷ்ணகுமாரன் தன் ஜாகைக்கு வர அங்கு அவன் சிறிய தந்தையின் கடிதம் வந்து கிடந்தது. இதற்குள் அவருக்கு இச்சங்கதியை யார் தெரிவித்திருந்தனரோ என்னவோ? அவர் அவனுடைய இக்காரியத்திற்காக கண்டபடி வைதிருந்ததுடன் இனி அவனுக்கு மாதந்தோறும் பணம் அனுப்பப் போவதில்லை என்றும் எழுதியிருந்தனர். அதைப் படித்து அவன் தன் ஆசையெல்லாம் இழந்தான். இச்சங்கதி வெங்குட்டுவுக்கும் தெரிவித்து இவ்வளவு தூரம் நடந்தும் மன்னிப்புக் கேட்பது தனக்கிஷ்டமில்லை என்றும் வயிறு வளர்ப்பதற்கு ஏதாவது ஒரு உபாயம் சொல் என்றும் வெங்குட்டுவைக் கேட்டான். மாமா அவர்களுடைய கச்சேரியில் ஏதாவது வேலை காலியாயிருக்கிறதா வென்று விசாரிக்கச் சொன்னான். பிறகு அவன் நகரத்திலுள்ள சீமான்களான தனது நண்பர்களிடம் சென்று கேட்கலானான். அவர்களுள் ஒருவன் வக்கீல், ஒருவன் டாக்டர், ஒருவன் ஜமீன்தார். இவ்வெல்லா தேசபக்தர்களிடத்திலிருந்தும் 'இப்பொழுது எங்களிடத்தில் வேலையில்லை—என்னால் பணத்தை மாறுகக்கொடுத்துச் செய்வித்துக்கொள்ளக்கூடிய வேலை யில்லை. நீங்கள் வேண்டுமாயின் இலவசமாக உபன்னியாசங்கொடுங்கள். சபையைச்சேர்த்து பண்டு சேருங்கள். சம்பளம் கொடுத்து ஆளைவைக்க எங்களுக்குச் சக்தியில்லை. இவ்விஷயத்தில் அவரவர்கள் தன் சொந்தக் காலினாற்றான் நிற்கவேண்டுமென்று மகாத்மாஜியவர்களுடைய அபிப்பிராய மிருக்கிறது' என்றனர். அதற்கு அவன் சொன்னான், 'அவருடைய அபிப்பிராயம் சரிதான். ஆனால் இன்று என்ன தின்பது?'

"நான் இங்கு சாப்பிடுங்கள் என்று சொல்லியிருப்பேன், வீட்டில் சமயலுக்கு ஆள் இல்லை" என்று ஒருவன் சொன்னான். "நான் என்னமோ சாப்பாடு போடுவேன். ஆனால் அண்டர்கிராஜுவேட்சுக்கு (Undergraduates) தண்டச் சோறு தின்னும் வழக்கம் நன்கன்று" என்று இன்னொருவன் சொன்னான். மற்றொருவன் சொன்னான், "அப்படி என்றால் என்ன? எங்கும் சௌகரியப்படாது."

ஒரு தேச பக்தர் சொன்னார், "ஓய்! நீங்கள் இவ்வளவு படித்தும் பிரயோஜனமேயில்லை. ஜனங்களுடைய பேச்சை நம்பி யாராவது காலேஜை விடுவார்களா?" பிறகு கிருஷ்ணகுமாரன் வீட்டிற்கு வந்தான். வெங்குட்டு வீட்டில் விசாரித்தபோது, ஆபீஸில் வேலை ஒன்றும் காலியில்லை. ஆனால் சாந்தையின் எஸ்டேட்டின் கடிதங்கள், பத்திரங்கள் முதலியன பார்க்க ஒரு குமாஸ்தா வைக்கவேண்டும். அதற்குப் பதினைந்து முதல் இருபது வரையில்



கிடைக்கும் என்று தெரிய வந்தது. இவையெல்லாம், நளினி கேட்டுக்கொண்டேயிருந்தாள். மறுநாட் காலையில் கிருஷ்ண குமாரன் இவர்கள் வீட்டிற்கு வந்தான். அப்போது நளினி டிராயிங் ரூமில் சிந்தாமணியின் ஒரு சஞ்சிகையைப் படித்துக் கொண்டிருந்தாள்.

கிருஷ்ண குமாரன், வந்ததும் புன்னகையுடன் கேட்டான், "ஏன்? நேற்றைய தினத்து சங்கதி தெரிந்ததோ?"

அவள் தலையை நிமிர்த்தாமலே "உம்" என்றாள்.

"வெங்குட்டு சொல்லி யிருப்பான்."

"உம்."

"பிறகு என்ன சொல்கிறாய்? வேலையைப் பற்றி மாமா என்ன சொன்னார்?"

"சாந்தையின் எஸ்டேட்டில் ஓர் பதினைந்து ரூபாய் வேலை யிருக்கிறது போலிருக்கிறது."

இதற்குள் வெங்குட்டு வந்தான். அவன் மாமா சொன்னதைச் சொல்லிப் பிறகு "இந்த சந்தர்ப்பத்தை இழந்து விடாமல் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளவேண்டும். இல்லாவிடில், இப்படி ஒரு ஜாகையிருக்கிறது" என்று மாமா சொன்னதாகச் சொன்னான். இவன் இதை சொல்லிக் கொண்டிருக்கையில் மாமா கூப்பிட்டதனால் அவன் சென்றான். அப்பொழுது கிருஷ்ண குமாரன் சொன்னான், "உனக்கென்ன தோன்றுகிறது நளினி? இவ்வளவு தூரம் பிடிவாதம் பிடித்த பிறகு இப்பொழுது தணிந்து போவது புத்திசாலித்தனமாகுமா?"

"பின்னே என்ன செய்வது?"

"ஆவது ஆகட்டும், நான் மன்னிப்புக் கேட்கப் போவதில்லை."

"அப்படியானால் உத்தியோகம் இருக்கு, செய்யுங்கள். ஏனென்றால் அதை விட்டால்

"உத்தியோகம் செய்யப்போவது உண்மைதான். ஆனால் மாமா என்னை இத்தகைய உத்தியோகம் செய்யச் சொல்லிக் கேட்பது என்னை அவமானப்படுத்துவதுபோல் உனக்குத் தோன்றவில்லையா? நான் அவரை அவருடைய பர்மில் (Firm) எனக்குத் தகுதியான ஜாகை ஏதாவதிருக்கிறதா வென்று கேட்டிருந்தேன்."

"அவர் என்ன செய்வார்! இருந்ததை உங்களுக்குக் கொடுத்தார், வேண்டாவிட்டால் வேறே பார்த்துக் கொள்ளுங்கள்."

"ஆம், அதைத்தான் உன்னைக் கேட்டுச் செய்ய வேண்டுமென்று வந்திருக்கிறேன்."

"அது எனக்கென்ன தெரியும்? நான் காலேஜை விடவேண்டாமென்று சொன்னேன், விட்டு விட்டீர், இப்பொழுது என்ன வேண்டுமோ செய்யுங்கள்."

"இப்படி என்ன சொல்கிறாய்? உனக்குக் கொஞ்சம் கோபம் வந்திருக்கக் கூடும். ஆனாலும் சற்று யோசித்து பார். அன்று எல்லோரும் சேர்ந்து ஒரேவிதமாய்ப் பதிலளிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அவர்களெல்லாம் திரும்பி விட்டனர். அதற்கு நான் என்ன செய்வேன்?"

"அவர்கள் எல்லோரும் கெட்டிக்காரர்கள்!"

"அப்படியா! நல்லது. ஆனால் முன் செய்ய வேண்டியதைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டுமென்கிற யோசனை உனக்கில்லையல்லவா? பிறகு நீ என்னைக் கேட்கவில்லை என்று சொல்லலாகாதென்று கேட்கிறேன்."

"நான் ஏன் சொல்லப் போகிறேன்? நீங்கள் என்ன செய்தால் எனக்கென்ன?"

"முன்னாலே ஆயுள் பரியந்தம் என்னுடன் இல்லறம் நடத்தவேண்டுமென்று சொன்

"உங்களைப் போன்றவர்களுடனா?"

"ஆம், காரணம் நாம் ஒருவருக்கொருவர் மொழி கொடுத்துப் பந்தப்பட்டிருக்கிறோம்."

"யார் யாருக்கு மொழி கொடுத்தனர்? ஜனங்கள் சமயத்திற்குத் தகுந்தபடி எவ்வளவோ பேசுகிறார்கள். ஆனால் அது எல்லாமே உண்மையாவதில்லை. அப்பொழுதிய உங்கள் நிலைமையையும் இப்பொழுதிய நிலைமையையும் ஒப்பிட்டுப் பாருங்கள்."

"நிலைமையில் மாறுதல் இருக்கக் கூடும். ஆனால் எனக்குள் இல்லையல்லவா?"

"இன்று உங்களுடைய நிலைமையைப் பற்றி யோசித்தால் என் தந்தையைப் போன்ற பெரியோர் தம் மகளை உங்களுக்கு எப்படிக் கொடுப்பார்கள்?"

"அவர் கொடுக்கத் தயாராயில்லாவிட்டாலும் நீ இருக்கிறாயல்லவா?"

"நான் எப்படி ஆவேன்?"

"ஏன்"?

"என்னை வெளிப் படையாகப் பேசும்படி செய்கிறீர். ஆனால் சொல்லுகிறேன். / இன்று உங்களுக்கு உங்களுடைய வயிற்றுக்கே கஷ்டப்பட வேண்டியதாயிருக்கிறது. கல்வி விருத்தி செய்யும் சாதனமோ இல்லை. இத்தகையவரை மணம் புரிந்து ஆயுள் பரியந்தம் துன்பப்படும்படி நானே செய்துகொள்ளட்டுமா?"/

"எனக்கு அப்படித்தான் தோன்றியது. நீ காண்பித்துக் கொண்டிருந்த அன்பைப்பார்த்து நான் அப்படி எண்ணங் கொண்டிருந்தேன்."

/ "நாவல் (கட்டுக்கதை)களில் இருக்கும் விஷயங்களை ஜனங்கள் விவகாரத்தில் உண்மை என்று நினைப்பார்களானால் அது சுத்தத் தப்பிதமல்லவா?"

"சீ சீ அம்மா! ஒவ்வொருத்தர் இப்படியும் இருக்கின்றனர். நான் போகிறேன் படிக்க, எனக்கு வம்பளக்க நேரமில்லை."

"உண்மைதான், நளினி! இப்பொழுது உனக்கு நேரமிராது. நான் ஜமீன்தாராயிருந்து, கலாசாலைக்குப் போய்க்கொண்டிருக்கும்பொழுது எனது விலையற்ற படிப்பு நேரத்தை வீணாகப்போக்கி என்னுடன் வம்பளக்கவேண்டிய சாவகாசமிருந்தது. இன்று நான் பிச்சைக்காரனாயிருக்கிறேன் அல்லவா? நல்லது."

இவ்விருவரும் பேசுவதை அடுத்த அறையிலிருந்து சாந்தா கேட்டுக்கொண்டிருந்தாள். நளினி பேச்சு அதிகமாகி வெட்டொன்று துண்டு இரண்டாய்ப் பேசப் பேச சாந்தைக்கு வருத்தம் அதிகரித்துக் கொண்டேபோய் கிருஷ்ணகுமாரன் பேரில் தயவு அதிகரித்துக் கொண்டே வந்தது. பிறகு கடைசி வார்த்தை கேட்டதும் அவள் தன் அறையிலிருந்து தோட்டத்திற்குச் செல்லும் வாயிலின் கதவைத் திறந்துகொண்டு தோட்டத்திற்கு வந்து கேட்டண்டை நின்றாள். இதற்குள் கோபாவேசத்தால் நன்கு வார்த்தை பேசிவிட்டுக் கிருஷ்ண குமாரன் வெளிக் கேட்டண்டை வந்தான். அங்கு தற்செயலாய்ச் சந்தித்ததாகக் காண்பித்து சாந்தா அவனுக்கு நமஸ்கரித்தாள். அவன் பதில் நமஸ்காரம்செய்து சிஷ்டாசாரத்தின்படி "ஏன், சௌக்கியந்தானே?" என்று கேட்டான். அதற்கு அவள் "எல்லாம் நல்லதுதான், நான் உலாவப் போவதற்காக என் சேவகனை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன், அவனைக் காணவில்லை. நீங்கள் வருகிறீர்களா? இருவரும் சற்று உலாற்றி வருவோம். எனக்கும் துணையாயிருக்கும், அப்படி உங்களுக்கு விசேஷ காரியம் ஒன்றுமில்லையல்லவா?"

"முதலில் கிருஷ்ண குமாரனுக்குத் தோன்றியது 'நான் இவளுக்குச் சேவகனுப்போகிறே



னென்று இவளுக்குத் தெரிந்தமையால், இவள் என் மேல் எஜமானியின் ஹக்கைச் செலுத்துகிறாள். ஆனால் இவளுக்கு வெடுக்கென்று பதில் சொல்லட்டுமா?" ஆனால் அவ்வாறு செய்ய அவனுக்கு மனம் வரவில்லை. காரணம், அவள் கேட்டது அவ்வளவு பணிவுடனும், வினயத்துடனும் இருந்தது. கிருஷ்ண குமாரனது தாபமடைந்த மனதிற்கு ஆறுதல் தேவையாகத் தானிருந்தது. அவன் சொன்னான் "வாருங்கள் போவோம்; தடையொன்றுமில்லை."

இருவரும் வெளியே புறப்பட்டனர். சற்று தூரம் போனபிறகு சாந்தை சொன்னாள், "என்னால் உங்களுக்கு இடையூறு ஒன்றும் ஏற்படவில்லையல்லவா?"

"சே, கொஞ்சங்கூடவில்லை. தற்காலம் நான் சும்மாத் தானிருக்கிறேன், இது உங்களுக்குத் தெரிந்தேயிருக்கும்."

"ஆம், கொஞ்சம் கொஞ்சம் காதிற்கெட்டியது. நீங்கள் நல்ல மனோ தைரியத்தைக்காட்டினீர்களென்று எனக்குத் தோன்றுகிறது."

"என்ன? நான் மனோ தைரியத்தைக் காட்டினேனா? சே, நான் வறுமையை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறேன்."

"சே! இது வெறும் பிரமையாகும். வெகுவாய் நன்மை தீமையினால் மூடப்பட்டிருக்கிறது. அதனால் அதற்கு பயந்து நன்மையை இழந்து விடுவதா பென்ன?"

"ஆனால், இன்னும் எனக்கு நாளை வரைக்கும் கெடு இருக்கிறது."

"இனி மன்னிப்புக்கேட்டுக் கொள்ளுவீரென்று எனக்குத் தோன்றவில்லை. ஏனென்றால், கேட்பதாயிருந்தால் முதலிலேயே கேட்டிருக்கவேண்டும், அந்த சமயம் போய்விட்டது. இவ்வளவு தூரம் இழுத்துப் பிடித்த பிறகு மன்னிப்புக் கேட்பதென்றால் இழிவுதான்."

"ஆனால், நாளைக்குப் போவதெங்கு? என் சிறிய தந்தை பணம் அனுப்புவதை நிறுத்திவிட்டார். காலேஜை விட்டுவிட்டால் பிறகு நான் உங்களுடைய வேலையைத் தான் ஒப்புக் கொள்ளவேண்டும்."

"சே, அப்படி எதற்கு?"

"பிறகு வயிற்றுக்கு வழி யென்ன? அதனால் நான் அந்த உத்தியோகத்தில் அமரத்தான்வேண்டும்; அல்லவா?"

"நான் அப்படி ஒருபோதும் சொல்லமாட்டேன். உங்களைப் போன்ற அண்டர் கிராஜுவேட் (Under-graduates) களுக்கும் பெரிய குடும்பத்திற் பிறந்தவர்களுக்கும் அது தகுதியான உத்தியோகமல்ல. அவ்விடத்தில் பதினைந்தல்ல இருபது கொடுத்தாலும் நான் இருக்கச் சொல்லப் போவதில்லை."

"நீங்கள் இப்படிச் சொல்வதைக் கேட்டு எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. பின்னே நான் எங்கு உத்தியோகம் செய்யவேண்டுமென்கிறீர்கள்? ஏனென்றால் எனக்கு காலேஜில்லை என்றால் அவ்விடத்தினின்றும் சாமான்களைத் தூக்கவேண்டும். அவைகளை எங்கு போடுவது? அவைகளை உங்கள் வீட்டில் போடச் சொல்வீராகில் நான் அப்படிச் செய்யத் தயாராயில்லை."

"நான் அப்படிச் சொல்லப்போவதே இல்லை. அதைப் பற்றி பிறகு யோசிப்போம். ஆனால் நான் இப்பொழுது உங்களைக் கேட்பதென்ன வென்றால், உங்களைப்போல் தேச முன்னேற்றத்தைப் பற்றி தடபுடலாய்ப் பேசப்பட்டவர்களும், எழுதப்பட்டவர்களுமான வாலிபர்கள் உத்தியோகம், உத்தியோகம் என்று ஏன் கத்துகிறார்கள்? சுதந்திரத்தைப் பற்றிப் பணிக்காகப் பேசப்பட்டவர்கள் சுதந்திரமற்ற உத்தியோகத்தைத் தேடலாகாது!" இந்த தோஷம் நமது படிப்பைச் சார்ந்தது."

“படிப்பிற்கு தோஷத்தைக் கொடுக்குமுன் நான் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன். இது தோஷமென்பது உங்களுக்கு நன்கு விளங்குகிறதல்லவா? அப்படியானால் நன்றாகத் தெரிந்தவர்கள் படிப்பை வைதுகொண்டிருப்பதைவிட புதிய மார்க்கத்திற் புகுந்து பிறகு உதாரணத்தைக் காட்டிக்கொள்ளவேண்டும்.”

“இப்படிச் சொல்வது சுலபம்.”

“செய்வதும் சுலபமாகத் தானிருக்கிறது, உண்மையான சிரத்தையுடன் கூடிய இச்சை தான் தேவை.”

“உங்களுடைய சகோதரி சற்று முன் என்னிடம் சொன்னதுபோல் நான் உங்களிடம் சொல்லுகிறேன், இதொன்றும் நாவல் எழுதுவதற்கல்ல.

“அதை நான் அறிவேன். இதை உண்மையாகச்செய்து நாவல் எழுதப்பட்டவர்களுக்குப் பிரத்தியட்சமாகக் காட்டவேண்டும்.”

“ஆனால் என்னால் எதாவது செய்ய முடியுமென்கிறீர்களா?”

“ஆம், பூரண மனதிருந்தால் கட்டாயம் முடியும், இருக்கிறதா பூரண மனது?” சும்மா இருக்கிறதென்று சொன்னாற் போதாது. நீங்கள் ஜமீன்தாராகவும், கற்றறிந்தவராகவும் இருக்கிறீர்கள். இந்த வேலை எப்படிச் செய்யட்டும், அந்த வேலை எப்படிச் செய்யட்டும் என்று தோன்ற இடந்தாலாகாது. அப்படியானாற்றான் சுதந்திரமாய்ச் சம்பாதித்த ரசம், சுதம் உங்களுக்குப் பூஜிக்கக் கிடைக்கும். அதன் ஆனந்தம் ஒன்றும் சொல்லத் திறமானதன்று. ஆனால் மேற் சொன்ன விஷயங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும். பாருங்கள், யோசியுங்கள், உங்களைப் போன்ற புத்திமான்களான வாலிபர்கள் உத்தியோகம், உத்தியோகம் என்றால், தேசமானது சமாசாரப் பத்திரிகைகள், சபைகள் இவைகளால் முன்யாப்போவதில்லை. காலேஜ் விட்டதைப் பற்றியும், பணம் வருவது நின்று விட்டதைப் பற்றியும் நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள்? இது நல்லதாயிற்று என்றுதான் நான் சொல்லுகிறேன். கடவுளானவர் இதையும் ஒரு நல்லெண்ணத்துடன்தான் செய்திருப்பார். இப்படி ஆகாவிடில் இன்று உங்களைப் போன்ற ஓர் வாலிபர் தேசத்திற்குக் கிடைத்திருக்கமாட்டார். இவ்வளவு உலக அநுபவமும் உங்களுக்குக் கிடைத்திராது. ஆனது நல்லதென்று நினையுங்கள்.”

“பிறகு முன்னுக்கு என்ன செய்வதென்பதை எங்கு நிச்சயப்படுத்தப்பட்டிருக்கிறது?”

“அது நிச்சயப்பட்டதுபோல் தான். இப்பொழுது நேரமாகி விட்டது, உங்களுக்கும் பசியாயிருக்கும். இன்னும் வீடுபோய்ச் சேர நேரமாகும். இனி நீங்கள் அமைதியுடன் சிரமபரிகாரம் செய்து கொள்ளுங்கள். பிறகு ஐந்து மணிக்கு வாருங்கள். அப்படியே நாம் உலாற்றப் போவோம். நான் என்னுடைய வயலைக் காட்டிப் புதிய யோசனையும் சொல்லுவேன்.” இவ்வாறாகப் பேசிக்கொண்டே இருவரும் சாந்தையின் பங்களாவினருகில் வந்தனர். சாந்தை உள்ளேபோனாள், கிருஷ்ண குமாரன் முன்னுக்குச் சென்றான். வழியில் கிருஷ்ண குமாரன் யோசனை செய்துகொண்டே சென்றான். “சாந்தையைப்பற்றி நான் கொண்ட எண்ணம் எவ்வாறு பிசகாயிற்று. அதிகமாய்ப் பேசாத இப்பெண் எவ்வளவு பொது அறிவும் விவகாரஞானமும் உடையவளாயிருக்கிறாள். இளம் பிராயத்தில் எவ்வளவு பெருந்தன்மையான எண்ணங்கள்!” என்று சிந்தித்துக் கொண்டே அவன் போர்டிங்குக்குச் சென்றான். மறு நாள் மாலை ஐந்தடித்ததும், அவன் மறுபடியும் சாந்தையின் பங்களாவுக்கு வந்தான். சாந்தை கேட்டிற்கு வெளியிலேயே நின்று



கொண்டிருந்தாள். இருவரும் சாலை மார்க்கமாக நடக்கலாயினர்.

சாந்தை கேட்டாள்:—“பிறகு நிச்சயிக்கப்பட்டது?”

“நீங்கள் சொல்வதை முதலில் கேட்பதென்று.”

“ஓ! உண்மையாகச் சொல்லுகிறேன். நான் உங்களுக்காக ஒரு தொழிலைத் தேடி வைத்திருக்கிறேன். தற்காலம் மகாத்மா காந்தி அவர்கள் இந்தியாவின் உத்தாரம் கதரிலிருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். அநேகருக்கு அது இசைந்திருக்கிறது. அதையே நீங்கள் கைப்பிடியுங்கள்.

“என்ன! நூல் நூற்கட்டுமா? அதனால் என் வயிறு எப்படி நிறையும்?”

“ஓ! நூல்நூற்பதற்குங்கூடத் தடையில்லை! ஆனால் இப்பொழுது நான் நூல் நூற்கும்படி சொல்லப் போவதில்லை. ஆனால் சொல்வதென்னவென்றால், முதலில் நீங்கள் கதர் விற்பனை செய்யுங்கள். முதலில் இது சற்று கஷ்டமாயிருந்த போதிலும் கௌரவம், மானம், அவமானம் எல்லாவற்றையும் சுற்றி ஒரு புறம் வைத்துவிட்டு நாளைய தினம் தெரிந்தவர்கள் வீடுகளுக்குச் சென்று கதர் விற்று வாருங்கள். எல்லாம் பத்து ரூபாய்க் காரியந்தான். அது நன்றாக விருத்தி அடையும். அது எப்படிச் செய்வதென்பதை நான் சொல்கிறேன்.” சற்று நேரம் யோசித்துக் கிருஷ்ணகுமாரன் சொன்னான் “நல்லது இருக்கட்டும், கதர் விற்பதாக நிச்சயித்தாலும், வசிக்க ஜாகையும், புசிக்க அன்னத்திற்கும் வழி என்ன?”

“ஆம், அதுவும் சொல்லுகிறேன். அதோ பார்த்தீர்களா குடிசை? அது நம்ம குடியானவனுடைய குடிசையாகும். இந்தப் பொன்னப்பன் வயல்களைக் காப்பதற்காக அதில் வசிக்கிறான். அவனுடைய அந்த குடிசை சுத்தமாகவும், காற்றோட்டமுள்ளதாகவும் இருக்கிறது. நான் சொன்னால் அவன் சந்தோஷமாக அதை உங்களுக்குக் கொடுப்பான். எனது தந்தை அவனுக்கு உபகாரம் செய்திருக்கிறார். அதனால் என் பேரில் அவனுக்கு தேவதா விசுவாசமுண்டு. என் வார்த்தைக்கு மறுத்துப் பேசான். இப்பொழுது போஜனத்தைப்பற்றி என்ன என்பீர்களோ. நீங்கள் சகபோஜனத்தில் சார்ந்தவர். ஜாதி பேதம் பாராட்டாதவர்கள். உங்களுக்கு அவன் பெண்ஜாதி செய்தால் செல்லுமென்றால், அவள் சந்தோஷமாக சமையல்செய்து போடுவாள்.”

“சே, சாந்தம்மா, அது எப்படி முடியும்? அந்தக்குடியானவர்கள் வீட்டு அன்னம் தின்ன முடியாது.”

“அப்படியானால் முன்பு ஒரு முறையில் சகபோஜனத்தின்போது நீங்கள் என்னை ‘ஆர்த்தடாக்ஸ்’ என்று எவ்வளவு பரிகசித்தீர்கள்? நம்மைப்போல் நல்ல பரிசுத்தமுள்ளவர்களாயிருந்தால் ஆக்ஷேபமென்ன இருக்கிறது? அப்பொழுது நானென்ன சொன்னேன்? ‘தத்துவ திருஷ்டியுடன் பார்த்தால் இது சரிதான். வெகு காலத்து ஸம்ஸ்காரத்தினால் இவர்கள் ஒருமிக்க இப்படியாவது சாத்தியமில்லை’ என்றல்லவா? அதனால் அவர்களைத் தயார்செய்ய முயலுங்கள். அவ்வளவு செய்தாற் போதுமானது, அப்படியிருக்க இப்படி ஏன் பயப்படுகிறீர்கள்.”

“சே, சே! தீட்டைப்பற்றிக் கேள்வியில்லை. இருந்தபோதிலும் மனம் துணியமாட்டேனென்கிறது.”

“அப்படியா, நல்லது; இருக்கட்டும் இந்த வாக்குவாதம். அங்கு அடுப்புப்போட்டுக் கொடுத்தால் அல்லது கணப்புச்சட்டி வாங்கிக் கொடுத்தால் அதன் மேல் நீங்கள் அன்னத்தைச் செய்து கொள்ளுங்கள். மற்றது பொன்

ணப்பனுடைய மனைவி கையால் தொடாமல் செய்து கொடுப்பாள். பால் இங்கு நல்லதாகக் கிடைக்கும். சற்று பழகுகிற வரையில் அக்குடிசையில் வசிப்பது கஷ்டமாகத் தானிருக்கும். ஆனால் தேசத்தை உத்தரிக்கப்பட்டவர்களுக்கு சுய நலத்தை விலக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது அல்லவா?" கிருஷ்ண குமாரன் வெகு தூரம் யோசித்தான். வேறு வழி ஒன்றும் அகப்படவில்லை. அதனால் மாமா அவர்களுடைய உத்தியோகம், கனினியின் அவமதிப்பு, பட்டினி கிடப்பது இவை எல்லாவற்றையும் பார்த்து அவன் இவள் காட்டிய மார்க்கத்தை மனமில்லாமலே ஏற்றுக்கொண்டு, தான் அவ்வாறு செய்வதாயும் அவளுக்குத் தெரிவித்தான். மறுநாட் காலையில் சாமானை அங்கு கொண்டுவருவதாகத் தீர்மானித்து இருவரும் திரும்பினர். வழியில் சாந்தா பல சங்கதிகளைப் பேசி அவனை உற்சாகப்படுத்தினள்.

மறுநாள் சாமானுடன் கிருஷ்ண குமாரன் வயலுக்கு வந்தான். பொன்னப்பன் மூலமாய் சாந்தா பத்து ரூபாய்க்குக் கதர் வரவழைத்து வைத்திருந்தனள் அதைக்கொண்டு அவன் சிலர் வீடுகளுக்குச் சென்றான். 'முதலாவது சாமான் வீட்டிற்கு வந்தது, இரண்டாவது, உதவிபுரிந்தாற் போலுமாகும்' என்று ஜனங்கள் அதை உடனே வாங்கிக்கொண்டனர். கிருஷ்ண குமாரன் பத்து ரூபாய் பத்து அணு கொண்டு திரும்பி வந்தான். மறுநாள் மறுபடியும் அவன் விற்பனைக்குப் புறப்பட்டான். இன்று வெட்கம் சற்று குறைந்தது, நாலைந்து தினங்களில் இது அவனுக்குப் பழகிவிட்டது. தினந்தோறும் இரண்டு நேரமும் விற்பனைக்குப்போய் ஒரு ரூபாய் ஒன்றரை ரூபாய் லாபம் சம்பாதித்துக் கொண்டிருந்தான். இங்கு சாந்தா ஒன்றும் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. அவள் பொன்னப்பன் மூலமாய் கதர் யார் நெய்கிறார்கள், அவர்கள் நிலைமை என்ன, அதை அவர்கள் எப்படி விற்கின்றனர் முதலிய விவரங்களை அறிந்துகொண்டாள். அன்றி அந்த ஜனங்களுக்குத் தான் பொருளுதவி செய்தால் சௌகரியப்படுமென்று அவ்வாறு செய்தாள். இப்பொழுது கிருஷ்ண குமாரன் மெல்ல மெல்லத் திரிவதை விட்டுக் கடை வைத்தான். மாலையில் குடிசைக்கு வந்ததும், சமையல்செய்து சாப்பிட்டு இரவில் பொன்னப்பனுக்கும் அவன் மக்களுக்கும் கபடமற்ற மற்ற ஜனங்களுக்கும் கதைகள் சொல்வான். அது கேட்க அவர்களுக்கு ரொம்பப் பிரியமாயிருந்தது. "இக்கதைகள் எங்கு இருக்கின்றன?" என்று அச்சிறுவர்கள் கேட்டார்கள். அதற்குக் கிருஷ்ண குமாரன் "புஸ்தகத்தில் இருக்கின்றன. நீங்கள் படிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கு வேண்டிய கதைகள் படிக்கலாம்" என்றான்.

"அப்படியானால், எங்களுக்குக் கற்றுக் கொடுக்கிறீர்களா?"

"ஓ; நாளை முதற் கொண்டே."

இந்த சம்பாஷணை ஆனபிறகு கிருஷ்ண குமாரன் மறுநாள் நகரத்திலிருந்து இரண்டு கற பலகைகளும், பலப்பமும் கொண்டுவந்து, இரவு போஜனமான பிறகு சிறுவர்களுக்குக் கற்பிக்கலானான். சிறுவர்களும் ஆசையுடன் கற்கலாயினர். அக்கம் பக்கத்திலுள்ள குடியானவர்களுக்கும் தெரிய வந்தது. அவருடைய மக்களும் வரலாயினர். அவர்களுடைய வகுப்பு நாளுக்கு நாள் வளரலாயிற்று. இரவில் ஒரு மணி நேரம் படிப்பதும், ஒரு மணி நேரம் கதை எழுதுவதும், கதை சொல்லுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அப்பொழுது அதில் ஜனங்களுக்கு ருசி யுண்டாயிற்று. கிருஷ்ண குமாரன் மகா பாரதம், ராமாயணம்



பாகவதம், முதலிய நூல்களிலுள்ள கதைகளை எளிய நடையில் சுவை நிறைந்த வாக்கிய அமைப்புடன் ஜனங்களுக்குச் சொல்லுவான். சிற்சில சமயத்தில் பெரியோர்களுடைய சரித்திரங்களையும் அவர்களுடைய பராக்கிரமங்களையும் வர்ணனைசெய்து சொல்லுவான். போகப்போக அவர்களுக்கு அபிருசி அதிகரித்தது. எழுத்தறிவில்லாமலிருந்த குடியானவர்களுடைய சமூகத்திற்கு எழுத்தறிவுண்டாய்க்கொண்டே போயிற்று. அந்த ஜனபமும் நன்றியுங்கொண்டுள்ள வகுப்பு கிருஷ்ண குமாரனுடைய மகத்தான உபகாரத்தை நினைத்து அவனை வாழ்த்தலாயிற்று. இப்பொழுது கிருஷ்ண குமாரனுக்கு ஒரு குறைவுமிருக்கவில்லை. படிப்புக் கற்றுக்கொடுப்பதற்குக் கைம்மாறு என்று சிலர் மாம்பழம், சிலர் பால் முதலியவற்றை அவனுக்குக் கொண்டுவந்து கொடுப்பார்கள். ஏகாதசியன்று எல்லோரும் சேர்ந்து பஜனை செய்வார்கள். சாராம்சம் என்னவென்றால், கிருஷ்ண குமாரன் அவர்களுக்கு குருவேயானான். இவ்விடத்தில் கதர் வியாபாரமும் வளர்ந்து கொண்டே போயிற்று. நெசவுத் தொழிற்காரர்களெல்லாம் கடனிலிருந்து விடுதலையடைந்து வந்ததால் அவனுக்குக் கிரமமாகக் கதர் கிடைக்கலாயிற்று. இவர்கள் இன்னும் ஜனங்களைச் சேர்த்து தறிகளை ஏற்படுத்தினார்கள். சாந்தையும் அடிக்கடி போய் இவர்களை விசாரித்துக் கொள்ளலானாள். அப்பொழுது அவளுக்கும் அக்குடியானவர்களுடைய பெண்களுக்கும் பரிச்சயமுண்டாயிற்று. அவளும் ஒழிவுநேரத்தில் அவர்களுக்கு நூல்நூற்கக் கற்பித்து உற்சாகப்படுத்தலானாள். ஏழைக் குடியானவர்களுடைய பெண்கள் அதை வேடிக்கையாகச் செய்யலாயினர். ஒரு வருஷத்தில் கிருஷ்ண குமாரனுக்கு நல்ல லாபமுண்டாயிற்று. கடை வைத்து வரவு செலவு போக மாதம் ஐம்பது ரூபாய் லாபம் கிடைப்பதாகக் காணப்பட்டது. வருஷக் கடைசியில் கணக்குப் பார்த்து, கிருஷ்ண குமாரன் கண்களில் நீர் ததும்ப சாந்தையை நோக்கி "அம்மா, இதெல்லாம் உங்களுடைய கல்வியறிவின் பயனாகும். இல்லாவிடில் அன்று நான் எங்காவது பதுங்கிக் கிடந்திருப்பேன். இப்பொழுது எனக்கு எவ்வளவோ உற்சாகமாயிருக்கிறது."

"இதில் நானென்ன செய்தேன்? நீங்கள் மனம் வைத்தீர்கள். இன்று ஐம்பது ரூபாய் கிடைத்தபோதிலும், கடவுள் கிருபையிருந்தால் உங்களுக்கு இன்னும் விருத்தியாகும். ஊக்கத்துடன் பாடுபட்டு உழைப்பது தான் தேவை. ஒருமிக்க சீமானாக விரும்பாலும், லாபநஷ்டத்தைப்பற்றி நாணயமாகவும் இருப்பீர்களாகில் வெகு சீக்கிரத்தில் லக்ஷ்மி புத்திரர் ஆவீர்கள்."

"சே, அதை நான் சொல்ல வரவில்லை, உங்களைப்போன்ற லக்ஷ்மி பிரத்யட்சமாய் உதவி புரிய வந்த பிறகு லக்ஷ்மிக்குக் குறைவென்ன? தனவானான நண்பர்களைவிட எனக்கு இந்த ஏழைக் குடியானவர்களான நண்பரைக் கண்டால் மிக்க ஆனந்தமுண்டாகிறது. இதெல்லாம் உங்களுடைய கிருபையாகும்."

இத்தகைய சம்பாஷணையில் அவ்வருஷத்துக் காரியங்களெல்லாம் முடிந்தன. சாந்தாவும் மெட்ரிகுலேஷன் பாஸானாள். பிறகு அவள் காலேஜுக்குப் போகாமல் வீட்டிலேயே அரிய நூல்களைப் படித்துக்கொண்டு மாமிக்கு வீட்டு வேலையில் உதவி புரியலானாள். அத்துடன் அவள் கிருஷ்ண குமாரனுக்கும் உதவி புரிய நிச்சயித்தாள். அவள் சுயமாய்க் கதர்த்துணிகளை மிஷினில் தைப்பதுடன் அக்கம்பக்கத்திலுள்ள பெண்களுக்குக் கற்பித்து, அவர்களிடமிருந்து துணிகளைத் தைத்துக்கொண்டு அவர்களுக்குச் சொற்பக்

கூலியை கொடுப்பான். இவ்வாறாக கிருஷ்ண குமாரன் கடையிலிருந்து துணிகளை வாங்கி அழகிய உடைகளைத் தைத்து வைக்கலானான். அவ்வுடுப்புகளெல்லாம் வெகுவாய் கிருஷ்ண குமாரனுடைய குடியானவர்களுக்குள்ளேயே விலை போகலாயின. சாதாரண அரைக்கைச் சட்டைகள், சிறுவர்களுடைய நிஜார், பாவாடை, குழந்தைகள் சொக்காய் இவைகளெல்லாம் ஜனங்கள் அதிகமாய் வாங்கலாயினர். கதர் செய்துகொண்டு வந்து கொடுப்பவர்களுடைய தொகையும் அதிகரித்து, அக்கம் பக்கத்திலுள்ள ஜனங்களும் கதர்கொண்டுவந்து விற்கலாயினர். அதற்குக் கைம்மாறாக இவனிடத்திலிருந்து பஞ்சு (பருத்தி) வாங்கிக்கொண்டு போகலானார்கள். நூலும் சிற்சில சமயத்தில் வாங்கிச் செல்லுவார்கள். பஞ்சு இவ்விடத்தியது, வாங்கப்பட்டவர்கள் இவ்விடத்தியவர்கள், தறி இவ்விடத்தியது. பின்னே என்ன? இங்கே எல்லாம் இசைந்தது; அயலூரிலிருந்து வியாபாரிகள் வரலாயினர். சில மெல்லிய நூலினால் நெய்த கதரும் கிடைக்கலாயிற்று. அதனால் கைக்குட்டைகள் தயார் செய்யப்பட்டன. ஓர் தையற்காரனை வைத்து, சுதேசித் துணியால் ரெடிமேட் (Ready-made) உடைகளும் கிடைக்கலாயின. இப்பொழுது கடை விஸ்தாரமடையலாயிற்று. சிற்சில சமயங்களில், நகரத்தில்போய் வசிக்கவேண்டுமென்று கிருஷ்ண குமாரனுக்குத் தோன்றலாயிற்று. ஆனால் அவனுடைய குடியானவர்கள் இதற்கு சம்மதியார். பொன்னப்பனும், அவனுடைய மனைவி மக்களும் கிருஷ்ண குமாரனை விட்டகல இசையார். ஆதலால் கிருஷ்ண குமாரன் சும்மா இருந்தான். இவ்வாறாகக் கடை செழிப்படைவதில் இரண்டாவது ஆண்டு கழிந்தது. கடையின் வரவு செலவு கணக்கு எடுக்கப்பட்டது. மாதத்திற்கு 150 முதல் 200 ரூபாய் வரையில் லாபம் காணப்பட்டது. அந்த சந்தோஷத்தைக் கொண்டாடும் பொருட்டு கிருஷ்ண குமாரன் குடியானவர்களுக்கு போளி பாயஸத்துடன் கூடிய போஜனத்தை அளித்தான். அவன் குடியானவர்களைப் பார்த்துச் சொன்னான்: "இதுதான் என்னுடைய லக்ஷ்மி பூஜை." அவர்களைக் கொண்டே சமையல் செய்வித்து அவர்களுக்கு போஜனமளித்தான். மாலையில் வெய்யில் தாழ்ந்த பிறகு வெளி மைதானத்தில் எல்லோரும் போஜனத்திற்கு உட்கார்ந்தனர். சாந்தையும் போயிருந்தனள். அதைக் கண்டு அவளுக்கும் சமாதான முண்டாயிற்று. இதைப்பற்றிக் கிருஷ்ண குமாரனை மிகவும் மெச்சி, நன்றாகக் காய்ச்சின பாலை அருந்தி அவள் இல்லஞ்சென்றாள். முதலில் கிருஷ்ண குமாரன் அங்கு வசிக்கிறான் என்று மாமாவுக்குத் தெரியவே தெரியாது. பிறகு தெரிந்தபோதிலும், அவர் அவ்வளவாகப் பொருட் பண்ணினவரன்று. பிறகு அவனுடைய புகழ் பரவியதும், அவர் பொன்னப்பனைக் கூப்பிட்டுக் கேட்டனர். அவன் சொன்னான், "சுவாமி, தாங்களும் எஜமானுங்க, அம்மா அவர்களும் எஜமானிங்க; அம்மா சொன்னாக்க தாவு குடுக்க வேண்டாங்களா? அதுவுமல்லாமே அவுங்களாலே ஒருவித தொந்தரவு மில்லிங்க. இராவுலே இருக்காங்க, காலையிலே போராங்க." பிறகு அவருக்குப் பேச இடமே இல்லாமற் போயிற்று. ஒரு தடவை அவர் சாந்தையிடம் சொன்னார்: "கிருஷ்ண குமாரனுக்கு நிலத்தில் இடம் கொடுத்தாய்; தவிர நீயும் அங்குபோய் வந்து கொண்டிருக்கிறாய்; இது சுத்தமாக நன்றாகயில்லை." அப்பொழுது அவள் மதுரமானவார்த்தையில் உறுதியாகச் சொன்னாள்: "ஆம் நான்தான் அவரை அங்கு வைத்தேன். இதில் தப்பென்ன? சகஜமாய்ச் செய்யக் கூடிய உதவி ஒவ்வொருவரும் பிறர்க்குச்செய்யத்தான்வேண்டும். இப்பொழுது நானங்குப் போவதைப்



பற்றி என்பீர்களோ, அதற்கென்ன? முன்பு நளினியும் உலாற்றப்போய்க் கொண்டிருக்கவில்லையா? அதனாலென்ன? வாரத்தில் இரண்டொரு முறை வயலுக்குப் போய்க்கொண்டுதான் இருக்கிறேன்." பிறகு மாமா வாயைத் திறக்கவில்லை.

"இப்பொழுது மாமா சாந்தையை வெங்குட்டுவுக்குக் கொடுத்து விவாகம் செய்ய வேண்டுமென்கிற எண்ணத்தை வெளியிட்டார். அவளுடைய மைனர்திசை நீங்கியதும் அவள் தகப்பனுடைய முத்திரையிட்ட கடிதத்தைக் கையிலெடுத்துக்கொண்டு மிகவும் பக்தியுடன் வந்தனம் செய்து அதை உடைத்தாள். அதில் அநேக சூசனைகள் செய்யப்பட்டிருந்தன. அன்றி என்ன எழுதப்பட்டிருந்ததென்றால்:—

"நமது நிலம் (மிராசு) வெகு பெரியது. அதை உபயோகப்படுத்தும்படியான கல்வியறிவு நான் உனக்குப் புகட்டியிருக்கிறேன். இப்பொழுது உனக்குத் தகுந்த வயதும் வந்துவிட்டது. ஸாராஸார விசாரம் செய்யும்படியான மன அமைதியும் உனக்கு உண்டாயிருக்கிறது. ஆதலால் நீ உனக்குத் தகுந்த பதியைத் தேடிக்கொள்வாய்,—இல்லை, செய்துகொள்ளத்தான்வேண்டும், இல்லாவிட்டால் யாராகிலும் யௌவனமுள்ள மனிதன் மதுரமாகப் பேசிப் பணத்தின் ஆசையால் உன்னை ஏமாற்றிச் சொத்தனைத்தையும் அழித்து விடுவான். தரித்திரனாயிருந்தபோதிலும் நற்குணமும், நன்னடக்கையுமுள்ள நற்குலத்திற் பிறந்த நல்ல வாலிபனைத் தேடி, சிற்றப்பாவுடன் யோசித்து விவாகம் செய்துகொள். அவருக்கும் ஒரு கடிதம் வைத்திருக்கிறேன். அதில் மிராசின் அட்டவணை வைத்திருக்கிறேன். அதன்படி மாமாவசம் இருக்கும் எஸ்டேட்டைப் பார்த்து சரிவரப்பெற்றுக்கொள்." இதைப் படித்து அவள் சற்று நேரம் தன் பெற்றோரை நினைத்து மனமார அழுதாள். பிறகு மனதைத் தேற்றிக்கொண்டு அவள் தன் காரியத்தைக் கவனிக்கலானாள்.

மறுநாள் சிறிய தகப்பனார் வந்து சாந்தையைப் பார்த்தார். சற்று நேரம் பொது வர்த்தமானங்களைப் பேசிக்கொண்டிருந்து விட்டு, பிறகு கலியாணத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தார். மாமாவுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். அப்பொழுது அவள் இவ்வருஷம் விவாகம் செய்து கொள்ளப்போவதில்லை என்று தெரிவித்தாள். வந்த சிறிய தந்தை—சொந்தச் சிறிய தந்தை யன்று, தந்தையின் நண்பர். அவளைத் தன் வீட்டில் வந்து இருக்கும்படி கேட்டுக் கொண்டதன்பேரில் அவள் அவர் வீட்டில் எட்டு நாள் இருந்தாள். அங்கு ஏதாவது ஒரு பிராஞ்சு—ஒரு கிளை—கடை வைப்பது சாத்தியமாவென்று யோசிக்கும் பொருட்டு கிருஷ்ண குமாரனையும் அங்கு வரும்படி கூப்பிட்டாள். அவன் அங்கு இரண்டு மூன்று நாள் இருந்தான். இப்பொழுது இவருக்கும் அவனுக்கும் பழக்கமுண்டாயிற்று. அவ்விடத்தினின்றும் திரும்பி வந்த பிறகு ஐந்தாறு மாதங்களில் அவனுடைய வியாபாரமும் விஸ்தாரமாய் நடந்தது. நாலைந்து குமாஸ்தாக்களும், நாலைந்து தையற்காரர்களும் இக்கடையில் அமர்த்தப்பட்டனர். ஊரிலுள்ளதேயல்லாமல், அக்கம்பக்கத்திலிருக்கும் கிராமங்களிலிருந்தும் வரும் கதர் இவன் கடையை விட்டு எங்கும் போவதில்லை. இவ்வாறாக இவன் முன்னுக்கு வந்ததைக் கண்டு சாந்தா ஒரு தரம் அவரை நோக்கிச் சொன்னான்:—

"கிருஷ்ண குமாரரே, இனி நீங்கள் விவாகம் செய்துகொண்டு இல்லறத்தில் அமர வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் தொழில் நாளுக்கு நாள் விருத்தியடைந்துகொண்டு வருகிறது. ஆதலால்

போஜனம் முதலியவற்றைப் பற்றிய கவலை எடுத்துக்கொள்ள யாராகிலும் வேண்டும். இனி அந்த கும்மட்டியைத் தூர வையுங்கள்."

"நான் சமையற்காரனை வைக்கவேண்டு மென்று முன்னொரு தடவையிற் கூட நீங்கள் சொன்னதுண்டு. ஆனால் மகாத்மாஜீயின் டம்ப மில்லாத தன்மைதான் எனக்குப் பிடிக்கிறது. விவாகத்தைப் பற்றி என்பீர்களோ. என்னைப் போன்ற அனாதைக்கு யார் பெண்ணைக் கொடுப்பார்கள்? ஏதாவது ஏழை வீட்டுப் பெண்ணும், புரோகிதன் வீட்டுப் பெண்ணும் கிடைப்பாள். அது எனக்கு வேண்டாம்."

"சே! அப்படி இல்லை. ஆனால் ஜனினியை ஒருதரம் கேட்டுப்பாரும். அப்பொழுது அவள் பேசியிருந்தபோதிலும், அப்பொழுது சிறு வயதாக விருந்தாள். இப்பொழுது நீங்கள் கேளுங்கள்."

"சே! சே! அதுமட்டும் பேசாதீர்கள்."

"இல்லை, நான் முழுமனதுடன் சொல்லுகிறேன். அதை நீங்கள் பொருள் பண்ணுதீர், அது சிறு பிள்ளைத்தனமாகப் பேசியதாகும். இப்பொழுது அவள் பெரியவளாயிருக்கிறாள்."

"அம்மா! நீங்கள் தாட்சண்யத்தில் சிக்க வைக்காதீர்கள். உங்கள் மாமாவுடன் நான் சம்பந்தம் செய்யப்போவதில்லை. பிறகு எனக்கு விவாகமில்லாவிட்டாலும் வேண்டாம்."

இவ்வார்த்தை நடந்து சில தினங்களுக்குப் பிறகு மறுபடியும் ஒருமுறை இப்படிப் பேச்சு நடந்தபோது கிருஷ்ணகுமாரன் சொன்னான்: "ஆம் அம்மா, உங்களிடம் சொல்ல மறந்து விட்டேன். என் சிறிய தந்தையின் குமாஸ்தாவிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது. அதில் சொல்லுகிறார்: "எஜமானர் அடிக்கடி தங்களைப்பற்றி விசாரித்துக் கொண்டிருக்கிறார். இப்பொழுது அவருடைய மனம் நன்றாகத் தெளிவடைந்திருக்கிறது. ஆதலால் தாங்கள் வந்து அவரை தரிசித்துப் போகவேண்டும்."

"பின்னே என்ன, நீங்கள் போகப் போகிறீர்கள்."

"நான் போவேன் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா?"

"பெரியோருடைய குற்றத்தை மன்னிப்பது உங்களுடைய கடமை யல்லவா?"

"ஓ! அது அவர் சுயமாகக் கூப்பிடும்போது. ஆனால் நானாக அவர் வாயிலிற் போய் நிற்க மாட்டேன்."

"அப்படியானால் விவாகம்செய்து கொண்ட பிறகு தம்பதி சகிதமாய்ப் போங்கள்."

"என் விவாகம் இருக்கட்டும். உங்கள் சிற்றப்பா உங்களுடைய விவாகத்தின் பொருட்டு வரப் போகின்றனர். நேற்றுத்தான் இந்த வியாபாரத்தைப்பற்றிக் கடிதம் வந்தது. அதில் இவ்வருஷம் உங்களுடைய விவாகம் செய்து விட வேண்டுமென்பது அவருடைய இச்சை என்றும் அதற்காக அவர் இங்கு வரப் போவதாகவும் எழுதியிருக்கிறார்."

"ஆம். நாளையதினம் சிற்றப்பா வரப்போவது நிச்சயந்தான். அவருடைய முதுமைப் பருவத்தில் அவருக்கு இப்படித் தோன்றுவதும் உண்மைதான். ஆனால் இது அவ்வளவு சுலபமாக நடக்கக் கூடிய சங்கதி யன்று."

"உங்களைப் போன்றவர்களுக்குக் கஷ்டமென்ன? யாரும் சம்மதிப்பார்கள்."

"ஆனால் அப்படி எனக்கு விவாகம் தேவையில்லை. தந்தையாரின் இவ்வளவு பெரிய பிரஜையை முன்பின் அறியாத மனிதன் கையில் கொடுக்க நான் சம்மதியேன்!"

"ஆனால் தெரிந்தவர்கள் யார் இருக்கிறார்கள்? வெங்குட்டுவையோ நீங்கள் நிராகரித்து விட்டீர்கள்."



"இருக்கிறார், எனக்குத் தெரிந்தவர் ஒருவர் இருக்கிறார். ஆனால் அவர் ஒருதரம் என்னைத் தன் யஜமானியாகச் செய்து கொள்ள நிராகரித்திருந்தார். அப்படியிருக்க அவர் இப்பொழுது மறுபடியும் யஜமானியாக ஏற்றுக் கொள்வாரோ இல்லையோ? அது யாருக்குத் தெரியும்" என்று சொல்லி அவள் சிரித்துக் கொண்டே இல்லஞ் சென்றனள்.

* * * * *

மறுதினம் சிறிய தந்தை வந்தனர். அவரும் அவளுமாக வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். கடைசியில் அவருக்கும் இவளுடைய யோசனை இசைந்தது. ஆனால் அவள் சொன்னாள்:—"நானாகக் கேட்பது உசிதமல்ல." அப்பொழுது அவர் சொன்னார்:—"ஆம், அது சரி. ஆனால் பெண் வீட்டுக்காரர்தான் முதலில் கேட்கவேண்டும். ஆதலால் நான் கேட்கிறேன்." பிறகு மத்தியானம் அவர் கிருஷ்ணகுமாரனைக் கண்டு இதைப்பற்றி மெல்ல விசாரித்தார். அதைக்கேட்டு கிருஷ்ணகுமாரன் ஆச்சரியமடைந்து சொன்னான்:—"சிற்றப்பா, தாங்கள் சொல்வது உண்மைதான். ஆனால் என்னைப் போன்றவனை (பசந்து) சம்மதித்துச் செய்வாள் என்று எனக்குத் தோன்றவில்லை. ஏனென்றால் அவளை நான் எனக்கு ஒரு வழி காட்டிய தெய்வமாகப் பாவித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் இப்படிச்செய்யுங்கள். எனக்குத் தோன்றுகிறதை நான் சொல்லுகிறேன். பிறகு நீங்கள் வேண்டுமானால் அவளைக்கேட்டு எனக்குத் தெரிவியுங்கள்." மாலையில் இருவரும் சந்தித்தார்கள். அப்பொழுது கிருஷ்ணகுமாரன் சொன்னான்:—"சிறிய தந்தை என்னைக் காண வந்திருந்தனர்."

"ஓ, அது எனக்குத் தெரிந்தது."

"அவருக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணையும் தெரிந்தே யிருக்கும்."

"ஆம்."

"அப்படியானால் உங்களுக்கு இது சம்மதந்தானா? சம்மதமாயிருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை. ஆனால் அவர் கேட்கச் சொன்னார் என்று நான் கேட்டேன். இல்லாவிட்டால் நான் இப்படிக் கேட்பது பிசகுதான்."

"ஆமாம், நான் உங்களுக்கு பசந்து இல்லாவிட்டால் நீங்கள் அப்படித் தெரிவித்து விட வேண்டுமென்று நானும் உங்களுக்கு சூசனை செய்கிறேன்."

"இதில் நான் பசந்து செய்வதற்கு என்ன இருக்கிறது? இத்தகைய தேவதையை யார் நிராகரிப்பார்கள்? ஆனால் நான் உங்களிடம் உண்மையைச் சொல்லுகிறேன். ஓர் தேவதை என்ற முறைமை தவிர அந்நிய முறைமையுடன் இதுவரை நான் உங்களைப்பார்த்ததில்லை."

"நானும் ஒரு மித்திரன், துன்பம் நேரிட்ட காலத்தில் அன்புடன்பேசி ஆறுதலுண்டாக்கக் கூடிய ஒரு மனிதன் என்று மாத்திரம்தான் எண்ணியிருந்தேன். ஆனால் கடந்த வருஷ முதல் ஆக்ரம் செய்ய ஆரம்பமானபோது இது பெண்களுடைய காலம் என்று நான் நினைத்தேன். இருந்த போதிலும் அதிகாரத்துடன் கேட்கக்கூடாது. மதுரமாகப் பேசி என்னை உங்களுடைய கூட்டாளியாக ஏற்றுக் கொள்வீர்களா வென்று கேட்க எண்ணங் கொண்டேன்."

"இல்லை, நான் அவ்விதமாகக் கூட்டாளி ஆக்கிக் கொள்ளமாட்டேன். அப்படியானால் சச்சரவுண்டாகும். என்னைப்போன்ற ஏழை கூட்டாளி ஆகவேண்டுமென்று உங்களுக்கு விருப்பமிருந்தால் நீங்கள் யஜமானியாவது நலம். ஒரு சமயத்தில் நான் உங்களை யஜமானியாக்க நிராகரித்த போதிலும் இன்று என்னுடைய ஸர்வஸ்வத்தின் யஜமானத்துவத்தையும் நீங்கள் ஏற்றுக் கொள்ளுவீராகில் உங்களுக்கு

அர்ப்பணம் செய்யச் சித்தமாயிருக்கிறேன். அதை நீங்கள் ஸ்வீகரித்துக் கொள்ளுங்கள். நான் இந்த வெளியுலகத்தில் உயிருக்குயிர் கொடுக்கும் சேவகனாகயிருப்பேன். அதினால் எனக்கு ஆனந்தமும் சௌக்கியமுமிருக்கிறது. அதைச் செய்யும்பொழுது என்னுடைய கிரகதேவதை, என்னுடைய யஜமானி சுகமாயிருக்க என்னென்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி நான் யோசிப்பேன். ஆனால் இன்னும் உங்களுக்கு சூட்சி செய்வதென்னவென்றால் என்னைப் போன்ற ஏழையிடத்தில் உங்களைப்போன்ற சீமான் வீட்டுப் பெண்களுக்குப் போடக்கூடிய நகைநட்டு, துணிமணி முதலியன ஒன்றும் கிடையாது. உங்கள் கிருபையாற் கிடைத்த இந்த கணப்பின் பேரில் அன்னத்தைச் செய்து நான் புசிக்கிறேன்."

"நீங்கள் எண்ணுவது பிசகு. முதலாவது எனக்காக என் தந்தை இவ்வளவு நகைநட்டுகள் வைத்திருக்கிறார். எனக்குப் பிறருடையது தேவையேயில்லை. அதன்றி இவ்வளவு பெரிய பிராசு! இதன் உபயோகம் உங்களைப் போன்ற துணைவரின்றி என்னால் செய்ய முடியாது."

"அப்படியானால் இதை நான் அநுக்கிரகம் என்றே நினைக்கிறேன்."

"அப்படியானால் நீங்கள் இப்பொழுது சிற்றப்பா அவர்களிடம் சென்று மாமா அவர்கள் எதிரில் என்னைக் கொடுக்கும்படி கேளுங்கள். அவ்வாறு செய்தால் மாமாவுக்குத் தடங்கல் செய்ய முடியாது. நான் வீட்டிற்குப் போகிறேன்."

பிறகு கிருஷ்ண குமாரன் மாமாவிடம் சென்றான். அங்கு மாமா, சிற்றப்பா இருவரும் உட்கார்ந்திருந்தனர். அவனைக் கண்டதும் சிற்றப்பா மிகவும் ஆதரவுடன் நல்வரவு கூறினர். மாமா ஒருவிதக் குறியும் தரிசிக்கவில்லை. அவமானம் செய்யாமல் அத்துடன் விட்டனரே, அதுவே போதுமானது. இரண்டொரு பொது சமாசாரங்கள் பேசின பிறகு சிற்றப்பா கேட்டார்:—"என்ன மாமா, இப்பொழுது சாந்தாவுக்குக் கலியாணம் செய்ய வேண்டுமல்லவா?"

"அதற்கு அவள் எங்கே இசைகிறாள்?"

"இப்படி எவ்வளவு நாள் நடக்கும்? நான் இப்பொழுது அவளைக் கேட்கிறேன்" என்று சொல்லி அவளைக் கூப்பிட்டார். அவள் வந்தாள். "ஏனம்மா, நான் இப்பொழுது கிழவனாகி விட்டேன். சொல், உனக்குக் கலியாணம் செய்யட்டுமா? வேண்டாமா?

"உங்களிஷ்டம்."

"அப்படியானால் இதோ பாருங்கள், மாமா! இந்தக் கிருஷ்ணகுமாரன் நன்றாகயிருக்கிறான். என்ன ஓய், பேசுங்கள்."

மாமா சொன்னார்: "அவசரமென்ன? அதைப் பற்றிச் சாவகாசமாய் யோசிப்போம்."

"இல்லை இல்லை, அப்படி இல்லை. நான் இப்பொழுது காரியத்தை முடித்து விட்டுத்தான் போகப் போகிறேன். நானென்ன? பழ இலை. திடீரென்று கண்ணை மூடினேனானால், நண்பருடைய இச்சை நிறைவேறாமல் அப்படியே நின்று விடும். நீ சொல், கிருஷ்ணகுமாரா, சாந்தா, நீ சொல். உங்கள் இருவருக்கும் இஷ்டமிருந்தால் எங்கள் கிழவர்களைப் பற்றி என்ன? அல்லவா மாமா?"

சாந்தா சொன்னாள்: "நான் பெரியோர்களுடைய கட்டளைக்குட்பட்டிருக்கிறேன். கிருஷ்ண குமாரன் சொன்னான்:—"நான் எப்படிப்பட்டவனென்று தங்களுக்குத் தெரிந்தே இருக்கிறது. தங்களுக்கு இஷ்டமிருந்தால், என்னாலானதை நான் செய்வேன்."

"அடே, செய்வதென்ன விருக்கிறது? நன்றாகப் பாதுகாப்பேன் என்று சொல். போதும்,



காரணம் நகைநட்டு, துணிமணிகள் ஒன்றும் வாங்க வேண்டியதில்லை. நம்ம மதினி சம்பந்திக்குக் கொடுக்கவேண்டிய பாத்திரம் பண்டங்கள், மணப்பிள்ளை சீறு, சீதனம், எல்லாம் தயார் செய்திருக்கிறார். சம்பந்தி மாத்திரந்தான் தேவை."

உடனே மறுதினம் முகூர்த்தம் வைக்கப்பட்டது. சிற்றப்பாவுடைய இவ்வவசரம் மாமாவுக்குப் பிடிக்கவேயில்லை. ஆனால் என்ன செய்வார்? மாமா மாமி அவர்களுக்கு இவர்களுடைய நிலைமை மாறி இருப்பதாகத் தெரிந்தது. ஆனால் உண்மை இன்னதென்பது தெரியவில்லை. நளினிக்கு ஒன்றுமே தோன்றவில்லை. திதி நிச்சயமாயிற்று. எல்லோருக்கும் விவாக முகூர்த்தப் பத்திரிகை அனுப்பப்பட்டது. அப்பொழுது ஜமீன்தார் மிகவும் சௌக்கியமில்லாமலிருப்பதாகக் கிருஷ்ண குமாரனுக்குத் தந்தி வந்தது. அவன் அங்குபோய் அவரைக் கண்டான். அவர் கொண்டிருந்த தப்பெண்ணமெல்லாம் விலகியது. கிருஷ்ண குமாரனுடைய உத்தியோகத்தைப் பற்றித் தெளிவாகத் தெரிய வந்தது. அவருக்கு மிகவும் சந்தோஷமுண்டாயிற்று. அவர் உடம்பும் கொஞ்சம் சௌக்கியப்பட்டது. பிறகு கிருஷ்ண குமாரன் சிற்றப்பா அவர்களுடைய கடிதத்தைக் காண்பித்து கலியாணத்திற்குப் போக உத்தரவு கேட்டான். ஆனால் ஜமீன்தார் அவருடைய மனைவி சம்மதிக்கவில்லை. அவர் சொன்னார்: "ஜமீன்தார் மகன் கலியாணமென்று கலியாணம் இங்கு ஆகவேண்டும்." ஜமீன்தார் "கிருஷ்ணா, ஸ்திரீகளுடைய சம்மதி யன்றிக் கொண்டாடிக் கொள்ளும் ஆசை ஒருபோதும் ஒழியாது. கலியாணமான பிறகு தத்து எடுத்துக்கொண்டால் கலியாணச் செலவு குறையுமென்று நான் சொன்னேன். இவள் எங்கே நான் சொல்வதைக் கேட்கிறாள்! இப்பொழுது மானேஜரை அனுப்பி சம்பந்தி, மணமகன் எல்லோரையும் இங்கு அழைத்து வரச்சொல்." அவ்வாறே சமாச்சாரம் அனுப்பப்பட்டது. அப்பொழுது சிற்றப்பா வந்து சொன்னார்:—"கிருஷ்ண குமாரனுடைய பக்த கணங்களெல்லாம் அங்கு அதிருப்தி அடைகின்றனர். ஆதலால் தாங்கள் அங்கு வந்து விவாகத்தை நடத்திப் பிறகு இங்கு வந்து கிருஹப்பிரவேசம் நடத்துங்கள். அப்போது இருதிறத்து ஜனங்களும் சந்தோஷமடைவார்கள்." பிறகு அவ்வாறு நிச்சயிக்கப்பட்டது. ஜமீன்தார் ஏராளமான பணம் செலவுசெய்து கலியாண மகோற்சவத்தை மிகவும் விமரிசையுடன் நடத்தினார். நல்ல நெசவுகாரர்களால் நெய்யப்பட்ட கதர்ப் புடவையை கிருஷ்ண குமாரன் சாந்தைக்குக் கூரைப் புடவையாக வாங்கிக் கொடுத்தான். வைரம், முத்து முதலிய ரத்னங்களை அணிந்த மறுமகளுக்கு முதலில் கதர்ப்புடவை கொடுத்த போதிலும், மாங்கல்யதாரணமான பிறகு மாமியார் மறுமகளுக்கு சரிகைப் பீதாம்பரத்தை உடுத்தினாள். மாமா மாமி அவர்களுக்கு இக்காரியங்களையெல்லாம் வாயைத் திறவாமல் செய்ய வேண்டியதாயிற்று. நளினிக்கு இஷ்டமில்லாமலிருந்தும் கூட நலங்கு சமயத்தில் சாந்தையின் பக்கத்தில் வந்து உட்கார்ந்து நலங்கிடுவதற்கு அவளுக்கு உதவி செய்ய வேண்டியதாயிற்று. தான் இச்சித்த ஜமீன்தார் வீடு சாந்தைக்குக் கிடைத்ததைப் பார்த்து அவளுக்கு என்ன தோன்றியிருக்கும்?

தான் கனவிலும் நினையாத பதவி தனக்குக் கிடைத்ததற்காக சாந்தை கடவுளுக்கு மிகவும் நன்றி செலுத்தலானாள். ஆனால் கிருஷ்ண குமாரனுக்கு சாந்தையின் அதிர்ஷ்டவசத்தால் தான் கிடைத்ததென்று தோன்றியது. பிறகு ஒரு நாள் இருவருக்கும் சற்று ஒழிவு கிடைத்ததும் கிருஷ்ண குமாரன்

சொன்னான்: "சாந்தா, இதெல்லாம் உன் நற்குணத்திற்குக் கைம்மாறாகும்."

"சே! ஏதாவது சொல்லாதீர்கள். இப்பொழுது என் மீது இருக்கும் ஆபரணங்கள் உங்கள் வீட்டதாயிற்றல்லவா? இனி எனக்குப் போடுவதற்கு நகை ஒன்றுமில்லை என்று உங்களுக்கு வருத்த முண்டாகாதல்லவா? கடவுள் உத்தியோகத்தைப் பாதுகாப்பார்."

"ஆம்! இந்த ஆபரணங்களெல்லாம் என் வீட்டதுதான். ஆனால் இந்த மோதிரம் மாத்திரம் நான் சுயமாகப் பாடுபட்டுச் சம்பாதித்தது" என்று சொல்லி அவள் கையில் ஓர் வைர மோதிரத்தைப் போட்டான். எல்லோரும் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும் சடங்குக்காகப் புறப்பட்டுப் போயினர். கிருஷ்ண குமாரன் இப்பொழுது ஜமீன்தாரனாயிருக்கிறான். ஆனால் அவனுக்குப் பொன்னப்பனுடைய குடிசையும், அவன் வீட்டில் காய்ச்சிக் குடிக்கும் பாலும் இன்னும் பிடிக்கிறது. அவர்களும் இவனிடத்தில் மிகவும் அன்பு, பக்தி விசுவாசத்துடன் நடந்து கொள்கின்றனர்.

சுபம்!

# நூர்ஜஹான் அல்லது பாதகண்டத்துச் சௌந்தரியக் கொடி

(ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்)

(466-வது பக்கத் தொடர்ச்சி)

## இருபத்துநான்காவது அத்தியாயம்.

விதியை வெல்ல யார்தான் வல்லார்? நேற்று ரத்ன மகுடத்தைத் தரித்து, வெண்குடை நிழலிருப்பவன் இன்று ராஸ்தாக்களில் கொடுமையான வெய்யிலின்கீழ் ஆதாரமற்று நின்று கொண்டிருக்கிறான். உண்ண ஒரு கவளச் சோறுமின்றி யிருப்பவனை விதியானது தூக்கிச் சிம்மாதனத்திலுட்காருவிக்கின்றது. இவ்வண்ணம் தூர்த்தெய்வத்தினது வசத்திற் சிக்கிய வீரபுருஷனாகிய பிரதாபசிம்மன் ஆரணியத்தில் வசித்து வந்தனனென முன்னாலேயே கூறப்பட்டுள்ளது. இழந்திருக்கும் மேவாடா தேயத்தின் சுதந்திரத்தை மறுபடியுமடைய விரும்பி, பிராணனைத் திரணமாகப் பாவித்து, வனத்தில் ஓர் சிறு குடிசையில் வசித்து வரும் மஹாப்ரதாபி பிரதாபசிம்மன் எவ்விதம் சுதந்திரமடைவதென்ற விசாரத்தைக்கொண்டு இரவும் பகலும் யோசித்தவண்ணமிருந்தனன்.

சுமார் பகல் பன்னிரண்டு மணியிருக்கும்; அச்சமயம் திடீரென அப்பிரதேசத்தில் ராஜபுத்திர வீரர்களது சந்தடி யுண்டாயிற்று. கொஞ்ச நேரத்திற்குள் ராஜபுத்திர வீரர்களனைவரும் பிரதாபனுடைய குடிசையினெதிரில் வந்து சேர்ந்தார்கள். தான் இவ்வளவு கஷ்ட திசையிலிருந்தும் தனக்காகத் தங்கள் உயிரை அர்ப்பணஞ் செய்யக் காத்திருக்கும் வீரர்களைக் காணவே பிரதாபனானவன் ஆனந்தமுற்று, மிக்க ஆதரவுடன் அவர்களை வரவேற்று உபசரித்துப் பிறகு அவர்களை நோக்கிப் பின்வருமாறு பகரலுற்றான். "நான் உங்களது வரவையே எதிர் நோக்கிக் காத்திருந்தேன். அஸ்திர பலம், சைனிய பலம், மற்றும் புத்தி பலம் யாவும் சத்துருவினிடம் அதிகமாகவே யிருக்கின்றனவென நீங்களறிந்த விஷயமே. மொகலாயரோடல்ல—இவ் வுலகத்தோடு யுத்தஞ் செய்ய நாம் சித்தமாயிருக்கின்றோமெனவே பகரவேண்டியிருக்கின்றது. ஆகவே நாமிதைக்



குறித்து இரவும் பகலும் நன்கு கவனித்து நமது கீர்த்தியை நிலை நிறுத்தவேண்டும்" எனப் பகர்ந்து, ஆங்கிருந்த ஓர் கல்லாசனத்திலுட்கார்ந்தனன். சிம்மாதனத்தில் வீற்றிருந்த பிரதாபசிம்மனுக்கு அக்கல்லே சிம்மாதனமாகவும், அவ்வனப்பிரதேசமே அவனது ராஜதானியாகவுமிருந்தன!

இவ்வண்ணம் வைபவமற்ற ராஜதானியில், கல்லாசனத்தில் பிரதாபசிம்மன் உட்கார்ந்தவுடன், கிருஷ்ணசிம்மன் அரசனைப் பின்வருமாறு தைரியமொழிகளால் தேற்றலானான்: "அரசே! என்ன கஷ்ட காலம் வந்தபோதிலும் மேவாடா தேயத்தை ஆண்டு வந்த அரசர்கள் யாவரும் தங்கள் பிராணனைத் திரணமாகப் பாவித்து, சத்துருக்களுடன் இதுவரை போர்புரிந்து வந்துள்ளார்கள். மேவாடா ராஜவம்சத்தோரது அங்கத்திலிருக்கும் இரத்தம் இங்கிருக்கும் எல்லோரது அங்கங்களிலும் கலந்து ஓடிக்கொண்டிருக்கிறது. மேவாடா தேயத்திற்காகவும், பிரதாபனுவிற்காகவும் ஒவ்வொரு வீரனும் தன் பிராணனைத் திரணமாகப் பாவித்து அர்ப்பணஞ் செய்யத் தயாராயிருக்கின்றானெனத் திண்ணமாயெண்ணும்."

கிருஷ்ணசிம்மனது தைரிய வார்த்தைகளைக் கேட்டு வந்த பிரதாபனானவன், "கிருஷ்ணசிம்மா! இவ்வான் இக்காதிலிருக்குமட்டும் பிரதாபன் சத்துருக்களுக்கு ஒருபோதும் முதுகுகாட்டி ஓடுபவனல்ல. சலும்பர் குலத்தோர் எனது வலது கரமாகவும், புத்த குலத்தோர் எனது இடது கரமாகவுமிருக்கின்றார்கள். முன்னால் சித்தூர் முற்றுகையிடப்பட்ட காலத்தில், தங்கள் அதிசய பராக்கிரமத்தைக் காட்டியது போல், இப்பொழுதும் அவ்வம்சத்தோர் தமது பராக்கிரமத்தை உலகத்தாருக்குக்காண்பிக்கும் பொருட்டு இங்கு தயாராயிருக்கின்றார்கள், சூர வீர ராஜபுத்திர பந்துக்களே! நாம் நினைத்துள்ள காரியத்தைக் கடவுள் பூர்த்தி செய்வாரென்ற பூர்ண நம்பிக்கை கொண்டிருக்கிறேன். நம்முடன் பிறந்துள்ள சுதந்திரத்தை விற்று சத்துருக்களுடன் சேர்ந்திருக்கும் நமது சுற்றத்தோர் ஒருபோதும் சுகமடையார்கள். பற்பல வம்சத்துப் புருஷர்களது அங்கங்களிலும் அவர்களது பராக்கிரமசாலிகளாகிய முனனோர்களது இரத்தம் சஞ்சரித்துக்கொண்டிருக்கிறது. தங்களை யவமதித்த சத்துருக்களைப் பழிக்குப் பழி வாங்காது அவர்களொருபோதும் பேசாதுட்கார்ந்திரார். வீர சகோதரர்காள்! நமது பராக்கிரமத்தைக் காட்ட நாம் முன் செல்லவேண்டும். நித்திரையிலிருக்கும் சிங்கத்தை யெழுப்பி விட்டோமென்று அக்பர் அறியாதவனல்ல. எரிந்துகொண்டிருந்த அக்கினியில் எண்ணெயை வார்த்து விட்டோமெனப் பாதுஷாவின் மனோதேவதை அவனிடம் பகர்ந்துகொண்டிருக்கிறது. ஆகவே, தாகத்தால் தவித்து நிற்கும் மேவாடா தேயத்தின் ரணபூமியின்கண் சத்துருக்களது ரத்தபானத்தால் திருப்தியடையச் சித்தமாயிருங்கள்" என்றனன்.

இவ்வண்ணம் ஆவேசத்துடன் பகர்ந்த வார்த்தைகளால் இதுவரை நித்திரை செய்துவந்த சர்தார்களும், மற்றோரும் கண் விழித்துப் பிரதாபசிம்மனுக்குதவிபுரியச் சித்தமானார்கள். மறுநாள் அதிகாலையில் எல்லோருமெழுந்து தேவாலயஞ் சென்று, பகவானுக்கு அபிஷேகங்களைச் செய்து முடித்து, வீடு வாசலைத் துறந்து, மனைவி மக்களை மறந்து, 'இறக்கவோ அல்லது இருக்கவோ' என்ற வீர மந்திரத்தை ஜயகோஷஞ் செய்து, பிரதாபசிம்மனது ஆக்ஞையை யெதிர் நோக்கிக் காத்து நின்றிருந்தார்கள்.

## இருபத்தைந்தாம் அத்தியாயம்.

இருபுறத்தார்களது சைனியங்களும் தயாராயிருக்கும்பொழுது யுத்தம் நடக்கத் தடையென்ன? கி. பி. 1576-ம் வருஷம் ஜூலை மாதம் ரஜபுத்திரர்களுக்கும் மொகலாயர்களுக்கும் மஞ்சள் கோட்டை மைதானத்தில் யுத்தமாரம்பமாயிற்று. ஒரு புறம் ஜிசோதியா குலத்தின் பூஷணமாய் விளங்கிய பிரதாப சிம்மன் தனது இருபதினாயிரம் வீரர்களுடன் தனது குலகௌரவத்தைச் சம்ரக்ஷணை செய்யும்பொருட்டு ரணபூமியில் தயாரானான். சேனைகளுக்கு முன் ஓர் உயர்ந்த குதிரையின்மேற் பிரதாபசிம்மன் தென்பட்டனன். அவனது வலது புறத்தில் சலும்பர் சேனாதிபதி கிருஷ்ண சிம்மன் கரங்களில் அஸ்திரங்களையேந்தி யிருந்தான். இடது புறத்தில் சித்தூர் கோட்டையைக் கடைசிவரை காத்த புத்தன் என்போனது வம்சத்தைச் சேர்ந்த வீரனிருந்தனன். அச்சமயமிருந்த பயங்கரக் காட்சியை யாதெனப் பகருவது? 'இருக்கவோ, அல்லது இறக்கவோ' என்ற நிச்சயத்தைக்கொண்டு வெளிப்போந்துள்ள ரஜபுத்திரவீரர்கள் ஒரு புறம்! நிச்சயமாய் தமக்கே ஜயமென்ற அகம்பாவத்தைக்கொண்டமொகலாயர்கள் மற்றொரு புறம்! இவ்வண்ணம் இருபக்கத்தோரது சேனைகளும் மஞ்சள்கோட்டை ரணபூமியையடையவே, வில், வாள், பாலா, துப்பாக்கி முதலிய ரணதேவதையின் ஆயுதங்கள் பிரகாசித்தன. ரண துந்துபி முழங்கவே, இருபக்கத்தவர்களும் உயிரைக் கொஞ்சமேனுங் கருதாது மிக்க தைரியங்கொண்டு யுத்தஞ்செய்ய ஆரம்பித்தனர். தங்கள் மனைவி மக்களைக் காப்பாற்ற ஒருவருமில்லையே யென்ற கவலை ஒரு க்ஷணமேனும் அவர்களிடம் அந்த ரணபூமியில் தங்கவில்லை. காய்கறிகளைக் கொய்பவனும் சிற்சில சமயங்களிற் கொய்யும்பொழுது மனவாட்டமடைகின்றான்; ஆனால் அந்த ரணபூமியில் அசூயை, மத்சரம் முதலியவற்றால் பித்தம் பிடித்த ஆயிரக்கணக்கான வீரர்கள் யமஸ்வரூபத்துடன் தமது பந்துக்களது சிரங்களைக் கொய்யக் காத்திருந்தார்கள். வீரர்களது வாட்கள் ஒன்றோடொன்று மோதுவதால் எங்கும் நெருப்புப் பொறிகள் பறந்தன. ஆங்குண்டான சப்தத்தால் மேக கர்ஜனையோவெனச் சந்தேகிக்க நேரிட்டது. இரத்த நதி எங்கும் பிரவாகமாய் ஓடியது. சிப்பாய்களது சிரகமலங்களால் ரணபூமி நிரம்பியது. அச்சமயம் ரணதேவதையின் உக்கிரஸ்வரூபம் ஆங்கு தென்பட்டது. இப்படியிருக்க, ரஜபுத்திர சிங்கமாகிய ராணா பிரதாபசிம்மன் சில வீரர்களுடன் குதிரைமேலேறி மிக்க வேகத்துடன் சத்துருக்களின் பாகத்தினுள் நுழைந்தான். உடனே, 'ஜயஹரஹரசங்கர' என்ற ரஜபுத்திர வீரர்களது தொனி எங்கும் முழங்கியது. மத்திம பாகத்தில் ஒரு பிரம்மாண்ட கஜத்தின் அம்பாரி மத்தியில் இளவரசன் சலீம் வீற்றிருந்தனன். அவனது வலது புறத்தில் சர்தார் மான்சிங் குதிரைமேலிருந்தவண்ணம் தனது வீரர்களை உற்சாகப்படுத்தி வந்தான். தனது பாகத்தில் சத்துரு நுழைந்திருப்பதைக்கண்ட மான்சிங் கோபமூண்டவனாய், வில் வாள், துப்பாக்கி முதலியவைகளை அவன்மேற் பிரயோகிக்கும்பொருட்டு தன் சிப்பாய்களுக்கு ஆக்ஞாபித்தனன். மான்சிங்கைத் தன்னெதிரிலிருக்கக் காணவே, பிரதாபசிம்மன் எரியும் நெருப்பில் எண்ணையை வார்த்ததுபோலாயினன். அவனது நேத்திரங்களினின்றும் நெருப்புப் பொறிகள் பறந்தன. அச்சமயம் அவனது பயங்கர முகத்தைக்கண்ட சத்துருக்களிற் பலர் மூர்ச்சையடைந்து தரையில் வீழ்ந்தார்கள். மான்சிங்கைக் காணவே, பிரதாபசிம்மன் மிகவும் உரத்த குரலில், "குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பே! நீ செய்துள்ள பாவ காரியங்களுக்குப் பிராயச்சித்தமடையத் தயாராயிரு!" எனக் கூவினான்.



பிரதாபனது கடோரவார்த்தைகளைக் கேட்டு மான்சிங் மௌனமாய் சகித்துக்கொண்டனன். சத்துருக்கள் யாவரும் பிரதாபனையே நோக்கியிருந்தார்கள். பிரதாபன் தன் சர்வ சக்திகளையும் ஒன்றுசேர்த்துக் குதிரைமேலேறியிருந்த வண்ணம் நாலாபக்கங்களிலுமிருந்த சத்துருக்களது வில், வாள் முதலிய ஆயுதங்களை யெதிர்த்துவந்தனன். மொகலாயரது சத்துருவானவனும், ரஜபுத்திரர்களது பிராணனாயும் விளங்கிய ராணா பிரதாபசிம்மன் சில வீரர்களுடன் சத்துருக்களது மத்தியிலிருந்து, நாலாபக்கங்களிலுமிருந்தும் வர்ஷித்துக்கொண்டிருந்த யுத்தாஸ்திரங்களையும் தடுத்துக் கொஞ்சமேனும் பீதியடையாமல் அசல் வீரபுருஷனாக நின்று யுத்தம் புரிந்து வருவதைக் கண்ட சத்துருக்களிற் சிலர் இவன்மேல் வாளை வீச மனந்துணிந்தார்கள். பாணத்தைத் தொடுக்க அஞ்சினார்கள். பிரதாபனுடனிருந்த ரஜபுத்திர வீரர்களும் மிக்க உற்சாகத்துடன் சத்துருக்களை யெதிர்த்துவந்தார்கள். சுருங்கச் சொல்லுங்கால், ரணதேவதையே தனது சாமர்த்தியம் யாவற்றையும் ஒன்றுசேர்த்து, மஞ்சள் கோட்டை மைதானத்தில் ராஜ்யபாரம் வகித்து நின்றனள்.

ராணா பிரதாபசிம்மனும், அவனுடனிருந்த ரஜபுத்திர வீரர்களும் கொஞ்சமேனும் பின்வாங்காது எதிர்த்து நிற்பதைக்கண்ட மொகலாயர்கள் கோபங்கொண்டனர். மொகலாயரது சேனைகளோ ரஜபுத்திர சேனைகளைக் காட்டிலும் மும்மடங்கு அதிகமாயிருந்தன. இந்த யுத்தத்தில் தாங்கள் தோல்வியடையும்பக்ஷத்தில் உலகமே சிரிப்பதுமன்றி, இந்துஸ்தானத்தில் மொகலாய வம்சத்திற்கு மிக்க அபகீர்த்தியுண்டாகுமென்ற விசாரத்தால் பல மொகலாய வீரர்கள் தங்கள் பலத்தையெல்லாம் ஒன்றுசேர்த்துத் தாக்கினார்கள். அப்பொழுதேயே பிரதாபசிம்மன் கொஞ்சம் மனந்தளரலானான். தான் ரணபூமியில் இறக்கும்பக்ஷத்தில் தனக்குப்பிறகு ரஜபுத்திரர்களை உற்சாகப்படுத்தி மறுபடியும் மொகலாயருடன் யுத்தம் புரியும்படி ஏவ வேறொருவருமில்லாததால், ஒருவித உபாயமுமின்றி ரணபூமியை விடுத்தகல உத்தேசித்தான். அச்சமயம் அவனது மனதில் பற்பல எண்ணங்களுதித்தன. ரணகளத்தினின்றும் ஓடும்பக்ஷத்தில் உலக நிந்தனைக்காளாக வேண்டுமேயென மனம் நொந்தான். கடைசியாக மனதைத் திடப்படுத்திக்கொண்டு ரணகளத்தை விடுத்தான். அவனைப் பின்தொடர்ந்து சில சத்துருக்கள் குதிரைமேலேறி வந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் சில ரஜபுத்திர வீரர்கள் பிரதாபசிம்மனது பிராணனைக் காக்கவேண்டி வேகமாய் வந்துகொண்டிருந்தார்கள்.

(தொடரும்).

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
**AMRUTANJAN**
THE BEST PAIN BALM.
**Price As. 10 a bottle.**

# விடாமுயற்சி.

(ஸ்ரீமதி S, பார்வதியம்மாள்)

முயற்சியாவது ஒரு காரியத்தைத் தொடங்கினால் தன்னாலானமட்டும் கஷ்டப்பட்டு அக்காரியத்தை முடித்தலே.

அது சரீர முயற்சி, மனோ முயற்சி என இருவகைப்படும். முயற்சி மாந்தர்க்கு இன்றியமையாதது. அது நமக்கு மனதில் பின்னால் வரக்கூடிய தோற்றங்களை கொடுக்கிறது. நாம் முயலும்போது தக்கவாறு முயலவேண்டும். அதாவது காலம், இடம், மூலம் இவைகளையறிந்து நடக்கவேண்டும். அப்படியில்லாமல் மூடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டு முயல்வதுபோல முயன்றால் அது பிரயோஜனமற்றதாகும்.

தக்கவாறு முயல்வதற்கு சில நியமங்களைக் கைக்கொள்ளவேண்டும். நாம் ஒரு காரியத்தை முயலுவதற்குமுன் அக்காரியத்தைச் செய்வதற்குத் தகுந்த பொருள் இருக்கிறதா என்று ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டும். அப்படியில்லாமல் கோபம், பொறாமை, அகங்காரம் இவைகளால் தூண்டப்பட்டு முயற்சி செய்தால் வீணில் திரவிய நஷ்டமே உண்டாகிறது. அப்படி பொறாமைக்கு அடிமையாய் முயற்சி செய்துவிட்டுப் பின்பு வருத்தப்படுவது அறிவீனம். அன்றியும் ஒரு காரியத்தைச் செய்யுமுன் அக்காரியம் நன்மையைத்தருமா அல்லது தீமையைத்தருமா என்று கவனிக்கவேண்டும். அப்படியில்லாவிடின் பின்பு வருத்தப்பட நேரிடும். காலம், இடம், மூலம் இவைகளையறிந்து முயற்சிப்பவர்க்கு கிடைக்காதன ஒன்றுமேயில்லை. அதனாலேயே கற்றோர்,

"ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி யிடத்தாற்செயின்"

என்றனர்.

முன் காலத்தில் மார்க்கண்டேயர் "பதினாறு" வயதான தன் ஆயுளை என்றும் பதினாறாகச் செய்ததற்குக் காரணம் விடாமுயற்சியன்றோ. முற்காலத்தில் பகீரதன் என்ற இக்ஷ்வாகு குல மன்னன் தன் பிதாவாலும் பாட்டனாலும் தங்கள் முன்னோர்களின் சாம்பலின் புனிதத்தின் பொருட்டு ஆகாயகங்கையை பூமிக்குக்கொண்டு வரும்படிமுயற்சிக்கப்பட்டு சித்தியாகாததால் தான் முயன்று தபம்செய்து பல இடையூறுகளுக்கும் பயப்படாமல் கங்கையை பூமிக்குக் கொண்டுவந்து தன் பெயரை விளங்கச் செய்தனன். அதனாலேயே உலகத்தில் 'பகீரதப்பிரயத்தனம்' என்று வழங்கி வருகிறது. விடாமுயற்சியால் எப்பேர்ப்பட்ட காரியங்களையும் சாதிக்கலாம், விதியையும் மதியால் வெல்லலாம்.

தக்கவாறு முயற்சி செய்யாது கடைசியில் அபஜயமடைந்தால் 'எல்லாம் ஊழின் வலி' என்கிறார்கள். ஊழ் என்பது நன்மை அல்லது தீமை செய்தவர்களையே சென்றடையும் ஓர் நியதி. நாம் சரியாக முயலாது அபஜயமடைந்தால் அதை ஊழின் வலி என்பது பிசகு. ஒவ்வொருவரும் தனக்குத் தானே முயற்சி செய்ய வேண்டும்.

தானே முயற்சி செய்வதால் வரும் ஊதியம் கொஞ்சமானாலும் அதுவே மேலானது. அதனாலேயே பெரியோர் "பிறர் தேடிய தந்தக் கட்டிலில் துயில்வதைக் காட்டிலும் தான் தேடிய தாழம் பாயில் துயில்வதே மேலானது" என்று கூறியிருக்கின்றனர். ஆகையால் 'உத்யோகம் புருஷ லக்ஷணம்', 'முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்' என்ற பழமொழிகளை மனதிற்கொண்டு ஒவ்வொருவரும் தன்னாலானவரை முயலவேண்டும்.



முயற்சியாளர் முகத்தில் என்றும் லக்ஷ்மீகரம் பொலிந்து விளங்கும். ஆனால் சோம்பேறிகள் முகத்தில் என்றும் தரித்திரம் குடிகொண்டிருக்கும். அன்றியும் அவர்களிடத்தில் விரல் நொடித்தல் கொட்டாவி விடுதல் முதலிய துர்க்குணங்கள் குடிகொண்டிருக்கும்.

சீனர், ஜப்பானியர், அமெரிகர், ஆங்கிலேயர் முதலியவர்கள் முயற்சியாலேயே தற்பொழுது மகோன்னத நிலையையடைந்திருக்கின்றனர். நம் தேசத்தில் கூன், குருடு முதலிய அங்கஹீனர்களைத் தவிர சோம்பேறிப் பிச்சைக்காரருக்குக் கணக்கில்லை. ஆனால் மற்ற தேசங்களில் பிச்சை யெடுப்பது போன்றவை இழிவான தொழிலாதலால் அங்கு பிச்சைக்காரர்களே அரிது. ஆதலால் நம் தேசத்து சோம்பேறிப் பிச்சைக்காரர் முயற்சியாளராகத் திரும்பினால் நம்தேசம் மற்ற தேசங்களை விடப் பதின் மடங்கு மகோன்னத நிலையையடையும் என்பதில் சற்றும் ஐயமில்லை. ஆனால் அதற்கும் ஒற்றுமையின்றி யமையாதது என்பதை மறக்கக் கூடாது.

சோம்பேறித்தனத்தை ஆரம்பத்திலிருந்தே களையவேண்டும். மடிமை குடிமையைக்கெடுத்து மிடிமையைக்கொடுத்து வாழ்நாளைக் குறைத்து தேச நலத்தைக் கலைக்கும். ஆகையால் நாம் சோம்பலெனும் களையைப் பிடுங்கி, ஊக்கமெனும் நீரை ஊற்றி விடாமுயற்சியெனும் பயிரை வளர்க்கவேண்டும்.

தெய்வத்தின் குற்றத்தாலும் மானிடரின் அஜாக்கிரதையாலும் நேர்வந்தால் அதை ஊழின் வலியென்று சொல்வது சரியாகாது. அன்றியும் மாணவர்கள் ஊக்கமின்றிப் படியாமையால் தவறினால் அதையும் ஊழின் வலி என்னுதல் சரியல்ல. மாணவர்கள் பலதடவை தவறிக் கடைசிமுறை ஜெயிப்பதால் அதுவிடா முயற்சியாகாது. ஏனென்றால் அவர்கள் தக்கவாறு முயற்சி செய்திருந்தால் முதல் தடவையிலேயே தவறியிருக்கமாட்டார்கள்.

யமனோடு வாதாடி ஜயித்துக் கணவரின் உயிரை மீட்ட சாவித்திரியும், தன் கணவனின் கஷ்ட காலத்திலும் கைவிடாது பின் தொடர்ந்து பல துன்பங்களை அனுபவித்து, கணவனைப் பிரிந்து பல உபாயங்களால் கண்டுபிடித்து மறுபடி ராஜ்யத்தை யடைந்த தமயந்தியும், மாற்றாந்தாயின் ஒரு சொல்லால் பொறுக்கொணாத்துயரமடைந்து காட்டுக்குச் சென்று தவம் புரிந்து காணக்கிடையாத பரம் பொருளைக் கண்ட நல்வினம் சிறுவனான துருவனும், பத்து வருஷகாலம் பல பெயரைக்கேட்டுக் கடைசியில் மூன்று பழங் கப்பல்களைப் பெற்று அவைகளைக் கொண்டு உலகமுழுவதும் சுற்றி அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸும், திக்கு வாயனாயிருந்து முயற்சியால் அப்பழக்கத்தை விட்டுப் பெரிய நாவலனான டெமாஸ்தனிஸும் விடாமுயற்சியைச் செய்யாதிருந்தால் எப்படி அவ்வளவு பெரிய காரியங்கள் கைகூடியிருக்கும்?

விடாமுயற்சியை எல்லோரும் கைக்கொள்ள வேண்டும். முக்கியமாய் மாணாக்கருக்கு விடாமுயற்சி அவசியம். படிக்கும்போது ஒரு தடவை படித்து விளங்காவிட்டால் அப்பாடம் விளங்கும் வரையில் படிக்கவேண்டும். ஒவ்வொருவரும் விடாமுயற்சியைக் கைக் கொண்டால் இவ்வுலகத்தில் என்றும் அபஜயமின்றி ஜயசாலிகளாகவே விளங்குவர்.

# இராமனும் காக்கையும்.

(ஸ்ரீமதி செ. ராசம்மாள்.)

புரட்டாசி மாத சனிக்கிழமை யன்று காலை எட்டு மணிக்கு அழகிய மாளிகையின் அறை ஒன்றில் இராமன் சாய்மான நாற்காலி யொன்றிற் சாய்ந்தவண்ணம் சிபி சக்கரவர்த்தியின் சரித்திரத்தைப் படித்துக் கொண்டிருந்தான். அவனுக்குக் கிழக்கு பக்கமாயுள்ள சுவரில் மகாத்மாவின் படம் தொங்கவிடப்பட்டிருந்தது. அவருடைய பார்வை உள்ளத்தை ஊடுருவி அங்கு நிகழ்வதையெல்லாம் உணர்வது போல் அதி தீக்ஷணமாயிருந்தது. ஏழு வயதுள்ள சிறுவனொருவன் அருகிலிருந்த மேசையிலுள்ள புஸ்தகங்களை ஒழுங்காய் அடுக்கிக் கொண்டிருந்தான். சமையலறையில் இருபத்தைந்து வயதென மதிக்கத்தகுந்த பெண்ணொருத்தி சந்நியாசி ஒருவருக்குச் சாப்பாடு பரிமாறிக்கொண்டு நின்றாள். இதற்கிடையில் குழந்தை அழும் சத்தங்கேட்டு இராமனெழுந்து முற்றத்திற் சென்று பார்க்க அங்கு நின்றிருந்த இரண்டு வயதுக்குழந்தை பிதாவினருகிற்சென்று எதிரிலிருந்த மாமரப்பக்கம் கையை நீட்டி 'காக்கா தோசை' என்று மீண்டும் அழுதது. இராமனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அடங்காத கோபங்கொண்டான். உடனே அறைக்குள் ஓடி துப்பாக்கியில் மருந்து போட்டு எடுத்துவந்தான். காகம் அத்தோசையைக் கொண்டுபோய் மாமரத்திலிருந்த தன் இளங்குஞ்சுக்குக் கொடுத்துக் கொண்டிருப்பதைக் காணவே அவனது மனம் இளகியது. 'சற்றுமுன் சிபிராசனின் ஜீவகாருணியச் செயலை வாசித்தும் அநியாயமாக இக்கொலை செய்யத் துணிந்தேனே' என்று எண்ணிக் கொண்டு வெளி விராந்தாவிலிருந்த நாற்காலி ஒன்றிற் சிறிது ஆலோசனையுடன் உட்கார்ந்தான். காகம் தோசையைச் சிறிது சிறிதாகக் குஞ்சுக்குக் கொடுத்துவிட்டுப் பறந்து சென்று இராமனருகிலிருந்த நாற்காலி ஒன்றில் உட்கார்ந்து பின்வருமாறு பேசத்தொடங்கியது:—

"ஐயா நான் தாழ்மையுடன் கூறும் சில விஷயங்களைச் சற்று கவனமாய்க் கேளுங்கள். கடவுள் இப்பிரபஞ்சத்திலுள்ள பொருட்கள் யாவற்றையும் சகல ஜீவராசிகளுக்கும் பொதுவாகவே படைத்திருக்கின்றார். அதை சுயகாரியப் புலியாகிய உங்கள் சமூகத்தார்மட்டும் தின்று கொழுப்பதல்லால் எறிந்து கிடக்கும் பொருட்களையும் நாங்கள் எடுத்தால் கொலை செய்வதெனக்கங்கணங்கட்டிக்கொண்டுவருகிறீர்களே, இது நியாயந்தானா? நீங்கள் சாப்பிட்டு மீதியையும் நாய் பூனைக்குக் கொட்டிவிடுகிறீர்களல்லால் எங்களுக்குச் சிறிதேனுங்கொடுப்பதுண்டா? உங்களைப் போல்தானே எங்களுக்கும் பசி தாகங்களுண்டு! உங்கள் பிள்ளையில் உங்களுக்கு இருக்கும் அன்புபோல்தானே எங்களுக்கும் எங்கள் குஞ்சிலிருக்கும். உங்கள் குழந்தைசாப்பிட்டமீதித் தோசையைத் தின்று தின்று ஏப்பம் விட்டிருக்கும் நாய்க்குப் போட்டுக்கொண்டிருந்ததைப் பார்க்கச் சகியாது இரண்டு நாள் பட்டினிகிடந்த என்குஞ்சுக்குக் கொடுத்தது குற்றமா? புண்ணியம் புண்ணியம் என்று பேசுகின்றீர்களே, புண்ணியம் என்றால் என்ன? பசித்தவர்க்கு உணவளிப்பதிலுஞ் சிறந்த புண்ணியமுண்டா? இரண்டு நாள் பட்டினி கிடந்த என் குஞ்சின் வயிறு குளிர்ந்ததற்காக எத்தனை கோடி புண்ணியம் கிடைக்கும்? அதுவும நீங்களாகச் செய்ததன்று. என் உடலையும் திருணமாக மதித்து உங்களுக்குப் பெரும் புண்ணியத்தை உண்டாக்கிய — — —



யத்துணிந்த பிரதியுபகாரம் எத்தகையது என்பதைச் சற்றுயோசித்துப் பாருங்கள்.

"'நாங்கள் ஆறறிவு படைத்த மனிதர்கள், ஞானமுங் கல்வியும் பெற்றவர்கள்; நீங்கள் கேவலம் பறவைகளிலுஞ் சிறிய காக்கைகள் தானே' என்கிறீர்களோ. இதிலுள்ள வித்தியாசத்தைச் சற்று ஆராய்வோம். மனிதர்களின் செயல் உங்களிடம் எவ்வளவு தங்கியிருக்கின்றது. உங்கள் முன்னோர்கள் எழுதி வைத்த சாஸ்திரங்கள் சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் புறக்கணித்து நிலையற்ற இவ்வுடலை மெய்யென நம்பி எங்களைப் போன்ற பசித்தவர்க்குங் கொடாது சடையுடைபாவனைகளிலெல்லாம் சிற்றின்பப் பேய் தாண்டவமாட மேல் நாட்டாசார அனுட்டானங்களையே பின்பற்றுவது தானா மனிதர்களின் செயல்? உங்கள் சாஸ்திரங்களெல்லாம் கூறுவதென்ன? 'உலகோபகாரமாய் வாழுங்கள்.' இத்தனை வயது வரைக்கும் நீங்கள் செய்த உலகோபகாரச் செய்கைகளெத்தனை என்று கூறுங்கள் பார்ப்போம். நீங்கள் தானா ஞானமுங் கல்வியும் பெற்றவர்கள். மதுரையை ஆண்ட நின்முகாரசனைப் பெற்றவன் யார்? ஞானவாசிட்டத்திலுள்ள புசுண்டன் என்னும் பெயர்பெற்ற யோகி யார்? இவர்களெல்லாம் எங்கள் சாதியாரல்லவென மறுக்கமுடியுமா. ஐயா! இன்று புரட்டாசி சனிக்கிழமை எங்கள் யஜமானராகிய சனீசுவரர் உங்களைத் தொடாதிருக்கும்படி விரதம் அனுஷ்டித்து எங்களுக்கு இரண்டு மூன்று சாதம் கிள்ளி எறிந்துவிட்டுப் போலிப் பண்டாரிகளுக்கும் ஆண்டிகளுக்கும் திருப்தி போசனமும் அரிசி கறிவர்க்கமுங் கொடுத்து விடுகிறீர்களே இஃது நீதியா? பரம ஏழைகளாகிய எங்களுடைய வயிறு குளிரச் சாப்பாடு போட்டு அதனால் ஏற்படும் புண்ணியத்தை அடையாது நெஞ்சிற் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாராகிய இப்போலித் துறவிகளுக்கு ஈந்து பெரும் பாவத்தை மூட்டை கட்டிக்கொள்வதேனோ? உங்கள் அருகு வீட்டிலிருக்கும் மனோன்மணி அம்மாளையே புண்யவதி, தருமவதி, ஜீவகாருண்யவதி என்றாலுந்தகும். அவளது கருணையாலன்றோ இது நாள் வரை எனதும் என் குஞ்சினதும் உடல் பிழைத்தது. அவ்வம்மணி எனக்குச் செய்யும் பரோபகாரத்திற்காக வீட்டிலடையுங் கஷ்டம் சிறிதல்ல. இருந்தும் அவள் உண்ணும்பொழுதாகிலுஞ் சிறிது உணவு எனக்குக் கொடுப்பது வழக்கம். அக்குணவதி இரண்டு நாட்களாய் இங்கு இல்லாததனாலன்றோ நான் இவ்வளவு கஷ்டமடைய நேர்ந்தது.

ஐயா, ஜீவன் என்றால் மனிதர் வேறு, பட்சிகள் வேறா? ஒரு மனிதனுடைய பசியைத் தீர்த்தாலென்ன ஒரு காக்கையினது பசியைத் தீர்த்தாலென்ன; பலன் ஒன்றுதானே. உண்மையில் நீங்கள் புகழை விரும்பாது தர்மம் செய்பவர்களானால் எங்களைப் பசியாற்றுவதாக ஏமாற்றி போலிப் பண்டாரிகளுக்கு விலாப்புடைக்கச் சாப்பாடு போடுவீர்களா? தற்காலம் உங்களுக்கும் எங்களுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது? பல செய்கைகளில் உங்களிலும் நாங்களே மேலானவர்களாகக் கருதப்படுவோம். நீங்கள் பிறர் நன்றாய் வாழ்வதைப் பார்த்துச் சகியாது அவர்களுக்குக் கேடு விளைவிக்கும் எண்ணமுடையவர்கள். நாங்கள் ஏராளமான உணவு கிடைத்த காலத்தில் எங்கள் இனங்களை எல்லாம் கூப்பிட்டு உண்பதை நீங்கள் கவனிக்கவில்லையா? எங்கள் இனங்களில் ஒருவருக்கு அபாயம் வந்த காலத்தில் எங்கள் அனைவருடைய உடலையும் திரணமாக மதித்து அவருக்கு உதவி செய்ய முற்படுவோம். நீங்கள் அபாயத்திலகப்பட்ட மனிதனை அப்

படியே நாசமாக்க முன் வருவீர்கள். இன்னும் உங்கள் பிழை நெறிகள் பலவுள. இப்போது நேரமில்லாததனால் செல்கின்றேன். ஆனால் நான் சொல்வதொன்றுளது. நீங்கள் இன்று தொடங்கி கடவுள் பக்தியும் ஜீவகாருண்யமு முடையவராய் எங்கள் இனத்தவர்களை கண்ணியத்துடன் பார்த்து வந்தீர்களானால் எங்கள் யஜமானர் உங்களைத் தொடாதிருக்கும் படியாய் வேண்டிக்கொள்வேன். வந்தனம். ஐயா! போய்விட்டு வருகிறேன்" என்று சொல்லிப் பறந்து போயிற்று.

சுபம்!

# மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

(ஸ்ரீமான் S. R. அனந்த நாராயணய்யர்)

(609-வது பக்கத் தொடர்ச்சி)

## இருபத்தாறுவது அத்தியாயம்.

மடகாஸ்கர் தீவு—இத்தியோபியா நாடு—ஆப்பிரிக்காவிலுள்ள வேறு பிரதேசங்கள்.

அங்கிருந்து தெற்கில் ஆயிரம் மைல் தூரத்துக்கப்பால் மடகாஸ்கர் என்னும் தீவு இருக்கின்றது. அது உலகத்திலுள்ள மிகப் பெரிதாகவும் செழித்துமுள்ள தீவுகளிலொன்று. அதன் சுற்றளவு மூவாயிரம் மைல். அங்குள்ள குடிகள் அராபியர்கள் (ஸாரஸர்கள்). அவர்கள் வயோதிகர்களான நான்கு அரசர்களால் ஆளப்பட்டு வருகின்றனர். அவர்கள் ஏராளமான யானைக் கொம்புகளைவிற்று ஜீவனம் செய்பவர்கள். அவர்கள் வேறு சரக்குகளைக் கொண்டும் வியாபாரஞ் செய்வார்கள். இந்தப் பக்கங்களில் ஜலமானது வெகு வேகமாக ஓடுகின்றது.

இங்குள்ள கோழியினத்தைச் சேர்ந்த ரூக் என்னும் அண்டங் காக்கைகளைப்பற்றி அதியத்புதமான கதைகள் சொல்லுகின்றார்கள். அப்பறவைகள் வடிவத்தில் கழுகுகளைப் போலிருந்தாலும், உருவத்தில் அவைகளினும் மிகப் பெரியவையாம். அஜ கஜாந்தமென்றே சொல்லவேண்டும்.

ஜான்ஜிபாரும் வெகு க்ஷேமமான தீவென்று சொல்லுகின்றார்கள். அங்கு யானைகளும் ஒட்டைப் புலிகளும், நமது நாட்டிலிருப்பவைகளைச் சிறிதும் ஒத்திராத ஆடுகளும் உள. அங்குள்ள ஸ்திரீ புருஷர்கள் அதிகுரூபிகள்.

ஹிந்து சமுத்திரத்தில் குடியுள்ளதும் குடியில்லாததுமான பன்னீராயிரத்து எழுநூறு தீவுகள் இருக்கின்றனவென்று அச்சமுத்திரத்தைக் கடந்த நாவிகர்களும் சமர்த்தரான மாலுமிகளும் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவர்களது கிரந்தங்களிலும் அவ்வாறே எழுதப்பட்டிருக்கின்றது.

மலையாளம் முதல் காஷ்மீரம் வரையிலுள்ள பெரிய இந்தியாவில் பதின்மூன்று ராஜ்யங்கள் இருக்கின்றன.

சின்ன இந்தியாவென்பது ஸியாம்பியிலிருந்து முர்பிலி வரையிலுள்ளது. அதில் அனேகத் தீவுகளும் எட்டு ராஜ்யங்களுமுண்டு.

இரண்டாவதான மத்திய இந்தியாவுக்கு அபேஸியா வென்று பெயர். அதிலுள்ள முக்கிய அரசன் கிறிஸ்தவ மதத்தான். அவன் கீழ் ஆறு சிற்றரசர்களுமுண்டு; அவர்களுள் மூவர் கிறிஸ்தவர், மூவர் அராபியர். அந்நாட்டில் யூதர்களுமுண்டு.

நியூபியாவில் மதப்பிரசங்கஞ் செய்தபின் ஸெண்டுதாமஸ் அபேஸியாவுக்கு வந்து அங்கும் பிரசங்கஞ்செய்து, பின் மலையாளத்துக்குச் சென்றார். அபேஸியாவிலுள்ள ஜனங்கள் மஹா சூரர்கள். அவர்கள் ஏடன் சுல்தானுடனும் நியூபியா தேசத்தாருடனும் சதா போர்புரிபவர்களாக விருக்கின்றனர்.

1288-ம் வருஷத்தில் அபேஸியா மஹாராஜாவானவர் ஜெருசலம் யாத்திரை செய்ய உத்தேசித்ததாகவும், அப்போது வழியிலுள்ள அராபிய ராஜ்யங்களைக் கடந்து செல்வது அபாயமானதென்று சொல்லி அவரது மந்திரிகள் அந்த யாத்திரையை நிறுத்த, அவர் தனக்குப் பிரதிநிதியாக நல்லொழுக்கமுள்ள ஒரு குருவை யனுப்பிவைத்ததாகவும், அந்த குரு திரும்பி வருகையில், ஏடனிலுள்ள சுல்தான் அவரைப் பிடித்து பலவந்தமாக மகமதிய மதத்திற் சேர்த்ததாகவும், அப்பால் அபேஸியா மஹாராஜன் படையெடுத்துச்சென்று ஏடன் சுல்தானையும், வேறு இரண்டு மகமதிய அரசர்களையும் வென்று, ஏடனையும் பிடித்துக் கொள்ளையிட்டதாகவும் கேள்விப்பட்டேன்.

அபேஸியாவில் தங்கம் விசேஷமாக உண்டு. அங்கிருந்து நாற்பது மைல் தூரத்திற்கப்பால் தென் கிழக்கில் ஈஸ்ஸேர் இருக்கின்றது; அது ஏடனுக்குக் கீழ்ப்பட்டது. அங்கு முதல் தரமான மட்டிப்பால் ஏராளமாகக் கிடைக்கின்றது. அது ஒரு ஜாதி சிறு மரங்களின் பட்டையைக் கிழித்தவுடன் அவைகளின் வழியே ஒழுகிக் கீழே விழுகின்றது. அதுவே அந்நாட்டின் விசேஷமான வியாபாரச் சரக்கு.

அந்நாட்டில் தானியங்கள் விளைவதேயில்லையாதலால் அங்குள்ள ஜனங்கள் மீன்களைக் கொண்டு ரொட்டி செய்கின்றனர். அந்த மீன் ரொட்டிகளையே தங்களது மாடு குதிரைகளுக்கும் தீனியாகக் கொடுக்கின்றனர். இதற்காக அவர்கள் மார்ச்சு, ஏப்ரல், மே மாதங்களில் மீன் பிடிப்பார்கள்.

(தொடரும்).



# சுபத்திரா கலியாணம்.

(ஒரு சிறிய நாடகம்)

(ஸ்ரீமான் S. N. கோபாலகிருஷ்ண அய்யர்)

அங்கம் I. களம் 1.

இடம்:—(பிரபாச தீர்த்த கரையில் ஓர் மடம்) துவாரகை.

காலம்: இரவு.

பாத்திரங்கள்:—அர்ஜுனன், சிஷ்யர்கள்.

அர்ஜுனன்:—ஆஹா! உலகில் மானிடனாய்ப் பிறந்து, விலங்கினங்களுக்கு இல்லாத ஒரு நூதன அறிவாகிய பகுத்தறிவையும் நமக்குக் கொடுத்த கடவுளின் சிருஷ்டியை என்னென்று சொல்வது! பிரமன் படைத்த பலகோடி ஜீவராசிகளுக்குள் மனிதனே மேன்மையாகக் கருதப்படுகின்றான். அதிலும் அவருடைய சிருஷ்டியை நோக்குங்கால், மனிதர்க்குள் ஆண் என்றும் பெண் என்றும் பிரிவுகளை உண்டாக்கி, ஒன்றையொன்று பிடித்து இழுத்துக் கொள்ளும் காந்த சக்தியையும் கொடுத்தது வியக்கத்தக்கதே. இவ்வுலகில் ஆண் இல்லாத இடம் ஏதேனுமுளதோ? அல்லது பெண் இல்லாத இடம் ஏதேனுமுண்டோ? அப்படிக்கொன்றும் இல்லையே. எங்கு பார்த்தாலும் பெண்ணும் ஆணுமாகவும் ஆணும் பெண்ணுமாகவும் இருக்கின்றார்களே. அதிருக்கட்டும். நான் என் இவ்வுலகத்தையே உதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும். என்னைப் பற்றிய மட்டிலுமே அது

பொருந்தும். நான் இப்பொழுது தீர்த்த யாத்திரை செய்ய வந்திருக்கிறேன். நான் தீர்த்த யாத்திரை செய்ய வந்தது ஓர் பெண்ணு லன்றோ? ஆம். அப்படி இருந்தும் என் மனம் ஏன் பெண்ணையே நாடுகிறது? இதுவும் ஒரு மாயைதான். நான் தீர்த்த யாத்திரை செய்ய ஆரம்பித்த பிறகு உலூபி, சித்ராங்கதை ஆகிய இவர்களின் வலையிற் சிக்கிக்கொண்ட பிறகும் என் மனமானது ஸ்திரீயினிடமே செல்கின்றது. இதற்கு யானென்ன செய்வேன். ஜகதீசா! உமது திருவுள்ளம் எவ்வாறிருக்குமோ! வசுதேவகுமாரர்களுள் ஒருவனுன கதன் என்பவன் ஏன் அச்சுபத்திரையின் ரூபலாவண்ணியத்தை உரைக்கவேண்டும். அதைக்கேட்டமுதல் எனது மனம் கடும்புயலகப்பட்ட கப்பல்போல் உழலுகின்றதே என் தேகம் எரிகின்றதே. நான் எப்பொழுது அம்மங்கையைக் காண்பேன். கதன் சொல்லிய ரூபலாவண்யமுற்றவளாயின் அவளே எனக்கு வாய்த்தவள். அப்பெண்மணியை நான் சீக்கிரம் காண்பேனாயின் எனது எண்ணம் கைகூடும். அர்ஜுனனைத் தவிர்த்து வேறு யார் அப்பெண்ணினிடம் வரமுடியும். நான் முயற்சி செய்யாவிடில் காரியம் கைகூடுவது கடினம். ஆதலால் ஓர் உபாயம் செய்யவேண்டும். காலத்திற்குத் தகுந்த கோலமாய் சந்நியாசி வேஷம் போட்டுக் கொள்வதே உத்தமம். யாதவர்கட்கும் அவர்களைச் சேர்ந்தவர்க்குந் தெரியாமல் பிக்ஷைசெய்து போவேனாகில் எப்படியாவது சுபத்திரையைக் காணலாம். பிறகு கிருஷ்ணனுடைய கருத்தை யறிந்துகொண்டு வேண்டியவற்றைச் செய்யலாம். ஆதலால் நான் இப்பொழுதே சந்நியாசி வேஷம் பூணுவதற்குச் செல்கிறேன்.

(செல்கிறான்)

(சந்நியாசிவேஷம் பூண்ட அர்ஜுனன் வருதல்)

அர்ஜுனன் :—ஆகா! என்ன! அசாத்திய இருட்டாயிருக்கிறதே. ஆகாயமெல்லாம் கருத்த மேகங்கள் படர்ந்திருக்கின்றனவே.

மாதவன் :—ஆம்! சுவாமின்! மழை வரும் போலிருக்கின்றது. மேகங்களின் இடிமுழக்கத்தையும், மின்னலையும் பார்த்தால், அத்திக்கட்டி ஆலங்கட்டியோடு மழை பொழியும் போலிருக்கின்றது.

அர்ஜுனன் :—மழை யொன்றும் வாராதடா! அதோ பார்! காற்று என்ன வேகமாக அடிக்கிறது; சீக்கிரம் மேகங்களைக் கலைத்துவிடும்.

மாதவன் :—சுவாமின்! (வாயைக் கையால் கொஞ்சம் மூடிக்கொண்டு) பெரியவாள் வாயாலே அப்படிச் சொல்லாதீர்கள். இந்த மூன்று வருஷ காலமாக மழை சிறிதேனும் கிடையாது. ஜனங்கள் படும்பாடு மிகவும் பரிதபிக்கத்தக்கது. ஏதோ அபூர்வமாய் மேகங்கள் கூடியிருக்கின்றன. கடவுளருளால் இன்று மழை அபரிமிதமாய் வர்ஷிக்கவேண்டும்.

அர்ஜுனன் :—மழை பெய்யவேண்டாமென்று நான் சொல்லவில்லை. ஏதோ காற்று ஜாஸ்தியாக அடிப்பதனுல் அவ்வாறு சொன்னேன். சரி அது இருக்கட்டும். நாழிகையாகி விட்டது; நீ செல்லலாம்.

மாதவன் :—சுவாமின்! இந்த மழைக்காலிருட்டில் தாங்கள் ஏன் தனிமையாகச் செல்ல வேண்டும். யானும் தங்களுடன் வந்துவிட்டுத் திரும்புகிறேன்.

அர்ஜுனன்:—சிஷ்யா! பாதகமில்லை; நாழிகையாய் விட்டது. நீ கிரகத்திற்குச் செல். நான் கிழக்குக் கோடியிலிருக்கும் மடத்திற்குச் செல்கின்றேன். அதுதான் எனக்குத் தகுதியான இடம்; நீ போய்வா.

(சிஷ்யன்போய் விடுகிறான்.)



(அர்ஜுனன் யோசித்தவாறே போகிறான்).

அர்ஜுனன் :—அடடா! அதற்குள் மழை வந்து விட்டதே. சற்று முந்தி அல்லது பிந்தி வந்திருக்கக் கூடாதா. பாதை தெரியாமல் இருள் சூழ்ந்து விட்டதே. அத்திக்கட்டி ஆலங்கட்டியுடன் ஓங்கி அடிக்கின்றதே. இங்கிருந்தோ மடம் அரை மைல் தூரமிருக்கின்றது. இதற்கென் செய்வது! சமீபத்திலிருக்கும் ஆலமரத்தினடியில் தங்குவோம்.

(ஆலமரத்தை அணுகி ஓர் பொந்திலுட்காருகிறான்; கிருஷ்ணனை நினைக்கிறான்).

---

இரண்டாம் களம்.

இடம்—கண்ணன் பள்ளியறை; ஆலமரத்தடி; ரைவதக பர்வதம்.

காலம்—இரவு.

பாத்திரங்கள்—கிருஷ்ணன், சத்தியபாமை, அர்ஜுனன், ஊழியக்காரர் சிலர்.

கிருஷ்ணன் :—கண்மணி! இன்று சாயந்திரம் இன்பமாகக் காலங் கழித்தேன். அப்பொழுது நீ என்னருகிலில்லாததுதான் ஒரு பெருங் குறையாயிருந்தது.

சத்தியபாமை :—என்ன, என்ன, தாங்கள் அனுபவித்த இன்பத்தைத் தயவுசெய்து எனக்குரைத்திடவேண்டுகிறேன். அடியாள் அறியக்கூடியதுதானே!

கிருஷ்ணன் :—நீ அறியக்கூடாதது ஏதேனுமுண்டோ? அப்படிக்கொன்றுமில்லை. இன்று சாயந்திரம் நான் யாழ் வாசிக்கவும் 1008 கோபிகா ஸ்திரீகள் என் முன்னால் நின்றுகொண்டு தாள நாட்டியத்துடன் கும்மியடிக்கவும், அதைப் பார்த்துக்கொண்டிருந்த அனேகம் பசுக்கள் சிறிதேனும் சத்தம் செய்யாமலிருந்தது மிகவும் நன்றாயிருந்தது. இன்று சாயந்திரம்போல இதுவரையும் ஒரு நாள் கூட வாய்க்கவில்லை.

சத்தியபாமை :—அப்படியா. அப்பொழுது என்னை நினைத்துக்கொண்டீரோ? அல்லது நீர் மாத்திரம் அனுபவித்தீரோ?

கிருஷ்ணன் :—பிரியே! உன்னை நினையாமல் அரைக்ஷணமேனும் உயிருடனிருப்பேனோ? சத்தியபாமா, நீ அப்படி ஒன்றும் மாறாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

சத்தியபாமை :—தாங்களும் அப்படிக்கொன்றும் நினைத்துக் கொள்ளவேண்டாம். தாங்கள் என்ன சொல்லுகின்றீர்கள் என்று பார்ப்பதற்கே அப்படிக் கேட்டேன். தங்களுக்கு என் பேரிலுள்ள அன்பை நான் நன்கு அறிவேன்.

கிருஷ்ணன் :—சந்தோஷம் கண்மணி, நேரமாகின்றது. இனி நாம் படுக்கைக்குச் செல்லலாமே. இன்று சந்திரனின் ஒளி பிரகாசமாயிருப்பதாலும், தென்றல் வீசுகின்றதாலும் நிலா முற்றத்தில் அமைத்திருக்கும் மஞ்சத்திற்குச் செல்வோம்.

பாமை :—தங்கள் திருவுள்ளப்படியே நடக்கச் சித்தமாயிருக்கின்றேன். யானும்போய் சந்தன புஷ்பாதிகளைக்கொண்டு வருகிறேன்.

(போகிறாள்)

(இருவரும் மஞ்சத்தின் மீது படுத்துக்கொண்டிருக்கின்றனர்.)

கிருஷ்ணன் :—(திடீரென்று எழுந்துட்கார்ந்துகொண்டு விழுந்து விழுந்து சிரிக்கின்றார்.)

சத்தியபாமை :—(தானும் எழுந்து) நாதா! ஏன் படுத்திருந்தவர் எழுந்துட்கார்ந்து அகாரணமாய்ச் சிரிக்கிறீர்? நடந்ததென்ன? எனக்கொன்றும் விளங்கவில்லையே. தயை செய்து சொல்ல வேண்டுகிறேன்.

(கிருஷ்ணன் மறுபடியும் சந்தோஷத்தினாலே அடிக்கடி சிரிக்கிறார்.)

ச.பாமை :—என்ன நாதா ! எதற்குச்சிரிக்கிறீர் என்று கேட்டால் மறுபடியும் அதிகமாகச் சிரிக்கிறீர்களே. என்னைக் கேலி செய்கிறீர்களோ ! தாங்கள் கேலி செய்யும்படி நானென்ன செய்தேன் ?

கிரு :—சத்தியபாமா ! உன்னை நான் கேலி செய்யவில்லை. பிறரையும் நான் கேலி செய்யவில்லை. ஏதோ ஒரு நிகழ்ச்சியைக் குறித்து சந்தோஷ மிகுதியினால் சிரித்தேன், நீ தப்பபிப்பிராயம் கொள்ளவேண்டாம்.

ச.பாமை :—அப்படியானால் தாங்கள் சிரித்ததற்குக் காரணம் சொல்லவேண்டும்.

கிரு :—கண்ணே ! உன்னிடம் உரைக்காமல் வேறு நான் யாரிடம் உரைக்கப்போகிறேன். சொல்லுகிறேன் கேள். என்னுடைய அத்தை மகனும் பீமசேனனுக்குத் தம்பியுமான அர்ஜுனனைப் பற்றித் தான் சிரித்தேன்.

ச.பாமை :—சிரித்ததின் காரணமென்ன ?

கிரு :—அர்ஜுனன் திரௌபதியின் நிமித்தமாகத் தீர்த்தயாத்திரை புறப்பட்டு வந்தான். அதன் முடிவில் நமது சுபத்திரையின் அழகைக் கேள்வியுற்று, அவளை எப்படியும் காணவேண்டுமென்று ஓர் உபாயம் தேடினான்.

ச.பாமை :—அவ்வுபாயம் என்னவோ ?

கிரு :—காலத்திற்குத் தகுந்த கோலமாய் சந்நியாசி வேஷம் போட்டுக்கொண்டு நமது துவாரகைக்குப் பக்கத்தில் ஓர் ஆலமரத்தின் கீழ் இப்பொழுது இருக்கிறான்.

ச.பாமை :—சரி, நாதா ! இப்பொழுது அசாத்தியமாய் மழை யடிக்கிறதே, பாபம். அர்ஜுனன் மழையால் மிகவும் வருந்துகிறான் போலிருக்கின்றது.

கிரு :—ஆம் ! ஆம் ! சுபத்திரையையும் நினைத்துக்கொண்டு, மழையில் நனைந்து வருத்தப்பட்டுக்கொண்டு என்னை தியானிக்கிறான். அதற்காகத்தான் நான் சிரித்தேன்.

(சத்தியபாமை, தேகங் குலுங்கச்சிரிக்கக்கண்ணன் :— நீயேன் இப்பொழுது சிரிக்கிறாய் ?

ச.பாமை :—அர்ஜுனன் நிலைமையைக் கண்டு சிரித்தேன்.

கிரு :—சரி. நீ உன் அண்ணனாகிய அர்ஜுனனைப் பார்க்கவேண்டாமா ? வா என்னுடன், போகலாம்.

(போகிறார்கள்.)

(இருவரும் மரத்தினருகில் வந்ததும்)

கிரு :—சத்தியபாமா ! இதோ பார் ! நம்முடைய அர்ஜுனன் வேஷத்தைப் பார். நல்ல காஷாயம்தான் உடுத்தியிருக்கிறான். இருந்தாலும் வருந்துவதைப் பார்.

ச.பாமை :—ஆம். நாதா !

கிரு :—(அர்ஜுனனை நோக்கி) அர்ஜுனா ! ஏது இப்பொழுது தீர்த்த யாத்திரை வந்தது. நடந்த விருத்தாந்தங்களைச் சுருக்கமாகச் சொல்.

அர்ஜுனன் :—கிருஷ்ணா ! எனது தமையனார் தருமராஜர் திரௌபதையோடு வார்த்தையாடிக்கொண்டிருப்பதை நான் பார்த்துவிட்டேன். ஆகலால் நான், நாரதர் ஏற்படுத்திய நிபந்தனையின்படி, தீர்த்த யாத்திரை புறப்பட்டு வந்தேன்.

கிருஷ்ணன் :—சரி. உன் வருகையை நான் முன்னமே சாரணர்கள் மூலமறிந்தேன். சமீபத்திலிருக்கும் ரைவதக பர்வதத்தில் ஓர் இருப்பிடமமைத்து வேண்டிய சிப்பந்திகளைச் சித்தமாய் வைத்திருப்பதால் அங்கு செல்வோம் வா.

(போகிறார்கள்.)



ஊழியக்காரர்கள் (போஜன வஸ்துக்களைக் கொண்டுவந்து வைத்து)

சுவாமி ! இப்போஜன வஸ்துக்களை உண்ணலாம். இன்னம் வேண்டியன சித்தமாயிருக்கின்றன.

(இருவரும் புசிக்கிறார்கள்.)

ஆடல் பாடல்கள் நடக்கின்றன.

கிருஷ்ணன் :—இனி நீங்கள் உங்கள்வேலையைக் கவனிக்கலாம். சத்தியபாமா ! நீ நம்முடைய ரதத்திலேறிக்கொண்டு அரண்மனைக்குச் செல். நான் காலையில் வருகிறேன்.

(எல்லோரும் சென்ற பிறகு)

அர்ஜுனா, நாம் இனி நித்திரை செய்யலாம்.

(விடிந்ததும் கண்ணன் ஊழியக்காரர்களைப் பார்த்து)

கிருஷ்ணன் :—சிப்பந்திகாள் ! இச்சந்நியாசிக்கு நீங்கள் யாவரும் சிஷ்ருஷைசெய்து அனுக்கிரஹத்தைப் பெறுங்கள். காலாகாலங்களில் தகுந்த போஜனங்களைக் கொடுங்கள்.

சிப்பந்திகள் :—உத்தரவுப்படியே.

கிரு :—அர்ஜுனா, நான் துவாரகைக்குச் சென்று வருகிறேன். நீ பயப்படவேண்டாம். இப்பர்வதத்திலேயே இருந்துகொண்டு காலத்தைப் போக்கி வா. உனக்கு வேண்டிய சிப்பந்திகளையும் வைத்திருக்கிறேன் ; நான் போய் வரவா.

அர்ஜுனன் :—அப்படியே சென்று வாருங்கள். ஞாபகமிருக்கட்டும்.

(தொடரும்).

# ஒரு சம்பாஷணை.

(ஸ்ரீமதி குகப்ரியை)

நல்ல பன்னிரண்டு மணி வேளை, வெய்யில் உக்கிரமாய்க் காய்ந்து கொண்டிருந்தது. நான் வாயிற் புறத்து ஜன்னலில் உட்கார்ந்திருந்தேன். எங்கள் தெருவிற் குடியிருப்போரிற் பெரும்பாலோர் "பத்துமணி" ஆபீஸ்காரர்களாகையால் தெருவு நிச்சப்தமாயிருந்தது.

எதிர் அகத்துத் திண்ணையில் காமுப்பாட்டி கையில் ஜபமணியை உருட்டிக்கொண்டே "சேஷி நாட்டுப்பெண் துடுக்கு, பொல்லாது. அம்பு நாட்டுப் பெண் அசடு" என்று அவள் கோஷ்டியாருடைய நாட்டுப் பெண்களைப்பற்றி அப்பிராயமோ மதிப்புரையோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

அதற்கடுத்த வீட்டு 'கோபிநாதராவ்' சம்சாரம் கமலாபாய் அம்மாள் முன்னெற்றி மயிரை ஒழுங்கு படுத்திக்கொண்டு ஒரு ஓலைப் பெட்டியில் கொஞ்சம் பாக்கும் கையில் பாக்குவெட்டியும் எடுத்துக்கொண்டு "தீனபந்து," "ரகுநந்தனா" என்று சொல்லிக்கொண்டு வந்து உட்கார்ந்தாள்.

கோடியகத்துகோமதி தான் புதிதாய்ச் செய்துகொண்ட ஜிலேபி அட்டிகையைப்போட்டுக்கொண்டதற்காக நமஸ்காரஞ் செய்ய வந்தாள். ஒவ்வொரு வீட்டிலும் புருஷர்கள் உத்தியோகத்திற்குச் சென்று விட்டபடியால் பத்துமணிக்குமேல் பன்னிரண்டு மணிக்குள் அந்த ஸ்திரீகளிற் பெரும்பாலோர் காமுப் பாட்டியின் அக்கிராசத்தின் கீழ் பொதுக் கூட்டம் கூடுவார்கள்.

காமுப் பாட்டியைக் கெட்டவள் என்று சொல்லக்கூடாது. அவள் கை ஜபமாலையை

உருட்டிக்கொண்டே தானிருக்கும். வாய் தான் பொல்லாதது. அவள் மனதுக்குள் தான் ஏதோ சத்காலக்ஷேபம் செய்வதாய்த் தான் எண்ணம். சில சமயங்களில் என்னிடம் கூட "நான் யார் வழிக்குப்போகிறேன். என்ஜபமாலையுண்டு நானுண்டு என்றிருக்கிறேன். எங்காவது போகிறேனா, வருகிறேனா, திண்ணையுண்டு நானுண்டு. என்னை ஊர் வம்பெல்லாம் அளக்கிறாய் என்று எங்க ராமு கேலி பண்ணுகிறான்" என்று சொல்லுவதுண்டு.

அவர் யாகத்துக்கும் போகாமலிருக்கும் பொழுதே இவ்வளவு விசேஷமிருக்கிறதே என்று நானே எனக்குள் சிரித்துக் கொள்ளுவேன்.

கோபிநாதராவ் சம்சாரம் கமலாபாய் வந்து உட்கார்ந்து வெகுநேரம் வரையில் பேசுவதற்கு ஒன்றும் சமாசாரம் அகப்படவில்லை. அதைப் பற்றி ஆரம்பிக்கலாமென்று யோசித்துக் கொண்டிருக்கக் கோடியாத்து சோமு, "கமலாபாய் மாமீ உங்காட்டுப் பெண் ரமா இருக்கிறாளே அவள் அட்டிகை எத்தனை பவுன்" என்றாள்.

அதற்கு அவள் "அதை யார் கண்டார்கள். எந்தக் கழுதை எத்தனை பவுனுக்குப் போட்டுக் கொண்டால் எனக்கென்ன. பொட்டிக்கடை முண்டத்திலே பொறுக்கி எடுத்த முண்டம். கெட்டது கழுதை. அதன் பேச்சை விட்டுத் தள்ளு" என்று வெகு கோபத்துடனும் வெகு வெறுப்புடனும் கூறினள்.

கோமதி :—" என்ன மாமி! ரொம்பவும் கோபித்துக் கொள்ளுகிறீர்களே."

கம:—"கோபமென்ன வந்திருக்கிறது. கெட்ட கேட்டுக்கு வட்டம் கால் பணம். எச்சிற் கலை. ரமாவாம்! பெயருக்கென்ன! பெயர் நன்றாய்த் தானிருக்கிறது. அது படுத்துகிற பாட்டைப்பார். கழுதையிலும் கேடுகெட்ட கழுதை! எச்சிற்கலை நாய்! இதற்குப் பிறந்தகம் போக வேணுமாம். கூத்தடிக்கிறது. நக்கமங்கலம் புக்ககம், நாரமங்கலம் பிறந்தகம். நித்ய தரித்திரம் அம்மானகம். நின்ற நிலையில் அழைக்க வந்தாள். என்னமோ வேணுமே" என்று சாமாரியாய் ஆரம்பித்தாள். இதற்குள் காமுப் பாட்டி பேரன் கமலாபாய் அம்மாளின் கூடையிலிருந்த பாக்குகளை ஒவ்வொன்றாய் எடுத்து வெளியிற் போட்டான். பள்ளிக்கூடத்திலிருந்த மற்றொரு பேத்தி பாவாடையை விசிறிக் கொண்டே நுழைந்தாள்.

"ஓ! கழுதை. பாக்கை ஏண்டா எடுக்கிறாய்" என்று அதட்டி விட்டுப் பேத்தியை "என்னடி கூத்தாடிச்சி யாட்டம்? பொட்டைக் கட்டைக்கு வேண்டாமோ இத்தனை ஆட்ட பாட்டம்? உள்ளே போ! நங்கு வாசித்துக் கொண்டிருக்கிறாள். சாதம் போடச் சொல்லி நேரும் கூறுமாய் சாப்பிடு" என்று அதட்டினள். பிறகு என்னைச் சுட்டிக்காட்டி "அதோ ஒன்று உட்கார்ந்திருக்கிறதோ இல்லையோ, அதனால் தான் இவளும் குட்டிச்சுவராய்ப்போகிறாள். இதற்கு முன்னால் அதிகமாய் புஸ்தகம் புஸ்தகம் என்று விழுந்து விழுந்து படிக்க மாட்டாள். மெள்ள மெள்ள புஸ்தகப் பைத்தியம் பிடித்து விட்டது. நாவலாம், கதையாம். இல்லாவிட்டால் என்னமோ விவேகானந்த விஜயமாம், இராம கிருஷ்ணர் உபதேச ரத்ன மாலையாம். 'நன்றாயிருக்கிறது, உரக்கவேண்டுமானால்வாசிக்கிறேன். நீங்களும் கேளுங்களேன்' என்றாள். எனக்குப் பிடிக்கவில்லை, வந்து விட்டேன்." என்றாள்.

இதற்கிடையில் நான் உட்கார்ந்திருந்த ஜன்னலின் கீழ் நடந்த ஒரு அதிசய சம்பாஷணை என் மனதைக் கவர்ந்தது. எட்டிப் பார்க்கக் கூடாதென்று தீர்மானித்து மெதுவாய்க் கவனிக்கலானேன்.



வெய்யிலின் கொடுமையைச் சகிக்காமல் ஒரு கழுதை ஜன்னலோரத்தில் நின்றுகொண்டு மெதுவாய் காதுகளை அசைத்துச் சிரமபரிகாரம் செய்து கொண்டிருந்தது. காற்றினால் அடியுண்டு மண்ணிற் புரண்ட ஓர் எச்சிற்கலம் சொல்லுகிறது:—"அண்ணா, உன்னையும் என்னையும் அதோ தெருத் திண்ணையிலிருப்பவர்கள் திட்டுகிறார்களே. கேட்டையா? நம்மிருவரையும் இவர்கள் ஏன் திட்டவேண்டும். நல்ல காற்று அடித்தால் அதன் உதவியால் அவர்கள் மேல் பறந்து விழுந்து விடுவேன்" என்றது.

கழுதை:—"அப்பா தம்பீ, கோபங் கொள்ளாதே. உன்னைக் காட்டிலும் என்னையே இவர்கள் அதிகமாய்த்திட்டுகிறார்கள். அதற்காக நாம் கோபித்துக் கொள்ளலாமா. நீ இழிவான நிலைமையிலிருப்பதனால் இவர்கள் இப்படிச் சொல்ல நேரிடுகிறது.

எச்சிற்கலம் :—அதிருக்கட்டும் அண்ணா, நான் இழிவான நிலைமையில் இருக்கிறேன் என்றாயே. எனக்கு இந்த நிலைமை யாரால் ஏற்பட்டது? இந்தப் பாழும் மனிதர்களாலேயே, நான் இலையாய் மரத்திலிருக்கும்பொழுது என்னை எல்லோரும் கலியாணப் பந்தலிற் கட்டுவதற்கும் சந்தனம் முதலியவற்றைச் சேகரிப்பதற்கும் உபயோகமுள்ள உயர்ந்த பொருளாய் இருந்தேன். இந்த மனிதர்களுடைய சேர்க்கை ஒரு தடவை ஏற்பட்டு அவர்களுடைய ஒரு வேளை போஜனத்துக்கு உபயோகப்பட்ட உடனே என் உயர்ந்த நிலைமையெல்லாம் பறந்தோடிப் போக எச்சிற்கலம் என்று எல்லாரும் இகழும்படியான நிலைமையை அடைந்தேன். என்னை இகழ்வதெல்லாம் என் குற்றத்தின் பொருட்டல்ல, உண்மையில் இந்தப் பாழும் மனிதர்களையே இகழவேண்டும். பாம்புக்குப் பால் வார்த்தாலும் அது விஷத்தையே கொடுக்கும் என்பதுபோல் அவர்களுக்கு உதவியாய் நான் போஜன பாத்திரமாயிருந்துங் கூட என் உதவிக்கு நன்றி பாராட்டாமல் என்னை இகழும்படியான நிலைமைக்குக் கொண்டுவந்தது மன்றியில் ஒவ்வொரு கெட்ட காரியங்களைச் செய்பவர்களைத் திட்டுவதற்குக் கூட என் பெயரை ஏன் இழுக்கவேண்டும்" என்று மிகுந்த அதிருப்தியுடன் கூறிற்று.

கழுதை:—தம்பீ, பொறுத்துக் கொள். என்னைக் காட்டிலும் உன்னை அதிகமாய் இகழவில்லை, என்னையே எல்லாவற்றிற்கும் பிரதானமாய், குழந்தை செய்யும் குற்றத்திலிருந்து பெரியோர் செய்யும் குற்றம் வரையில் எல்லாவற்றிலும் என் பெயரே அடிபடுகிறது. நீயாவது தாவர வர்க்கத்தைச் சேர்ந்தவன், நானோ ஜீவ வர்க்கத்தைச் சேர்ந்தவன் என்பது உனக்குத் தெரியும். என்னால் அவர்கள் அடையும் உபயோகம் எண்ணிறந்தது. எங்கள் இனத்தாரெல்லாம் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தோமானால் தெரியும். வெள்ளை உடுப்பணியும் சீமான், சீமாட்டிகள் படும்பாடு! எங்களைப் போன்ற யஜமான விசுவாசி மனிதரில் லக்ஷத்தில் ஒருவர் கூட இருக்கமாட்டார்கள். மண்டை வெடித்துப் போகும்படியான வெய்யிலில் சுமை சுமையாய்த் துணிகளை முதுகின் மேற் சுமந்து வெய்யிலை வெய்யிலென்று பாராட்டாமல் மழையை மழையென்று எண்ணாமல் எவ்வளவோ பக்தியோடும் விசுவாசத்தோடும் நடந்துகொள்ளுகிறோம். எங்கள் யஜமானிடமிருந்தோ ஒரு விதமான ஆகாரத்தையோ பானத்தையோ எதிர் பாராமல் உலகில் ஜென்மமெடுத்தவர் இயன்ற வரையில் உழைப்பதே கடமை என்றும் எண்ணி வேலை செய்கிறோம். மனிதர்களைப் பார்! தந்நலமின்றிப் பிறருக்காக உழைப்பவர் ஆயிரத்தில் ஒரு

வருண்டோ என்னமோ. அனேகமாய் மனிதர்கள் பணத்துக்கும் சாப்பாட்டுக்குமாக விசுவாசிக்கிறார்களேயொழிய கடமை என்பதை அறிந்து செய்பவர் ஒருவருமில்லை. எங்கள் இனத்தாரைப்போல் தன்னலமற்று உழைப்பவர்களும் யஜமான விசுவாசிகளும் யாராவது இருக்கிறார்களா? நூறு இருநூறு சம்பளம் கொடுக்கும் யஜமான்கூட 'உஸ்' என்றால் வேலைக்காரனுக்குக் கோபம் வந்துவிடுகிறது. "சுய மரியாதை" "தன் மதிப்பு" என்று உளறுகிறார்கள். பெற்றதாயார் ஒருவார்த்தை சொல்லிவிட்டால் "சுய மரியாதை" குறைந்துபோய் விடுமாம். பெற்ற பிள்ளை ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் சுய மரியாதை பறந்தோடி விடுமாம். என்ன சுய மரியாதையோ? பெற்ற தாய் கஞ்சி போட்டிப் பாலூட்டிச் சீராட்டித் தோளிற்றூக்கித்திரிவதற்கெல்லாம்சொந்தம். ஒரு வார்த்தை சொல்லி விட்டால் சுய மரியாதை போய் விடுமாம். "பிள்ளையார் கோவிலைப் பூசலாம் மெழுகலாம்........சுவாதீனமா" என்பதுபோல் இவர்களை வளர்க்கவும் மற்றவைகள் செய்யவும் சொந்தம். ஒரு வார்த்தை சொல்லச் சுவாதீனமில்லை. மனிதர்களில் ஸ்திரீகளுக்காகட்டும் புருஷர்களுக்காகட்டும் பொறுமை என்பது குதிரைக் கொம்பாகத் தானிருக்கிறது. அனேகம் பெயர்களுக்குப் பொறுமை எப்படி இருக்கும், கருப்பா, சிவப்பா என்று கூடத் தெரியாது. பிரீதி விசுவாசம் எல்லாம் பிறர் தங்களுக்கு என்ன கொடுக்கிறார்களோ அதுவரையில் தான். "நானும் அவரும் ரொம்ப இஷ்டம், ஈருடலும் ஒருயிரும். அவ்வளவு பிராண சினேகிதம்" என்று சொல்லுகிறவர்களெல்லாம் அவர்கள் கொடுப்பது நின்றவுடனே முன்பின் அறியாதவர்கள்போலாகி விடுவார்கள். "எங்கள் வீட்டிற்கு வந்தால் என்ன கொண்டு வருகிறாய்; உங்கள் வீட்டிற்கு வந்தால் என்ன கொடுக்கிறாய்?" என்பதுதான் அவர்களுக்கு மனப்பாடமாய்த் தெரியும்.

"தவிர, குற்றம் செய்தவர்களையோ, மற்றவர்களையோ திட்டும்பொழுது ஒரு பாபமும் அறியாத எளிய கழுதையின் பெயரை ஏன் இழுக்கவேண்டும்! திருடுகிறது, பொய் சொல்லுகிறது, ஏமாற்றுகிறது, முடிச்சவிழ்க்கிறது முதலிய கெட்ட குணங்களுள்ள மனிதரை எங்கள் பெயரால் திட்டுவானேன். நாங்கள் திருடுகிறோமா, பொய் சொல்லுகிறோமா, முடிச்சவிழ்க்கிறோமா, கேப்மாரித்தனம் செய்கிறோமா! வேறு எந்த இழித் தொழில்களையாவது செய்கிறோமா! எந்த விதத்தில் பார்த்தாலும் அவர்களை விட நாங்கள் நல்ல நிலைமையிலிருக்கிறோமேயன்றி தாழ்ந்த நிலைமையில்லை. என்ன தான் குட்டிக்கரணம் போட்டாலும் எங்களுடைய யஜமான விசுவாசமும் பொறுமையும் அவர்களுக்கு ஒரு நாளும் வாராது. ஏன்? ஆறறிவு படைத்த மனிதவர்க்கத்திற் கூட கணவன் சரியானபடி ரக்ஷிக்காவிடில் மனைவி முணுமுணுக்கிறாள். "பிள்ளை அதைச் செய்பவில்லை, இதைச் செய்யவில்லை" என்று தாயார் முறுமுறுக்கிறாள். பொறுமையும், விசுவாசமும், பகுத்தறிவுமிருந்தால் முணுமுணுப்பும் முறுமுறுப்பும் ஏற்படுமா? பெயரென்னமோ. அவர்களுக்குத் தான பகுத்தறிவு இருக்கிறதாம். அது என்ன பகுத்தறிவோ?

எங்களுக்குப் பகுத்தறிவு இல்லாவிட்டாலும் எங்களைப்போல் யஜமான விசுவாசம் இவர்களிடமுண்டா, எங்கள் யஜமான் வண்ணானாயிருந்தாலும் நாங்கள் எவ்வளவு கீழ்ப்படிதலோடு நடந்து கொள்ளுகிறோம். அவன் எங்களுக்கென்று புதிதாய் ஆகாரம் தேடுகிறானா? முன் காலைக் கட்டிவிட்டு விட்டால் நாங்கள் இஷ்டப்படி மேய்ந்து வருகிறோமே யன்றி அவனிடமிருந்து ஏதாவது எதிர் பார்க்கிறோமா? எது கிடைத்தாலும் சரி, கந்தைக் காகிதமானாலும் கூட தின்று திருப்தி அடையவில்லையா? "பகுத்தறிவு, பகுத்தறிவு" என்று சொல்லிக் கொள்ளும் மனிதர்கள் கண்ட தண்ணீர், சோடாத் தண்ணீரோ, காப்பித் தண்ணீரோ, தேத்தண்ணீரோ, ஏதோ வொரு தண்ணீரைக் குடித்துத் திருப்தியடைந்து விடுகிறார்கள். அது எவ்வளவு அசுத்தமாயினும் சரியே. நாங்களோ எப்பொழுதும் சுத்தமான தண்ணீரையே குடிப்போம். சில மனிதர்கள் மேல் நாட்டுக்குப் போய்விட்டு வந்து விட்டோமென்றும், தாங்கள் பெரிய மேதாவிகளென்றும் எண்ணிக்கொண்டு இங்கிலீஷில் கூடத் திட்டுகிறார்கள். தங்களுக்குத்தான் அதிக மரியாதை யென்றும் மற்றவர்களுக்குக் கிடையாதென்றும் எண்ணிக் கொள்ளுகிறார்கள். மேல் நாடுகளுக்குப் போனால் யாருக்குத்தான் மரியாதையில்லை. ஏன், எங்கள் இனத்தாருக்குக் கூட வெளி நாடுகளில் ராஜோபசார தேவோபசார சோடசோபசாரங்கள் நடக்கின்றன. ஏன்? பிரசித்தி பெற்ற ஏழாவது எட்வர்ட் சக்ரவர்த்தி கூட கழுதையின் பேரில் ஏறி சவாரி செய்திருக்கிறார்" என்று சொல்லிக்கொண்டே இருக்கையில் நான் என்னை யறியாமலே மடமடவென்று சிரித்தேன். உடனே கழுதை வெகு வேகமாய் நாலு கால் பாய்ச்சலில் ஓடிற்று. எச்சிற்கலம் காற்றிற் பறந்து வெகு தூரத்திற் கப்பாற் சென்றது.

> "சோலை குயில் காதல் சொன்ன கதை யத்தனையும்
> மாலை வெயிலின் மயக்கமே என்று கண்டேன்"

என்று பாரதியார் சொன்னபடி அது வெயிலின் தோற்றமோ என்று சந்தேகித்தேன். கண்ணை நன்றாய்க் கசக்கிக்கொண்டு பார்த்தேன். எழுப்பாட்டியும் கமலாபாயும் வாக்குவாதம் செய்யும் அற்புதக் காட்சி புலப்பட்டது.

சுபம்!



# ஆகாரமும் அதன் உபயோகமும்.

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை)

காபிரைட்.

ஒவ்வொருவருக்கும் பசியைப்பற்றிச் சிறிது தெரிந்திருக்கிறது.

> "மானங்குலங் கல்வி வண்மை யறிவுடைமை
> தானந்தவ முயற்சி தாளாண்மை—தேனின்
> கசிவந்த சொல்லியர் மேல்காமுறுதல் பத்தும்
> பசிவந்திடப் பறந்துபோம்"

என்று கூறியிருப்பதால், நெடுநேரம் ஆகாரமில்லாதிருந்தால் பசியின் கொடுமை யெப்படிப்பட்டதென்று நாம் உணரவல்லோம்.

நம்மைப் பசியுள்ளவர்களாகச் செய்வது எது? தேகம் எப்போதும் ஆகாரத்தையுட்கொள்ளுகிறது; ஆகையால் அதற்கு ஆகாரத்தை யெப்போதும் உதவவேண்டும். தேகத்திற்கு ஆகாரம் உதவாவிட்டால் நாம் பசியையுணருகிறோம். அப்பசியைத் தணிக்காவிட்டால் நாம் பட்டினியால் தேகத்தை யிழக்க வேண்டிவரும்.

அநேக ஜனங்கள் குறைவான ஆகாரம் உண்பதால் துன்பப்படுகிறார்கள். அவர்கள் உண்பதற்குப் போதுமான ஆகாரமில்லாமலிருக்கலாம், அல்லது தேக போஷணைக்குத் தகுந்த ஆகாரமாயில்லா திருக்கலாம். அநேகர்

“மீதூண் விரும்பேல்” என்பதை மறந்து அளவுக்கு அதிகமாக வுண்பதால் துன்பப்படுகிறார்கள். இவ்வாறுண்பது கேட்டைத் தருவதாகும், அல்லது ஆகாரக் குறைவினாலுண்டாகும் கேட்டினும் அதிகக் கேடாகும்.

சில பிராணிகள் பசியுள்ளபோது மாத்திரம் தின்னுகின்றன. அவை, சிலர் சுவையுள்ள பொருள்களை விரும்பிப் பேராவல் கொண்டு உண்பதுபோலத் தின்பதில்லை.

### தேக வளர்ச்சிக்கு ஆகாரம் அவசியமாகும்.

சிறுவர்களும் சிறுமிகளும் ஒவ்வொரு நாளும் தங்கள் தேகத்திற்குச் சிறிது சேர்த்துக் கொள்வதால் சிறிது எலும்பின் வளர்ச்சியும், மயிர் வளர்ச்சியும், இரத்த விருத்தியும், தசை வளர்ச்சியுமுண்டாகின்றன. இவ்வளர்ச்சி எங்கிருந்துண்டாகின்றது? இவ்வளர்ச்சி இல்லாததிலிருந்து உண்டாகிறதில்லை.

நாமுண்ணும் ஆகாரங்களிலிருந்தே இவ்வளர்ச்சியுண்டாகின்றது. நாமுண்ணும் ஆகாரம் ஜீரணித்து (வயிற்றிலும் குடலிலும் நீர் மயமாகி) இரத்தமாகி இரத்தக் குழலிற் சேர்ந்து தேகத்தின் எல்லாப் பகுதிகளுக்குஞ் செல்லுகின்றது.

நாமுண்ணும் ஆகாரமே கெட்டியான என்பையும், வலுவான தசைகளையும், உறுதியான நரம்புகளையும், ஊக்கமுள்ள மூளையையுந் தருகின்றது.

சாதாரண உபயோகத்திலிருக்கும் சில வஸ்துக்களால் தேக வளர்ச்சி தடைப்படுகின்றது. உதாரணமாக, பீர் வகைகள் (beer), ஒயின் (wines), சாராய வகைகள் (spirits) முதலிய மயக்கந் தரும் வஸ்துக்களை ஆரோக்கியமுள்ள சிறுவர்களும் சிறுமிகளும் கண்டிப்பாய் விலக்கல்வேண்டும். புகைச் சுருட்டுக் குடிக்கலும் தேகம் வளர்ந்து விருத்தியாதலைத் தடை செய்கின்றது.

ஆகாரமுண்ணும்போது நீருந்துவது உத்தம பானமாகும். ஏனெனின், அந்நீர் பெரிதுங் கரைக்கும் இயல்புடையது. அது ஆகாரத்தை நீர்க்கச் செய்கிறது.

சிறுவர்களும் சிறுமிகளும் மிக்க சுவையுள்ள ஆகாரங்களை(rich foods)யும், சம்பிரமமான ஆகாரங்களை (luxurious foods) உண்பதால் தேகம் வலுவுள்ளதாயிராதென்று ஞாபகத்தில் வைக்கவேண்டும். அவர்கள் வலுவானவர்களாகவும் திடமுள்ளவர்களாகவுமிருக்க வேண்டுமானால் சாதாரணமானதும், இலேசானதும், தேகத்திற்குச் சுகந்தருவதுமான போஜனத்தையே புசிக்கவேண்டும்.

தேகம் வரவரத் தேய்ந்து மெல்லியதாய் இளைத்துப் போவதினின்றும் தடுப்பது ஆகாரமேயாம். ஆகாரமே தேகத்தின் தேய்வை மீளப்புதுப்பிக்கின்றது. ஆகாரம் தேகங்களின் வளர்ச்சிக்கு மாத்திரம் உபயோகமுள்ளதாகுமானால், சிறுவர் சிறுமிகளின் வளர்ச்சி நின்றுவிடும்போது, அவர்களுக்கு ஆகாரம்வேண்டிய அவசியமில்லை. ஆனால், வளர்ச்சி நின்றுவிட்ட ஸ்திரீ புருஷர்களுக்குச் சிறுவர் சிறுமிகளைப்போலவே பசியுண்டாகின்றது. இதனால், நாம் உயிரோடிருப்பதற்கும் வேலை செய்வதற்கும் தேகமானது ஒவ்வொரு நிமிஷமும் ஆகாரப் பொருள்களை உபயோகப்படுத்திக் கொள்ளுகிறதென்று தெரிந்து கொள்ளுகிறோம்.

மிகக் கடினமான வேலை செய்பவர்களுக்கு மிக அதிகமான உணவுவேண்டும். உழவுத் தொழில் செய்பவர்கள், இரும்பு வேலை செய்பவர்கள், சுரங்கங்களில் கல் வெட்டி யெடுப்பவர்கள், பலவித பளுவுள்ள மூட்டைகளை யேற்றி வண்டி யிழுப்பவர்கள் முதலிய பலர் பெரிதும் தேகவுழைப்புள்ளவர்களாதலால், அவர்களுக்கு, கிளார்க்கு வேலை பார்ப்பவர்கள், தேக வுழைப்பில்லாதவர்கள் இவர்களி



னும் மிக அதிக உணவுவேண்டும். ஏனெனின், அதிக உழைப்புள்ள தேகம், அதிக அளவான உணவை யுபயோகித்துக் கொள்ளுகிறது.

ஆதலால் தேகத்திலுண்டாகுந் தேய்வைப் புதுப்பிக்கக் கூடிய கோதுமை ரொட்டி, பால், மாமிசம் முதலிய ஆகாரங்களையே நாம் உண்ணவேண்டும். தேநீர், காப்பி நீர் இவைகள் தேகத்தைப் போஷிப்பவையல்ல. ஆனால், கொக்கோவா(cocoa)வில் தேகத்தைப் போஷிக்கும் சத்துண்டு. பீர் (beer), ஒயின் (wine), சாராய வகைகள் (spirits) இவற்றில் தேகத்தை வளர்க்கும் ஆகாரப் பொருளில்லை.

நோயினால் வருந்தினவர்கள் மிக இளைத்துப் பலவீனப்பட்டு விடுகிறார்கள். அஃதேன்? அவர்கள் நோயாயிருக்கும்போது அவர்களுக்கு உண்பதற்குக் கூடாமற் போகிறது. அப்போது தேகம் தன்னுறுப்புக்களிலிருந்தே உணவு தேடிக் கொள்ளுகிறது. நோயாளி சௌக்கியமடைந்து வரும்போது அவன் பசியை யுணருகின்றான். அதனால் நன்றாய்ச் சாப்பிடுகின்றான்; சீக்கிரத்தில் உடம்பில் சதை பிடித்துத் திரும்பவும் பலசாலியாகின்றான்.

அநேகர் தேக போஷணைக்குப் போதுமான ஆகாரம் உண்ணாமல் குறைவாகவே யுண்கிறார்கள். அதனால் அவர்கள் கடினமான வேலைசெய்ய முடியாது. இதற்குப் பல காரணங்களுண்டு. அவற்றுள் சில காரணங்களென்னை யெனின், அவர்கள் தங்கள் தேகத்தைப் போஷிப்பதற்குப் பதிலாகத் தங்கள் பணத்தை மதுபானத்திலும் துர்நடக்கைகளிலுஞ் செலவிடுகின்றனர்.

நாமுண்ணும் ஆகாரத்திலிருந்தேதான் நமக்குத் தேக பலமும் வேலை செய்யச் சக்தியும் உண்டாகின்றன. நாம் வேலை செய்வதற்கு முன்னம் நம் உடம்பில் சக்தியிருக்கவேண்டும்.

நீராவி யந்திரத்தில் நெருப்பு, நீர் இவைகளே அதற்கு ஆகாரமாகி அதனை இயங்கச் செய்கின்றன. யந்திரம் அதிக வேலை செய்ய வேண்டுமானால் அது மிகப் பெரிதாகவும் பலமுள்ளதாகவுமிருக்கவேண்டும். அது செய்ய வேண்டிய வேலைக்குத் தகுதியாக அதிக நிலக்கரியும் தண்ணீருமிருக்க வேண்டியது அவசியமாம்.

நாம் வேலை செய்யும்போது இளைப்புண்டாகின்றது. அஃதெப்படி? நாம் சாப்பிட்டுத் தூங்கிக் காலையிலெழுந்த பிறகு, உடம்பு திடமாயிருப்பதை உணருகிறோம். ஆனால், மாலையிற் நமக்கு இளைப்பும் தூக்க மயக்கமும் உண்டாகின்றது. ஏனெனின் நம்மிலிருந்த சக்தியிற் சிறிது உபயோகித்துவிட்டோமாதலால், நமக்கு முன்போலச் சக்தியுண்டாவதற்குமீண்டும் ஆகாரம் வேண்டும். ஆகாரத்திலும் ஓய்விலுமிருந்தே நாம் புதிய சக்தியைப் பெறக் கூடும். ஓய்வில்லாமல் ஆகாரம் உண்பதும், ஆகாரமில்லாமல் ஓய்வாயிருப்பதும் பிரயோசனமில்லை. இரண்டுஞ் சேர்ந்திருந்தால்தான் தேகம் வலுவுள்ளதாயிருக்கும்.

சிலம்பப் பயிற்சியுள்ளவர்கள் பல வகை விளையாட்டினாலும், தேகாப்பியாசத்தினாலும் சரீர பலத்தையும், எவ்வகை நோயையும் சகித்துக்கொள்ளுந் தன்மையையும் பெரிதும் விருத்தி செய்ய முயலுகிறார்கள். மேற்சொன்னவர்கள் சிலம்பவித்தையைப் பயின்று வருகையில் அவர்கள் உண்ணும் உணவைப்பற்றி மிகவும் ஜாக்கிரதை யெடுத்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் பலமுண்டாவதற்கு மிக அநுகூலமான ஆகாரங்களையே தெரிந்து உண்ணுகிறார்கள்.

சிலம்ப வித்தையில் தேர்ந்துள்ளவர்களில் அநேகர் மயக்கந் தரும் இலாகிரி வஸ்துக்களை உண்பதில்லை. அஃதேனெனின் அவர்கள்

வீரத்தன்மைக்கும் சக்திக்கும் மதுபானம் தகுதியற்றதென்று அநுபவத்தால் அறிந்திருக்கின்றார்கள்.

ஆகாரத்தினால் தேகம் உஷ்ணமாயிருக்கிறது.

காற்றைப் பார்க்கினும் நம்முடைய தேகம் உஷ்ணமாயிருக்கின்றது. தேகத்திற்கு ஆகாரமில்லையாயின் அது உஷ்ணமில்லாமல் குளிர்ந்துபோகும். பிறகு மரணத்திற்கு ஏதுவாகும்; ஆகையால் தேகத்தினின்றும் உஷ்ணம் கழியாதிருக்கும்படி ஆகாரத்தை உட்கொள்ள வேண்டும்.

ஒரு வஸ்துவை எரிக்கும்போது அனல் உண்டாகிறதுபோலவே, ஆகாரம் உட்கொண்டபோது அது இரத்தத்திற் கலந்து உஷ்ணமுண்டாகின்றது.

உதாரணமாக, மெழுகு வர்த்தி எரியும்போது அது சீக்கிரத்தில் உஷ்ணமாக மாறுவதை அதன் சுவாலையால் நேரில் அறிகிறோம். நம்முடைய தேகத்தில் தகனம் மிக மெதுவாக நடைபெறுகிறதாயினும் தேகத்தில் உஷ்ணம் எப்போதும் போதுமான அளவில் (98 degrees Fahrenheit) இருந்துகொண்டேயிருக்கிறது. நமது உடம்பின் பின்சருமத்தின் மேற்பரப்பெங்கும் உஷ்ணங்கழிந்து கொண்டேயிருக்கிறது; ஆனால், இரத்தவோட்டம் தேகமெங்கும் மிக விரைவாக நடைபெறுவதால், அவ்விரத்தமே சருமத்தின் மேற்பரப்பிலிருந்து கழிந்துபோன உஷ்ணத்திற்கு மீள உதவுகிறது. இவ்விதமாகத் தேகத்தின் உஷ்ணம் காக்கப்படுகிறது.

அநேகர் மதுசாரம் தேகவளர்ச்சிக்கும் தேகத்திலுண்டாகும் தேய்வைப் புதுப்பித்தற்கும், தேகவலுவுக்கும் உதவியில்லாவிட்டாலும் தேகத்திற்கு உஷ்ணங்கொடுக்கிறது என்று சொல்லுகின்றனர்.

அது தேகத்தில் உஷ்ண உணர்ச்சியைத் தருவது உண்மையே. அது மற்ற ஆகாரத்தைப்போலவே தேகத்தில் தகனமாகின்றது. ஆனால், அதுவே தேகத்தில் வேறு மாறுதல்களை உண்டாக்குகின்றது. அம்மாறுதலாவது உஷ்ணம் நஷ்டமாகிறதுதான். அஃதெப்படி? ஒருவனுடைய தேக உஷ்ணம் சுபாவமாகக் கழிவதினும் மதுபானத்தால் விரைவாகக் கழிகிறது. அவ்வாறு கழியும்போது அவன் உஷ்ணத்தை யுணருகிறான்.

மனதின்தொழில் தேகத்தின் நிலைமையைப் பொறுத்திருக்கின்றது.

மனம் நல்ல வேலை செய்யும்படி தேகம் தக்க ஆகாரத்தால் போஷிக்கப்படல் வேண்டும். தேகத்தில் உஷ்ணமுமிருத்தல் வேண்டும். ஆகாரங்கள் மூளையை உறுதிப்படுத்துவதுமன்றித் தேகத்தையும் உறுதிப்படுத்துகின்றது. தகுதியான ஆகாரமில்லையாயின், மூளை பசியால் வருந்துவதுமன்றித் தேகமும் பசியால் வருந்தும்.

மதுசாரம் மூளைக்கு நன்மை செய்வதில்லை, ஆனால் பல விஷயங்களிலுந் தீமையே செய்கின்றது. ஆகையால், நாம் எதைப்பெற முயல வேண்டும்? ஆரோக்கியமுள்ள தேகத்தில் சித்தஸ்வாதீனமுள்ள மனதைப்பெற முயலவேண்டும்.




## ஜோன் ஆப் ஆர்க்.

(ஜனாப் A. M. அல்லாபிச்சை)

(615-வது பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு ஜோன் தன் காலத்தைப் போக்கி வந்தனள். ஒரு நாள் தன் தோழிகளுடன் பந்தயத்திலோடித் தன் முயற்சியாலும் வன்மையாலும் வெற்றிபெற்று மிகத் தளர்ச்சியடைந்தனள். இது காரணம் பற்றி அவள் சோர்வுற்று மெல்ல நடக்கும்பொழுது, ஓரிளைஞன் அவளை நோக்கி, "ஜீனி, நீ நின் அகத்திற்குச் செல்வாயாக! நின் அன்னை நின்னைவேண்டுகின்றனள்" என்று கூறினன். இதைச் செவியுற்ற அவள் தன்னகத்திற்கேகித் தன் அன்னையை நோக்கி, "என் அம்மையே! நீர் என்னை இப்பொழுதழைத்ததற்குக் காரணமென்ன?" என்று வினவினள். அதைக் கேட்ட அவள் அன்னை இசபெல்லா கோபத்துடன் தன் மகளை நோக்கி, "ஜீனி! யானின்னை அழைத்தேனில்லை. யாது காரணம் பற்றி நமது ஆடுகளைத் தனியே விட்டுவிட்டு இங்கு இப்பொழுது வந்தனை?" என்று வினவினள். தன் அன்னை கூறிய வார்த்தைகளைச் செவியுற்றுத் தனக்கு வீணே நடக்குங் கஷ்டத்தை விளைத்தவனைக் கோபித்துக்கொண்டு தன் ஆடுகளைக் கவனிக்கும் பொருட்டேகும்பொழுது அழகிய ஒரு முகில் அவள் எதிரே மிக்க வேகத்துடன் செல்வதாயிற்று. சற்று நேரத்திற்குள் ஓராகாயவாணியவளை நோக்கி, "மாசற்ற ஜோன்! நின் காலத்தை அத்தகை

யாகப் போக்குதல் சரியன்று! நீ அற்புதமான செயல்களை நிகழ்த்தப் பிறந்திருக்கின்றனை! பிரான்சு தேயத்து மன்னனுக்குதவி புரியும் வண்ணம் மன்னர் மன்னருக்கு மன்னனாகிய பரமேட்டி (கடவுள்) நினக்குத்தரவளிக்கின்றனர். இப்பொழுதணிந்திருக்குமிவ்வாடையை ஒழித்து ஆடவர் அணியுமாடையை யணிவாயாக! வாட்படை முதலிய ஆயுதங்களைத் தாங்கி யுத்தத்தில் படைத்தலைவியாக இருக்கக் கடவாய்! நீ கூறும் வண்ணமாகவே எல்லா விஷயங்களும் நிறைவேறும்." என்று கூறிற்று. இவ்வசரீரி வாக்கின் கருத்தை யுணராத மிக்க இளையவளாகிய ஜோன் பயத்தால் நடுக்கமெய்தினள்; தன் உணர்ச்சி யிழந்து பரவசமாயினள். பின்னர் ஒருவாறு தேறினள். ஆடுகளை கவனிக்கும் பொருட்டுச் சென்றனள். இவ்வாறு பலமுறை அவ்வசரீரி வாக்கு இவளை நோக்கி "கடவுளிட்ட கட்டளையை நிறைவேற்றுவாயாக!" என வற்புறுத்திக் கூறியது.

இவ்வசரீரி வாக்கைப் பலமுறை கேட்டபடியாலும்; தன் நாடு பகைவர்களால் துன்புறுத்தப்பட்டமையாலும்; தன் தேயத்து மன்னன் உதவியின்றித் துன்ப சாகரத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கின்றமையாலும்; தன்னுடைய கிராமத்தினரும், உறவினர்களும், தாய் தந்தையர்களும் கோலார் விளைவிக்கும் விபத்துக்களை அனுபவித்துக்கொண்டு வருகின்றபடியாலும் ஜோன் தெய்வங் கூறியதுபோல் ஓராடவனைப்போலாயுதங்களணிந்து பகைவருடன் போர்புரிந்து, அவர்களைத் தோற்கடித்துத் தன்னாட்டில் சுதந்தரத்தை நிலை நாட்டக் கருதினள்.

அந்நங்கை கொண்ட கருத்தினை நிறைவேற்றும் பொருட்டு அனுபவித்த பெருங் கஷ்டத்தை யெடுத்துரைப்பதற்கு முன்னர், மடவார்களின் பொறுமை, தைரியம், வன்மை முதலியவற்றின் சிறப்பினை நன்குணராப் பல மாந்தர்கள் ஜன சமூகத்தில் மங்கையர்கள் அனுபவிக்கும் பதவியைப் பற்றிக் கொண்டிருக்கும் கொள்கையினைச் சிறிதேனுமுணர்தல் நலமெனக் கருதுகின்றனம்.

உலகமுய்யும் வண்ணம் வியக்கத்தக்க வீரர்களையும், புலவர்களையும், சாதுக்களையும், தூதர்களையும், அறிஞர்களையும் பெற்று வளர்க்கும் மங்கையர்களையும் சிலரறிவின்மையால் ஆடவர்களுக்குக் குற்றேவல் செய்யுமாறு சிருஷ்டிக்கப்பட்ட பணியாளரெனக் கருதுகின்றனர்; கல்விக்கு முதற்காரணமாக இருப்பவள் சரஸ்வதியே யென்பதைச் சற்றும் யோசியாமல் மாதர்கள் கல்வியில் மிக்க தேர்ச்சியடைதல் பெரும் பழியெனச் சிலர் பிதற்றுகின்றனர்; சான்பிபீ முதலிய பெண்மணிகளின் வீரம், தைரிய முதலியவற்றைச் சற்றுமறியாமல் மடமாதர்கள் வீரமற்ற சிருஷ்டிகளெனச் சிலர் புலம்புகின்றனர்; ஜூலியெட் முதலிய நங்கைகளின் விசுவாசத்தைச் சற்றுமுணராத சிலர் மங்கையர்கள் விசுவாசமற்ற சிருஷ்டிகளெனக் கூறுகின்றனர்; ஒரு தேய முன்னேற்றமடைய வேண்டுமாயின், அத்தேயத்தின் மாதர்கள் தங்களாலியலும் வரையில் முயற்சி செய்யுமொரு காரணத்தாலேயே அத்தேய முன்னேற்றமடையுமென்பதைச் சற்று மறியாத சிலர் அம்மடமயில்கள் மடைநூலொன்று மாத்திரங் கற்கத் தகுந்தவர்களென அறுவகைச் சுவையுடன் நால்வகையுணவு அமைக்கும் மடைமையாற் பிதற்றுகின்றனர்; ஆடவர்கள் வன்தொழில்களில் பிரவேசிக்காவண்ணம் தடுத்தவர்களைச் சீர்திருத்த மடமான்களைச் சிலர் வீட்டுச் சாமான்களைப் போன்றவரென அறிவின்மையாற் செப்புகின்றனர்; வையகத்திலுள்ள பாபம், பிணி முதலியவற்றைத் தங்கருணையாலும்



கற்பின் வன்மையாலும் நீக்கி யொழிக்கும் பெண்மணிகளைச் சிலர், எல்லாப் பாபங்களுமொன்று கூடி வையகத்திலொரு வடிவெடுத்தவர்களெனத் தங்களறியாமையாற் பிதற்றுகின்றனர்; தங்களைப் பெற்று மிக்க அன்புடன் பாராட்டி வளர்த்ததுமன்றி, இது நன்மை, இது தீமை என்று பகுத்தறிவதற்கு முதற்காரணமாக இருக்குங் கல்வியில் தங்களைப் பயிலச் செய்தவர்களில் தங்களன்னைகளே முக்கியமாக இருந்தவர்களென்பதைச் சிறிதும் யோசியாமல் நங்கையர் பிள்ளைகளைப் படைக்கும் யந்திரங்களெனச் சிலர் சற்று மஞ்சாமற் கூறுகின்றனர்; இவ்விருபதாவது நூற்றாண்டிலும் மாந்தர்களுக்குள் பலர் மடப்பிடிகளைப் பற்றி இத்தகைய எண்ணங்கொள்ளுகின்றனர். (கல்வி யெங்கும் வியாபித்திருக்குமிக்காலத்தும் மாந்தர் பலர் மங்கையர் யுத்த முதலிய வீரச் செயல்களை நிகழ்த்தச் சக்தியற்றவரெனக் கூறும்பொழுது, கல்வி மிக்க சிறப்புப் பெற்று விளங்கியிராத காலத்தில் ஜோன், கடும் பகைவர்களால் தன் சனன பூமியாகிய பிரான்சு தேயம் பெருந் துன்பத்திற் காளாக்கப்பட்ட தருணத்தில், முன் வந்து தான் பிரான்சு தேயத்தை இரட்சிக்க எண்ணங்கொண்டதை வெளியிட்டபோது அவளைப் பலருமிகழ்ச்சி செய்தது இயற்கையேயன்றோ?)

ஜோன் என்னு மங்கையை எல்லாம் வல்ல பரமன் பிரான்சு தேயத்தை இரட்சிக்கும்படி பல முறை ஆகாயவாணியின் மூலமாய்த் தெரிவித்தனனென்பதை யாம் முன்னரே கூறியிருக்கின்றனம். இச்செய்தியைப் பல நாட்களாக எவருக்குந் தெரிவித்தாளில்லை ஜோன் என்னு மங்கையர்க்கரசி. முடிவில் டாம்ரெமி என்னுங் கிராமத்திலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள புரியென்வால்க்ச் என்னுங் கிராமத்திற் குடியிருந்த கிளாட் என்னு முறவினனாகிய தளர்ந்தவயதுள்ள ஒருவனை அம்மங்கை நோக்கி, "ஐய! நம்முடைய தேசம் யுத்தத்தாலுண்டாகும் பெருந்துன்பத்திற் காளாக்கப்பட்டுள்ளது. என் அன்னையும் பிதாவும் யான் கூறும் வார்த்தைகளைச் சிறிதும் நம்பார்! இத்தேயத்தை இரட்சிக்கும் வண்ணம் கடவுள் எனக்கு உத்தரவு அளிக்கின்றனர். என்னை யெப்படியேனு மிளவரசனிருக்குமிடத்திற் சேர்ப்பீராக! இவ்வெண்ணத்தை என் வீட்டிலிருந்து நிறைவேற்ற இயலாது! ஆகையால் தாங்களென்னைத் தங்களுடைய மனைவிக்குப் பிள்ளைப்பேறு காலத்தில் உதவிபுரியும் வண்ணம் அழைப்பீராக!" என்று கேட்டனள். அம்மடமயில் கூறிய வண்ணம் அவளைத் தன்னகத்திற்கழைத்துக்கொண்டு சென்றனன். சில நாட்களுக்குப் பின்னர் அவ்வுறவினன் ஜோனைத் தன்னுடனழைத்துக்கொண்டு டாம்ரெமி கிராமத்திலிருந்து பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள வாகுலியூர்ச் என்னும் பட்டணத்திற்குத் தனகர்த்தனாகிய ராபர்ட்-டி-பாட்ரிகோர்ட் என்பவனிடஞ் சென்றனன். இத்தனகர்த்தன் கடவுள் அரும்பைத் தூணாகவும், தூணைத் துரும்பாகவும் ஆக்க வல்லவரென்பதை யறியாதவன்; அனுதாபம், ஆர்வம் முதலியவற்றை யொரு அணுவேனும் படைத்திலன்; பாங்கற்ற ஒரு வீரன். இச் சமயத்திலவ்விடத்தில் பாக்டார்ட் என்பவன் ராபர்ட் அகத்திற்குக்கிடைத்தற்கரிய பெரும் விருந்தினனாக வந்திருந்தனன். அது காரணம்பற்றி அப்பட்டணத்தில் பெருங்கொண்டாட்டமிருந்தது. இப்படியிருக்குந் தருணத்தில் கிளாட் தான் வந்திருக்கும் விஷயத்தை ராபர்டிற்குத் தெரிவித்தனன். பின்னர் ராபர்ட் கிளாடிற்கு வரும்படி யுத்தரவு அளித்தனன். அதைக் கேட்ட கிளாட் தன்னுடன் ஜோன் என்னு மடவாளை அழைத்துக் கொண்டு மிக்க வணக்கத்துடன் அத்தலைவன் முன் நின்றனன். ராபர்ட் அக்கிழவனை

நோக்கி, "நீ இப்பொழுது இங்கு வந்ததற்குக் காரணமென்ன? என்று வினவினன்.

அதற்கு அப்பெரியோன் ராபர்ட்டை நோக்கி, "சிறப்பு வாய்ந்த என் தலைவ! வியக்கத்தக்க ஒரு விஷயத்தைத் தங்களுக்குத் தெரிவிக்க வந்திருக்கின்றேன். அஃது எவ்விதத்திலேனும் தகுதியற்றதாயிருக்கும்பட்சத்தில் வயது தளர்ந்த ஒரு கிழவனுடைய பிழையெனக் கருதி யென்னை மன்னிப்பீராக! ஐய! என்னுடன் வந்திருக்கு மிம்மங்கையைப் பாருங்கள். பிறந்தது முதலிதுவரையில் இவளை யென் மகளைப்போல் யான் பாவித்துவருகின்றேன். இவள் என்னை நோக்கி, "என்னைப் பரமன் நோக்கி, நீ ஆங்கிலேயர்களைப் பிரான்சு தேயத்திலிருந்து துரத்துவாயாக!" என்று கூறுவதாகக் கூறுகின்றனள். இவள் எண்ணத்தை நன்குணராத இவள் தாய் தந்தையர் இவளைப் பைத்தியம் பிடித்தவளெனக் கூறுகின்றனர். வேறு சிலர் பேய் வசத்திலகப்பட்டவள் என்று செப்புகின்றனர். அவர்களிவ்வாறு அறியாமையாற் கூறுகின்றனர். யான் மிக்க வயதுள்ளவன். இதுவரையில் அநேகம் பைத்தியம் பிடித்தவர்களையும், பேய் வசத்திலகப்பட்டவர்களையும் கண்டுள்ளேன். ஆயினிவளத் தகைய செய்கையுடையவளல்லள் இங்கு நிற்பவள்" என்று எடுத்துரைத்தனன்.

வயது தளர்ந்த அம்முதியோன் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, அங்குள்ள பலரும் வனப்பற்றுச் சாதுவின் தோற்றத்தைப்பெற்று நிற்கும் மங்கையிவளை யுற்றுப் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது ராபர்ட் கிளாடை நோக்கி, "நின் மருகியினித்தகைய வியாதியைப்பற்றி யாம் செவியுற்றிருக்கின்றனம். அவள் பேய்கள் வசிக்குந் தனியிடங்களுக்குச் செல்லுங்காரணத்தால், இத்துன்பத்தை யநுபவிக்கின்றனள். ஆகையால் நீ இவளைக் கன்னியாமடத்திற்கு அனுப்பின், அங்குள்ள தெய்வபக்திவாய்ந்த கன்னிகளால் சொஸ்தஞ் செய்யப்படுவள். இப்படிச் செய்யாயாயின் இவளை இவளுடைய தந்தையின் வீட்டிற்குக்கொண்டேகி அவனை நோக்கி, 'நீ இவளை நன்றாயறை" என்று கூறுவாயெனச் சற்றும் யோசியாமற் கூறினன். இவ்வார்த்தைகளைச் செவியுற்ற ஜோன் என்னும் மங்கையர்க்கரசி மிக்க சினங்கொண்டு அவனை நோக்கி, "ஐய! யான் பைத்தியம் பிடித்தவளல்லள். யானுண்மையிற் கடவுள் வயப்பட்டிருக்கின்றேன். பகைவர்களால் துன்பமனுபவிக்கும் பிரான்சு தேயத்தை இரட்சிக்கத் தக்க வல்லமை என்னிடமிருக்கின்றது. யான் பேசுவதையும், நினைப்பதையும், உணர்தலையும் கடவுள் பேசுவதாகவும், நினைப்பதாகவும், உணர்வதாகவுமறிவீர்! யான் பிறப்பதற்கு முன்னமே யான் இத்தேயத்தை இரட்சிக்கும் வண்ணம் அவர் என்னைப் பிரதிஷ்டை செய்திருக்கின்றனர். அவர் என்னைச் செல்லும்படி கூறுமிடங்களுக்கெல்லாம் யான் செல்கின்றேன்; அவர் பேசும்படி எனக்குக் கட்டளையிடுவனவற்றை யான் பேசுகின்றேன்; அவர் செய்யும்படி எனக்குக் கட்டளையிடுவனவற்றைச் செய்கின்றேன். யான் மனிதனுக்குச் சிறிதும் பயப்படுகின்றேனில்லை" என்று கூறினள். ஆயினும் இவற்றைச் சிறிதும் நம்பினானில்லை ராபர்ட். பின்னர் ஜோனும், கிளாடும் மிக்கதுக்கத்துடன் தங்களகங்களுக்கேகினர்.

சில நாட்களை ஜோன் மிக்க துக்கத்துடன் கடக்கலானாள். பின்னர் பிப்ரவரி மாதம் பன்னிரண்டாந் தேதி (ஆயிரத்து நானூற்றிருபத்தொன்பதாவ தாண்டில்) மறுபடியு மொருமுறை அவள் ராபர்டினிடஞ் சென்று, அவனை நோக்கி, "ஐய! என்னைப் படைத்த கடவுளின் மீதாணையாகத் தாங்களென்னை யனுப்புவதில் பெருஞ்சுணக்கம் செய்கின்றீர்கள்! இன்றைய தினம் ஆர்லியன்சில் நமதரசிளங் குமாரனுக்கொரு பெரும் விபத்து நேர்ந்திருக்கின்றது. தாங்களென்னைக் கூடிய சீக்கிரத்திலனுப்பாவிடில் அவ்வரசிளங்குமரன் மிக்க துன்பமனுபவிப்பானென்பதற்குச் சற்றுமையப்பாடில்லை" என்று கூறினள். அப்பெண்மணி கூறிய வார்த்தைகளைக் கேட்டு மிரங்காத கன்னெஞ்சம் படைத்த ராபர்ட் அவளுக்குத் தேவையாக இருந்த உதவி புரிந்தானில்லை. ஆயினுமவளை நோக்கி, "நமதரசிளங் குமரன் சினொன் என்னுமிடத்திலிப்பொழுது வசிக்கின்றனன். உனக்கவனைக் காண விருப்பமிருப்பினவனைக்காணச் செல்வாயாக!" என்று கூறினன்.

அதைக்கேட்ட அந்நங்கை ஆனந்த சாகரத்தில் மூழ்கினள். பின்னரவளைத் தன் மகளைப்போல் பாராட்டி வந்த கிளாட் அவள் தன்னைவிட்டுப் பிரியவேண்டிய காலம் நெருங்கியதை நன்குணர்ந்து மிக்க துன்பமெய்திக் கண்களினின்றும் நீர் தாரை தாரையாகச் சிந்த அவளை நோக்கி "என் குழந்தாய்! கடவுள் நின்னை ஆசீர்வதிப்பாராக! தேவர்கள் நின்னைக் காப்பாராக! நானுன்னை மறுபடியுங் காணுதலியலாத காரியமென உண்மையாகக் கருதுகின்றேன். அப்படியே யானுனைக் காணுவிடினு முன்னைச் சிறிய குழந்தையிலிருந்து என் மகவைப்போலப் பாராட்டிய என்னை நீ மறக்கலாகாது! நின்னைப் பிரிவதால் யானிப்பொழுது என் சுக முழுவதையுமிழத்தல் திண்ணம்" என்றழுது கூறினன். இதைச் செவியுற்ற அம்மடமான் அம்முதியோனாகிய உறவினனை மிக்க அன்புடனும் துக்கத்துடனும் நோக்கி "ஐய! துக்கமெய்தல் தகுதியற்றதால், தாங்களிப்பொழுது கவலை பொழிந்து இன்பமுற்றிருத்தல் நலமாகும். வையகத்தைப் படைத்துக் காக்குங் கடவுள் என்னைப் பிரான்சு தேயத்தை இரட்சிக்க ஏற்படுத்திய காரணம்பற்றித் தாங்கள் ஆனந்த சாகரத்திலாழ்ந்திருத்தல் தகுதியுடைத்து. என்னுடைய தாய் தந்தையர் என்னை வெறுத்து வந்த காலத்தில் தாயினும் தந்தையினுஞ் சிறந்த என் தாயாகவும் தந்தையாகவுமிருந்த தங்களை மறத்தல் இயற்கையன்றன்றோ? பரமனது கட்டளையை யான் மாந்தர்களுக்குரைத்தபோது அவர்கள் புத்தியின்மையால் என்னைப் பைத்தியக் காரியாகப் பாவித்தென்னை நிந்தித்தபோது, என்னுரையைக் கேட்டதுமன்றி அவ்வார்த்தைகளை நம்பிய தங்களை யானெவ்வாறு மறத்தல் கூடும்?" என்று தனக்கம்முதியோன் செய்த நன்றியை மிகவும் பாராட்டிக் கூறினள். சில நாழிகைகளிவ்வாறு கடந்தன. பின்னர் அம்மங்கை அரசிளங்குமரனிருக்குமிடமாகிய சினொனுக்குச் செல்லும் வண்ணம் ஒரு போர்க்குதிரை கொணரப்பட்டது. தான் அப்பெரியோனை விட்டுப் பிரிதற்குச் சிறிது நேரமிருப்பதறிந்த அம்மாது அவனைக் கட்டி அணைத்துக்கொண்டு மிக்க அன்புடன் நோக்கி "தாங்கள் என் பொருட்டுப் பரமனை நாடோறும் துதிப்பீராக!" என்று வேண்டிய பின்னர் "ஐய! கூடிய சீக்கிரத்தில் தாங்கள் மிக்க சந்தோஷமடையத் தக்க செய்தியை அடைவீர்கள். ஆகையால் யான் செல்லும் வண்ணமுத்தரவு அளிப்பீர்" என உத்தரவு பெற்றுச் சினொனை நோக்கித் தன் நேயருடன் சென்றனள் ஜோன் என்னு மங்கையர்க் கரசி. அக்காலத்தில் பிரான்சில் முக்கியமான இடங்களில் ஆங்கிலேயக் கொள்ளைக்காரர்களும், பர்கண்டியப் பாதகர்களும் பகற் காலத்தில் பாதைகளின் மூலமாய்ச் செல்லும் பிரயாணிகளைத் தாக்கியவர்களுக்கு மிக்க பொருள் நஷ்டத்தையுமுயிர்ச்சேதத்தையும் விளைவித்து வந்தபடியால் ஜோனுமவளுடன் செல்லுமற்று எவரும் விரோதிகள் அதிகமாயிருக்குமிடங்களில் இராவிற் பிரயாணஞ் செய்

யலாயினர். இப்படி இவர்கள் பிரயாணஞ் செய்யுமாறு புறப்பட்டபோது, ஜோன் தன்னெதிரே பரவியிருக்கும் நிலத்தையும், காற்றினலைசையும் பெரும் விருட்சங்களையும், பகலவனது ஒளியைத் தம் மார்பின் மீது பிரதிபிம்பித்துச் சிறந்த வனப்புடன் செல்லும் ஓடைகளையு மிக்க விருப்புடன் பார்த்துத் தன்னை யறியாமலே "தேவனெல்லோருக்கு மளித்த இப்பூமியைச் செல்வர்களாகிய மாந்தர் பகிர்ந்துகொண்டு அவர்களுடைய சகோதரர்களாகிய பாமரசனங்களின் பாகத்தை யெடுத்துக்கொள்ளாமலிருப்பின், இவ்வையகமொரு சுவர்க்கமென இருக்கும். சந்தோஷமற்ற என் சனன பூமியாகிய பிரான்சு தேயமே! ஓநாய்களைவிடப் பயங்கரமான நின் சத்துருக்கள் உன் நிலங்களை யழிக்கின்றனர்; நின் மாந்தர்களைச் சற்று மிரக்கமின்றி வதைக்கின்றனர்; நம் பெண்களின் கூக்குரலும், தாய் தந்தையற்ற குழந்தைகளின் அழுகுரலுமாகிய முழுவதையுமசைக்கின்றன; தெய்வத்தின் நியாயத்தை நிந்திக்கின்றன. அவர்களின் கூக்குரலைக்கேட்டு மனமிரங்கியுள்ளார் பரமனிப்போது" என்று கூறலாயினள். இவ்வாறு மிக்க துக்கத்துடன் அவள் தன் நேயருடன் பிரயாணஞ் செய்யும்பொழுது ஆர்லியன்ஸ் பிரபுவின் புதல்வன் ஜோனை நோக்கி "தெய்வத் தன்மை வாய்ந்த நங்காய்! தயைசெய்து நீ அசரீரியைச் செவியுற்ற தன்மையையும், நின் அருமைச் சரிதையையும் எனக்குக் கூறின் மிக்க நன்மையை விளைவிக்கும்" எனக் கெஞ்சிக் கேட்டனன்.

அப்பொழுது அம்மங்கை அவன் விரும்பியவாறு தன் தாய் தந்தையர்கள் தன்னை அன்புடன் பாராட்டாத செய்கையைப் பற்றியும், தன் உறவினனாகிய ஒளாட் தன்னைத் தன் மகள்போல் பாராட்டிய தன்மையைப் பற்றியும், தான் ஆடு மாடுகளைத் தினந்தோறுங் காடுகளுக்கோட்டி அவற்றைப் பாதுகாத்த வன்மையைப் பற்றியும், தனிமையிடத்தில் தான் சந்தோஷமாகக் காலத்தைக் கழித்து வந்த விதத்தைப் பற்றியும், தான் சிறியவளாக இருந்த காலத்துத் தன் தோழிகளுடன் விளையாடி வந்ததைப் பற்றியும், தன் சகோதரியைப்போலப் பாராட்டி வந்த மேட்லியன் என்னும் தன் தோழி தன் கணவன் யுத்தத்தில் மாண்ட துக்கத்தால் அவளுயிர் நீத்த தன்மையைக் கண்டு தான் மிக்க துக்கமெய்தியதைப் பற்றியும், தன்னை ஆகாயவாணி தன் சனன பூமியாகிய பிரான்சு தேயத்தைச் சத்துருக்களிடமிருந்து இரட்சிக்கும்படி உத்தரவளித்த கட்டளையைப் பற்றியுஞ் சுருக்கமாகத் தன் சரிதையைக் கூறினள். இவ்வாறு ஜோன் என்னுமங்கையு மற்றவர்களும் பேசிக்கொண்டே பிரயாணஞ்செய்து முடிவில் சினோன் என்னுமிடத்திற்கருகே இருந்த பிர்பாய்ஸ் என்னும் ஒரு சிறிய பட்டணத்தைச் சார்ந்தனர்.

(தொடரும்)

---

# பார்வத குமாரி.

(ஸ்ரீமான் மகேசகுமார சர்மா)

(625-வது பக்கத் தொடர்ச்சி)

## பதினாறும் அத்தியாயம்.

### அவசரத் தந்தி.

பிரதிபை இவ்வாறு புக்ககம் போகச் சன்னாகம் செய்துகொண்டிருக்கையில், நரேசனும் சுசீலனும் பூபேந்திரநாதனும் சிறிது கவலையுடன் பேசிக்கொண்டு சுசீலனுடைய அறைக்கு வந்தார்கள். பூபேந்திரநாதன், "இந்தத் தந்தியை நீ இன்னும் ஒரு தரம் நன்றாய்ப் படித்துப்பார்" என்றான்.

நரேசன் பதிலுரைத்தான்: "இன்னும் என்ன படிக்கவேண்டியதிருக்கிறது? நான் நன்றாகவே படித்துப் பார்த்தேன். உன் பாட்டிக்கு இருந்தாற்போலிருந்து ஏதோ கொள்ளைநோய் கண்டிருக்கிறதாம். ஆனால் இன்ன நோயென்று விவரமாய் எழுதப்படவில்லை. உன்னைச் சீக்கிரமாய் வரும்படிக்கு எழுதியிருக்கிறது."

பூபேந்திரன்:—"அப்படியானால், இப்போ நான் என்ன செய்யவேண்டுமெ, நீயே சொல்லு.

நரேசன்:—"விஷயம் மகா கஷ்டமாயிருக்கிறது. உன் பாட்டியோ கிழவி. அவளுக்குத் திடீரென்று கொடிய வியாதி உண்டாவது அசம்பாவிதமில்லை. ஆனால் அது கொள்ளைநோயாயிராமலிருக்கக்கூடும். அப்படிக்கொள்ளைநோயாயிராவிட்டால், நீ இங்கே இரண்டுமூன்று நாள் தங்கிவிட்டுப் போகலாம்."

"ஒருவேளை கொள்ளைநோயாகவே இருந்துவிட்டால், அப்பொழுது பாட்டிக்கு நான் உத்தரக்கிரியை செய்வதற்கில்லாமற் போய்விடுமோ. அப்படி நேர்ந்தால் ஊரார் என்னை என்னசொல்லமாட்டார்கள்?"

"அதுவும் யோசிக்க வேண்டியதுதான்."

"ஆகையால் இன்றைக்கே நான் புறப்பட்டுப் போகவேண்டுமென்று எனக்குத் தோற்றுகிறது. இப்பொழுது பிரதிபையை ராஜநிவாஸத்துக்கு அழைத்துக்கொண்டு போவதை நிறுத்திவிட்டு பாண்டு வாத்தியக்காரரைப் போகச்சொல்லி அனுப்பிவிடு. சோபன முகூர்த்தத்துக்காகச் சுசீல குமாரன் அனுப்ப ஏற்பாடு செய்துகொண்டிருக்கிற சாமான்களை யனுப்ப வேண்டியதும்இப்போது அநாவசியம். நாளைக்கு சுசீலபாபு அவற்றைத் தன் சோபனத்துக்கே உபயோகித்துக்கொள்வது ஸர்வோத்தமமாகும். எனக்கும் அது பரம ஸந்தோஷமாகும். என்ன, நரேச பாபு?"

நரேசன்:—"சோபன முகூர்த்த ஸாமக்கிரிகளைப்பற்றிக் கவலை ஒன்றுமில்லை. உனக்கு இன்றைக்கே போகவேண்டுமானால், நீ போகலாம். இதில் குறுக்கிட எங்களுக்கு இஷ்டமில்லை. ஆனால் நீ ஒரு தடவை பிரதிபையை கலகத்தாவில் உங்களகத்துக்கு அழைத்துப் போகவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. உன்னுடைய தற்கால ஸ்திதியை யோசிக்கும்போது, இப்படிச் செய்வதால் அநுகூலமுண்டென்று எனக்குப்படுகிறது. இப்பொழுது மூன்று மணியாகிறது; நீ போகவேண்டியது இராத்திரி ஒன்பது மணி வண்டியில். அதற்கு முன் போகிறவண்டி ஒன்றுமில்லை. ஆகையால் இந்த சமயம் நீ பிரதிபையை ஸந்தோஷமாய் ராஜநிவாஸத்துக்கு அழைத்துக்கொண்டு போகலாம். இராத்திரி ஒன்பது மணிக்கு அவ்

லிருந்து புறப்பட்டுப் போகும்போது, நாங்கள் பிரதிபையை இங்கே அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறோம்."

பூபேந்திரன்:—"நீ சொல்லும் யோசனை சரிதான். இப்படிச்செய்ய எனக்குச் சம்மதமே. ஆனால் இந்த பாண்டு வாத்தியக்காரரை இப்போதே விடைகொடுத் தனுப்பிவிடவேண்டும். அஸ்தமித்தவுடனே நான் பிரதிபையை இங்கிருந்து அழைத்துக்கொண்டு போகிறேன். நீங்கள் எல்லாரும் அங்கே வந்திருந்து, நான் ஸ்டேஷனுக்குப் போனவுடனே பிரதிபையோடு கூட இங்கே வந்துவிடுங்கள். சரி, இப்போது நான் ஒரு ஸ்நேகிதனைப் பார்க்கப்போகிறேன். சீக்கிரம் திரும்பி வந்துவிடுவேன்.' இப்படிச் சொல்லி பூபேந்திர நாதன் காடியில் உட்கார்ந்து தன் மித்திரனொருவனைப்பார்க்க விரைந்து சென்றான்.

நரேசன் சுசீலனை நோக்கி, "என்னப்பா, தந்தியின் அர்த்தம் ஏதாவது புரிந்ததா?" என்றான்.

"நன்றாய்த் தெரிந்தது. எல்லாம் திவான்ஜியின் சூழ்ச்சியே."

"விவாக ஸமாசாரத்தைமட்டும் நாம் ரகசியமாய் வைத்திராவிட்டால், ஒரு வேளை விவாகமே நடவாமற்போயிருக்கலாம்.'

"அது பார்க்கும்போதே தெரிகிறது. ஆனால் பூபேந்திர நாதனுடைய துர்ப்பலத்தைப் பற்றி நினைக்கும்போது, குழப்பம் ஒன்றும் நேரிடாதிருக்கவேண்டுமே யென்று எனக்கு இப்போதும் பயமாயிருக்கிறது."

"இன்னும் என்ன குழப்பம் நடக்கபோகிறது? விவாகம் ரத்தாய் விடுமோ?"

"நான் அதைச் சொல்லவில்லை. ஆனால் அந்தப்பெண் (உமாசுந்தரி) இன்னும் அங்கேயே இருந்தால், குழப்பம் நடப்பது அசம்பவமில்லை.

நரேசன் சுசீலனது அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டான். அவன் சொன்னான்: "நான் சொல்வதைக் கேள், இந்த சமயம் இந்த சங்கதிகளைப் பற்றி யெல்லாம் யோசிப்பதில் பிரயோஜனமில்லை. பூபேந்திரனுக்குப் பிரதிபையை விவாகம்செய்து கொடுப்பது மிகவும் அவசியமாயிருந்தது; அது பகவத் கிருபையால் நிர்விக்கினமாக நிறைவேறி விட்டது. இப்பொழுது நாம் பிரதிபையைப் பற்றி ஒரு விதத்தில நிச்சிந்தையாய் இருக்கிறோம். பிற்பாடு பிரதிபையின் அதிருஷ்டம் எப்படியிருக்குமோ பகவானுக்குத்தான் தெரியும். நாம் நம் கடமையை நிறைவேற்றி விட்டோம். பிரதிபையும் சுகமாயிருக்கக் கூடிய இடத்திலேயே வாழ்க்கைப்பட்டிருக்கிறாள். இப்பொழுது நாம் இதுவரையில்தான் பார்க்கலாம். இதன் பிறகு பின் காலத்தில் குழப்பம் ஏதாவது நேர்ந்தால், அதற்குச் சமயோசிதமாய்ச் செய்பத்தக்க உபாயத்தைச் செய்வோம். இனி பெண்டுகளுக்கு இந்தத் தந்திச் செய்தியை மெதுவாய்ச சொல்லி வருவோம் வா."

சுசீலன்: "இதை நீயே போய்ச் சொல்லி வந்தால் நல்லது."

நரேசன் பிரதிபையின் அறைக்குள் சென்றான. மாப்பிள்ளை வருவதைக் கண்டு மனோரமையின் தாயார் அங்கிருந்து எழுந்துபோய் விட்டாள். நரேசன் பிரதிபையைப் பார்த்ததும சற்று வியப்படைந்து, "பேஷ்! இன்றைக்கு ஸ்ரீமதி பிரதிபா சுந்தரி ஸாக்ஷாத் வனதேவியின வடிவம் தாங்கியிருக்கிறாளே!" என்றான்.

பிரதிபை நாணத்தினால் தலை குனிந்து சற்று தியங்கி, "இதெல்லாம் என் மன்னியின் சாகசக் கைவரிசையாக்கும்! அவளுடைய சாகசத்துக்கு முன் யாருடைய ஜபம் சாயும்?" என்றாள்.



நரேசன்: "மன்னியா? ரொம்ப சரி. நீ இப்போது உனக்கு மன்னியாய் விட்டாளோ இல்லையோ. ஆகையால்தான் அவள் உன் மன்னி எப்படி யெல்லாம் செய்யவேண்டுமோ அப்படியே செய்திருக்கிறாள். நல்லது, நான் இப்போது இங்கே வந்ததெதற்காக வென்றால், உங்கள் கிழவியம்மா புறப்பட்டுப் போவதற்குச் சித்தம் பண்ணிக்கொண்டிருக்கிறாளென்று சொல்லிவிட்டுப் போகவே."

பிரதிபை வியப்புற்று, "கிழவியம்மா யார்?" என்று கேட்டாள்.

நரேசன்: "பூபேந்திரன் பாட்டி" என்று சொல்லி, எல்லா விருத்தாந்தத்தையும் சுருக்கமாய் அறிவித்து, "நீ அஸ்தமனத்துக்கு முந்தியே இராஜ குமாரனோடு இராஜ நிவாஸத்துக்குப்போய், ஒன்பது மணிக்கு அவர் புறப்பட்டுப்போனதும், இங்கே திரும்பிவரவேண்டும்" என்று முடித்தான்.

பிரதிபை மனமுவந்து மொழிந்தாள்: "நல்ல வேளை, பிழைத்தேன். என் மன்னி தனியாய் இருக்கவேண்டுமே யென்று பயப்பட்டுக்கொண்டிருந்தாள். இப்போது மன்னி நிர்ப்பயமாயிருக்கலாம். நான் போனதுமே திரும்பி வந்து விடப்போகிறேன்."

இனி அதிகமாய் ஒன்றும் சொல்லவேண்டிய அவசியமில்லை யென்று நரேசன் கண்டு கொண்டு அப்பொழுதே அவ்வறையிலிருந்து போய் விட்டான்.

அஸ்தமிப்பதற்குச் சற்று முன்னம் மணப்பெண்ணை மணவாளனுடன் விடை கொடுத்தனுப்பவேண்டிய வேளை வந்தது. அந்த சமயத்தில் சுசீலகுமாரன் வழக்கப்படி தன் தங்கையின் கையைப் பிடித்து பூபேந்திரன் கையில் வைத்துக் கொடுத்தான்.

அப்பொழுது பூபேந்திரனுக்கு ஏதோ ஞாபகத்துக்கு வரவும், அவன் தன் ஜேபியிலிருந்து ஒரு பணச்செக்கை எடுத்து சுசீலகுமாரனை நோக்கி, "சுசீல பாபு, நான் வாஸ்தவத்தில் மறந்து விட்டேன். எங்கள் கலியாணம் ரொம்ப பரபரப்பாய் நடந்தபடியால், முன் கூட்டி யாதொரு ஏற்பாடும் செய்ய முடியாமற் போய் விட்டது. விவாக காலத்தில் வதுவுக்கு ஸ்திரீதனமாகச் சிறிது தானம் செய்வது எங்கள் வம்சத்தின் வழக்கம். என் தாயார் தகப்பனார் வைத்து விட்டுப்போன நகை முதலியவற்றை யெல்லாம் நான் பிரதிபைக்குக் கொடுத்து விடுகிறேன். அவற்றின் மேல் அவளுக்குச் சம்பூர்ண அதிகாரமுண்டு. இது தவிர பத்தினிக்குக் கொஞ்சம் பூஸ்திதி கொடுப்பதும எங்களுடைய வம்ச பத்ததியாகும். அவசரத்தினால இது விஷயமாகக் கூட என்னால ஒருவித ஏற்பாடும் செய்வதற்கில்லாமற் போய்விட்டது. ஆகையால் இப்போது நான் பிரதிபையின் பேரால் வங்காள பாங்கிக்கு ஒரு லக்ஷ ரூபாய்க்குச் செக்கு கொடுக்கிறேன். நீர் கூடிய சீக்கிரத்தில் இந்தச் செக்கைப் பணமாக மாற்றி அதைப் பிரதிபையின் பெயருக்குச் சொந்தமாய் பாங்கியில் போட்டு வைத்து,சௌகரியமானபோது சாவகாசமாய்ப் பிரதிபையின பேரால் ஒரு நல்ல பூஸ்திதி விலைக்கு வாங்கலாம்" என்று சொல்லி அந்தச் செக்கைப் பிரதிபையின கையில் வைக்க, பிரதிபை அதைச் சுசீலகுமாரனிடம் கொடுத்தாள். பெரியவர்களுக்கெல்லாம் நமஸ்காரம் பண்ணின பிறகு பூபேந்திரனும பிரதிபையும் காடியில் ஏறி உட்கார்ந்து சற்று நேரத்துக்கெல்லாம் இராஜ நிவாஸம் போய்ச் சேர்ந்தார்கள். பிரதிபை அம்மாளிகையின் மாடியில் அழகாய் ஜோடித்திருந்த ஓர் அறையிற் போய் உட்கார்ந்தாள். சற்று நேரம் கழித்து ஒரு வேலைக்காரி ஒரு வெள்ளித் தட்டில் கொஞ்சம் பழங்களும் பணியாரங்களும், ஒரு வெள்ளிப் பியாலாவில் குளிர்ந்த நீரும் கொண்டுவந்தாள்.

இன்னொரு வேலைக்காரி ஓர் அழகிய வெள்ளித் தட்டில் தாம்பூலம், ஏலம், இலவங்கம் முதலியவைகளும் ஒரு சலவை பண்ணின வெள்ளைத் துவாலையும் கொண்டுவந்து நின்றாள்.

“இதுகளை யெல்லாம் நீ ஏன் கொண்டுவந்தாய்?” என்றாள் பிரதிபை. வேலைக்காரி சொன்னாள்: “இராணியம்மா, மாமியார் வீட்டுக்கு வந்ததும் முதலில் ஏதாவது சாப்பிட்டுத் தீரவேண்டும். ஆகவே நீங்களும் ஏதாவது கொஞ்சம் சாப்பிடுங்கள்.”

பிரதிபை சிரித்துக்கொண்டு சொன்னாள்: “சாப்பிட்டே தீரவேண்டுமோ? அப்படியானால் கொண்டுவா. சாப்பிடலாம்; ஆனால் நான் மட்டிலும் தனியே சாப்பிடமாட்டேன், நீயும் கொஞ்சம் சாப்பிடு.”

வேலைக்காரிகள், “இல்லை இல்லை, நீங்கள் சாப்பிடுங்கள்,” என்று சொல்லிச் சற்று விலகினார்கள். ஆனால் அவர்கள் சொன்னதைப் பிரதிபை கேளாமல் இருவர் கையிலும் இரண்டு இரண்டு லட்டு வைத்தாள். அதன் பிறகு ஒரு லட்டைப்பிட்டுக் கொஞ்சம் தின்று கொஞ்சம் நீர் பருகினாள். பிறகு அவள் கை அலம்பித் துவாலையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு தட்டிலிருந்த தாம்பூலத்தை எடுத்துக்கொண்டாள். வேலைக்காரிகள் தட்டுகளையும் பியாலா முதலியவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

சரியாய் அந்த சமயத்துக்கு பூபேந்திரநாதன் அந்த அறைக்குள் பிரவேசித்தான். மின்சார விளக்கின உஜ்வலப் பிரகாசத்தில் புஷ்பாபரணங்களால் அலங்கரிக்கப்பெற்ற பிரதிபையின் திவ்யமும் அபூர்வமுமான சௌந்தரியத்தைக் கண்டு பூபேந்திரநாதன் பெரிதும் வியப்புற்று அகமகிழ்ந்தான். அவனுடைய வாயிலிருந்து திடீரென வெளிப்பட்டன: “இன்று சாக்ஷாத் வனதேவதையே வந்து நம்முடைய மாளிகையை பிரகாசிப்பிக்கிறாள்” என்னும் வார்த்தைகள்.

பிரதிபை நாணத்தால் கூசி ஒன்றும் உத்தரம் பகர்ந்தாளில்லை. சற்று நேரம் கழிந்தவுடனே அவள் தன் கழுத்திலிருந்து ஒரு பூமாலையை எடுத்து பூபேந்திரனுடைய கழுத்திலிட்டுப் புன்னகை புரிந்து, “இன்று இந்த மாலையைத் தாங்கள் தங்கள் கழுத்திலிருந்து எடுக்கவேண்டாம். என் சகி இப்படிச் சொல்லும்படி மிகுந்த ஆக்கிரஹத்துடன் கேட்டுக்கொண்டாள்” என்றாள்.

பூபேந்திரநாதன் சிரித்துக் கொண்டே, “உனக்கும் அதே ஆக்கிரஹம் இருக்கிறது போலவே தென்படுகிறது” என்றான்.

பிரதிபைக்கு லஜ்ஜையினால் சங்கோசம் உண்டாய்விட்டது. சற்று நேரம் பொறுத்து அவள், “இங்கே வந்த பிற்பாடு தாங்கள் ஒன்றும் சாப்பிடவில்லையே!” என்றாள்.

பூபேந்திரன், “நான் இப்பொழுதுதான் தேநீரும் கொஞ்சம் பக்ஷணமும் சாப்பிட்டுவிட்டு வந்திருக்கிறேன்” என்றான்.

பிரதிபை தன் கையிலிருந்த வெற்றிலைச் சுருள்களில் ஒன்றை எடுத்து பூபேந்திரன் கையிற் கொடுத்து, “அப்படியானால் இந்த வெற்றிலையாவது போட்டுக்கொள்ளுங்கள்” என்றாள். பூபேந்திரன் ஆனந்தமடைந்து பிரதிபையின் கையிலிருந்து வெற்றிலையை வாங்கிப் போட்டுக்கொண்டான். வெற்றிலையை மென்றுகொண்டே அவன், “என் செல்வமே, இன்று ராத்திரி நமக்குச் சோபனம் நடப்பதா யிருந்தது. வாழ்வில் இது மிகவும் ஸந்தோஷகரமானது. ஆனால் என்ன செய்யலாம், நாம் அந்த சுகத்தை இன்று அநுபவிக்கக் கொடுத்துவைக்கவில்லை. உனக்கு எல்லாம் தெரிந்திருக்குமே!” என்றான்.



பிரதிபை கூறினாள் :—“ஆமாம், தெரியும். பாட்டியம்மாவுக்கு ஏதோ பிரமாதமாய் உடம்பு அசௌக்கியமாயிருக்கிறதாம், இதைக் கேட்டதுமுதல் பாட்டியம்மாவைப்பற்றி எனக்கு அதிக துக்கமாயும் சிந்தையாயும் இருக்கிறது. இந்த வண்டிக்கு முந்திப் புறப்படும் வண்டி ஏதாவது இருந்தால் அதிலேயே உங்களைப் புறப்பட்டுப் போகும்படி சொல்வேன். ஏனென்றால் இந்த சமயம் அப்படிப்பட்டது. நல்லது, இப்போது நீங்கள் புறப்படப்போகிறீர்கள். போய்ச் சேர்ந்தவுடன் எனக்குக் கடிதம் எழுதவும். அண்ணாவுக்குத் தந்தி யடிக்கவும் மறக்கவேண்டாம். பாட்டியம்மாவை நீங்கள் க்ஷேமமாய்ப் பார்ப்பீர்களென்றே எனக்குத்தோன்றுகிறது. சரி, அவர்கள் க்ஷேமமாயிருந்தால் என்னை எப்போது அழைத்துக்கொண்டு போவீர்கள்? சொல்லுங்கள்.”

பூபேந்திரன் சற்று யோசித்து, “இதை நான் அங்கே போய் எழுதுகிறேன்” என்றான். பிறகு அவன் ஜேபியிலிருந்து கடியாரத்தை எடுத்துப்பார்த்து, “என் செல்வமே, நாழிகை ஆய்விட்டது, இனி தாமதிக்கமுடியாது. நான் போய்வருகிறேன். எனக்கு தினந்தோறும் க்ஷேமஸமாசாரம் எழுதிக்கொண்டிரு” என்று சொல்லிப் பிரதிபையினிடம் விடை பெற்றுக்கொண்டு அந்த அறையிலிருந்து புறப்பட்டுப் போனான்.

அதே சமயத்தில் நரேசனும் கபிலனும்வந்து சேர்ந்தார்கள். பூபேந்திரனுடைய சாமான்களெல்லாம் ஏற்கனவே ஸ்டேஷனுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டன. அவன் கபிலனிடம் விடை பெற்றுக்கொண்டு நரேசனுடன் ஸ்டேஷனுக்குப்புறப்பட்டான். இங்கே கபிலனும் தங்கையை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

மூன்றாம் பாகம் முற்றுப்பெற்றது.

## எங்கள் தீர்த்த யாத்திரை.

(ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.)

(633-வது பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் ஹரித்துவாரத்தில் ஐந்து நாட்கள் தங்கியிருந்தோம். நாங்கள் இறங்கிய சத்திரத்தின்பின் கங்காநதி ஓடுகிறது. எங்கள் அறை பின்னால் இருந்தபடியால், ஒரு சிறு கதவுவழியாகப் பக்கத்தில் உள்ள திறந்த மாடியில் உட்காரலாம். அந்த மாடி கங்கா நதியினூடே கட்டப்பட்டிருந்தது. உயர இருந்து கீழே பார்த்தால் முப்புறமும் கங்கா ஜலம் ஓடிக்கொண்டிருக்கிறது. மேலும் சந்திரிகை நாட்களா யிருந்தபடியால் தினமும் இரவு வெகுநேரம் வரையில் மாடியில் உட்கார்ந்துகொண்டு நதியின் அழகையும் சுற்றிலும் உயர்ந்து எழும்பும் மலைகளின் அழகையும், பக்கத்தில் படித்துறையில் ஜனங்கள் நீராடியிருப்பதையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தோம். போஜனம் மாடியில் நிலவொளியில் அருந்தினோம். ஒரு கயிற்றைக் கட்டி கீழே கங்கையிலிருந்து செம்பில் நீர்மொண்டு பருகிக் களித்தோம். தின்பண்டங்களை மீன்களுக்கு வாரி யிறைத்துப் பொழுது போக்கினோம். ஒருவர் தொந்திரவு இன்றி இந்த மாடி எங்களுக்குக் கிடைத்ததுபற்றி வெகு அதிருஷ்டமென ஆனந்தித்தோம். ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்கொண்டு பாட்டுப் பாடினர்

கள். எனது சித்திரப் புத்தகத்தில் பென்சிலால் மலைக் காட்சியைக் கிறுக்கிக்கொண்டிருந்தேன். எங்களைப் போலவே வங்காளிகள், பஞ்சாபிகள், ரஜபுத்திரர்கள், மார்வாரிகள் முதலிய பல யாத்திரிகர்களும் கங்கையில் நீராடிய சந்தோஷத்தால் பாடி மகிழ்ந்திருந்தனர். தூரத்திலிருந்து அவர்கள் சங்கீத ஓசை எங்கள் காதில் ஒலித்துக்கொண்டேயிருக்கும். ஒருநாள் மாலை அவர்கள் பாடுவதை நேரில் பார்த்தோம். ஆனால் அஸ்தமித்தபிறகுதான் இன்னும் களிப்பாகப் பாடுகிறார்கள். கங்காதேவியை ஸ்தோத்திரம் செய்கிறார்கள். 'கங்காதேவி நமஸ்தே' என்று பல்லவி அடிக்கடி சொல்லிக்கொண்டு கும்மியடித்துக் குதிக்கிறார்கள். கங்கையில் அடிக்கடி புஷ்பங்களை வாரி யிறைக்கிறார்கள். பணங் காசுகளையும் சிலர் வாரியிறைத்தார்கள். ஒரு ஸ்திரீ தன் நகைகளையும் எறிந்ததாக எங்கள் சத்திரக்காரன் சொன்னான். அஸ்தமித்த பிறகு ஆழமான தொன்னைகளில் நெய், எண்ணெய் ஊற்றித் திரியிட்டு தீபம் ஏற்றி புஷ்பங்கள் சுற்றி அந்தத் தீபங்களை கங்கையில் விட்டுவிடுகிறார்கள். ஓடிவரும் கங்கையில் மினுக்மினுக் என்று இத்தீபங்கள் மிதந்து வருவது வெகு அழகாக இருந்தது. ஸ்திரீகள் தங்கள் அதிருஷ்டத்தை இவ்விதம் செய்து பரிசோதிப்பதாம். மிகவும் பிரகாசமாகவும் நெடுநேரம் அணையாமல் எரிந்துகொண்டு வெகு தூரம் மிதந்து செல்லும் தீபத்தைவிட்ட ஸ்திரீதான் அதிக அதிருஷ்டமுள்ளவள் என்று நினைத்து ஆனந்தமடைவாள். ஆம்! வாஸ்தவமே. பிரபஞ்சமாகிய நதியோட்டத்தில் ஒவ்வொருவனும் மிதந்து செல்லும் தீபவொளி. சிலர் ஒளி குன்றி, காற்றில் அலைந்து ஊசலாடி மடிவர். சிலர் சுழலில் அகப்பட்டுத்தவித்து மூழ்கிவிடுவர். சிலர் ஒளியுடன் பிரகாசிப்பர். ஆகா! எவ்வளவு ஞானம் பொருந்திய விளையாட்டு இது.

வானத்திற் பிரகாசிக்கும் சந்திரனும் தெளிவாக ஓடும் கங்காநதி பூமியிலும் அமைந்திருந்த அந்த மாடியில் பொழுது போவதே தெரியாமல் நாங்கள் இரவு நேரத்தைக் கழிப்போம். வானத்தில் சப்தரிஷி மண்டல நட்சத்திரக் கூட்டம் வெகு உயர இருந்தது. சென்னைப்பட்டணத்தில் வடக்காக அடிவானத்தருகே காணப்படும் துருவ நட்சத்திரம் இந்த ஊரில் 30 டிகிரி உயர இருந்தது. இன்னும் வடக்கே செல்லச் செல்ல இந்த நட்சத்திரம் உயர்ந்து உயர்ந்து கடைசியில் தலைக்கு மேல் நேர் உச்சத்தில் காணப்படும்.

ஹரித்துவாரத்தில் கங்கை ஜலம் நிரப்பிக் கொள்ள பலசெம்புகள் வாங்கித் தகரம்வைத்து ஈயப்பத்து வைத்து மூடிக் கங்கையில் நீர் மொண்டு ஆகாரத்தை அடைத்து எடுத்துக் கொண்டோம். தகர டப்பாக்களிலும் சீசாக்களிலும் அநேகர் கங்கா ஜலம் கொண்டு சென்றார்கள். 'காசிக்குப் போய் காவடியில் கங்கா ஜலம் கொண்டுவந்தான்' என்று முந்நாட்களில் சொல்வார்கள். ஆனால் இப்போது குப்பியில் அடைத்துப் பார்சல் செய்து ரயில் மூலம் அனுப்பிவிடுகிறார்கள்.

அந்த ஊர் ஹோட்டலில் போஜனம் எவ்விதம் என்று அறிய ஆவல் உண்டாயிற்று. ஒரு போஜனசாலைக்குச் சென்று கவனித்தேன். பக்கத்து ஊரிலிருந்து ஒரு உபாத்தியாயர் சில சாரணச் சிறுவர்களுடன் வேடிக்கையாக வந்திருந்தனர். அவர்களுடன் பேசி விசாரித்தேன். சாதாரணமாக கோதுமை மாவினால் தட்டிய அடைபோன்ற சப்பாத்திகளைத்தான் தின்கிறார்கள். அதற்குப் பருப்பு சட்னியும் காய்கறிகள் சேர்த்த கூட்டும் கலந்துகொள்கிறார்கள். புளி என்பது அங்கு கிடைப்பது அபூர்வம். வாதாங்காய்கள் போன்ற புளித்த காய்களை நறுக்கிக் குழம்பில் போட்டுவிடுவார்கள். அரிசிச் சோறு அதிகமாகச் சாப்பிட



வில்லை. எல்லாருக்கும் ஈயம் பூசிய பித்தளைத் தட்டுகளில் பதார்த்தங்கள் பரிமாறிக் கொடுத்தான். அவர்கள் சாப்பிட்டபிறகு அத்தட்டுகளைக் கழுவிவிட்டு மறுபடியும் வந்தவர்களுக்குப் பரிமாறிக் கொடுப்பான். இவைகளில் சாப்பிடும் நமது தேச ஜனங்களுக்கு இது அருவருப்பாக இருக்கும். சப்பாத்துகளில் கொஞ்சமும் சட்னியும் வாங்கிக்கொண்டு வந்து நாங்கள் புசித்தோம்.

கங்காநதி பரிசுத்தமானது என்று கருதுவது நாம் மாத்திரமன்று, அந்த ஜனங்களும் தான். ஆனால் அவர்கள் செய்வதைப் பார்த்தால் அசிங்கமாக இருக்கும். நதியின் படிக்கட்டுகளில் உட்கார்ந்து அநேகர் பல் விளக்கிக் கொண்டிருந்தார்கள். நானும் ஜலத்தில் இறங்கி வாயைக் கொப்பளித்து உமிழ்ந்தேன். உடனே ஒருவன் 'செய்யாதே' என்று கூவினான். அவர்கள் செய்வதைக் கவனித்தேன். சிறு செம்புகளில் ஜலம் எடுத்துக் கரையில் கொப்பளித்து உமிழ்ந்தனர். கல்லில் விழுந்த அந்த ஜலம் மறுபடியும் கங்கையில வந்து கலந்தது. அதை நான் அவனுக்குக் காட்டினேன். ஆனால் அவன் சொல்லியது, 'கங்காதேவியில் நேராக உமிழக்கூடாது, பூமியில் உமிழ்ந்த ஜலம் ஓடிவந்தால் பாவமில்லை' வேறு சிலர் வாய் நீரைக் கையில உமிழ்ந்துகொண்டு பிறகு கங்கை ஜலத்தில் விட்டார்கள். கரைமீதிலிருந்து கக்கூசுகளெல்லாம் கழுவி கங்காநதியில் கொண்டுவந்து தள்ளுகிறார்கள். கற்களாலாகிய சந்துகளில் இருபுறங்களிலும் உமிழ்ந்துள்ள தம்பலம், மற்ற குப்பைகளை எல்லாம் முனிசிபல் ஆட்கள் தோல் பையில் ஜலம் தூக்கி ஊற்றிக் கழுவி கங்கையில் தள்ளுகிறார்கள். நல்லவேளையாக அதிக ஜன நெருக்கம் இல்லாத முன் பாகத்திலேயே விஷ்ணுபாதம் என்ற படித்துறை இருக்கிறது. இங்கு சுத்தம் எனக் கருதலாம். ஆயினும் இன்னும் உயர ஹிருஷிகேசத்தில் ஜனங்கள் செய்த அசுத்தமெல்லாம் கங்கை கொண்டுவருகிறதல்லவா? மனிதர்களேயில்லாத உயர்ந்த மலைகளில் மழை அசுத்தம் கங்கையில் கலக்கவில்லை. இதன்பொருட்டே கங்கை உற்பத்தியாகும் இடத்தில் ஸ்நானம் செய்வது விசேஷம் எனக் கருதுகின்றனர். ஹரித்துவாரத்திலிருந்து மிகவும் ஜனநெருக்கமான பட்டணங்கள் பலவுள. இவற்றின் வழியாகவே கங்கை செல்வதால் ஒவ்வொரு ஊரிலும் அசுத்தத்தையும் மஷ்டிக்களையும் தள்ளுகிறார்கள். காசியில் எவ்வளவு அசுத்தத்தை கங்கை சேகரித்துக் கொண்டு வந்திருக்கும்! இவற்றையெல்லாம் யோசனை செய்தால் கங்கா ஸ்நானம் எவ்வளவு புண்ணியம்! ஆனால் கங்கையில் பல மீன்கள் ஏராளமாக இருப்பதால் மஷ்டிக்களை அவை தின்று ஜலம் சுத்தமாக இருக்கும் எனலாம். எவ்விதமாயினும் நாங்கள் பிறகு அலகபாத், காசி, கல்கத்தா முதலிய இடங்களிலும் ஸ்நானம் செய்தோம். ஆனால் ஹரித்துவாரத்தில் ஸ்நானம் செய்தது எங்களுக்கு மிகவும் ரம்மியமாக இருந்தது. பாவம்! கங்காதேவி மனிதப்பூண்டு இல்லாத மலைமீது சுயேச்சையாக இருந்தவள் மனிதர் குழாத்தில் விழுந்தவுடன் அவள் படும் அவஸ்தையை நினைக்க எனக்கே பரிதாபமாயிருந்தது. ஆனால் கங்காமாதா இல்லாவிடில் ஹரித்துவாரத்திலிருந்து கல்கத்தா வரையில் உள்ள பூப்பிரதேசமே உற்பத்தியாகியிருக்காது.

இது என்ன விந்தை! இந்த பூமி உண்டாவதற்கு கங்காநதி என்ன செய்தது? பல கோடி வருஷங்களாக கங்கா நதியும் அதன் உபநதிகளும் மலைகளிலிருந்து மண்ணும் மணலும் கற்களுமாகத் தள்ளிக்கொண்டு வந்து கீழே தள்ளி வருகிறது. இதனால் மலை தேய்ந்துபோன

போதிலும் இமே மணல் மேலும் மேலும் படிந்து பூமி விசாலமாகக் கடற்கரை அப்பால் தள்ளுண்டு போகிறது. ஆகவே இந்தப் பிரதேசங்களுக்கு கங்காதேவி மாதா என்று சொல்வது பொருந்தும். மேலும் புதிதாக வண்டல் மண் படிந்த பூமியில் பயிர் பச்சைகள் செழிப்பாக வளரும். இவ்வளவு சௌகரியங்களை அளித்த கங்கையை ஜனங்கள் ஒரு தேவதையாகக் கொண்டாடிப் பூசிப்பது அதிக மிகையாகாது.

ஹரித்துவாரத்திலிருந்து இரவு 7-மணிக்கு ரயிலேறி நேரே மறுநாள் பகல் 2-மணிக்கு அலகாபாத் போய்ச் சேர்ந்தோம்.

(தொடரும்)

# மலையே நாடு.

(சுவாமி அற்புதானந்தர்)

(636 பக்கத் தொடர்ச்சி )

ஒரு சமயம் இந்நாடு கடற்கொள்ளையினர்களின் இருப்பிடமாக இருந்தது. இக்காலம் மறைவுபட்டுப் பிரிட்டிஷ் அரசியல் தத்துவம் முன்னேற்றமடையவே, ரப்பரும் டின்னும் விளைவுபொருட்களிற் சிறந்த உற்பத்தியாகிப் பெரும் பொருளாதாயத்தை அளிக்கலாகியது. ரப்பர் விளைவு அதிகப்பட அதிகப்பட இந்நாட்டின் பெரும்பாகம் மரங்கள் அடர்ந்த காடாகியது. முன்னாட்களின உபயோகமுள்ள பெரும் காட்டின மரங்களை விடப் பொருள் விளைவுகளைப் பயக்கும் இவ்வளம் பயிரிடப்பட்டு அடர்ந்தனவும் ஒழுங்கானவையுமான பெரும் வனங்கள் அழகிய வரிசைகளில் ஏற்படலாயின. இவ்விதப் பொருளாதாயத்தில் நாடு செழிப்புறலாகிச் சவர்ன்மெண்டு கட்டிடங்களும், மருந்திகளும், மாளிகைகளும் ஏனைய அமைப்புகளும் ஏற்பட்டு முன்னாட்களின் மனைவளம் குன்ற குட்டைச் சிறப்புகளை விட நன்னிலைமைகள் வாய்க்கலாயின. இக்கட்டிடங்கள் நாட்டினங்களின் போக்குகளை ஒத்ததாக இல்லாமல், மூரியர், அரேபியத் துருக்கியர் நாட்டின் கட்டிடச் சிறப்புக்களை மேல்நாட்டின் முன்னேற்றச் சிறப்புகளின் அதிசயத்துவங்களைக் கொண்டு மேம்பாடுகளை உடைத்தாயிருக்கலாகவே கண்காட்சியினர்கள் உலகத்தின் நாலாபக்கங்களிலுமிருந்து அடிக்கடி குழுமியாகிக் களிப்புறலாகுகின்றனர். இவைகளை ஒத்தே இந்நாட்டின் சிற்றாசியல்களை வகிக்கும் சுல்தான்களின் இருப்பிடச் சிறப்புகளும் பெருகலாகி, தம்மத மார்க்கத்தின் ஒழுக்கங்களுக்கெனப் பெரும் மசூதிகள் ஒப்பற்ற முறையில் அமைக்கப்படலாகியுள்ளன. எனவே மலைய நாடு பலவித மதக்கொள்கைகளாகிய இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்துவம், கான்பூசியம் என்ற பாங்குகளில் தத்தம் இஷ்ட தெய்வங்களுக்கு ஆலயங்கள் அமைக்கப்பெற்று, மக்களின் வழிபாடுகளுக்கு இன்றியமையாத சிறப்புகளாகக் கொண்டுள்ளது. சீனர்கள் ஏராளமான கோயில்களை இந்நாடு முழுவதும பரவச் செய்துவிட்டனர். ஆசியாவினின்று பௌத்தரும் இந்நாட்டிற் குடியேறிப் பல அமைப்புகளை நிலைநாட்டியுள்ளது. இந்தியர்களில் நாட்டுக்கோட்டையினத்தினர் தம்மத வழிபாட்டிற்குப் பெரும விஸ்தீரணங்களைக் கோயில்களாகப் பெரும்பொருட் செலவில் அமைத்துள்ளதைப் போலவே, ஏனைய வகுப்புகளும் பல கோயில்களைத் தம் வழிபாடுகளுக்கென அமைத்துள்ளனர். கிறிஸ்துவர்கள் இத்தகைய சிறுஞ் சிறப்



பினும் தமது திருக்கோயில்களை அமைத்துக் கொள்ளக் கூடாதிருப்பினும், இவர்களும் தம் ஆலயவழிபாட்டில் பின்பட்டுள்ளார்களெனக் கூறவுமாகாது. போர்த்துகீசியரின் தலைவனாகிய அல்புகர்க்கு இந்நாட்டில் தமது வெற்றியை ஊர்ஜிதப்படுத்த முற்பட்ட சமயமுதல் கிறிஸ்துவம் ஆங்காங்கு பெருகலாகி, டச்சியர்களினால் பின் இவை ஆதரிக்கப்பட்டுப் பெருகலாகவும், பின் பிரிட்டிஷ் அமைப்பில் இம்மதம் பெருகிப் பரவலாகவும் அமைப்புகளைக் கொண்டிருப்பதில், இம்மதத்தினர் தம் மதக் கடமையில் பின்பட்டுள்ளாரெனக் கூறவும் இயலா. மலைய நாட்டின் நாகரிகமற்ற காட்டினமக்களும் தம் வழிபாடுகளென ஆங்காங்கு அமைப்புகளைப் பெரும் பலிபீடங்களாகவும், களியாட்டத்திடல்களாகவும் கொண்டுள்ளனர். இத்தகைய சிறப்பை இமமலையோடு கொண்டிருப்பதை இனி விவரமாக இந்நாட்டின் நகரங்களின் வாயிலாக உணர்ந்தறியவும் முற்படுவாம்.

இந்நாட்டிற்கு வர தென் இந்தியர்கள் தம் வசதிகளைச் சென்னை, புதுச்சேரி, கூடலூர், காரைக்கால, நாகப்பட்டணம் என்ற கொரோமாண்டல் துறைகளின் வாயிலாகவும், இலங்கை நாட்டுத் துறைகளின் வாயிலாகவும், பர்மாவின் முக்கிய நகரமாகிய இரங்கோன் வாயிலாகவுமே கப்பல் வசதியைக் கொண்டுள்ளனர். இத்துறைகளிலிருந்து புறப்படும் கப்பல்கள் பினாங்கு சேர்த்ததான், சுவெட்டன்ஹாம், மலாக்கா, சிங்கப்பூர் முதலிய துறைமுகங்களுக்குச் செல்கின்றன. எனவே நாம பினாங்கின் விடயத்தை முதன் முதலாகக் கவனிப்போம். பினாங்கு ஒரு சிறு தீவு. நான்கு பக்கத்திலும் தண்ணீர்த் தேக்கம் கொண்டுள்ளது. மலாக்கா ஸ்டிரெயிட் என்ற பெரும் தேக்கத்தின் இடையிலுள்ளது. இத்தீவை கி. பி. 1592-ல் இத்தண்ணீர்த் தேக்கங்களென்ற ஸ்டிரெயிட், குடாக் கடல் வகையறுக்களில் கப்பல் யாத்திரை செய்துகொண்டிருந்த காப்டன் ஸர் ஜேம்ஸ் லங்காஸ்டர் என்ற மாலுமி தனது கப்பலிற்கும் மாலுமிகளுக்கும் நெடுநாளின் யாத்திரையின் பின்னர் வசதிகளைக் கொள்ளத் தங்குமிடமாக அவ்வருடம் ஜூன் மாதத்தில் கொண்டு, ஆகஸ்டு மாதம் வரை ஏற்படுத்தியிருந்தனரெனச் சரிதை கூறும். பின்னர் 17-ம் நூற்றாண்டில் காப்டன் பிரான்ஸிஸ் லைட் என்பவர் இங்கு தங்கலாகி கி. பி. 1771-ல் இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த கனம் வாரன் ஹேஸ்டிங்கிற்கு இத்தீவு மலைய நாட்டின் சிறந்த பாகமெனவும், கீழ்க்கடல் வசதிகளுக்கு ஒப்பற்ற நிலைமையைக் கொண்டுள்ளதெனவும் கூறினார். எனினும் இதன் விடயம் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரால் 1786 வரை கவனிக்கப்படாமல் விட்டு விடப்பட்டது. இந்நாட்களினுள் முன் கூறிய வண்ணம் சுமெத்ராவிலிருந்து மலையர்கள் குடியேறி, இத்தீவின் பல பாகங்களையும் அடுத்திருந்த நாட்டின் வனங்களின் பெரும்பாகத்தையும் சீர்படுத்தித் தம் நாடாகக் கொள்ளலாகி, அவைகளில் கேட்டா என்ற மலைய சிற்றாசியல் சிறப்பு முதலாகிவிட்டது. கி. பி. 1592-லிருந்து கி. பி. 1771 வரை இப்பாகங்களில் ஏற்பட்ட சீர்திருத்தம் மிக்கனவெனவே கூறலாகும். இவ்வமயம் இங்கு தங்கின காப்டன் லைட், 100 கடற்படையினர்களையும், முப்பது லாஸ்கர்களையும், பதினைந்து இங்கிலீஷ் பீரங்கிப் படையாளரையும், ஐந்து உத்தியோகஸ்தர்களையுமே கொண்டிருந்தனர். கேட்டாவின சிற்றாசர் இப்பாகத்தில் மிகுந்திருந்த கடற்கொள்ளையினர்களை அடக்கியும், கி. பி. 1750-ம் ஆண்டில சுமார் ஆறாயிர டாலர் வருடக் கப்பத்தற்கு கனம் ஈஸ்ட் இண்டியக் கம்பெனிக்கு இத்தீவை ஒப்படைத்துவிடலாமெனவும்

இருந்ததாக ஒரு சரிதை குறிப்பிடுகின்றது. எனவே இவ்வங்கீகாரங்கள் கி. பி. 1592-ம் ஆண்டில் துவக்கமாகிய ஸர் லங்காஸ்டரின் பரிசிரமங்களுக்குப் பின்னர் அடிக்கடி முயலப்பட்டு காரியசித்திகளைக் கொண்டிருந்தல் வேண்டுமெனவும் ஊகிக்கலாகின்றது. இவை எத்தகையதாயினும், கி. பி. 1771-ல் கடற்கரைக்கு எதிர்த்த எஸ்பிளனேட் என்ற இடவில் இறங்கி, இதற்கடுத்த பள்ளத்தாக்குகளின் அடர்ந்த வனத்தில் வசித்துக்கொண்டிருந்த ஐம்பத்திரண்டு மலேயர்களின் நன்முயற்சியினால் இப்பாகத்தைச் சுத்தப்படுத்தி, பிரிட்டிஷார் முதன்முதலாக ஸ்தாபித்துக் கொள்ள முயன்றனர். இச்செய்தி உலகம் முழுதும் பறவியது. உலகபாகமக்கள் கண்காட்சிக்கெனவும், பொருள் ஆதாயங்களுக்கெனவும், ஏனைய பல வகைப்பட்ட முறைகளுக்கெனவும் முற்பட்டு இங்குவந்திறங்கலாகினர். இவர்கள் பெருகவே, பிரிட்டிஷார் இவர்களை சம்சயிக்கலாகினர். ஏனையர்களுடன் வியாபார நட்புக்களைக் கொண்டிருப்பதைக் காட்டிலும், கண்காணிப்புகளைக் கொள்ள முயலுவது உசிதமெனக் கருதலாயினார்கள். காட்டினங்களைக்கொண்டு இத்தீவின் வனங்களைச் சுத்தப்படுத்த முயன்று, ஒரு சிறு கோட்டையைத் தயாரிக்கலாகி, அவ்வமைப்பு இன்று கார்ன்வாலிஸ்கோட்டை எனக் கருதப்பட்டுள்ளது. பின் இத்தீவு 'இளவரசர் தீவு' எனப்பெயரிடப்பட்டது. இப்பெயரே இன்றும் இந்நகரத்திற்கமைக்கப்பட்டுள்ளது. பின் 1790ல இத்தீவில் குடியேறினவர்கள் இருபதினாயிரமெனக் கணக்கிடப்பட்டுவிட்டது. இவர்களில் சீனர்கள் மூவாயிரமாக இருந்தனர். நாட்டின அரசியல் பட்டாள அமைப்பில் ஏற்படுத்தப்பட்டது. கொலையாளிகளைக் கல்கத்தாவில ஜீவபரியந்தம சிறைப்படுத்தவைக்க முயன்றனர். 1801-ம் ஆண்டில் ஏறுமதி இறக்குமதிகள் குடியேறும மக்களினால ஏறபட்டு வருகின்றன வென்பதை உணர்ந்து சுங்கவரி ஏற்படுத்திப் பொருளாதாயம் பெருகச்செய்யமுற்பட்டனர். 1789-ம் ஆண்டில் சுமார் பதினையாயிரம் பவுண்டு சாமான்கள் இறக்குமதியாயின. இதில் விழிப்பு கொண்டே இச்சுங்கம் ஏற்படுத்தப்பட்டது. எனவே இதனால் சற்று வியாபாரச் செருக்கு பாதிக்கப்படினும் இவ்வயம் சுமார் இரண்டு கோடி பவுன்கள் இறக்குமதியைக் கொள்ளலாகிவிட்டது. கி.பி 1771லிருந்து 1790 வரை பிரிட்டிஷார் முற்பட்டுப் பெருகிவரும் ஊதியங்களை உணர்ந்த கெட்டா சுல்தான் முன்னம் இப்பாகத்தை வருடம் ஆறுயிரம் டாலர்களுக்கென அளித்தது பிசகு எனக் கருதலாகி, அதிக வருமானத்தைக் கருதிப் பயன்படாமல்போகவே, 1791-ல் சுமார் எண்ணாயிரம் படையருடன் முற்பட்டு தனது முதலும் கடைசியுமான எதிர்ப்பைக் கொள்ளலாகினன். இது பயன்படாமற் போகவே இன்னும் பல இடைஞ்சலினுள் சிக்குறலாகிவிடவும் ஆகினன். கி. பி. 1794 காப்டன் லைட்டும் இங்கு காலமாகினார். இத்தீவில் ஜாதிக்காய் விளைவு முற்படுத்தப்பட்டுப் பெருகலாகியது. 1801 ம் ஆண்டில் கவர்ன்மெண்டாரால் கீழ்க்கடல்களின் வியாபாரத்திற்குப் பினாங்கு மிக்க உசிதமான நகரம் ஆகலாமெனக் கவனிக்கப்பட்டது. காப்டன் லைட்டின் ஞாபகசின்னம் பின்னாட்களில் ஸெயிண்ட் ஜியார்ஜ் திருக்கோயிலினுள் அமைக்கப்பட்டுள்ளது. 1801 ஆண்டிற்குப் பின்னர் இத்தீவு நகரமாக்கப்பட்டு 'ஜியார்ஜ்' நகரமெனப்படலாகியது. ஏற்றுமதி இறக்குமதிகள் நாலுகோடி பவுன்களின மதிப்பிலாகியது. சீனர்கள், இந்தியர்கள், மலேயர்கள், ஐரோப்பியர்கள் வதுக்கலாகினர். இத்தீவு நகரத்தையும் மலேயே நாட்டையும் இணைக்க இருப்புப்பாதைகள் துவக்கமாகின. இதற்கெக்கத்தில சிறு படகுகள் ஓட்டங்கள் கொண்டு யாத்திரிகர்களை இருப்புப்பாதைக்குச்



சேர்க்கலாகின. இவ்விளவரசத் தீவின் துறைமுக பாகத்தை வெல்ட் குவே (Welt Quay) என்பர். அநேகக் கப்பல்களும் நூற்றுக்கணக்கான படகுகளும் (சம்பான்) மிதந்து கொண்டிருப்பதை இவ்விரிந்த தேக்கத்திற் காணலாம். பினாங்கு இருப்புப்பாதை ஆபிஸர்களின் கட்டிடம் ஜியார்ஜ் டவுனின் அழகிய கட்டிடமாகும். இது தன் சிறப்பாக ஒரு கெடியாரக் கூண்டை உயர்ந்த சின்னமாகக் கொண்டுள்ளது. இவ்விளவரசத் தீவு பெரும் நகரமாகி அனேகானேக பாட்டைகளையும் வீதிகளையும் சிறப்பான பாங்கில் மோட்டார் வண்டி ஓட்ட வசதிக்கென தார் ரோட்டாகவே கொண்டுள்ளது. தார்போடாத தெருவையாவது, வீதியையாவது, ரோட்டுகளையாவது காண்பதரிது. இருப்புப்பாதையினர்கள் இத்தீவின் தெக்கத்திற்கு அக்கரையில் தமது தொடர்பு ஸ்டேஷனைக் கொண்டுள்ளனர். இதற்கென இவர்கள் பிரயாணிகளின் போக்கு வரவு சௌகரியங்களுக்கு அழகிய ஜெட்டி ஒன்று கொண்டுள்ளனர். பிரயாணிகள் இக்கரையில் கட்டணங்களைக்கட்டி டிக்கட்டுகள் பெற்று அக்கரைக்கு லாஞ்சிற் சென்று இருப்புப்பாதை வண்டிகள் ஏறுவர். இவ்வண்டிகளின் அமைப்பும், காரியஸ்தர்களின ஊழியமும் பின்னர் விபரமாக வரைவாம். இச்ஜெட்டியைப் போல இத்தீவின தண்ணீர்த தேக்க ஓரத்தில் பலஜெட்டிகளுள்ளன. அதில முக்கியமானதை விக்டோரியா பீயரெனலாம். இதனருகில் ஹாங்காங் ஷாங்காய் பாங்கு உள்ளது. இது ஒரு மிகச் சிறந்த கட்டிடம். இதற்கடுத்தாபபோல ஸ்வெட்டன்ஹாம் பியர் உள்ளது. இதற்கடுத்தாப போல இந்நாட்டில குடியேறின ஒரு பிரபல சீன கனவான இந்நாட்டினர்களின வசதிக்கெனவும, இத்தீவின அழகிற்கெனவும ஒரு அழகிய மணிக்கூண்டு கட்டி அளித்துள்ளார். இதைத தாண்டியவுடன கார்ன்வாலிஸ் கோட்டை உள்ளது. இது ஒரு அகண்ட ரோட்டினால் எஸ்பிளனேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது. இவ்விடம் கடற்றேக்கத்தை வடக்காகவும், கோட்டையைக் கிழக்காகவும், டவுன் ஹால் என்ற சிறந்த ஒரு கட்டிடத்தை மேற்காகவும் கொண்டுள்ளது. எஸ்பிளனேட்டினருகில் கவர்ண்மெண்டு ஹவுஸூம் கோர்ட்டுகளுமுள்ளன. இந்நகரிற்கென ஒரு சூப்பிரீம் கோர்ட்டுமுள்ளது. இதற்கடுத்தாபபோல் ஸெயிண்ட் ஜியார்ஜின் திருக்கோயில் அமைக்கப் பட்டுள்ளது. இந்நகரில் பல கல்விச் சாலைகளுள்ளன. அவைகளில் முக்கியமானவையாக கவர்ண்மெண்டு ஸ்கூல், செயின்ட் ஜேவியர் ஸ்கூல், ஸெயின்ட் ஜியார்ஜ் பெண் பாடசாலை, ரோமன்காதலிக் கான்வெண்ட் எனபனவைகளைக் கூறலாம். ஐரோப்பியர்களின் வசதிகளுக்கெனவும் ஏனைய கனதனவான்களின் சௌகரியங்களிற்கெனவும், ஈஸ்டேர்ன் ஹோட்டலெனவும், ஓரியண்டல் ஹோட்டலெனவும் இரண்டு வசதிகளுள்ளன. இத்தீவில் டிராம் வண்டிகள் பிரயாணிகளின் வசதிக்கென அமைந்துள்ளன. இவையில் ஒரு பாங்கு, கீழ்த் தண்டவாளங்களில ஓடுகின்றது. ஏனையப் பாங்கு மேல் கம்பியின் ஆதாரவில் பெரும் மோட்டார் வண்டியாக ஓடுகின்றது. இந்நகரத்தின உள்ளிடக்கும் வீதிகள் அகலக் குறைவாக இருப்பினும், கடைகளின் பெருக்கத்தில் நீண்டவைகளாகவும, சிறந்தவைகளாகவும, இரண்டு, மூன்று, நாலு, ஐந்து, ஆறு, ஏழு வீதிகள் சந்திப்புகளைக் கொண்டும் உள்ளன. பெரும் வியாபாரத்தையும், குதிரை வண்டி ஓட்டம், இரட்டை மாட்டுச் சுமை வண்டியோட்டம், ரிக்ஷா, டிராம், மோட்டார் இவைகளின [illegible]களுள் ஜனநெருக்கடிகளைக் கண்காணிக்கும போலீஸ் பந்தோபஸ்து [illegible]ப்பானமையாக இலலாமலே, வண்டி ஓட்டிகளின கைகளிலேயே ஏனைய நகர

207615 சென்னை 600 008

களைப்போல் உயிர்சேதங்கள் முதலியவை அதிகமாக இல்லாமலே நன் முறையில் நடை பெறுகிறது. இம்மக்களின் கூர்மைபுத்தியைக் குறிப்பிடல் வேண்டும். பம்பாய், கல்கத்தா, இரங்கோன், சென்னை முதலிய நகரங்களில் இத்தகைய நெருக்கடிகளைச் சில இடங்களில் காண கிடைக்கக்கூடாது இருப்பினும், அவ்விடங்களில் இரவு பகலாய் கொடைகள் போட்டும், டோப்பிகள், காக்கில்ஸ்கள் தரித்தும் ஜன நெருக்கடித்தற் காப்பிற்கென போலீஸ் அமைப்புகளேற்பட்டும், மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளில் ஏற்படும் வண்டி அபாய பிரியாதுகளைக் கவனிப்பின் இந்நாட்டின் நெருக்கடிகள் போலீஸ் அமைப்புப் பெரும்பாலாக ஏற்பட்டிராவிடினும் மிக்க கண்ணியமைகளில் ஏற்பட்டிருப்பது இந்நாட்டின் மக்களின் நட்பெனவே கருதுதல்வேண்டும். ரிக்ஷாக்களும், மோட்டார்களும் இந்நகரத்திலிருப்பவைபோலச் சென்னை, இரங்கோன் முதலியவைகளில் காண்கலாகாது. பம்பாய், கல்கத்தாவிலும் பார்க்க முடியாது. மாட்டு வண்டிகள் மனுஷ சவாரிக்கென ஏற்பட்டிராவிடினும் இறக்குமதி ஏற்றுமதி சௌகரியத்திற்கென மோட்டார் லாரிகளுடன் ஓடுவதைக் காணலாம். இநகரில் பல மார்க்கெட்டுகள் உணவு பண்ட வசதிகளுக்கெனவும், உடை வசதிக்கெனவும், ஏனைய சாமான்களின் வியாபாரத்திற்கெனவும் தனித் தனியே ஏற்பட்டுள்ளன. இவைகளில் சிற்சில சமயம் சாமான் வாங்குபவர்களுக்கும் விற்பவர்களுக்கும் சச்சரவுகளுண்டாகி விடுகின்றன. இவைகளை நீதியற்ற விலையில் விற்பவர் கண்டிக்கப்பட்டு வாங்குபவர்களின் சௌகரியத்திற்கு அமைக்கப்படுவது போற்றற்பாலதாகும். சிறு வீதிகளில் உள்ள கடைகள் சீனர் அமைப்பதில் சாராயம் முதல் ஊசிவிற்கும் வரை லைசென்ஸ் பெற்றிருப்பதால் எல்லா சாமான்களையும், விறகு, காய்கறி, கருவாடு முதலியவைகளையும் ஒரே கடையிற் பெறலாம். சீனர்கள் மீன் கறி முதலியவைகளை சிறுவண்டிகளில் வைத்து வீதிவீதியாய் விற்கின்றனர். இதில் பன்றிக் கறி விற்பவர்கள்தான் அதிகம். சிற்றுண்டிக் கடைகள் மிகப்பெருகிக் கிடப்பினும் அவையெல்லாம் சீனர்களும் இஸ்லாமியர்களுமே கொண்டுள்ளார். சென்னை, இரங்கோன் முதலிய இடங்களில் வெற்றிலை பாக்குக்கடை மிதமிஞ்சிக் கிடப்பதைப்போல் இங்கு சிகரெட்டுக் கடைகள் மிதமிஞ்சியுள்ளன. சுருட்டுக் கடைகளுக்குச் சுங்கவரி அதிகமாக ஏற்பட்டுள்ளதால் அவை குறையவே, சிகரெட்டு வியாபாரம் சுங்கவரிக் குறைவினால் அதிகம்.

(தொடரும்).

# நீதிக் கொத்து.

(ஸ்ரீமான் மா. அருணாசல முதலியார்.)

(1) அன்னமிட்ட வீட்டிற் கன்னமிடுவது போலத் தங்களுக்குச் சகல சுகங்களையுங் கொண்டு வந்த ஸ்திரீகளைப் புருஷர்கள் அலட்சியம் செய்வது எவ்வளவு அநியாயம். இந்துக்கள் இலட்சுமி, சரஸ்வதி முதலானவர்களைப் பாக்கியம், சௌரியம், கல்வி முதலியவைகளுக்குத் தெய்வமென்று சொல்லுகிறார்கள். சகல பிராணிகளைத் தாய்போலத் தாங்குகிற பூமி தேவியும் பெண்ணாயிருக்கிறாள். பூமியை விட்டு திக்குகளிற் பறப்போமென்றாலோ திக்குகளும் பெண்களாம் ஆறுகளிற்குதிப்போமென்றாலோ கங்கை, காவேரி, கோதாவரி, பெண்ணை முதலிய நதிகளும் பெண்களாயிருக்கின்றன. சிவன் தனது பாரியையை பக்கத்திலும் மற்றொரு



பெண்ணைத் தலையிலும் வைத்துக் கொண்டதாகவும், விஷ்ணு மார்பிலும், பிரம்மா நாவிலும், இந்திரன் தொடையிலும் தங்கள் தங்கள் பாரியைகளை வைத்துக்கொண்டதாகப் புராண இதிகாசங்கள் ஓலமிடுகின்றன. இவ்விதமாகப் புருஷர்களுடைய வாழ்வுகளெல்லாம் பெண் மூலமாகக் கிடைத்திருக்கப் புருஷர்கள் பெண்டுகளை அவமானப்படுத்துவது கிரமமா?

* * * * *

(2) படித்தவர்களும், படியாதவர்களும், தனவந்தர்களும், தரித்திரர்களும் ஒன்றுபோலத் தங்கள் பிள்ளைகளுக்கு வரதக்ஷிணை கேட்கிறார்கள். இந்த வரதக்ஷிணையினால் விளையுந் தீமை அவர்கள் அறியாததினாலோ அல்லது அறிந்துதானோ கற்றறி மூடர்களைப்போல தங்கள் பிள்ளை பிறந்து செவ்வெண்ணெய் கொடுத்தது முதல் கணக்கிட்டுப் பார்த்து மெட்ரிகுலேஷன் பாஸானால் ரூ. 500 என்றும், எப். ஏ. பாஸானால் ரூ. 1,000 என்றும், பி. ஏ. பாஸானால் 2,000 என்றும் இதற்குமேல் நகை, சீர், வெள்ளிப் பாத்திரங்களென்றும் இவைகள் கொடுத்தால் தான் தங்கள் பிள்ளைக்கு ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள முடியுமென்றும் சொல்லுகிறார்கள். பெண்வீட்டுக்காரர்கள் தகுந்த ஆஸ்திவந்தர்களாயிருந்தால்தான் இப்படிக் கொடுக்கமுடியும். இல்லாதவர்கள் பாவம்! என்ன செய்வார்கள்.

பிராமண ஜாதியில் பெண் ருதுவான பிறகு கலியாணம் செய்யக்கூடாது என்று சாஸ்திரம் சொல்வது வாஸ்தவமாயிருந்தாலும், இன்னம் ஏழு அல்லது எட்டு வயதில் பெண்களை கன்னிகாதானம் செய்து கொடுத்தால் தான் பலனுண்டு என்று சாஸ்திரம் முறையிடுகிறதென்று சொல்லுவது வாஸ்தவமாயிருந்தாலும் வரதக்ஷிணை ரூ. 4000, 5000 பிள்ளை வீட்டுக்காரர்கள் வாங்கவேண்டுமென்றாவது பெண் வீட்டுக்காரர்கள் கொடுக்கவேண்டுமென்றாவது எங்கே கூறியிருக்கிறது? மேற் கூறியபடி ருதுவான பிறகு பெண்ணுக்குக் கலியாணம் செய்யக்கூடாது என்னும் சாஸ்திரத்தைப் பின்பற்றி நடக்கிறவர்கள் எந்த சாஸ்திரத்திலுமில்லாததும், சாஸ்திர விரோதமானதுமான வரதக்ஷிணை யென்னுமிந்தக் கொடிய வழக்கத்தைப்பின்பற்றி நடக்கலாமா? இந்த வரதக்ஷிணை யென்னும் பிசாசானது ஒழிந்தால் தான் நம் இந்தியாவில், அதிலும் இந்துக்களில், அதிலும் பிராமணர்களில், அதிலும் பெண்களுக்கு, க்ஷேம முண்டாகுமென்பதை நினையுங்கள்.

* * * * *

(3) இருட்டில் தீவட்டி எப்படி வெளிச்சம் தருமோ அப்படி வித்தை ஜனங்கள் மத்தியில் பிரகாசிக்கிறது. கல்வியினால் நல்லொழுக்கமும், நல்லொழுக்கத்தினால் யோக்கியதையும், யோக்கியதையினால் பொருளும், பொருளினால் தர்மமும், அதனால் சுகமு முண்டாகுமாதலால் எல்லா நன்மைக்கும் கல்வியே காரணமாயிருக்கிறது இக்கல்விக்கும், செல்வத்திற்கும் அநேக வித்தியாசமுண்டு. செல்வம் அள்ளக் குறைவுறும், கல்வி அள்ள நிறைவுறும். செல்வம் கள்ளரால் அபகரிக்கப்படும்—கல்வி கற்றோரால் உபகரிக்கப்படும். செல்வம் வெள்ளத்திலடிபடும்—கல்வி கற்றோர் தம் உள்ளத்திற் குடிபடும். செல்வம் அபாயத்தைக் கொடுக்கும்—கல்வி உபாயத்தைக் கொடுக்கும். செல்வம் நிலத்திற் பதிப்பிக்கப்படும்—கல்வி மனதிற் பதிப்பிக்கப்படும். கல்வி அன்னைபோல் ரட்சிக்கும், தந்தைபோற் சிட்சிக்கும், மனைவி போலின்பஞ்செய்யும், மைந்தன்போற் பணி செய்யும். ஆகையால் 'எம்மை யுலகத்தும் யாம் காணேம் கல்விபோற் மம்மார்க்கு மருந்து' எனக்கூறின் என் தகாது.

* * * * *

# இந்திய சங்கீதம்.

(ஸ்ரீமதி சேஷகன்னிகை.)

சங்கீதம் என்பது எத்தேசத்தாராலும் எந்தக் காலத்திலேயும் வழங்கி வருபனவே. ஆனால் நம் இந்திய சங்கீதமோ கவனித்துப் பார்க்கில் முழுமையும் கடவுளிடம் அன்பு செலுத்துவதாக இருக்கின்றது. சங்கீத ஸ்வரமே பகவானது நாமம் எனப்பெரியோர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. பெரிய அரிய மகான்களெல்லாம் ஒவ்வொரு ஸ்தலங்களையும் பாடலாகவே பாடி முக்தி அடைந்திருக்கின்றனர். தியாகராஜர் பாடல் முழுமையும் ஸ்ரீ ராமபிரானையே துதித்து அருளுடன் பாடியிருக்கின்றனர். அதைத்தான் தற்காலம் நம் தேசத்தில் ஒவ்வொருவரும் அப்பியசித்துப் பாடி வருகின்றனர். அப்பாட்டுகள் தெலுங்காகவே இருப்பதால், தெலுங்கு தெரியாதவர்களுக்கு அதின் அர்த்தமும் அருமையும் தெரியாததே. அதின் அர்த்தம் தெரிந்திருப்பின் அதிலேயே நம் நல்வழிக்கு மார்க்கம் இருக்கின்றதென்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோற் காணலாம். ராமாயணம் என்பதை நம் தேசத்தில் மூன்று வயதுள்ள குழந்தைகள் கூட சாதாரணமாய் அறிந்திருக்கின்றனர். அது அவ்வளவு அவசியமாய் ஒவ்வொரு வீட்டிலும் பாராயணம் செய்யப்படுகின்றது. அப்பேற்பட்ட முக்கியமான ராமாயணத்திலுள்ள சாரமெல்லாம் நமது தியாகய்யர் சங்கீதத்தில் முழுமையும் வர்ணித்திருக்கின்றனர். ராமாயணத்தில் ராவணேச்வரன் ஸாமகானம் செய்து சர்வேச்வரனை வசப்படுத்தி வரன் பெற்றதாகவும் சொல்லக்கேட்டு வருகிறோம். ஆகையால் கானத்தினால் எவ்வளவோ சித்தியை அடையலாம். ஆனால் அர்த்தம் தெரியாமற் பாடுவது பசி இல்லாமற் புசிக்கும் உணவுக்கு ஒப்பாகும். மூத்தோர் பழமொழி ஒன்றுண்டு; அதாவது 'ஆடிக்கறக்கிற மாட்டுக்கு ஆடிக்கற, பாடிக்கற மாட்டுக்குப் பாடிக்கற' என்பதே. மாடுகூடப் பாடிக் கறந்தால் ஆனந்தத்தினால் கட்டுப்பட்டு நிற்குமாம். பாம்பையும் பிடாரன் குழலூதி ஆட்டிவைப்பதைப் பார்க்கின்றோம். அப்பேற்பட்ட கொடிய ஜந்துவே கானத்திற்கு லயப்பட்டால் அச்சங்கீதத்தைப் பற்றி அதிகம் எழுதஎன்ன இருக்கின்றது. சிறு குழந்தைகள் மிகவும் அழுதிடில் அவைக்குத் தாலாட்டுச் சொல்லிடில் வெகு சுகமாகக் கேட்டுக்கொண்டே நித்திரை புரிகின்றன. சங்கீதத்திற்கு சமானம் இவ்வுலகில் ஒன்றுமேயில்லையென்றுதான் சொல்லவேண்டும். அதிலும் நம் இந்திய சங்கீதத்தில் ஈச்வரனையே மிகவும் புகழ்ந்திருப்பதால் ரொம்பவும் நாம் பெருமையை அடைகின்றோம். பாட்டுத் தெரிய வேண்டியது ஆண் பெண் இருவருக்கும் அவசியம். நமது மூதாதைகள் ராமாயணம், பாகவதம், பார்வதி, ருக்மணி கலியாணங்கள், இன்னும் இவை போன்ற தெய்வத்தன்மை வாய்ந்த கதைகளை மிகவும் சுலபமாகக் கும்மிப்பாட்டாகவோ கோலாட்டப் பாட்டாகவோ வெகு அழகாகப் பாடி வந்திருக்கின்றனர். அவர்கள் ஒருவரிடமிருந்து மற்றொருவர் கற்றுக் கொண்டதைத் தவிர இந்தக் காலம்போல் வித்வான்களைக் கொண்டு கற்பித்து வந்ததாகத் தெரியவில்லை அவர்கள் பாடும் பாட்டைக்கேட்டால் நமக்கே ஒரு பக்தி யேற்படும்படி அர்த்தத்துடன் இருக்கும். ஆகையால் சங்கீதத்தை ஒவ்வொருவரும் அப்பியசிப்பது மிகவும் நலமே. ஆனால் அர்த்தமில்லாமல் தெரிந்து கொள்ளுவதினால் சற்றும் பிரயோஜனமில்லை. நாம் பக்தியுடன் அர்த்தம் தெரிந்து அப்பியசித்தால் பகவானது அனுக்கிரகத்திற்குப் பாத்திரர்களாக ஆவோம் என்பது திண்ணம்.

ஸ்ரீராமஜயம்.


# சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கியமாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் — சகோதரி வி. பாலம்மாள்

மலர் III. | அக்ஷய—ஆடி July 1927. | இதழ் 12.


# பிரதியுபகாரம்.

(ஸ்ரீமதி பி. மங்களாபாயி)

"சித்தி, அடிக்காதே! உண்மையாகச் சொல்றேன், இன்னமே ஒருபோதும் தப்பமாட்டேன். அடி—அம்மா—டீ!" என்று விம்மிக்கொண்டே சொல்லிக் கொண்டிருந்தவள் சுமார் ஏழு வயதுடைய ஓர் சிறுமியாயிருக்க வேண்டுமென்று ஜகந்நாதய்யருக்குத் தோன்றியது. வாசற் கதவு மூடப்பட்டிருந்தது. ஆதலால் இந்தக்கூக்குரலுக்குக் காரணமென்னவென்றறியும்பொருட்டு ஜகந்நாதய்யர் சட்டென்று நின்று கவனித்தபோது பின்வரும் வார்த்தைகள் அவர் காதிற்கெட்டியன.

"தரித்திரமே! அட்டகாசம்பண்ணி பயமுறுத்துகிறாயா? நான் ஒன்றும் பயப்படமாட்டேன். தாயார் உனக்கு 'சுசீலா' என்று நன்றாகப் பெயரிட்டிருக்கிறாள்! குசீலா என்று அல்லவோ வைத்திருக்கவேண்டும்! போகும்போது துளசி மாடத்திற்கு ஜலம் விடச் சொல்லிவிட்டுப் போனேன். பாலைப் பார்த்துக்கொண்டு, மணைபோட்டுத் தீர்த்தம் வைக்கச் சொன்னேன். இவ்வளவுகூட உன்னாலாகாதா?"

இந்த வார்த்தைகளுக்குப் பிறகு அப்பளக் குழவியால் இன்னொரு பலமான அடி சுசீலையின் முதுகில் விழுந்த சத்தம் கேட்டது. அடிபட்டதும் சுசீலா துடித்து அலறிக்கொண்டே புறக்கடை வாயிலால் வெளியில் வந்து தாழ்வாரத்தில் நின்றுகொண்டு முன்னிலும் அதிகமாக அழலானாள்.

ஜகந்நாதய்யர் அருகிற் சென்று அவளை மார்புடன் கட்டி யணைத்துக்கொண்டார்.

ஆனால் விம்மலினால் அவளால் ஒன்றும் பேச முடியவில்லை. சற்றுநேரம் அவர் அங்கே நின்று தன் அங்கவஸ்திரத்தின் முனையால் அவளுடைய கண்களையும், முகத்தையும் துடைத்தார். அவர் அங்கு நின்றுகொண்டிருக்கும்பொழுது உள்ளேயிருந்து கோவிந்த சாஸ்திரியார் பேசுகிற சத்தம் அவருக்குக் கேட்டது. "உனக்கு நான் எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன் அந்தப்பெண் உனக்கு உபயோகப் படுபவளாக இல்லாவிட்டால், அவளை என் வசப்படுத்திவிடு, நான் அவளுக்குக் கலியாணம் பண்ணி வைத்துவிடுகிறேன் என்று! உனக்குப் பெரியதனம் அதிகம்! அதனால் ஜனங்கள் உன்னைப் பரோபகாரி என்று சொல்ல வேண்டுமென்று உனக்குத் தோன்றுகிறது!"

இதைக்கேட்டதும் யசோதையம்மாள் அடங்காக் கோபத்துடன் சொன்னாள்:—"போரும், போரும், புத்திசாலித்தனம்! எவ்வளவு புத்தியிருக்கிறதென்று எனக்குத் தெரியும், குடித்தனம் செய்ய வேண்டியது நானாக்கும்! நீங்கள் என் விஷயத்தில் தலையிடக்கூடாது. எனக்கு எது நன்றாயிருக்குமோ அதுதான் நான் செய்வேன். சிறு பெண்களுக்கு இந்த வயதில் நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லிக் கொடுக்காவிட்டால் பிறகு எப்போ? சுருக்க பூஜையை முடித்துக்கொண்டு சாப்பிட வாருங்கோ. எனக்குப் பரிமாறப் போகவேணும்."

பாவம்! கோவிந்த சாஸ்திரி வாயைத் திறவாமற் பூஜை செய்யலானார். யசோதையம்மாளுக்கு முன் பேச அவருக்கு தைரியமில்லை. ஆனால் இன்று அவரால் பேசாமலிருக்க முடியவில்லை. அதனாற்றான் சுசீலைக்குப் பரிந்து பேசச் சற்று துணிந்தார். ஆனாலும் தன் மத்தியஸ்தத்தினால் ஒன்றும் பயனபடவில்லை யாதலால் அவர் மௌனம் சாதிக்க வேண்டியதாயிற்று.

இவ்வளவு ஆகும் வரையில் சுசீலையின் துக்கத்தின் வேகம் சற்று தணிந்தது. ஜகந்நாதய்யர் வீட்டிற்குப் புறப்பட்டுப்போயினர். யசோதையம்மாளின் இரண்டு பெரிய பிள்ளைகள் சனிக்கிழமை நாலைப் பள்ளிக்கூடத்திற்குப் போயிருந்தமையால் இன்னும் திரும்பிவந்திலர். கடைக் குழந்தையை எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டித் தொட்டிலில் வளர்த்தப்பட்டிருந்தது. வெங்குட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். கோவிந்த சாஸ்திரிகள் போஜனமானதும் வெளியிற் சென்றனர். யசோதையம்மாள் கொஞ்சம் பலாகாரம் செய்து குழந்தைகளுக்குச் சாதம் மூடி வைத்துவிட்டு, வெங்குட்டுவை சுசீலையினிடம் ஒப்புவித்து, அடுத்த வீட்டிற்குப் பரிமாறுவதன்பொருட்டுக் கைக்குழந்தையை இடுப்பில் எடுத்துக்கொண்டு புறப்பட்டுப்போனாள். சுசீலை அழுகை நிறுத்தியது உண்மைதான். ஆனால் அவளுடைய கோபம் தணியவில்லை. எல்லாக் குழந்தைகளுடனும் அவள் சாப்பிடப் போகவில்லை. சிறு பெண்தானே. அவள் எத்தனை நேரம் பட்டினியிருப்பாள்? பன்னிரண்டடிக்கும் சுமாருக்கு அவள் புறக்கடைத் தாழ்வாரத்தில் போய்ப் படுத்துக்கொண்டாள். உடனே தூங்கிவிட்டாள்.

சுசீலை அயர்ந்து தூங்கிச் சற்று நேரத்திற்கெல்லாம், அவளுடன் விளையாடும்பொருட்டு சாயு அங்கு வந்து அவளை எழுப்பினாள். சாயுவுக்கு சுமார் ஒன்பது வயதிருக்கும். "உங்க வீட்டிலெ எனக்குப்போதுபோகல்லெம்மா, எனக்கு. நீ வெங்குட்டுவெ அழச்சண்டு எங்காத்துக்கு வரமாட்டெயா? நாம்ப அங்கே விளையாடலாம்" என்று சாயு கேட்டாள்.

சுசீலைக்கு யசோதையம்மாளிடத்தில் அதிக பயம். ஆகலால் முதலில் அவள் வரவில்லை என்று சொன்னாள். பிறகு சாயு அதிகக் கட்டாயப்படுத்தினதினால் வெங்குட்டுவை அழைத்துக்கொண்டு சாயுவின் அகத்திற்குச் சென்றாள்.



(2)

காலையில் நடந்த சங்கதியனைத்தும் ஜகந்நாதய்யர்—கங்கையம்மாளின் குமாஸ்தாவானவர்—கங்கையம்மாளிடம் சொன்னார். அதனாற்றான் கங்கையம்மாள் சுசீலையை அழைத்து வரச்சொல்லி சாயுவை அனுப்பியிருந்தனர். இன்று அவர் சாயு விளையாடுவதற்கென்று சிறு சிறு அதிரஸங்களும், முறுக்கும் செய்து கொடுத்திருந்தனர். சுசீலா பசியினால் மிகவும் களைத்துப் போயிருந்தனள்! அதனால் அவள் விளையாடுவதற்காகச் செய்துகொடுத்திருந்த பக்ஷணத்தின் பெரும்பாகத்தை சாயுவினிடமிருந்து அதிக உபசாரம் செய்து கொள்ளாமலே தின்றுவிட்டனள். இன்று அவளுக்கு வீட்டிற்குப் போவதற்குக்கூட அதிக பயமாயிருந்தது. பாபம்! அவள் என்ன செய்வாள்? யசோதையம்மாளின் பயம். சாயு சுசீலையைத் தமது வீட்டிலேயேவைத்துக் கொள்ளும்படி தனதன்னையைக் கேட்டுக் கொண்டிருந்தனள்.

கங்கையம்மாள் கும்பகோணத்திற்கு வந்து சுமார் நான்கு மாதங்களாயிருந்தன. கணவர் மரணத்தினால் ஏற்பட்ட துக்கத்தை மறக்கும் பொருட்டு தனது ஏகபுத்திரியாகிய ஒன்பது வயதுள்ள சாயுவுடன் கும்பகோண க்ஷேத்திரத்தில் வசித்துக்கொண்டிருந்தனர். ஜகந்நாதய்யர் கங்கையம்மாளின் நில பலத்தை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்தனர். முதலில அவர் குமாரஸ்வாமி அய்யரிடத்தில் குமாஸ்தாவாக அமர்ந்தார். பிறகு வீட்டு மனிதனைப் போலவே ஸ்னானபானம போஜனம் எல்லாம் கங்கையம்மாள வீட்டிலேயே செய்யலானார். அவருடைய இரண்டு மனைவிகளும் இறந்துவிட்ட பிறகு அவர் மூன்றாவது விவாகம் செய்துகொள்ளவில்லை அவருடைய முழுப்பொழுதும் கங்கையம்மாளுடன் யாத்திரை சுற்றுவதிலும், பூஜை அர்ச்சனைசெய்வதிலும் போய்க் கொண்டிருந்தது. குமாரஸ்வாமி அய்யர் ஜமீனைப்பார்த்துக்கொள்ளும் வேலையை கங்கையம்மாளுக்கும நன்றாகக்கற்பித்திருந்தனர். அன்றியும் மரண சமயத்தில் அவர் கங்கையம்மாளை வற்புறுத்திச் சொன்னதாவது:—"சாயுவின் விவாகம் அவளுக்குப் பதினெட்டு வயது முடிந்தாலொழியச் செய்யக்கூடாது. அவளுடைய கணவனை வீட்டிலேயே வைத்துக்கொள்ள வேண்டும்." இந்த இரண்டு விஷயங்களின் தோரணையின்படியே ஜகந்நாதய்யர் சாயுவை வளர்த்துக்கொண்டு வந்தனர். தற்சமயம் சாயுவின் படிப்பு வீட்டிலேயே உபாத்தியாயர் வைத்து நடத்தப்பட்டுக் கொண்டிருந்தது. ஜகந்நாதய்யருடைய லட்சியம் பெரும்பாலும் பூஜை அர்ச்சனையின்கண்ணிருந்தபோதிலும், தற்காலத்திய நாகரிகம் முழுவதும் அவர் நன்றாக அறிவார், குமாரஸ்வாமி அய்யருடைய சகவாசத்தினால அவர் மனம நன்றாகப் பக்குவமடைந்திருந்தது. சுசீலை சாயங்காலம் வீட்டிற்குப் போனதும் கங்கையம்மாளைத் தனிமையாகச்சந்தித்துசொன்னார்:—"யாத்திரை தான தர்மம முதலியன செய்வதனால் எத்தகையப் புண்ணியம் கிடைக்கிறது என்கிறனரோ, அதைவிட அதிகப் புண்ணியம் சுசீலையைப் போன்ற பெண்ணுக்கு ஆசிரயம் கொடுத்து அவளுக்கு வித்தியாதானம செய்வதனால் உண்டாகும என்று எனக்குத தோன்றுகிறது. அவளால் உங்களுக்கு அதிகச் செலவு ஏறபடுமென்று எனக்குத் தோன்றவில்லை. பெண் குணம், அழகு இரண்டும வாய்ந்தவளாயிருக்கிறாள். அவளுடன் வித்தையின செயற்கையுண்டானால அவளுடைய விவாகத்தைப் பற்றிக்கவலையிலலாமலிருக்கும். அன்றியும உங்

கள் சாயுவுக்கும் அவளுடைய சகவாசத்தினால் அனுயாசமாக நல்ல பொழுது போக்குண்டாகும். அம்மா, இதைப்பற்றி நீங்கள் நன்றாக யோசித்துப் பாருங்கள்."

இந்த யோசனை கங்கையம்மாளுக்குஇசைந்த போதிலும், அவர் உடனே அதற்கு மறுமொழி யளிக்கவில்லை. "அதைப்பற்றி நாளைக்கு யோசிக்கிறேன்" என்று ஜகந்நாதய்யருக்கு பதிலளித்தனர்.

ஏற்கனவே சாயு கங்கையம்மாளுக்கு ஏக புத்திரி. அதிலும் குமாரஸ்வாமி அய்யருடைய அகாலமரணம். அதனால் கங்கையம்மாளுக்கு சாயுவின் பேரிலிருக்கும் அன்பு வளரலாயிற்று. அவருக்கு இவ்வுலகில் சாயு ஒருவள் தான் அருஞ் செல்வம்போலிருந்தாள். அவள் ஒரு க்ஷணம் கண்ணிற்கு மறைவிலிருந்தால் கங்கையம்மாளுடைய உயிர் துடிக்கும். வெகுவாய் அவர் அவளை விளையாடவுங்கூட ஒருவர் வீட்டிற்கும் அனுப்புவதில்லை. அவளும் வெளியிற் போகவேண்டுமென்று அதிகப் பிடிவாதம் பிடிப்பது கிடையாது. காரணம் அவன் வயதுள்ள பெண்களுக்குத் தேவையான சகல வித விளையாட்டுப் பொருள்களும் கங்கையம்மாள் அவளுக்கு வாங்கிக் கொடுத்திருந்தமையால் அல்லயலிலுள்ள பெண்களெல்லோரும் அவள் வீட்டிற்கே விளையாட வந்துவிடுவார்கள்.

இரவிற் படுக்கும்பொழுது சாயு மறுபடியும் ஒரு முறை தன் அன்னையைச் சுசீலையை தம் வீட்டில் அழைத்துவந்து வைத்துக்கொள்ளும்படி வற்புறுத்தினாள். சுசீலையின் சிற்றன்னை சுசீலையை மிகவும் படுத்துகின்றனள் என்பதை அவள் அடுத்தவீட்டுப் பெண்கள் மூலமாய் அறிந்திருந்தனள். அன்றியும் அவள் சிற்றன்னை அவளை அடிக்கும்பொழுதும் அவள் பார்த்திருக்கிறாள். சுசீலை தனது பெயருக்குத் தக்கவாறே இருக்கின்றனள் என்பது ஜகந்நாதய்யர் கங்கையம்மாள் சாயு இவர்களுடைய உறுதியான கொள்கை.

என்றைக்காவது சுசீலை விளையாட வந்தாளானால், அவளும் சாயுவும் வெகுப் பிரியமாய் விளையாடுவதைக்கண்டு யசோதையம்மாள் லேசமும் தயவின்றி அவளுடைய பின்னலைப் பிடித்து அவளைப் பரபரவென்று இழுத்துக் கொண்டு செல்வாள். அதைக்கண்டு சாயு பயந்து நடுங்குவாள். இதெல்லாம் அவள் கண்களுக்கெதிரிலேயே தெரிந்துகொண்டிருந்தது. இரவில் கங்கையம்மாளும் சாயுவும் படுக்கையிற் படுத்தனர். அப்பொழுது அவர் சாயுவை நோக்கி "சாயூ, சுசீலையை நான் அழைத்துக்கொண்டுவந்து வைத்துக் கொண்டால் நீ அவளுடன் சண்டைபோடமாட்டாயல்லவா?" என்றனர்.

சாயு பதிலளித்தாள்:—"அம்மா, நான் ஒரு போதும் சண்டைபோடமாட்டேனே! நாங்கள் இரண்டுபேரும் சேர்ந்து விளையாடுவோம், படித்துக்கொள்வோம், படிப்போம், எல்லாஞ் செய்வோம். நீ அவளை அழச்சண்டுதான் வாணும். என்னெக்கி அழச்சண்டு வருவே? சொல்லு."

சாயு இவ்வாறு கேட்டபிறகு கங்கையம்மாளின் தயங்கிக்கொண்டிருந்த மனதிற்கு உறுதி ஏற்பட்டது.

யசோதையம்மாளின் சுபாவம் மிகவும் கடுமையானது. இலவசமாக வீட்டு வேலைக்கு உபயோகப்படும் பெண்ணை அவள் எப்படித் தன்னிடம் அனுப்புவாள்? இவ்வளவு வழமை யிருந்தும் அவளைத் தன்னிடம் வைத்துக்கொள்வதற்கு யசோதையம்மாளின் ஏது (ஹேது) என்னவாயிருக்கும்? எனனும் இவ்வெண்ணங்களெல்லாம் அவர் மனதிலுதிக்கலாயின; இருந்தபோதிலும் பிரயத்தனஞ் செய்து பார்ப்பதாக அவர் நிச்சயித்துக் கொண்டனர். மறுநாள் சுசீலை விஷயமாய் அவளுடைய பெரிய தகப்பனாரிடம் மெல்லப் பிரஸ்தாபிக்கும்படி ஜகந்நாதய்யரிடம் சொன்னார். ஜகந்நாதய்யருடைய மகள் ஒருவள் முற்றிலும் சுசீலையைப்போலவே யிருந்தனள். சுசீலையைப் பார்க்கும்பொழுதெல்லாம் அவருக்குத் தன் மகளின் ஞாபகமாகும் கங்கையம்மாள் தனக்கிஷ்டமான காரியத்தைத் தன்னை செய்யும்படி சொன்னதும் அவருக்கு மிகவும் சந்தோஷ முண்டானதாகத் தோன்றியது. அவர் உடனே கோவிந்த சாஸ்திரியாரிடம் இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்க எண்ணங்கொண்டார். கோவிந்த சாஸ்திரி மிகவும் நல்ல மனிதராயிருந்தபடியால் அவர் சுசீலையின் தாய் தந்தையரின் (பெற்றோர்களின்) வாலாற்றை எல்லாம் சுருக்கமாகச் சொன்னார். ஜகந்நாதய்யர் ஏற்கனவே அச்சங்கதியைக் கேள்விப்பட்டிருந்தனர். அதற்கும் கோவிந்த சாஸ்திரியார் சொன்னதற்கும அதிக வித்தியாசமொன்றும் காணப்படவில்லை.

சுசீலையின் பெற்றோர்களின் வாலாற்றை அறிய வாசகர்களுக்கு விருப்பமிருக்கும். ஆகையால் அதை இங்கு கொஞ்சத்தில் சுருக்கிச் சொல்லுகிறேன.



(3)

ஜீ. ஐ. பி. லைனில் ஓர் சிறு ஸ்டேஷனில் ரங்கநாதய்யர் என்றோர் சிறு வயதுள்ள இருகல்தர் தந்தி ஆபீஸில சமீபத்திற்றான உத்தியோகத்திலமர்ந்திருந்தனர். அவருக்குச் சம்பளம சொற்பந்தான் கிடைத்துக்கொண்டிருந்தது என்பதென்னவோ உண்மைதான். இருந்தபோதிலும் ரங்கநாதய்யர், சத்தியபாமையம்மாள் இருவருக்கும இலைறதகிற் புதிதான உற்சாக மிருந்தமையால், இருவருக்கும் வறுமையின் உணர்ச்சியே இலலாமலிருந்தது, இருவருக்கும் இந்த தினங்கள் பரஸ்பர சகவாசத்தில் ஆநந்தமாகக் கழிந்தன. இந்த தினங்களில் சத்தியபாமை தனது எதிர்காலத்திய சம்சார சௌக்யமென்னும் மனக்கோட்டைகள் (கற்பனை மாளிகைகள்) எத்தனை தான் கட்டினாள்! எந்த மைத்துனன் சொத்தை எல்லாம் அழித்துத் தம்மை நடுத்தெருவில் விட்டனனோ, அவனுக்குத் தாம் நல்ல நிலைமைக்கு வந்தாலொழிய முகத்தைக் காட்டப்போவதில்லை என்று இருவரும் திடமான சங்கற்பம் செய்துகொண்டிருந்தனர். "தன் கணவன் சமர்த்தனாயிருந்து தான் குடித்தனத்தைச் சிக்கனமாகவும் பணிக்காகவும் நடத்தினால் தான் பயப்படக் காரணமென்ன விருக்கிறது, தமக்கு நல்லகாலம் வராமலென்றும் போகப் போவதில்லை. இதென்னவோ உண்மைதான்" என்று சத்தியபாமாவுக்கு மிக்க ஆசை யிருந்தது. தலைச்சன் புத்திர ரத்னமானால் சந்தோஷம் உண்டாகாமலிருக்கும் ஸ்திரீகள் நமது சமாஜத்தில் அகப்படுவது மிகவும் அரிது. ஆனால் சத்தியபாமையின் இஷ்டம் அந்த நியமத்திற்கு முற்றிலும் எதிரிடையாயிருந்தது. ஏதோ கர்மதர்ம சம்யோகத்தினால் அவளுடைய இச்சை நிறைவேறி அவள் மிக அன்புடன் தன புதல்விக்கு சுசீலை என்று நாமகரணம செய்தனள். ரங்கநாதய்யர் மிகப் பிரியத்துடன் தனது செல்வப் புதல்வியை 'சுசீலா' என்றழைத்துக் கொண்டிருப்பார். தைதியா (தற்பொழுது) ரங்கநாதய்யரும் சத்தியபாமாவும் சம்சார சுகதிலாழ்ந்து மெய்மறந்திருந்தனர். உலகத்திலிருக்கும் துக்கத்தின் கற்பனை கணப்பொழுதும் அவர்களுடைய மனதை ஸ்பரிசிக்காமலிருந்தது; ஆனால் இந்த சுகம எத்தனை நாள் நிலைக்குமு? ஒரு நாள் மேலதிகாரி ரங்கநாதய்யர்மீது யாதொரு குற்றமின்றியே அவருக்குக் கொடுத்த கருங்குறி (black mark) யானது, ரோஷமும், அபி

மானமுமுள்ள அவருடைய சுபாவத்திற்குப் பொறுக்கமுடியாமல் அவர் உத்தியோகத்தை ராஜிநாமா கொடுத்து விட்டிலுட்கார்ந்தார். ரங்கநாதய்யருக்குச் சொற்பச் சம்பளம்தான் கிடைத்துக்கொண்டிருந்தது. அப்படியிருக்க அவர் எப்படிப் பணம் சேர்த்து வைத்திருப்பார்? சத்தியபாமாவின் இரண்டு நகைகள் எத்தனை நாளைக்கு (நாட்களுக்கு) வரும்? ஏற்கனவே கடன் ஒன்றுமில்லாததினால் கொஞ்சம் நஞ்சம் சேர்த்துவைத்திருந்த பணத்தை அவர் முதலிற் செலவழித்தனர். பிறகு அவர் சத்தியபாமாவின் நகைகளில் கையைவைத்தனர். சீக்கிரத்திலேயே ஏதாவது சொந்த உத்தியோகம் செய்ய அவர் எண்ணங்கொண்டிருந்தனர். அதற்குள் அவரை விஷஜுரம் சூழ்ந்துகொள்ள, அதில் அவர் இவ்வுலகத்தைவிட்டகன்றனர்.

இப்பொழுது மாத்திரம் சத்தியபாமா தன் தைரியத்தை இழந்தனள். ஆனபோதிலும் அடுத்தவீட்டு அத்தையம்மாளின் உபதேசத்தின்படி அவள் மனந்தடுமாறாமல் வைதவ்வியத்தின் பிராயச்சித்தத்தை தைரியமாகச் செய்துகொண்டாள். இப்பொழுது அவளிடத்தில் ரொக்கமாகப் பணம் ஒன்றும் இருக்கவில்லை. ஆதலால் அவள் தன்னிடத்திலிருந்த சில்லரை நகைகளையும், இதர சாமான்களையும் எடுத்துக்கொண்டு சுசீலையுடன் கும்பகோணத்தில் வசித்துக்கொண்டிருக்கும் அவளுடைய ஒன்றுவிட்ட மைத்துனரான கோவிந்த சாஸ்திரியாரின் ஆசிரயத்தில் வசிப்பதாகத் தீர்மானித்தாள். யசோதையம்மாளின் சுபாவத்தைப்பற்றி ரங்கநாதய்யர் மூலமாக ஏற்கனவே அவள் கேள்வியுற்றிருந்தனள். இருந்தபோதிலும் தனக்கு இது பரீக்ஷை நேரமாயிருக்கிறதாதலால் அதனினும் தைரியமாய் வெளிவர அவள் தீர்மானித்துக்கொண்டனள். தற்சமயம் சுசீலைக்கு பதினொரு மாசம். அவள் பேரில் அடுத்தவீட்டு அத்தையம்மாள் உயிர் வைத்திருந்தனள். ஆதலால் அவள் சுசீலை ஊருக்குப்போகும்போது அவளுக்குப் பாலுக்காகப் பதினைந்து ரூபாய் கொடுத்திருந்தனள். அதை எடுத்துக்கொண்டு அவள் கும்பகோணம் போகப் புறப்பட்டாள். கோவிந்த சாஸ்திரியின் மனைவியாகிய யசோதையம்மாள் மிகவும் கருமித்தனமுள்ளவளும் சண்டைக்காரியுமாயிருந்தனள். ஆதலால் அவள் வீட்டிற்கு விருந்தினராக வர ஒருவரும் துணியார். யசோதையம்மாளும் இத்தகையவர்களுக்குத் தன் வீட்டில் இடமும் கொடுக்கமாட்டாள்; ஆனால் இன்று சத்தியபாமையின் அதிர்ஷ்டமென்று தான்சொல்லுங்கள். யசோதையம்மாள் சத்தியபாமையை ஒருவாறு வைத்துக்கொண்டனள். சத்தியபாமா யசோதையம்மாள் வீட்டிற்கு வந்து எட்டு தினங்களாகியும் யசோதையம்மாள் அவளுக்கு இன்னும் பரிசொன்றும் செய்யாமலிருப்பதைக் கண்டு அல்லயலிலிருக்கும் ஸ்திரீகளெல்லோரும் ஆச்சரியமுற்றனர். விசாலாக்ஷியம்மாள் என்னுமோர் ஸ்திரீ யசோதையம்மாள் வீட்டிற்குப் பக்கத்துவீட்டில் வசித்துக்கொண்டிருந்தாள். இவள் வெகு கெட்டிக்காரியாயிருந்து யசோதையம்மாளின் சுபாவத்தை நன்குணர்ந்திருந்தாள். ஆகலால் சத்தியபாமையை அவள் வைத்துக்கொண்ட தன் காரணத்தை அவள் உணர்ந்தனள். தற்சமயம் யசோதையம்மாளுக்கு சத்தியபாமையைப் போன்றவர்களுடைய தேவையிருந்தது. அன்றியும் சுசீலை மிகவும் அழகு வாய்ந்தவளாயிருந்தனள். அவளுடைய சௌந்தரியத்தை பின்னுக்கெப்பொழுதாவது உபயோகப்படுத்திக்கொள்ளலாம் என்று யோசித்து யசோதையம்மாள் சத்தியபாமையையும் சுசீலையையும் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்.



அற்பசி மாதத்தில் கும்பகோணத்தில் காலராப் பிரளயம் உண்டாயிற்று. அதில் சத்தியபாமா அகப்பட்டுக்கொண்டு, பிரியமான சுசீலையை இவ்வபாரமான உலகத்தில் தனிமையாக விட்டுவிட்டகன்றனள். சுசீலைக்கு சத்தியபாமையைத்தவிர வேறொருவருடைய பரிச்சயமும் அதிகமாக இல்லாமற்போனதனால், அவள் எப்போதும் தன் தாயைப் பின்தொடர்ந்துகொண்டே இருப்பாள். இதற்காக யசோதையம்மாள் அவளை தண்டித்தால் சத்தியபாமா எங்காவது தூரப்போய்விடுவாள், தற்சமயத்திற்கு அவள் கண்களில் நீர் ஆறாகப் பெருகும். ஆனால் இப்பொழுது யசோதையம்மாள் தன் மகளை எப்படி நடத்துகிறாள் என்பதைப் பார்க்க அவள் எங்கிருக்கிறாள்! கோவிந்த சாஸ்திரிகளுக்குத் தன் பத்தினியின்பேரில் கேவலா விசுவாஸம். அதனால் அவர் அவளை ஒன்றுமே சொல்லமாட்டார்.

இச் சங்கதியெல்லாம் கங்கையம்மாளின் காதிற்கெட்டியதும் அவருடைய மனம் மிகவும் இளகிவிட்டது. என்னவானாலுஞ் சரி, சுசீலையை தான் விடுவிக்காமற் போவதில்லை என்றவர் தீர்மானித்துக் கொண்டனர். சுசீலை பெரியவளான பிறகு அவள் மூலமாய்த் திரவியம் தேடும் எண்ணம் யசோதையம்மாளுக்கிருக்கிறதென்கிற சங்கதி ஜகந்நாதய்யருக்கு ரகசியமாகத் தெரியவந்தது. யசோதையம்மாளைச் சந்தோஷப்படுத்தினாலொழிய சுசீலை தமது கைக்கெட்டமாட்டாள் என்பது ஜகந்நாதய்யர் கங்கையம்மாளுக்குத் தெரிவித்தனர். இருநூறு முன்னூறு ரூபாய் செலவழிப்பதொன்றும் கங்கையம்மாளுக்கு ஒரு பிரமாதமல்ல. ஜகந்நாதய்யர் மேற்சொன்ன விஷயத்தைப்பற்றி யசோதையம்மாளிடம் பிரஸ்தாபித்தபோது, முதலில் யசோதையம்மாள் கொஞ்சங் கோபத்துடன், "நான் சுசீலையை உள்ளங்கைப் பொளளையைப்போல் (பிள்ளையைப்போல்) வளர்த்தது பிறருக்குக் கொடுக்கவா? இதுவரையில் நான் அவளுக்காகக் கொஞ்சப் பணமா செலவழித்திருக்கிறேன்?"

"ஆனால் செலவு செய்த தொகைக்குமேல் இன்னும் சொற்பத்தொகை கிடைக்குமானால் நீங்கள் தயாராயிருக்கிறீர்களா?" என்று ஜகந்நாதய்யர் கேட்டபொழுது யசோதையம்மாளின் நாவில் தண்ணீர் ஊறலாயிற்று. சுசீலைக்காகப் பணம் பெறும் சங்கதி வெளிவராதென்றும், தனது வீட்டிலிருக்கும் சுசீலை என்னும் அரிஷ்டத்தை ரகசியமாக ஒழித்து விடலாமென்றறிந்ததும், சுசீலையை கங்கையம்மாளுக்குச் சுவாதீனப்படுத்த யசோதையம்மாள் இசைந்தாள். கங்கையம்மாள் வெள்ளிக்கிழமையன்று யசோதையம்மாளை அழைத்துவந்து, சாயுவைக்கொண்டு மஞ்சள் குங்குமம், தேங்காய், பழம், தாம்பூலம், ரவிக்கைத்துண்டு இவைகளால் கௌரவப்படுத்தி, அவளுடைய மகளுக்கு மூந்நூறு ரூபாய் பெறுமான நகை செய்துபூட்டினர். யசோதையம்மாளுக்குப் பரமானந்தமாகிவிட்டது. ஆனாலும் அவளுக்கு இச்சமயத்தில் அன்னையின் அன்பு (मातृवात्सल्यम्) பொங்கிவந்து நெஞ்சடைக்கலாயிற்று. அவள் சுசீலையின் உச்சியை முகர்ந்து, முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு, சாயங்காலமாய் இருள் சூழ்ந்துகொண்டமையால், இல்லஞ் சென்றனள்.

(4)

யசோதையம்மாள் போனதும் சுசீலா கங்கையம்மாளின் இடுப்பை இருகத்தழுவிக் கட்டிக்கொண்டு "இன்னமே தஞ்சாவூருக்கு எப்போ போவது?" என்றாள்.

அப்பொழுது கங்கையம்மாள் அவளை அருகில் உட்கார வைத்துக்கொண்டு அவளுடைய கண்களைத் துடைத்து "என் செல்வமே, அழாதே. நாளைக்குப் போகலாம்" என்றார். இக்காட்சியைக்கண்டு அருகிலிருந்த சாயுவுக்

கும் துக்கம் மேலிட்டது; ஆனால் சீக்கிரத்திலேயே அவ்விருவரும் விளையாட்டிலாழ்ந்து விட்டமையால் துக்கத்தை மறந்தனர். சனிக்கிழமை இரவு வண்டிக்குப் புறப்பட்டு எல்லோரும் தஞ்சைக்கு வந்தனர். யசோதையம்மாள் நகைநட்டுகளைக் கண்டு களித்துக்கொண்டிருந்தாள். அவள் அவற்றை கோவிந்த சாஸ்திரியாருக்குக் காண்பித்தாள். இது அவருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் யசோதையம்மாளை அவர் எதிர்த்துப் பேசுவாரா? அவர் வாயைத் திறவாமல் மௌனம் சாதிக்க வேண்டியதாயிற்று.

கங்கையம்மாளுக்கு சரயு சுசீலை இவர்களால் நல்ல பொழுது போக்குண்டாயிற்று. ஜகந்நாதய்யர் சீக்கிரத்திலேயே இரு பெண்களையும் பெண்கள் ஹைஸ்கூலில் சேர்த்தார். அன்றியும் அவர்களுக்கு வீட்டிலும் ஓர் உபாத்தியாயை வைக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய படிப்பைப்பற்றி ஜகந்நாதய்யர் மிக்க கவலை எடுத்துக்கொண்டிருந்தனர். சுசீலையின் முகத்தில் இப்பொழுது உல்லாசம் காணப்பட்டது. அவளுடைய பிடிவாதமுள்ள சுபாவமும் அவளை விட்டகன்றது. சரயுவோ ஏற்கனவே நல்ல சாத்விக குணமுள்ளவள். கீழ்ப்படிதல், விநயம் இவ்விரு குணங்களும் அவளிடத்திற் குடிகொண்டிருந்தன. பாடசாலையில் அவள் ஒருவரோடும் சண்டைச்சச்சரவு செய்யமாட்டாள். ஒருபோதும் அவளைப் பற்றிய புகார் வீட்டிற்கு வரமாட்டாது. சுசீலை மாத்திரம் வெகு சுறுசுறுப்பு, பதட்டம், ரோஷமுமுள்ளவள். அதைக்கண்டு கங்கையம்மாள் ஜகந்நாதய்யர் இருவருக்கும் கோபம் வருவதற்கு மாறாக மகிழ்ச்சியே உண்டாய்க்கொண்டிருந்தது. சரயு ஒருபோதும் சுசீலையின் மனதிற்கு விரோதமாக நடக்கமாட்டாள். சுசீலையின் பதட்டமான சுபாவத்தைக்கண்டு ஜகந்நாதய்யருக்கும், கங்கையம்மாளுக்கும் உள்ளூற சற்று கவலையாகத்தானிருந்தது. பிரவேசப் பரீக்ஷைவரையிற் படித்தானதும் ஜகந்நாதய்யர் இருவரையும் பாடசாலையிலிருந்தெடுத்து வீட்டிலேயே கல்வி கற்கும் கிரமத்தை நடத்தலானார்.

இனி தாமதியாமல் சரயுவின் விவாகத்தைப்பற்றி யோசிக்கவேண்டுமென்று கங்கையம்மாள் ஜகந்நாதய்யரிடம் பிரஸ்தாபித்தனர். குமாரஸ்வாமியய்யரின் மகளுடைய விவாகத்தின் பொறுப்பெல்லாம் ஜகந்நாதய்யர் மீதிருந்தமையால், அவர் ஒன்றும் சும்மாயிருக்கவில்லை. குமாரஸ்வாமி அய்யருடைய சிநேகிதருள் ஒருவர் நாகையிலிருந்தனர். அவர் தன் மகனைக் கும்பகோணம் காலேஜில் சேர்க்கும்பொருட்டு கும்பகோணம் வந்தபோது, வேறு காரியமேதோ இருந்தமையால் தஞ்சைக்கு வந்து கங்கையம்மாள் வீட்டிலிறங்கி (தங்கி) யிருந்தனர். அவர் மகன் அப்பொழுது ஜூனியர் பி. ஏ. கிளாஸில் இருந்தான். இவ்விஷயம் ஜகந்நாதய்யருடைய லட்சியத்திலிருந்தது. ஆதலால் அவர் சரயுவின் விவாகத்தைப்பற்றி சங்கரனுடைய தந்தையாகிய அண்ணாசாமி அய்யருக்கு நாகை விலாசத்திற்குக் கடிதம் எழுதினர். அதற்கு "சங்கரனுடைய இஷ்டத்திற்கு விரோதமாக நான் ஒன்றும் செய்யப்போவதில்லை. ஆதலால் அவ்விஷயத்தைப் பற்றி அவனைத்தான் கேட்கவேண்டும்" என்று பதில் எழுதியிருந்தனர். ஜகந்நாதய்யர் கும்பகோணம் போய் சங்கரனிடம் விவாகத்தைப் பற்றி பிரஸ்தாபித்தனர். சங்கரனுடைய மனதிற் கிசைந்தவாறே ஜகந்நாதய்யர் பேசினர். அப்படியிருக்க சங்கரன் ஏன் மறுத்துப் பேசுகிறான்? பெண்ணோ கற்றறிந்தவளும் அழகுமுள்ளவள் என்பது அவன் அறிந்தே இருந்தான். ஆதலால் அவன் அவளைப் பார்க்க



வேண்டிய அவசியமே இருக்கவில்லை. "அண்ணாசாமி அய்யருக்கு இஷ்டமாயின் எனக்கு யாதொரு ஆட்சேபமும் கிடையாது" என்று சங்கரன் ஜகந்நாதய்யருக்கு பதிலளித்தான்.

ஜகந்நாதய்யர் அண்ணாசாமி அய்யருக்கு சங்கரனுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்து வாக்கு நிச்சயத்திற் கழைத்தார். ஏனென்றால் எம். ஏ. பரீட்சை தேர்ந்தாலன்றி விவாகமென்னும் விலங்கைப் போட்டுக்கொள்ளமாட்டேன் (விவாகமென்னும் பந்தனத்தில் அகப்பட்டுக்கொள்ள மாட்டேன்) என்று சங்கரன் உறுதியாகச் சொல்லியிருந்தான். தஞ்சையிலேயே வாக்கு நிச்சயத்தை நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டது. இச்சமயத்தில் கங்கையம்மாளுக்குண்டான ஆனந்தத்திற்கு ஓரளவே யிருக்கவில்லை. கிட்டத்தட்ட விவாக மகோற்சவத்தைப் போலவே இதுவும் ஜகந்நாதய்யர் வெகு சம்பிரமமாக நடத்திவைத்தார். விருந்தினர்களை உபசரிப்பதும், ஒழிந்த நேரத்தில் சரயுவின் அறையிற் சென்று அவளைப் பரிகசிப்பதிலும் சுசீலை ஆழ்ந்திருந்தாள். அண்ணாசாமி அய்யர் குமாரஸ்வாமி அய்யர் இவர்களுள் மிகப் பழைய சிநேகமிருந்தமையால் கொடுக்கல் வாங்கலைப் பற்றிக் கண்டிப்பாய்ப் பேசுவது அண்ணாசாமி அய்யருக்குப் பிடிக்கவில்லை. வாக்கு நிச்சயம் இடையூறின்றி நடைபெற்ற பிறகு அண்ணாசாமி அய்யர் முதலாயினோர் அவரவர்களுடைய இருப்பிடங்களுக்குச் சென்றனர்.

அண்ணாசாமி அய்யருடைய உத்திரவின் பேரில் சங்கரன் ஒவ்வொரு சனி ஞாயிறிலும் தஞ்சைக்கு வந்து போய்க்கொண்டிருந்தான். ஏற்கனவே கொஞ்சம் பரிச்சயமிருந்தமையால், சங்கரனுக்கு சரயுவை நன்றாகப் பரிச்சயப்படுத்திக்கொள்ள அதிக சிரமமில்லாமற்போயிற்று. அன்றி சுசீலை மத்திமத்தியில் பரிகாசம் செய்வதற்கும் கட்டம் முதலியன ஆடும்படிசெய்வதற்குமிருந்தாள். சரயுவுக்கு சங்கரன்பேரிலிருக்கும் நிகரற்ற அன்பைக்கண்டு சுசீலைக்கு வெகு மகிழ்ச்சியுண்டாகும்.



சுசீலை வெகு சுத்தமான மனதையும் நன்றியறிவையுமுடையவள். யாராகிலும் எவ்வளவு உபகாரம் செய்தபோதிலும் அது அவளுக்கு மலையளவாகத் தோன்றும். முன் அவளுக்கு யசோதையம்மாளின் பேரில் கோபம் வந்துகொண்டிருந்தது. அதுவே இப்பொழுது அவள் அவள்பேரில் மிகவும் நன்றி பாராட்டலானாள். தனக்கு உபகாரம் செய்தவள் என்றால் சரயுவின் நன்மையைக்கண்டு அவளுடைய ஆனந்தம் பன்மடங்கு அதிகரிக்கும். எப்பொழுதாவது சரயு புஸ்தகத்தைமூடிச் சிந்தையிலாழ்ந்திருப்பதைக் கண்டால் "என்ன, சனிக்கிழமையை எதிர்பார்க்கிறாயோ?" என்று அவளைப் பரிகசிப்பாள். சுசீலை தன்னுடன் இருந்தாலொழிய சரயு சங்கரனுடன் பேசிக்கொண்டு உட்காருவது, உலாற்றப்போவது செய்யமாட்டாள். சங்கரனும் வந்ததும் முதலில் சுசீலையைத் தான் கூப்பிட்டு அவள் மூலமாய் சரயுவுக்கு சங்கதி சொல்லியனுப்புவான். மூவரும் சேர்ந்த பிறகுதான் மனமாற சமாசாரங்களைப் பேசிக்கொள்வார்கள். சரயு மிகவும் தாட்சண்யமுள்ளவளாதலால் எப்போதும் சுசீலைதான் முதலிற் பேச வாரம்பிப்பாள். சிற்சில சமயங்களில் சரயுவைப் பேசவிட்டுவிட்டு சுசீலை மெல்ல அங்கிருந்து நழுவிவிடுவாள்; ஆனால் இப்படிச் செய்யக்கூடாதென்று சரயு சுசீலையைப் பன்முறைகளில் கண்டித்தும் பயன்படவில்லை.

(5)

சுமார் ஏழெட்டு மாதங்கள் இவ்வாறாக ஆனந்தத்திற் சென்ற பிறகு சங்கரனுடைய மனோவிகாரங்களிற் சில மாறுதல் ஏற்பட்டதை

சுசீலை யுணர்ந்தாள். அவன் வெகு சமர்த்து. தன் பேரில் சங்கரனுக்குக் காதல் ஏற்பட்டிருக்கிறது என்றுணர்ந்த நாள் முதல், அவள் முகத்தில் கவலைக் குறிகள் காணலாயின. சுசீலையின் புத்தி வன்மை, சுறுசுறுப்பு, பெருந்தன்மை இவைகளும் இத்தகைய இதர குணங்களும்தான் சங்கரனுடைய மனதைக் கவர்ந்துகொண்டன. சங்கரனென்றும் சொற்ப தோரணையுள்ளவனல்ல. அவன் சாயு பேரிலிருக்கும் காதலை வெளிப்படுத்த வேண்டுமென்று எத்தனையோ வழிகள் தேடினான். சுசீலை போன பிறகு எவ்வளவோ நேரம் அவன் சாயுவினிடம் தனிமையாகப் பேசிக்கொண்டிருப்பான். ஆனால் அவனுடைய சித்தமெல்லாம் சுசீலையின் கண்ணிருக்கும். "சாயுவை வரிப்பதாக நிச்சிதார்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. அது கலைந்துவிட்டால் சாயுவுக்கு வேறு வரனைத்தேடி விவாகம் நடக்காமலொன்றுமிருக்கப்போவதில்லை" என்று அவனுக்குத் தோன்றும். ஆனால் "அவளுடைய கோமளமான மனம் எவ்வளவு இடிந்துவிடும்" என்கிற கற்பனை அவன் மனதிலுதித்ததும் அவன் மனம் கலங்கிவிடும். "என் பேரில் உதாரகுணமற்றவனென்கிற குற்றத்தைச்சாற்றப்படுமோ-சே! இத்தகைய கற்பனைக்கு மனதில் இடங்கொடுப்பதுங்கூட என்னைப்போன்ற கற்றறிந்தவனெனப்படும் மனிதனுக்குத் தகாது! நல்லது, சாயுவுடன் இல்லறஞ் செய்ய வேண்டுமென்றால் அதுவும் என்னுடைய விவேக புத்திக்கு விரோதமாயிருக்கும் —"

இத்தகைய யோசனைகளால் அவன் மனம் கலங்கி நின்றது. இவ்வளவு நுட்பமான விஷயத்தைச் சொல்லிக்கொள்ளும்படி அவனுக்கு ஒரு நண்பனுமில்லை. பிறகு ஒரு நாள் கங்கையம்மாளுக்கு சுரம் வந்தது. சாயு தனதன்னைக்கு சிசுருஷை செய்துகொண்டு உட்கார்ந்திருந்தாள். சுசீலை சங்கரனுக்கு ஏதோ சங்கதி சொல்லும் பொருட்டு வந்தாள். இந்த சமயம் பார்த்து சங்கரன் வெளிப்படையாய்த் தன் எண்ணத்தை சுசீலைக்குத் தெரிவித்தான்.

சுசீலைக்கு சங்கரன் பேரில் வெகு இஷ்டம். ஆகலால் உடனே அவள் அவனை நிராகரிக்கவில்லை அவள் நேர்மையாயும், இனிய மொழிகளாலும் அவனைச் சமாதானப்படுத்த முயன்றாள். பிறகு அவ்விருவரும் கங்கையம்மாள் இருக்கும் அறைக்கு வந்தனர். எப்போதுமே கங்கையம்மாள் அல்லது வீட்டிலிருப்பவர்கள் யாருக்காவது வியாதி வந்தால் வியாதிக்காரர்களுடைய சிசுருஷையை சுசீலைதான் சுபமாகச் செய்வாள். அவள் இருந்தாற்றான் வீடு நிறைந்திருப்பது போலிருக்கும். கங்கையம்மாளுக்கோ சுசீலையைத் தவிர வேறு யார் சிசுருஷை செய்தபோதிலும் மனதிற்கிசையாது. ஜகந்நாதய்யருக்கோ தனது மகள்தான் மறுபடியும் ஜன்மமெடுத்து வந்தனளோவென்று தோன்றும்!

(6)

இப்பொழுது சில தினங்களாக சங்கரன் கவலையிலாழ்ந்திருக்கிறான் என்பதை சாயுவும் உணர்ந்தாள். இதைப்பற்றி அவள் சுசீலையினிடம் பிரஸ்தாபித்தபோது, பரீட்சையைப் பற்றிக் கவலையாயிருக்கக்கூடும் என்று அவளுக்கு மறுமொழி யளித்திருந்தாள்.

பாபம் சுசீலை! தனக்கு இவ்வீட்டிலிருந்து விடுதலையானால் நலம் என்றவளுக்குத் தோன்றலாயிற்று. தனக்கு உபகாரம் செய்தவளுடைய அன்பில் தான் உப்பைக் கலக்கப் போவதில்லை என்று தீர்மானித்துக்கொண்டிருந்தாள். இவ்விஷயமாய் அவளுக்கும் சங்கரனுக்கும் ரகசியமாய்க் கடித விவகாரம் நடந்துகொண்டிருந்தது. சங்கரன் சுசீலைக்கு எவ்வளவோ சொல்லிப்பார்த்தான். எவ்வளவுசொன்னாலும் அவள் இசையமாட்டாள் என்று தோன்றியதும் சுசீலையின் திடமான மனதைக்கண்டு (உறுதியைக் கண்டு) அவனுக்கு மிகவும் மகிழ்ச்சியுண்டாயிற்று. "ஸ்திரீயாயிருந்தாலும் சரி, புருஷனாயிருந்தாலும் சரி, சீமானாயிருந்தாலும் சரி, ஏழையாயிருந்தாலும் சரி, கற்றவராயிருந்தாலும் சரி, கல்லாதவர்களாயிருந்தாலும் சரி உலகத்தில் எல்லோருடைய மனமும் உலக சுகத்தின் ஆசையினாற் குன்றிப்போயிருக்கின்றன. அப்படியிருக்க சுசீலையைப்போன்ற ஸ்திரீ ரத்னத்தின் மதிப்பை (யோக்கியதையை) அறியப்பட்ட புருஷர்கள் எத்தனை பெயர்கள் காணப்படுவார்கள்? நல்லது, ஒரு சமயம் சிலர் அவள் பேரிலிருக்கும் அன்பினால் எனது பார்வை மந்தமடைந்து அவளிடத்திலிருக்கும் தோஷம் (சுகுண துர்க்குணங்கள்) எனக்குத் தெரிவதில்லை என்னலாம்; ஆனால் அப்படியல்ல. அவளிடத்தில் எப்படி தோஷங்களிருக்கின்றனவோ அப்படி என்னிடத்திலிருக்காதென்பதென்ன? மனிதன் பரிபூரணனாயிருந்தால் உன்நதிக்கு இடமெங்கேயிருக்கிறது? விவாகத்தின் ஓர் முக்கிய ஏது (ஹேது) பாஸ்பார்கள் உன்நதி அடைவதல்லவா? பிரேமை என்னும் கயிற்றால் பந்தப்பட்ட ஸ்திரீ புருஷர்களுடைய தோஷங்கள் அவர்களுடைய சம்சார சுகத்திற்கு எப்படி குறுக்கேவரும்? எப்பொழுது விவாகமான ஸ்திரீ புருஷர்களுடைய மனம் பூரணமாக ஐக்கியமடைகின்றதோ அப்பொழுது ஸ்திரீயின் தோஷம் தன்னுடையதே என்று புருஷனுக்குத் தோன்றும்; புருஷனுடைய தோஷம் தனதே என்று ஸ்திரீக்குத்தோன்றும். அப்பொழுது பரஸ்பரர்களுடைய சுகத்திற்கு அவர்கள் எப்படி குறுக்கிடுவார்கள்?" என்றித்தகைய விசாரங்கள் சங்கரனுடைய மனதில் உலாவிக்கொண்டிருந்தன. தன்னைவிட நல்லவர்களை சாயுவுக்குத் தேடிக் கொடுப்பதாக அவன் சுசீலையினிடம் சொன்னான்.

ஆனாலும் தனக்கு உபகாரம் செய்தவளிடத்தில் தனக்கிருக்கும் நன்றியறிவிற்காக, தனக்கு சங்கரன பேரிலிருக்கும் அன்பை ஆகுதி கொடுப்பதாகத் தான் நிச்சயத்திருப்பதை அவள் சங்கரனுக்குத் தெரிவித்தாள். மேலும் சங்கரனை அவள் நிராசையடையும்படி செய்ததற்காக அவள் மன்னிப்புக் கேட்டிருந்தாள். "என் பேரில் உங்களுக்கு உண்மையான அன்பிருக்குமாகில், அவ்வன்பிற்காக சாயுவுடன் சுகமாக இல்லறத்தை நடத்தவேண்டும். உங்களுக்கு என் பேரிலிருக்கும் திடமான அன்பிற்காக நான் ஆயுள் பரியந்தம் குமாரியாகவிருப்பேன் என்று வாக்குக்கொடுக்கிறேன்" என்றவள் சங்கரனுக்குத் தெரிவித்தனள். தனது நியாய புத்தியை சுசீலை கிளப்பி விட்டதற்காக சங்கரன் சுசீலையினிடம் மிக்க நன்றியுள்ளவனாய், எந்த சமயத்தில் எத்தகைய இடையூறு வந்தபோதிலும் சுசீலை தன்னிடத்தில் உதவி கேட்க வேண்டும் என்று சங்கரன் அவளைக் கேட்டுக்கொண்டான். சுசீலையும் இக்கடைசி விண்ணப்பத்தைச் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டாள்.

இப்பால் சில தினங்களாக சுசீலையின் சித்தவிருத்தியில் ஏதோ மாறுபாடு ஏற்பட்டிருக்கிறதென்பதை ஜகந்நாதய்யர் உணர்ந்தார். காரணம் சில தினங்களாக வெகுவாய் அவள் தனது நேரத்தைத் தனிமையாகக் கழித்துக் கொண்டு வந்தாள். ஜகந்நாதய்யர் தான் சுயமாகக் கேட்காமல் சாயு மூலமாய் அவளுடைய துக்கத்தின் காரணத்தைக் கேட்டார். அப்பொழுது அவள் தனக்குச் சென்னைக்குப்போய்க் கல்லூரியிற் சேர்ந்து கற்கக்கிடைத்தால் ஆனந்தமுண்டாகுமென்று சாயுவினிடம் ஸ்பஷ்டமாகச் சொன்னாள். ஆனால் தான் போவதனால் கங்கையம்மாளுக்கு எல்லையில்லா துக்கமுண்டாகும். அதை எப்படித் தடுப்பதென்று அவளுக்கு விளங்கவில்லை.

(சுசீலையைப் போன்ற நிலைமையிலிருக்கும் பெண்களுக்குக் கல்வி எவ்வளவு அவசியமாயிருக்கின்றதென்பதை சங்கரன் கங்கையம்மாளுக்கும் ஜகந்நாதய்யருக்கும் எடுத்துரைத்தான்.) போகிற வார்த்தை எடுத்ததும் சாயுவுக்கும் மிக வருத்தமுண்டாயிற்று. அவளை சங்கரன் சமாதானப்படுத்தினான். கங்கையம்மாள் சுசீலையின் படிப்புச் செலவெல்லாம தான் செய்வதாகச் சொன்னார்; ஆனால் சாயுவின் விவாகமாகிறவரையிற் போகக்கூடாதென்று ஆக்கிரகப்படுத்தினார். சுசீலையும் அதற்கெதிர் பேசவில்லை.

சுசீலையின் படிப்பு முடிந்ததும் அவ்விடத்தியப் பெண்கள் கலாசாலையிலேயே அவள் உத்தியோகத்திலமர்ந்து பெண் கல்வியைப் பரவச் செய்துகொண்டிருக்கலானாள்.

சுபம்.

('மனோரஞ்சன்' சஞ்சிகையிலிருந்து).

## IN MEMORIAM. ஞாபகார்த்தம்.

(ஸ்ரீமதி எஸ். அம்புஜவல்லி).

ஜனித்தவர் எவராயினும் ஒரு காலத்தில் மரிப்பது திண்ணம். ஒரு ஜீவன் இதுகாறும் தான் அடைந்திருந்த சரீரத்தையும் உலகத்தையும் விட்டு நீங்கித் தன் கர்ம பலாபலனிற்கேற்ப வேறு ஜன்மம் எடுக்கச் செல்வதே மரணம் எனப்படும். ஆகையால் நல்லோர்களுக்கு இம்மரணத்தினின்றும் யாதொரு பயமுமில்லை. இதன் மூலமாக அவர்கள் கடவுள் சாந்நித்தியம் பெற்று மோக்ஷமெய்துகிறார்கள். தீயர்களோவெனில் மேலும் தீய கர்மங்களிற் பிரவர்த்தித்து, அம்மரணத்தினால் ரட்சிக்கப்பட்டு, தம் துர்ப்பயன்களைப் பல ஜன்மங்களாலுங் கழித்துக் கடைசியில் கடவுளின் க்ஷமை பெற்று மோக்ஷமடைகிறார்கள். ஆதலால் இதுவரையில் இவ்வுலகில் நம் பந்துவென்று கருதப்பட்ட ஓர் ஜீவன் பல துக்கங்களிற்கு இருப்பிடமான இவ்வுடலைவிட்டு நீங்கிச் செல்லும்போது நாம் ஏன் விசனப்படவேண்டும்? அதாவது நாம் சுய நலம் பாராட்டாதவராயிருப்பின், நமக்கு மேற்கூறிய பந்துவின் மரணத்தினால் எவ்விதக் கஷ்டம் ஏற்படினுங்கூட அதைப் பொருட்படுத்தாமல் அவர் நன்மையே மனதில் உன்னி துக்கப்படாமல் இருக்கவேண்டாமா. பந்துவின் பிரிவினால் ஏற்படும் துக்கம் சகிக்கக்கூடாதது எவருக்கும் சகஜமே. ஆயினும் நமக்காக இதரர்களைக் கஷ்டத்திற்குள்ளாக்க இச்சிப்பது என்ன அநீதம்? வேண்டுமானால் நமக்கும் அம்மரணம் சம்பவிக்கச் செய்யும்படிக் கடவுளைக் கனிவுறப் பிரார்த்திக்கலாம். எவ்வளவுதான் பிரீதியாயிருப்பினும் இறந்தவரைத் தொடர்ந்து செல்ல விரும்புவோர் இவ்வுலகில் வெகு சிலரேயாவர். சிலர் இறந்தவரைக் குறித்து "அவர் இளம் வயதில் இறந்தாரே. தன தானிய போக போக்கியங்களை விட்டு நீங்கினாரே. தன் பந்து மித்திரர்களைப் பிரிந்துசென்றாரே, இன்னும் சில காலம் ஜீவித்திருத்தல் கூடாதா?" எனப் பலவாறு பிரலாபிக்கின்றனர். என்னே இவர்களின் கடமை! இவைகளெல்லாம் இவர் ஒவ்வோர் ஜன்மத்திலும் அடையும் பொருள்களல்லவா? சாதாரணமாய் நாம் என்ன செய்கிறோமென்றால், இறந்தவர் நமக்கு தூர பந்துவாயினும் சரி, கிட்டிய பந்துவாயினும் சரி, இஷ்டராயிருப்பினும் இல்லாவிடினும் சரி எல்லோருக்கும் ஒரே ரீதியாய்ப் பெரிய துக்கம் பாராட்டுபவர்போல் நடித்துக் காட்டுகிறோம். இறந்தவர் நன்றாய்ப் பழுத்த பழம்போன்றவ



ராயினும் நாம் விடுவதில்லை. அவர் இதுகாறும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தவராயினும் சரி, திக்கற்ற அனாதைக் குழந்தையாயினும் சரி, ஒருவரும் இறக்க நாம் சகியோம். நாதனற்ற பேதைஸ்திரீயாயினும் அப்படியே, அவள் இறப்பதைக் காட்டிலும் போக இடமற்று நம் வீட்டில் அடிமையாய் விழுந்து கிடப்பது மேல் என நம்புகிறோம். ஒருவருக்கும் உதவி செய்யக்கூடாதவராய் பூமிக்கே ஓர் பளுவாய், நோயுற்று, சுற்றத்தாருக்குக் கஷ்டங்கொடுத்துத் தானும் சுகப்படாமல் வருந்திக்கொண்டிருக்கும்பேதைமக்கள் இறந்தாலும் போலிக்காவது நாம் 'இறந்தாரே' என்று துக்கம் பாராட்டுகிறோமேயன்றி "விடுதலையடைந்தாரே" என்று சந்துஷ்டி அடைகிறோமில்லை. இது என்ன செயல்! உயிரினிடத்திலுள்ள மகத்தான பாசந்தான் என்ன!

நாம் மரணத் தருவாயிலிருக்கும் ஒருவரை விடாமற் சுற்றிக் கொண்டும், நாயகன், நாயகி, தாய், தந்தை, மக்கள், கூடப்பிறந்தவர், சுற்றத்தார் என்றும் கூறிக் கதறிக்கொண்டும், நமது வார்த்தைகளாலும், புலம்புதலாலும், இறப்பது நிச்சயம் என்று தெரிந்திருந்தும் விடாமற் செய்துவரும் பல இம்சைக்கிடமான சிகிச்சைகளாலும், ஜீவன் உடலைவிட்டு நீங்காமல் இன்னும் சில காலமாவது இருக்கும்படி பல நிபந்தனைகள் ஏற்படுத்தித் தொந்திரவு செய்கிறோம். இவ்விதம் செய்வதால்தான் நமக்கு நமது பந்துவிடத்திலுள்ள பிரீதியை காட்டி விட்டதாகப் பெருமைப்படுகிறோம். அவருக்கு நம்மால் செய்யக்கூடிய பெரிய உதவியைச் செய்துவிட்டதாகவும் சந்துஷ்டி அடைகிறோம். மரணாவஸ்தையில் இவ்வித தடபுடல்களைச் செய்யாத சிலரைக்காணக் கடின சித்தமுடையோர் என்றும் தூற்றுகிறோம். இவைகளால் ஏற்படக்கூடிய நன்மைதானென்ன? இறப்பவரின் மரணாவஸ்தையைப் பத்து மடங்கு அதிகரிக்கச் செய்வதேயாம்.

இதனால் நோயுற்றவர்களுக்குச் சிகிச்சை செய்தல் கூடாதென்பதல்ல. ஒருவர் இறப்பது நிச்சயமென நாம் எப்பொழுது செவ்வனே அறிந்து கொண்டோமோ அதற்குமேல் வீண் ஆசை கொண்டு, இம்சைக்கிடமான பல சிகிச்சைகளைச் செய்தல் கூடாதென்பதே இதன் கருத்து.

இறப்பும் பிறப்பும் நம் கையில் இல்லை. ஒருவர் இன்னும் சிறிது காலம் பிழைத்திருக்க வேண்டி விதித்திருந்தால் அவர் கட்டாயம் நம் உதவியின்றியே பிழைத்து விடுவார். கட்டாயம் இறக்கவேண்டியவரை நாம் யாது செய்தும் இறப்பதினின்றும் தடுக்க முடியாது. அவர்கள் நோயால் வருந்தித் தங்கள் பிராணன் உடலைவிட்டு நீங்குவதற்கான அவஸ்தைகளை அனுபவிக்குங் காலத்தில் நாம் நமது தாறுமாறான செய்கைகளால் மேலும் நிபந்தனைகளை ஏற்படுத்தி அவர்கள் சுபாவமாய் அடையவேண்டிய அந்திய கால சாந்தத்தையும் கெடுத்து விடுகிறோம். சாகுந்தருவாயிலிருக்கும் அன்னவர்களுக்கு இவ்விதம் தொல்லை புரியும் நம் போன்றவர்களால் ஆகவேண்டியது யாது? அவர்கள் நோயிற்கிடந்து மரணாவஸ்தையில் வருந்தும்போது அவ்வவஸ்தையை லகித்து அதன் பாரத்தைக் குறைக்கிறோமா? எல்லாம் வல்ல கடவுளே அந்திய காலத்தில் உதவ ஓர் தெய்விகமான சாந்தத்தையும் புத்தித் தெளிவையும் ஈந்து அவர்கள் துயரத்தைக் குறைத்துச் சீக்கிரம் கஷ்டத்தினின்றும் விடுவிக்கிறார். இவரே அவர்களுக்கு உண்மை பந்து. நம்மை பந்து என்று உரைப்பது வீணே எனலாம்.

இதனால்தான் போலும், நல்லோர், தீயோர், பெரியோர், சிறியோர் யாவரும் அந்தி காலத்தில் பந்து, சுற்றத்தார் என்றவின் பிரேமை

யை விட்டு, "ஞானக்கண்" (Divine sight) பெற்று, அவரே கதி என நம்பி ஸ்மரித்து, வெகு தெளிவும் சாந்தமும் உள்ளவர்களாய் இவ்வுடலை நீத்துச் செல்கிறார்கள்.

குறித்த காலத்தில் ஜீவனை உடலினின்றும் பிரித்தெடுத்துக் கொள்ளும் சக்தி படைத்த எல்லாம்வல்ல கடவுள் பிணமாகிய தேகத்தை மட்டுமே நம்மிடம் விட்டுச் செல்கிறார். அதி சூக்ஷ்மமானதும், தேஜோமயமானதுமான அந்த ஜீவனைக் கைக்கொண்டவருக்கு ஸ்தூலசொரூபமானதும், கேவலம் மிருத்யுமயமானதுமான இவ்வுடலைக் கொள்ளக்கூடவில்லையோ? அதல்லது தகனம் முதலிய அபரக்கிரியைகள் போன்ற விசனகரமான செயல்களாலே மேலும் நம்மைத் துன்புறச் செய்யவோ? இல்லை என்றே சொல்லவேண்டும், உயிருடன் இருக்கும்போது நமக்கு அதிகப் பிரியமாயிருந்த அநேக பந்துவின் உடல் அவர் உயிர் துறந்து பிணமானவுடன் சொல்லொணா அருவருப்பை யுண்டாக்குகிறது.

அன்புடன் போஷித்து, வஸ்திர பூஷணங்களாலலங்கரித்து, அழகு பார்த்து வந்த அதே உடல், பிணமயமானவுடன் துரிதமாய்க் காஷ்டங்களிற் கிடத்தப்பட்டு நம்மால் தீ யிட்டுக் கொளுத்தப்படுகிறது. இதனால் நமக்கென்ன புலப்படுகிறதென்றால் நமக்குள்ள மூட பாசத்தை நீக்கி யதார்த்தத்தைப் புகட்டுவதற்கே கடவுள் இவ்விதம் செய்கிறார் என்பதே

இவ்விதம் பிரத்தியட்ச காரணங்களைக் கொண்டு கடவுள் நமக்குப் புத்தி புகட்டியும் நாம் பிறவிக் குருடர்போல் அவைகளைக் கண்டு கொள்ளாமல் மேலும் இச்சரீரத்தினிடத்தே பற்றுடையவராய் அதன் ரட்சணைக்காக ஆத்மாவையும் அடிமையாக்கித் தீராத்துயரத்தில் வீழ்த்தப் பார்க்கிறோம். இதுவும் நம்முடைய விதிபோலும்.

## மரணத்தின் மகிமை.

ஒருவர் இறந்தபிறகே அவருடைய அருமை பெருமையான குணங்கள் வெளியாகின்றன. அவர் உதவியைக்கொண்டு நாம் அடைந்த பல நன்மைகளும் பிறகு தான் தெரியவருகின்றன. ஒருவர் இறந்தபிறகே நாம் அவர் பொருட்டு செலுத்தாமல்விடுத்த கடமைகளும், செய்வித்த சிறு கொடுமைகளும் நன்கு தோன்றுகின்றன. ஒருவர் பிழைத்திருக்கையில் அவருக்கு யாதொரு உதவியும் புரியாமலிருந்து அவர் இறக்குங் காலம் நெருங்கினதும், "அதைச் செய்யவில்லையே, இதைச் செய்யவில்லையே" என மிக்க வருந்துகிறோம். நாம் எவரை ஜீவித்திருக்கையில் அற்ப குணமுடையவர், மந்த புத்தியுள்ளவர், புகழத்தக்க யாதொரு அற்புதச் செயலையும் புரியாதவர் என்று எண்ணி மதியாமல் விடுகிறோமோ, அன்னவரே இறந்த பின் மேன்மை தங்கினவராயும், தீவிர புத்தியுடையவராயும், அசாத்தியமான செயலைச் செய்து முடித்தவராயும் தோன்றுகிறார். நம் புகழுக்கும் மதிப்புக்கும் பாத்திரமாகிறார். பகைவனும் இஷ்டனாகிறான். வழிப்போக்கனும் பந்துவாகிறான். இருந்தவரையிலும் ஓர் நல்வார்த்தையாவது கூறாது தூற்றிக் கொடுமையாய் நடத்திய அக்கொடிய மாமியே மருமகளிறந்ததும் அவளைப் புகழ்ந்து அவளுக்கில்லாத குணங்களும் இருந்ததாகப் பாவித்துக் கொண்டாடுகிறாள். பாசத்தாற் கட்டுண்டு நம் வீட்டில வந்து வசிக்கும் சுற்றத்தாரிடத்தில் அவர் சுயநலமற்று நமக்குச் செய்யும் பல பணிகளையும் நமக்குச் சேரவேண்டிய கடனாக ஏற்றுக்கொண்டு அவைகளை அலட்சியமாய் நடத்திவருகிறோம். அவர் மனங்களிக்க யாதொரு சிறிய செயலும் புரியாமல் அசட்டையாயிருப்பதுமல்லாமல், அவர் மனமொவ்வாதவைகளைச் செய்து மேலும் அவர் மனதைப்



புண்படுத்துகிறோம். பின் அவர் இறக்க, நமக்கு ஊழியம் செய்வாரற்று சௌகரியக் குறைவு ஏற்படவும் அவர் அருமையைக் கண்டு கொள்கிறோம். அவர் குணாதிசயங்களையும் சுயநலமற்ற செயல்களையும் நமது அசட்டையையும் எண்ணி எண்ணி உருகிப் புலம்புகிறோம். மரணமே! உன் மகிமைதானென்ன! மேற்சொன்னவைகளினால் என்ன ஏற்படுவதென்றால் நாம் எப்பொழுதும் நம்மையும் நம் சுற்றத்தாரையும் மரணம் கிட்டி இருப்பது போலவே பாவித்து, நாம் செலுத்தவேண்டிய கடமைகளைப் பூர்த்தி செய்து வந்து, அப்போதைக்கப்போது அவர்களுக்கு நம்மாலான உதவியையும் புரியவேண்டுமென்பதேயாம். பின்னொருகால் 'இவ்விதம் அசட்டை செய்தோமே' என்ற நினைவு வர இடந்தரக்கூடாது.

"நாளைக்குச் செய்துகொள்வோம்" என்று ஒன்றையும் தள்ளிப்போடாமல் இடமும் காலமும் சமயமும் நேரிடும்போதெல்லாம் (அதை ஆவலுடன் ஜாக்கிரதையாய் எதிர் பார்த்திருந்து) மற்றவருக்கு நம்மாலான உதவியைச் செய்யவேண்டும்.

நாம் செய்யக்கூடிய உதவி பலவனவாயிருக்கலாம். பெரியவருக்கேற்ற ஒரு சிறிய பணிவிடையாய் இருக்கலாம்; துன்புற்றவரைத் தேற்ற ஓர் இன்சொலலாயிருக்கலாம்; நோயுற்றவர் மனமுவக்க ஆறுதலான ஒரு வார்த்தையோ அல்லது வெகு கஷ்டப்பட்டு உழைப்பவருக்கு உதவும் ஒரு சிறு தொழிலாகவோ இருக்கலாம். எளியவர்க்கேற்ற ஓர் அற்ப தானமோ, இளங் குழவிகள் மனங்களித்தும் புன்முறுவல் பூத்த பார்வையோ இவ்வளவே நாம் செய்யவேண்டிய உதவியாயிருக்கும்; எவ்வகையாயினுஞ் சரி. காலம் நேரும்போதெல்லாம் உதவி எவ்வளவு அற்பமாயிருப்பினும் அதைச்செய்து வரவேண்டுமென்பதை மனதில் வைக்கவேண்டும். மாண்டவரைக் குறித்து மீண்டும் புலம்புவதைவிட, நம்பால் இருப்பவரை என்றும் இன்புறச் செய்வது மேல். ஏனென்றால் இறந்தவரை நினைந்துப் புலம்பி மண்மீது வீழ்ந்து புரண்டு சொரியும் கண்ணீர்ப் பெருக்கைவிட, அவர் நம்மிடம் விட்டுப்போனவரைப் போற்றும் சிரமத்தால் உண்டாம் நெற்றிவேர்வை நீர்ச் சொட்டு மிக்க புனிதமானது. இறந்தோரிடத்தில் நமக்குற்ற உண்மை அன்பின் குறி இதுவேயாகும். அவர் ஆத்மா திருப்தியடைய நாம் செய்யக்கூடிய கடைக் கைங்கரியமும் இதுவே.

(ஓம் தத்சத்).

# இரு வீர ரமணிகள்.

(ஸ்ரீமான் T. S. K. சுவாமி)

"Love sacrifices Love only to get
Love back again."

சென்ற சில வருஷங்களுக்கு முன் கோயமா நகர் என்னும் ஊரில் இராமகிருஷ்ணன், விச்வநாதன் என்ற அதிக தனவந்தர்களான இருவர்த்தகர்களிருந்தார்கள். இவ்விருவரும் ஒருவரையொருவர் மிகவும் நேசித்து வந்தனர். இராமகிருஷ்ணனுக்கு ஜயராமன் என்ற இருபது வயதுள்ள ஒரு மகனிருந்தான், இவன் திடகாத்திர சரீரத்தோடு மிக்க எழில் வாய்ந்திருந்ததுமன்றி, இரண்டு வருஷங்களுக்கு முன்னரே பி. ஏ. பட்டத்தையும் பெற்றிருந்தனன். விச்வநாதனுக்கு அழகிலும், குணத்திலும் எங்கும் பிரசித்திபெற்ற ஒரு மகளிருந்தனள். துர்க்கை எனும் பெயர்கொண்ட அப்

பாவைக்கு வயது சுமார் பதினான்கேயிருக்கும். ஜயராமனும், துர்க்கையும் புருஷன் மனைவியாக வேண்டுமென இவர்களது இளமைப்பருவத்திலேயே இவர்களது பெற்றோர்கள் உடன்படிக்கை செய்திருந்தார்கள். ஆனால் பெண் ருதுவான பிறகே மணமுடிக்க வேண்டுமெனத் துர்க்கையின் தந்தை ஒரு நிபந்தனையுஞ் செய்திருந்தான். இதற்கு இராமகிருஷ்ணன் முதலில் ஒத்துக்கொண்டானாயினும், கொஞ்ச நாட்களுக்குப் பிறகு உடன்படிக்கையை ரத்துசெய்து விடுவதாகப் பயமுறுத்தவே, ஒரு சுபமுகூர்த்தத்தில் துர்க்கை ஜயராமனுக்கு மனைவியாக வாழ்க்கைப்பட்டாள்.

சில மாதங்களுக்குப் பிறகு ஜயராமன் துர்க்கையைத் தன் வீட்டிற் கனுப்பும்படி தனது மாமனாராகிய விச்வநாதனை வேண்டவே, அதற்கு அவன் மறுத்தனன். ஆனால் இராமகிருஷ்ணன் தனது மகனுக்கு வேறொரு பெண்ணை மணமுடிப்பதாகப் பயமுறுத்த, துர்க்கையின் தந்தை யாது செய்வதென்றறியாது அக்கலியாணத்தைக் கோர்ட்டுமூலமாய் நிறுத்தி விடுவதாகப் பகர்ந்தனன். இதைக் கேட்ட மாத்திரத்தில் இராமகிருஷ்ணன் வழிக்கு வர, இருவர்த்தகர்களும் ராஜி செய்து கொண்டனர். விச்வநாதனது பயமுந் தூரவிலகிற்று. கொஞ்ச நாட்களுக்குப் பின்னர், இராமகிருஷ்ணன் தன் மகனுக்கு வேறொரு வூரில் ஒரு பெண்ணை இரகசியமாக மணமுடிக்க இச்சங்கதி விச்வநாதனது காதுகளுக்குமெட்டியது. ஒரு பெண்ணையன்றிப் பல பெண்களை மணஞ் செய்துகொள்ள இடங்கொடுக்கும் நமது கெட்ட இந்துதேச வழக்கத்திற்குத் துர்க்கையும் பலியானாள். இனிமேல் அவள் கன்னியுமல்ல! பத்தினியுமல்ல! சட்டப்படி அவளை விவாகமான ஸ்திரீய வெனச் சொல்லலாம்.

நற்சுபாவமும், ஈசுவர பக்தியும் நிறைந்த துர்க்கை, தனக்குண்டான சங்கடத்தை நினைத்து வருந்தாது, ஊழ்வினையென தைரியத்தோடிருந்தனள். நற்திரந்தங்களை வாசிப்பதிலும், பாடுவதிலும், மற்றுந் தெய்வத்தைத் துதிப்பதிலும் நாட்களைக் கழித்துவந்தனள். இவ்வண்ணம் பல நாட்கள் பறந்தன.

அவ்வருஷம் ஒத்துழையாமை உணர்ச்சி நாடெங்கும் பரவவே, புருஷர்களும் மற்றும் ஸ்திரீகளும் தேச நன்மையை நினைக்க நேரிடும் சமயமாயிருந்தது. ஸரோஜினி தேவி, பீ அம்மா முதலிய ஸ்திரீரத்தினங்கள் தேச நன்மையைக் கருதிப் பிரசங்கங்களை எங்குஞ் செய்து வந்தார்கள். துர்க்கையும் பாரதமாதாவின் வேண்டுகோளுக்கிணங்கி, அவர்களோடு சேர்ந்து, தன்னாலியன்றவரை தேசத்தொண்டு புரியத் துணிந்தனள். ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை சூரியன் மேற்கு திசையைக் கிட்டுந் தருவாயில், அவ்வூர் மைதானத்தைநோக்கி ஜனங்கள் கூட்டங்கூட்டமாய்ப் போய்க்கொண்டிருந்தனர். புருஷர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் எல்லோரும் ஒருமித்து, பாரதகண்டத்துக் கவிசிரோமணி சரோஜினியைத் தரிசிக்க ஆவல் கொண்டு சென்ற வண்ணமிருந்தார்கள். கொஞ்ச நேரத்தில் திடீரெனக் கரகோஷமுண்டாகவே, சரோஜினியும் அங்கு வந்து சேர்ந்தனள். அன்று அவள் செய்த பிரசங்கம் எல்லோர் மனதையுங் கவர்ந்ததெனச் சொல்ல வேண்டியதில்லை. ஜனங்களெல்லோரும் பேச்சற்றுப் பிரசங்கத்தை மௌனமாய்க்கேட்டுவந்தனர். இவள் பேசி முடித்த பிறகு மற்றுஞ் சிலர் பேச வாரம்பித்தனர். அவர்களில் மிகவும் மெலிந்தும், ரத்தமற்ற முகத்தோடும், கதருடை தரித்தவளுமான ஓர் வநிதையும் பேசவெழுந்தனள். இவள் யாராயிருக்கக்கூடும்? ஓர் மூலையிலிருந்தெழுந்த மாத்திரத்தில் அங்



கிருந்தவர்களது நேத்திரங்களெல்லாம் அவளையேநாடிச் சென்றன. அம்மாது சபையோரை வணங்கும் பாவனையுடன் தலை குனிந்து, மிருதுவான இனிய குரலில் தேச நன்மை, தேசத்தொண்டுபுரிந்து வருபவர்கள், பாரதமாதாவின் தற்காலத்து வறுமை ஸ்திதி, நம்தேசத்தோரது கஷ்டங்களை விலக்கக் கருதி பெற்றோர், மனைவி, மக்கள், சுற்றத்தார் முதலியவர்களை விடுத்துச் சிறைக்கோட்டம் புகுந்திருக்கும் தேசபக்தர்கள் முதலிய பல விஷயங்களைப் பற்றிப் பேசி முடித்தனள். தன் உபந்நியாசத்தைக் கேட்டுவந்த ஒவ்வொருவரது ஹிருதயத்தையும் இவள் அபகரித்துத் தன் பிரசங்கத்தை முடித்து உட்கார்ந்த மாத்திரத்தில், எங்கும் நிச்சப்தமே நிலைத்தது. சரோஜினி தேவி உடனே எழுந்து அந்நங்கையைக் கட்டித் தழுவித் தனதருகில் அவளை உட்காரவைத்துக் கொண்டனள். துர்க்கை இவ்வண்ணம் எங்கும் பிரசித்தியடைந்தனள். அன்று நடந்த பிரசங்கத்தைக் கேட்க வந்தவர்களுள் நமது ஜயராமனுமொருவன். ஆச்சரியக் கடலிலாழ்ந்த ஜயராமன் மனதில் அன்று பல எண்ணங்கள் குடிகொண்டன. ஒரு புறம் அகமகிழ்ந்தான், மற்றொருபுறம் தன்னை நொந்துகொண்டான். எவ்விதத்திலாவது அவளையடையவும், அவளது சரணங்களின்கீழ் உட்கார்ந்து அவளைப் பூஜிக்கவும் இச்சை கொண்டனன். அவளுடன் பேச ஆவல் கொண்டானாயினும், தைரியம் அவனை விட்டகன்றது. வீட்டிற்குத் திரும்பிவந்தும் அவளது நினைவு அவனை விட்டகலவில்லை. அன்றிரவு முழுதும் நித்திரையேயில்லாது படுக்கையிலுட்கார்ந்திருந்தனன். மிக்க நேரம் யோசித்திருந்தபின், ஓர் நிருபத்தைப் பின்வருமாறு எழுதி முடித்தனன்:

தேவதையே!

தூபத்தாலும், புஷ்பத்தாலும் தேவதையை ஆராதித்துப் பூஜிப்பது வழக்கம். நானுமவ்வண்ணமே உன்னைப் பூஜிக்கத் தயாராயிருக்கிறேன். நேற்று மாலை நடந்த பிரசங்கத்தில் பிரசித்தியடைந்த நீ இந்த அபாக்கியசாலியாகிய என்னையேற்று, கிருபை கூர்ந்து என் வீட்டிற்குத் திரும்பி வருவாயாகில், நான் என் வாழ்நாட்களுள்ளவரை உனது உண்மையான கணவனாகவும், அடிமையாகவும், பக்தனாகவும் இருப்பேனென்பதிற் சந்தேகமில்லை.

இப்படிக்கு,

ஜயராமன்.

துர்க்காதேவியினது பதில் பின்வருமாறு இருந்தது :

" பிராணேசா!

நான் இவ்வளவு புகழ்ச்சிக்குப் பாத்திரமல்ல. ஒரு காட்டுப் புஷ்பம் தூரப்பார்வைக்கு மிக்க அழகாகவே தோன்றுகிறது. ஆயினும் ரோஜா ரோஜாவே! தற்காலத்தில் இரண்டு மனைவிகள் ஒத்திருப்பது அசாத்தியமே. நேற்று மாலை நடந்த பிரசங்கத்திற் பிரசித்தியடைந்தவள், சரோஜினியுமல்ல, நானுமல்ல, நமது தேசமே! நாங்கள் செய்துவருந் தேசத்தொண்டை நமது பாரதமாதா அங்கீகரிப்பாளென்பதிற் சந்தேகமில்லை. நமது தேசமோ அதிகப் புராதனமானது. தொன்றுதொட்டு ஸ்திரீகள் எங்கும் எப்பொழுதும் போற்றப்பட்டு வந்துள்ளார்கள். அவமதிக்கப்பட்ட ஒரு மனைவி எவ்விதமான புகழ்ச்சிக்குள்ளானபோதிலும், திரும்பிவருவது அசாத்தியமே! இதுவுமன்றி, தேச வழக்கமோ அல்லது சட்டமோ இதற்கிடங் கொடுக்குமேயாயினும், ஒரு ஹிருதயமே குடும்ப நெருப்பை அணையவொட்டாமல் தடுத்திருக்க முடியும்!

அநேக நமஸ்காரம்,

துர்க்கை."

இக்காகிதத்தைப் படித்த ஜயராமன் மிக்க வியாகூலத்திற்குள்ளானான். துர்க்கை சொல்லுவதும் நியாயமெனப் பட்டது. ஆனால் துர்க்கையை விடவும் மனமில்லை. சமீபத்திலேயே கலாசாலையை விடுத்து வந்துள்ளானதலால், தனது பெற்றோர்களைத் தடுத்து, அவர்களது நியாய விரோதமான ஆக்ஞையை மறுக்க முடியாமல் தவித்தான். அவளது நிருபத்தால் இவனது நேசமதிகரித்தது. அவளின்றி எங்கும் சூனியமாகத் தோற்றியபோதிலும், தைரியத்தை இழந்தவனல்ல. கூடிய சீக்கிரத்தில் அவளை யடைவோமென எண்ணினான். ஆனால் இவன் மனதிற்குக் கொஞ்சமேனும் அமைதியுண்டாகவில்லை. அடிக்கடி தன் வேலையை விடுத்து, யோசித்த வண்ணம் வெறும் வெளியை நோக்குவான். தன் கன்னங்களில் மெதுவாக வடிந்து வரும் கண்ணீரைத் துடைத்துக் கொள்வான். இவனது இரண்டாவது மனைவி ருக்மணிக்கு வயது பதினாறிருக்கும். இவள் கிராமத்தில் வளர்ந்துவந்த பெண்ணாயிருந்த போதிலும், தனது கணவனது முகத்திலுள்ள வேறுபாட்டை உடனே அறியுஞ் சக்திவாய்ந்திருந்தனள். பள்ளியிற் பயிலாப் பெண்ணாயிருந்தபோதிலும், ஹிருதயத்தை யறியுஞ் சக்தியோடிருந்தனள். இவனது நீர் நிறைந்த நேத்திரங்கள், குழிவடைந்திருந்த கன்னங்கள், அலங்கோலமா யணிந்திருந்த ஆடைகள் இவைகளின் காரணத்தை இவள் அறிய அதிக நேரம் பிடிக்கவில்லை. ஜயராமன் ஒவ்வொரு நாளிரவும் கனவுகண்டு, 'துர்க்கா! துர்க்கா!' என்று கதறுஞ் சொற்களும் இவள் காதில் விழுந்து வந்தன.

துர்க்கையைக் குறித்து எவ்வளவுதான் கதறியபோதிலும், அவள் வந்தவளல்ல. நாட்கள் வாரங்களாயின. வாரங்கள் மாதங்களா

ஒரு நாள் சாயங்காலம் அவ்வூர் ஸ்திரீ சங்கத்தின் ஓர் அறையில் இரண்டு ஸ்திரீகள் பேசிக்கொண்டிருந்தனர். இவர்கள் யாராயிருக்கக்கூடும்? இவர்களில் ஒருவள் தனது சகோதரிகளின் முன்னேற்றத்தைக் குறித்து முயன்றுகொண்டிருந்த துர்க்கையே! மற்றொருவள் ருக்மணியெனச் சொல்லவேண்டியது அனாவசியம். இவர்களிருவருக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது.

ருக்மணி:—"சகோதரி! நானொரு காரியத்தைக் குறித்துத் தங்களிடம் ஆலோசிக்க வந்துள்ளேன்."

துர்க்கை:—"சகோதரிகளுக்கு ஊழியஞ் செய்ய நான் தயாராயிருக்கிறேன்."

ருக்மணி:—"பிரேமைக்குப் பிரதி பலனென்ன?

துர்க்கை:—"பிரேமையே!"

ருக்மணி:—"என்னை ஒருவர் அதிகமாய் நேசித்து வரும்பொழுது, நான் அவர் நேசத்திற்குட்படலாமா?"

துர்க்கை:—"ஆமாம்! அவர் உனது நேசத்திற்குச் சரியான பாத்திரமாயிருக்கும் பக்ஷத்தில்!"

ருக்மணி:—"இல்லாவிடிலோ?"

துர்க்கை:—"அப்பொழுதும் அவரிடம் மனமிரங்குவது நியாயமே."

ருக்மணி:—"ஒருவர் தான் நேசித்துவரும் ஒருவனையடைய இரவும் பகலும் வருந்துங்கால், அவள் அவரை நாடிச் செல்லவேண்டியது நியாயமல்லவோ?"

துர்க்கை:—"நேசமும், மானமும் சம்மதப்படில், நியாயமல்ல."

ருக்மணி:—"பிறரைச் சந்தோஷப் படுத்துவது கடமையல்லவா?"



துர்க்கை:—"உண்மையே பெரிய கடமை."

ருக்மணி:—"மூடத்தனத்தால் பிறர் சொல்லைக்கேட்டு, எனது கணவன் என்னை விடுத்து, வேறொரு பெண்ணை மணஞ் செய்துகொண்டாரென நினைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுது அவர் தான் செய்துள்ள பிசகை நினைத்து வருந்துகின்றனர். அவர் வேறொரு பெண்ணை மணந்திருந்தும், என்னை வருந்தியழைத்தால் நானவரை நாடிச்செல்வது நியாயமாமோ?"

துர்க்கை:—"இருவர் ஒரு வீட்டிலிருக்க முடியுமா? நீ யதை நல்லதென நினைக்கிறாயா?"

ருக்மணி:—"இல்லை. ஆனால் நேசம் அதிகமாயிருக்கிறதே!"

துர்க்கை:—"ஊழியஞ் செய்வதே சிலாக்கியம்."

ருக்மணி:—"அப்பெண் வேறெங்காயினுஞ் சென்றுவிடில், நான் என் பர்த்தாவிடஞ் செல்லலாமோ?"

துர்க்கை:—"ஆம். நீ இச்சை கொள்ளும் பக்ஷத்தில்."

ருக்மணி:—"நீங்களவ்விதஞ் செய்வீர்களா?

துர்க்கை:—"இதற்கு உத்தர முரைப்பது கடினமே. ஒருவேளை போனாலும் போகலாம்."

இவர்களது சம்பாஷணை இத்துடன் முடிவு பெற்றது. ருக்மணி துர்க்கையின் உத்தரவு பெற்றுத் தன் வீடுபோய்ச் சேர்ந்தனள்.

அன்றிரவு ஜயராமன் ஆகாரமுண்டபின், மாடியறையிலுட்கார்ந்திருந்தனன். ருக்மணி படுக்கையை விரித்துக் கீழே சென்றனள். ஜயராமன் துர்க்கையை நினைத்து நினைத்து மனதிற்கொண்ட துக்கத்தை யகற்றவேண்டி, ருக்மணியோடு சம்பாஷிக்க அவாக்கொண்டவனாய், அவளை யழைத்தனன். ஆனால் பதிலொன்றும் வரவில்லை. வீடு முழுவதும் தேடினானாயினும், ருக்மணியைக் காணவில்லை. ஆச்சரியமுற்று யாது செய்வதென்றறியாது மலைத்தான். எதிரிலிருந்த மேஜையின்மேல் காற்றிற் பறந்து போகாவண்ணம் வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு சலவைக் கல்லுக்குக் கீழிருந்த காகிதத்தை நாடி இவனது நேத்திரங்கள் சென்றன. அவசரமாகச் சென்று, காகிதத்தை யெடுத்து வாசிக்க ஆரம்பித்தனன். அதிற் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது.

"நாதா!

இக்காகிதம் தமது கைக்ககப்படுவதற்குள் நான் மிக்க தூரம் போயிருப்பேன். நான் உயிருடனிருப்பது உம்மை நினைக்கவும், உம்மைக் கனவு காணவும், உம்மை நேசிக்கவுமே! நாதா! நானும்மை வெறுத்துச் செல்வதாக நினைக்கக் கூடாது. அழகிலும் புத்தியிலும் என்னை விடப் பன்மடங்கு சிறந்த வேறொருத்திக்கு இடமுண்டாக்கவே நான் செல்லுகிறேன். சீக்கிரத்தில் நாம் ஒருவரையொருவர் சந்திப்போம். என்னை வேலைக்காரியாகத் தம்மிடம் வைத்துக்கொள்ள இஷ்டமிருக்குமாயின் நானுங்களைச் சீக்கிரந் தரிசிப்பேன். வஸ்திரங்களைத் துவைக்கவும், ஜலங்கொண்டுவரவும் சமையல் செய்யவும் வீட்டைச் சுத்தஞ் செய்யவுந் தயாராயிருக்கிறேன். நாதா! நாம் சீக்கிரம் சந்திப்போமென என்னற்ப அறிவுக்குத் தோன்றுகிறது.

நேசித்து ஊழியஞ் செய்யும்,

ருக்மணி."

ஜயராமனது மனம் அச்சமயம் என்ன பாடுபட்டிருக்குமெனச் சொல்லவேண்டியது அனாவசியமே. கற்சிலையைப்போல் காகிதத்தைக் காதிலேந்தி நின்றான். இதன் காரணம் யாதாயிருக்குமெனச் சிந்தித்தான், அவ்வீட்டில்

மற்றொரு பாகத்திலிருந்த தன் தாயிடம் ஓடினான். ஒருவேளை நமது வீடுகளில் துரதிர்ஷ்டவசத்தால் வழக்கமாய் நடந்து வருவதுபோல் தன் தாயுடன் சண்டையிட்டுச் சென்றனளோ வென எண்ணினான். என்ன விசாரித்தும் காரணமொன்றும் வெளிப்படவில்லை.

ஜயராமன் அன்றிரவு கொஞ்சமேனும் கண்களை மூடினவனல்ல. மறுநாட்காலை துர்க்கைக்கு இச்சங்கதி தெரிந்திருக்கலாமென எண்ணினவனாய், ஸ்நாநசங்கத்திற்குச் சென்றனன். இவனைக் கண்ட துர்க்கை வழக்கம்போல வரவேற்றுபசரிக்க, ஜயராமன் உடனே அவளை நோக்கி, "துர்க்கா! நானுன்னை வீட்டை விட்டகன்றேனே, இப்பொழுது என்னது ருக்மணியும் என்னை விட்டுச் சென்றதால், நான் ஏகாந்த வாசத்திற்குள்ளானேன். நீ ருக்மணியை யறிவாயா? அவள் எங்கிருக்கிறாளென உனக்குத் தெரியுமா?" என வினவினான்.

துர்க்கை:—"நானறியேனே! நேற்று மாலை இங்கு ஓர் பெண் வந்திருந்தனள். ஒருவேளை அவளாயிருக்குமோ?"

ஜயராமன்:—"இங்கு வந்திருந்தாளா? என்ன சொன்னாள்? என்னைக் குறித்துக் குறை பகர்ந்தனளோ?"

துர்க்கை:—"இல்லை. அப்படியொன்று மில்லை."

பிறகு தனக்கும் ருக்மணிக்கும் நடந்த சம்பாஷணையைப் பற்றி துர்க்கை பகர ஜயராமன் ஆச்சரியமுடன் காதுகொடுத்துக் கேட்டிருந்தனன், அவளது கையைப் பிடித்துக்கொண்டு, "துர்க்கா! நானுன் அடிமை. என் உடல், பொருள், ஆவி யாவும் உன்னைச் சேர்ந்தவைகளே. என்னை மன்னித்து, ஏற்று, என்னுடன் வாழ்வாய்" என்றனன். துர்க்கை கொஞ்ச நேரம் யோசித்திருந்து, கடைசியாகத் தன் தந்தையை தரிசித்து வரும்படி வேண்டினள்.

சில தினங்களுக்குப் பின்னர், துர்க்கை தன் பதியின் வீட்டை யடைந்து, சுகசமாதானத்தோடு அங்கே வசிக்கலானாள். ஜயராமனும் ஆனந்தசாகரத்திலாழ்ந்திருந்தான்.

ஒரு வருஷம் கழிந்தது; இவர்களிடம் வள்ளியென்னும் ஓர் கிழவி வேலை செய்து வந்தனள். இவ்வவள் தன் குழந்தைப்பருவமுதல் இக்குடும்பத்திலிருந்து வந்ததால், எல்லோரும் இவளை வேலைக்காரியாகப் பாவியாது குடும்பத்திலொருவளாகக் கருதி வந்தார்கள். ஜயராமன் இவளையுமொரு தாயாகப் பாவித்து வந்தனன். ஒரு நாள் வள்ளிக்குத் தன்னூரிலிருந்த தன் உறவினனொருவனுக்கு தேக அசௌக்கியமெனக் கடிதம் வந்திருந்ததால், சில நாட்களுக்குத் தன்னூர் சென்றுவர உத்தரவு கேட்டனள். அநேக வருஷங்களாக இவள் தன் கிராமத்திற்குச் சென்றவளல்ல. இதுவுமன்றித் தான் வரும் வரை வீட்டு வேலைகளைச் செய்ய வேறொரு கிழவியையும் அழைத்து வந்து விட்டனள். அக்கிழவியின் பெயர் சத்தியபாமா.

ஜயராமனும், மற்றவர்களும் வள்ளிக்குத் துக்கத்துடன் விடைகொடுத்தனுப்பி, புதிதாக வந்த கிழவியை அன்புடன் ஏற்றுக் கொண்டார்கள். சில நாட்களில் சத்தியபாமாவும் நல்லவளெனப் பெயர் சம்பாதித்தனள். இவளடிக்கடி ஜயராமனை உற்று நோக்குவதையும், அவன் பேசும் பொழுதெல்லாம் அவனையே பார்த்திருந்து புன்முறுவல் கொள்ளுவதையும் துர்க்கை கவனித்து வந்தாளாயினும், இக்கிழவி வீட்டிலுள்ளவர்களிடம் பக்ஷமுடனிருப்பதாகவே நினைத்தாள். இவ்வண்ணமே ஒரு வருஷம் கழிந்தது.



ஏகாதசி நாள். நதியில் ஜலப்பிரவாகமாயிருந்தது. துர்க்கை சத்தியபாமாவை யழைத்துக்கொண்டு, ஸ்நானஞ் செய்துவர நதிக்குச் சென்றனள். ராமஸ்மரணை செய்துகொண்டே துர்க்கை நதியிலிறங்கி மூழ்கியபின் கரை சேர்ந்து, கிழவி சத்தியபாமாவையும் ஸ்நானஞ் செய்ய வேண்டினாள். ஆனால் சத்தியபாமாவோ வீட்டு வேலைகளைப் பார்த்துவிட்டு ஸ்நானஞ் செய்வதாகவும், மற்றுஞ் சில சாக்குப்போக்குகளையுஞ் சொன்னாள். ஆனால் துர்க்கை வற்புறுத்தித் தன் துணிகளைக் கொடுத்து ஸ்நானஞ் செய்யச்சொல்லவே, சத்தியபாமா கொஞ்சநேரந் திகைத்துநின்று, வேறு வழியின்றி, வஸ்திரங்களை வாங்கிக்கொண்டு கரையோரமாகக் கொஞ்சதூரஞ் சென்று, தன் வஸ்திரங்களைக் களைந்து ஸ்நானஞ்செய்ய ஆரம்பித்தனள். துர்க்கை அக்கிழவியையே உற்றுநோக்கி வந்தாள். சில நிமிஷங்களுக்குப் பிறகு சத்தியபாமா ஒரு முறை நதியில் மூழ்கி யெழுந்தமாத்திரத்தில், அங்கு மிக்க எழில்வாய்ந்த ஓர் மடமங்கை இருக்கக் கண்டு ஆச்சரியமுற்றனள். கிழவி சத்தியபாமா இருந்த இடத்தில், மேகத்தைப்பழித்த கருங் கூந்தலோடும், தாமரையை நிகர்த்த நேத்திரங்களோடும் ஓர் நங்கை பகவான் கிருஷ்ண பரமாத்மாவின் கோபிகாஸ்திரீகளிலொருத்தியோவென நினைக்குமவண்ணம் தோன்றினாள். "இவள் யார்? வேறொருத்தியோ? சத்தியபாமா ஸ்நானத்தை முடித்துக்கொண்டு சென்று விட்டனளோ? இந்நங்கை யாராயிருக்கலாம்?" என்ற இக்கேள்விகள் ஒன்றின்பின்னொன்றாகத் துர்க்கையின் மனதிற் றோன்ற, அப்பெண் கரையை யடைந்து அவசரமாகத் தன் வஸ்திரங்களை தரிப்பதற்குள், அவளிடஞ்சென்று நோக்க ருக்மணி வீட்டை விடுத்துச் செல்லுவதற்கு முந்திய நாள் மாலை தன்னுடன் சம்பாஷித்திருந்த நங்கை இவளேயென அறிந்து கொண்டாள். இவ்வளவு நாட்களாய் வஸ்திரங்களைத் துவைத்தும், சமையல் செய்தும், பாத்திரங்களை விளக்கியும் வந்த கிழவி ருக்மணியேயெனக் கண்டனள். துர்க்கையைக் கண்ட ருக்மணி நகைத்தாள். புன்முறுவலுற்றாள். பிறகு மெதுவாக, "நான் என் பெற்றோருடன் ஒரு வருஷ காலமாய் ஸ்தல யாத்திரை செய்துவந்தேன். காசி, ஹரித்துவாரம் முதலிய க்ஷேத்திரங்கள் சென்றிருந்தும், இவரது ஞாபகமே என் மனதைப் பிளக்கத் தொடங்கியது. இவரைக் காண சூரியனைக்கண்ட தாமரையைப்போல என் முகம் மலர்கின்றது, இவரின்றி என் முகம் வாட்டமுறுகின்றது" என்றனள். துர்க்கை என்ன செய்வதென்றறியாது பிரமிக்கவே, ருக்மணி, "நான் உங்களுக்கும், உங்களது சுகசௌக்கியத்திற்கும் நடுவில் நில்லேன். இது சத்தியம். இந்த ஒரு வருஷமாக விருந்தவண்ணமே நானெப்பொழுதும் உங்களது வேலைக்காரியாகவே யிருக்குமபக்ஷத்தில் அவரைத் தரிசிக்கவும், அவரது இனிய குரலைக்கேட்டு ஆனந்திக்கவும் சமயங் கிடைக்கும்" என்று சொல்லி முடிப்பதற்குள் அவளது நேத்திரங்களினின்றும் நீர் தாரைதாரையாய்ப்பெருக, அதை மறைக்கக் கருதி வேறொருபுறந் திரும்பினாள்.

துர்க்கை அவளது கரங்களைப் பிடித்துத் தேறுதல் சொல்லிக்கொண்டே அவளுடன் வீட்டைநோக்கி நடந்தாள். இன்னுமொரு நாள் சத்தியபாமாவாகவே யிருக்கும்படி ருக்மணியை வேண்டிக்கொண்டனள்.

அன்று முழுவதும் துர்க்கை யோசித்த வண்ணமிருந்தனள். மறுநாள் ஜயராமனுக்கும் துர்க்கைக்கும் பின்வருமாறு சம்பாஷணை நடந்தது.

துர்க்கை :—" நீங்களென்ன, ருக்மணியைப் பற்றி நினைப்பதே யில்லை!"

ஜயராமன் :—"நாளவளை மறந்து எவ்வளவோ மாதங்களாய்விட்டன. பாபம், மிக்க நல்ல பெண்ணே!"

துர்க்கை :—" ஆனால் இன்னுமவளைப்பற்றி ஞாபகமிருக்கிறதல்லவா?"

ஜயராமன் :—" அவளின்னும் உயிருடன் இருக்கிறாளோ இல்லையோ! மிக்க நல்ல பெண்ணென்பதிற் சந்தேகமில்லை. ஆனால் நீ அருகிலிருக்கும்பொழுது அவளை ஏன் நினைக்க வேண்டும்?"

துர்க்கை :—" அவள் இந்த வீட்டிலிருப்பதாக நினைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அவளுடன் பேசுவீர்களா? அவளைப் பார்த்துச் சந்தோஷமடைவீர்களா?"

ஜயராமன் :—" துர்க்கா! அது உன்னைச் சேர்ந்ததே. என்னையேன் கேட்கிறாய்?"

துர்க்கை உடனே சத்தியபாமாவை யழைத்து ருக்மணியை அழைத்துவரும்படி பகர, சத்தியபாமா ஒரு நொடிப்பொழுதில் தன் வேஷத்தைக் களைந்து, ருக்மணியாக வந்து நின்றனள்.

ஜயராமன் ருக்மணியைக் கண்ட மாத்திரத்தில் ஆச்சரியத்திலாழ்ந்து எழுந்து அவளைத் தழுவ எண்ணங்கொண்டானாயினும், அருகில் துர்க்கை இருந்ததால், தன்னைத் தடுத்துக் கொண்டான். அவனது மனதில் அச்சமயம் பற்பல எண்ணங்களுதித்தன. துர்க்கையும் அவனை யுற்றுநோக்கிப் புன்முறுவலுடன் ருக்மணியைத் தழுவி, "நாதா, தாங்கள் கவலைப்படவேண்டியதில்லை. நாங்களிருவரும் சச்சரவின்றி அக்காள் தங்கையென ஒத்திருப்போம் விசாரம் வேண்டாம்" என்றனள்.

# இந்தியச் சிற்பிகள் பெருமை.

(ஸ்ரீமான் S. R. அனந்த நாராயணய்யர்)

"சிற்பம் என்பது கல்லுருவாய் விளங்கும் கானம்; கானத்திற்குள்ளதுபோலவே சிற்பத்திற்கும், ஸ்வரப் பொருத்தம், அழகு முதலியவைகளும் உண்டு; அவை யெல்லாம் அந்தந்த தேசத்தாரது சுபாவத்தை அனுசரித்திருக்கும்" என்று ஒரு ஜர்மன் கவி சொல்லியிருக்கிறார்.

மனதில் ஊன்றி நின்ற சங்கல்பங்களே கல்லுருவாகிக் கட்டிடங்களாக அமைகின்றன. நமது தேசத்திற்குக் கிழக்கே நெடுந்தூரத்திலுள்ள பர்மா, ஸயாம், சீனா, கொரியா, ஜப்பான் முதலிய தேசங்களிலிருக்கும் புராதனமான கோவில்களைப் பரீட்சை செய்து பார்த்தால் அவை யெல்லாம் புத்தமதத்தினடியாய்ப் பிறந்த சிற்ப சாஸ்திரத்தை அனுசரித்தவைகள் என்பது புலப்படும். உதாரணமாக, இந்தியாவிற் காணப்படும் புத்தமதக் கோவில்களின் பிறைச் சந்திரன்போன்ற அர்த்த (பாதி) கோள ஸ்தூபிகளும் குடை முனைபோன்ற கோபுர நுனிகளும், சீனா, ஜப்பான் தேசங்களில் ஒன்றின்மேல் ஒன்றாக வைத்து அடுக்கிட்ட விமானங்களாக மாறின.

நீராவிக் கப்பல்களும், கம்பியில்லாத் தந்தி, தூரதிருஷ்டி, தூரக்கேழ்வி, ஆகாயக் கப்பல் முதலியவைகள் மலிந்து தினே தினே வலிமையிலும் சங்கையையிலும் அதிகரித்து வரும் இன்றுதான் நாகரிகம் முதிர்ந்து உலகமெல்லாம் பரவி வருகின்றதென்ற பெருமை இக்காலத்தில் அநேகருக்குண்டு. அவர்களுக்குத் தற்காலத்தில் ஆங்காங்கு கட்புலனாகும் புராதன நாகரிகச் சின்னங்கள் ஓரோர் வேளைகளில் மனக்கலக்கத்தை உண்டு பண்ணுகின்றன. உதாரணமாக, கி. பி. 1926-ம் வருஷத்தில் நமது தேசத்திய பழமையைப் புலன்படுத்தும் இலாகாத்தலைவரான ஸர் ஜான் மார்ஷல் என்பவர் பஞ்ஜாபிலும், ஸிந்து பாலைவனத்திலும் வெட்டியெடுத்த சாமான்களை ஆராய்ந்து பார்த்த அறிஞர்கள், அவைகளுக்கும் ஈஜிப்டு தேசத்திலுள்ள பூர்வஸாதனங்களுக்கும் ஒற்றுமை யிருப்பதைக் கண்டு, கிறிஸ்து பிறப்பதற்கு மூவாயிரம் வருஷங்களுக்குமுன் முதல் இவ்விரு பிரதேசங்களுக்கும் போக்கு வரவு இருந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்தனர்.

நியூ ஜீலாந்து தீவுகளிலுள்ள கற்பாறைகளின்மேற் செதுக்கப்பட்டிருக்கும் கப்பல்களின் உருவங்களை ஆராய்ந்து வந்த வேறு சிலர் அவை ஈஜிப்டு தேசத்தில் முதன்முதல் நிர்மாணம் செய்யப்பட்ட கப்பல்களை ஒத்திருப்பதால், சுமார் ஐயாயிரம் வருஷங்களுக்குமுன், ஈஜிப்டுக்கும் நியூ ஜீலாந்துக்கும் அராபிக்கடல் இந்து மகா சமுத்திரம், பஸிபிக் சமுத்திரம் முதலிய பெரிய சமுத்திரங்களின் வழியாகப் போக்கு வரவு இருந்திருக்க வேண்டும் என்று தீர்மானித்திருக்கின்றனர்.

சின்னாட்களுக்குமுன் நமக்கெட்டிய மற்றுஞ் சில சமாசாரங்களை ஆராய்ந்து பார்த்ததில், மேனாட்டு வித்வான்களை சுமார் நூறு வருஷங்களுக்கு மேலாக மயக்கிவந்த மெக்ஸிகோ, மத்திய அமெரிக்கா முதலிய தேசங்களிற் காணப்படும் மாயா, அஸ்டெக் ஜாதியாரின் புராதன கையெழுத்துப் புத்தகங்கள் சாயம் பூசிய மட்பாண்டங்கள், கட்டிடங்களிற் காணப்படும் சித்திரங்கள், பிரதிமைகள், சிலைகள் இவைகளில் யானைகளின் உருவங்கள் ஏராளமாக மலிந்து கிடப்பதன் காரணம் வெளியாகின்றது. மாயா சிற்பிகளும் சித்திரக்காரரும் வெட்டி வரைந்த மிருகம் நமது இந்தியாவிற் காணப்படும் கஜராஜன் தானா? பாத்திரங்களிலும், புத்தகங்களிலும் காணப்படும் சித்திரங்களும், சிலைகளும் ஹிந்துக்களாகிய நமது தேவேந்திரனது பிரதாபங்களை அறிவிக்கின்றனவோ? என்ற சங்கைகள் ஜனிக்கின்றன. இவை நிஸ்ஸந்தேகமானவை யென்று ஏற்பட்டு விட்டால், "நம்மிந்தியாவிலிருந்து தான் இப்போது புதிய உலகம் என்று ஐரோப்பியர் கோஷிக்கும் அமெரிக்காவுக்கு முன்னாளில் நாகரிகம் சென்றதென்று நாம் எளிதில் தீர்மானித்து விடலாமல்லவா? ஆனால், கல்விச்செருக்கும், நிறச்செருக்கும், செல்வச் செருக்கும் நிறைந்த மேனாட்டு மேதாவிகள் இதை ஒப்புவதில்லை. அவர்கள் இந்தியாவிலும் நாகரிகம் இருந்திருக்குமா என்று வாய் கூசாமற் கேட்பவர்கள். அவ்வாறே கேட்கவும் போதிக்கவும் பயின்றவர்கள். சிறு குழந்தைக்கும் எளிதில் விளங்கக்கூடிய தும்பிக்கையானது யானைக்குத்தான் உண்டென்று அவர்கள் நன்றாக அறிந்திருந்தும், அவர்கள் வேறே யொரு ஜந்துவுக்கு ஏனிந்தத் தும்பிக்கை இருந்திருக்கக்கூடாது, அந்த ஜந்து ஏன் இப்போது உலகத்தில் இல்லாமல் அழிந்து போயிருக்கக்கூடாது, இந்த ஜந்து ஒரு டபிர் (மலேயா, ஸுமாத்ரா, போர்னியோ தேசங்களில் உள்ளது), ஆமை, மாகா (அமெரிக்காவிலுள்ள கிளி யினத்தைச் சேர்ந்த ஜந்து), ராக்கைப் பாம்பு, எட்டுக்கை மீன், அல்லது இப்போது இல்லாதொழிந்த மகாயானை (மம்மாத்) யாக இருக்கக்கூடாதா என்று வாதாடுகின்றனர்! அச்சித்திரங்கள் இந்தியாவிலுள்ள கஜேந்திரனைக் குறிக்கின்றன என்று சொல்லி

விட்டால் தங்களுக்குக் கௌரவக் குறைவாகி விடுமென்று கருதுகின்றனர்!

இது இவ்வாறிருக்க, சமீபத்தில் வெளியான சில வர்ணமிட்ட படங்கள் இந்த மேதாவிகளின் மனக் குழப்பத்தை அதிகரிக்கச் செய்து விட்டன.

அமெரிக்காவின் பெரிய நகரங்களிலொன்றாகிய சிக்காகோ (Chicago) விலுள்ள நியூபரி (Newberry) புஸ்தகாலயத்திலுள்ள அயர் நிதியில் (Ayer Collection) ஜே. எரிக் தாம்ஸன் என்பவர் (J. Eric Thompson) தொண்ணூறு வருஷங்களுக்குமுன், பிரடரிக் டி வால்டெக் (Frederick de Waldeck) என்னும் பிராஞ்சியச் சிற்பியால் எழுதப்பட்ட சில படங்களைக் கண்டெடுத்தார். அப்படங்கள் மத்திய அமெரிக்காவில் தற்காலம் காடுகளால் மூடப்பட்டுக்கிடக்கும் பாலெங்கு (Palenque) என்னும் பட்டணத்திலுள்ள அரண்மனைகள் ஒன்றின் நிலவறையிற் கண்ட சித்திரங்களைப் பார்த்து வால்டெக் எழுதிய பிரதிகளாம். அவைகளைப் பார்த்த மாத்திரத்தில் அவற்றிற் காணப்படும் மிருகங்களெல்லாம் யானை யினத்தைச் சேர்ந்தனவென்று ஒரு குழந்தையும் சொல்லிவிடும்; என்றாலும், வால்டெக் காலத்தில் வாழ்ந்த மேதாவிகள் அப்படிச் சொல்வது நமது இந்தியாவுக்குமேன்மையையும், மேனாட்டாரது நாகரிகத்திற்குத் தாழ்மையையும் கொடுத்துவிடுமென்று கருதி, “வால்டெக் எழுதினதெல்லாம் பொய், பித்தலாட்டம்” என்று சொல்லி அவரையும் சிறுமைப்படுத்தி விட்டதாக ஒரு வித்வான் லண்டன் டைம்ஸ் (London Times) பத்திரிகையில் சில மாதங்களுக்குமுன் எழுதினார்.

இச்சித்திரங்களை மதமாத்ஸர்யங்களின்றிப் பரீட்சை செய்தவர் கால்லி (Collie) பண்டிதர். அவர் கி. பி. எட்டாம் நூற்றாண்டில், சீனாவில் ஆட்சி செலுத்தி வந்த (T'ang) டியங்கு வம்சத்தாரது ஆதரவைப் பெற்ற சிற்பிகளின் வேலையை ஒத்திருப்பதாகச் சொல்லுகின்றனர்.

1920-ம் வருஷத்தில், கேம்பிரிட்ஜ் ஸ்தாவர சாஸ்திரியான W. பால்பர் கோர்லே (W. Balfour Gourlay) என்பவர் ஸான் ஸல்வடார் (San Salvador) காட்சிச் சாலையின் எதிரில் வைக்கப்பட்டிருக்கும் கல் யானையைச் சாயாபிம்பமாய்ப் பிடித்தார். 1916-ம் வருஷத்தில் தாமஸ் கான் பண்டிதர் (Thomas Gann) காட்டிமாலா (Gautemala = கௌதமாலயா?) விலுள்ள யாலாக் (Yallock) என்னுமிடத்தில் ஒரு மணல் மேட்டில் வட்ட வடிவான வாயகன்ற பாத்திரமொன்றைக் கண்டெடுத்தார். அதில் இரண்டு யானைகள் சரியான வர்ணமிட்டு எழுதப்பட்டிருந்தன. இவைகள் யானைகள் தான் என்று சொல்ல ஏராளமான ஆதாரங்கள் இருந்தும், கான் பண்டிதர் அவைகள் யானைகள் அல்ல, அஸ்டெக் ஜாதியாரின் “நெடு நாஸிக் கடவுள்” என்று சொல்லுகின்றார், அக்கடவுளுக்கு குவட்ஸல் கோட்ல் (Quetsal Coatl) என்றும், இறகுடன் கூடிய சகல்சன் (Cuculcan) என்றும் பெயராம்.

இவ்வாறு வாதிக்கும் பண்டிதரெல்லாம் இந்திய நாகரிகத்தில் அஸூயை கொண்டவரென்று சொல்லத் தடையென்ன?

இதுவரை நிராக்ஷேபமாக ரூபிக்கப்பட்டுள்ள ஆதாரங்களை ஆராய்ந்து பார்த்தால், உலகத்தில் நாகரிகம் எவ்வாறு நாடுவிட்டு நாடு பரவிச் சென்றதென்று அறியலாம்.

பூர்வீக இந்தியச் சிற்பிகளில் பிரசித்தி பெற்றவர்கள் கி. பி. நாலாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டுவரை ஐந்நூறு வருஷ காலம் விளங்கி வந்தனர். அவர்களில் கி. பி. 350 முதல் 650 வரை ஆண்ட குப்தவம்ச அரசர்களின் ஆதரவு பெற்ற சிற்பிகள், இந்து



சீனச் (Indo-China) சிற்பிகளுக்கு ஆசிரியராக விளங்கியவர்கள். ஆகவே கம்போடியாவில் ஆறாம் நூற்றாண்டுமுதல் பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை விளங்கிய சிற்பிகள் தங்களது கட்டடங்களிலும், கொத்து வேலைகளிலும் இந்து முறைகளையே அனுசரித்தனர்; சில அம்சங்களில் அவர்கள் தங்களது குருக்களையும் மிஞ்சி விட்டதாகத் தெரிகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் கோவில்கள் மேட்டு நிலத்தில் கட்டப்படுவதினால் அந்த “படி வைத்த கோபுரங்கள்” கிடையா. இந்து சீனா, ஜாவா முதலிய தேசங்களில் கோபுரங்களெல்லாம் உயர்ந்த படிகளின் மேலாகவே கட்டப்பட்டிருக்கின்றன; அந்நாடுகளில் உண்டாகும் பெருத்த வெள்ளங்களுக்கு அக்கோவில்கள் இரையாகாமலிருக்க வேண்டுமென்று கருதியே அவர்கள் இப்படிக்கட்டுகளைக் கட்டியதாகத் தெரிகிறது. இதுவன்றி அந்த யானை யுருவங்களும் ஏராளமாக எழுதவும் வெட்டவும்பட்டன. வேழமுகக் கடவுளான கணேசரைத் தொழுவோர் தென்னிந்தியாவிலும், ஆசியாவின் தென் கிழக்கு மூலையிலுள்ள பிரதேசங்களிலுந்தான் அதிகம். ஆயினும், இக்கணேச பக்தியானது யானையில்லா நாடுகளான சீனா, ஜப்பான் முதலிய தேசங்களுக்குங் கூடப் பரவி வந்தது. அத்தேசத்தார் யானையை நேரிற்காணாதவராதலின் அதன் அங்கங்களை ஏற்றக் குறைச்சலாகத் தங்களது சிற்பங்களிலும் சித்திரங்களிலும் அமைத்து வைத்தனர்.

அக்காலத்தில் கம்போடியாவில் யாத்திரை செய்த சீன நூலாசிரியர்கள் தாங்கள் சென்றவிடமெங்கும் சந்தன மரத்தில் செய்யப்பட்ட யானைகளைக் கண்டதாக எழுதியிருக்கின்றனர்.

இந்த குப்தர்கள் காலத்திலேயே சீனதேசச் சிற்பிகளும் இந்தியரது முறைகளைத் தழுவினர். சீனரது சிற்ப சாஸ்திரம் தழைத்தோங்கியது கி. பி. 602 முதல் 907 வரை ஆட்சி செலுத்திவந்த டியாங்கு வம்ச அரசரது காலத்திற்றான் ஆகலால் அது குப்த அரசர் காலத்துச் சிற்ப சாஸ்திரத்தை யனுசரித்து வந்ததென்று சொல்லத் தடையில்லை. இந்நாட்டில் நில்லாமல், இந்திய சிற்பிகள் சீனபுத்தச் சிற்பிகளையும், பின்னர் வெகு காலத்திற்குப்பின் கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் ஜப்பானில் வாழ்ந்த “நான்” என்னும் சிற்பியையும் அவனது சிடரையுங் கூடத் தங்களது சிடராக்கிக் கொண்டனர்.

இந்தியாவிலிருந்து இலங்கை, பர்மா, இந்து சீனா, ஸயாம், சீனா, ஜப்பான்வரை சென்றவர்களுக்கு பஸிபிக் சமுத்திரம் ஒரு தடையாயிருந்திருக்குமா? இந்தியாவிற் பிறந்து சிற்பம் பயின்று, மேற் சொல்லிய நாடுகளெல்லாஞ் சென்று ஆங்காங்கு கண்ட விசித்திர வினைகளைக் கல்லிற் பதித்தவர்களே பாலெங்கு அரண்மனைச் சித்திரங்களை வரைந்தவர் என்று சொல்ல என்ன தடை?

# நம் பெண்கள் அடிமைகளா?

(ஸ்ரீமான் வி. சீனிவாஸன்)

அந்நிய நாட்டார் நம் பெண்களை யிகழ்ந்து பேசும்பொழுது நாம் வெட்கித் தலை குனிந்து மௌனஞ் சாதிப்பதைத் தவிர நாம் அவர்களோடு எதிர்த்துப் பேசவேதேனும் நியாயமுளதோ? ஒரு தேசத்திற் பெண்கள் கற்றவர்களாயும், சுதந்திர முற்றவர்களாயும், அறிவுடையவர்களாயுமிருந்தால் அத்தேச முன்னேற்றமடைவதற் கையமுளதோ!

கடவுள் இம்மானிட வகுப்பை ஆண் பெண் என இரு பிரிவாகப்பிரித்துப் பெண்களை ஆடவர்களுக்குத் தோழிகளாகவும், ஆடவர்களைப் பெண்களுக்குத் தோழர்களாகவும் சிருஷ்டித்துள்ளார். ஒரு வண்டியை யிழுப்பதற்கு ஒற்றுமையான ஜோடி எருதுகள் எப்படித் தேவையோ, அதுபோல் ஒரு குடும்ப பாரத்தைச் சந்தோஷமாகவும், சமாதானமாகவும், ஒழுங்காகவும் நடத்துவதற்குக் கணவனும் மனைவியு மத்தியாவசியமல்லவா?

புருஷர்களின் இன்பத்திற்காகவும், அவர்களுக்கடிமைப்பட்டு ஆடு மாடுகளைப்போல் வேலை செய்யவுமாகத்தான் கடவுள் பெண்களை இவ்வுலகத்தின்கண் படைத்திருக்கிறாரென்று சிலவறிவீனர் நினைப்பர். அவ்வறிவீனர்கள் பெண்களுக்குத் தாம் அடிமைகளென்பதை நினைப்பதில்லைபோலும். பெண்களை அடிமைகளென்று நினைப்பது அவர்கள் முற்பிறப்பிற் செய்த கருமமல்லவோ? அப்படி நினைப்பவர்கள் தாய்மார்களின் வயிற்றிற் பிறவாமல் தெய்வலோகத்தினின்று கீழே குதித்துவிட்டார்கள்போலும். இகழ்ச்சிக்குரிய பெண்கள் வயிற்றிலா பிறந்தோமென்று தெரிந்தவுடன் ஏன் அவர்கள் உயிர்களை மாய்த்துக்கொள்ளவில்லை? சில பெண்கள் வீடுகளிற் றன்புறுவதைக் காட்டிலும் உயிர்களை மாய்த்துக்கொள்வது நலமெனத் தோன்றுகிறது. சில வீடுகளிற் பெண்கள் நன்னடத்தை யுடையவர்களாயும், கல்வி கற்றவர்களாயும், கணவர்களின் சொற் கடவாதவர்களாயுமிருந்தபோதிலும், கள், சாராயம் என்பவைகளுக்கடிமைப்பட்டுப் புத்திகெட்டுத் தட்டுத்தடுமாறித் திரிகின்ற நன்னடக்கையற்ற புருஷர்களுக்கு அம்மாதா சிரோன்மணிகள் எப்படி நல்லவர்களாகப் போகின்றார்கள்.

ஆண் பெண் இருவகுப்பினரையும் அறிவுறுத்துவது கல்வியல்லவா? நம் நாட்டிற் பெண் கல்வி ஏனைய நாடுகளைப்போல் செழித்தோங்காமலிருப்பதன் காரணம் நாம் கிஞ்சிற்றுமிதுன் கருதாமலிருப்பதேயாகும். மேல் நாட்டிற் பெண் கல்வியை யாராய்ந்து பார்க்குமிடத்து ஆண்பெண் இருவகுப்பினரில் கல்வி சமத்துவமாயும், சில விடங்களில் அதிகமாயுமிருப்பதைப் பத்திரிகைகளின் வாயிலாகவும் போய்ப்பார்த்து வந்தவர்களின் மூலமாகவும் நன்கு அறிகிறோம். அந்நிய நாடுகளிலே எத்தனை பெண்கள் பெரிய பெரிய உத்தியோகம் வகித்திருக்கிறார்கள்; எத்தனை பெண்கள் பெரிய பெரிய பட்டங்கள் பெற்றுச் சட்டசபைகளில் அங்கத்தினர்களாயிருக்கிறார்கள்; எத்தனை பேர் உயர்தரக் கல்வி பயின்று உன்னதத் தொழில்களைக் கற்றுத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஐயோ! நமது நாட்டில் நம் சகோதரிமார்களில் எவ்வளவு பேர் தக்க கல்விப்பயிற்சி பெற்றிருக்கின்றனர்?

“பெண்கள் ஆண்களைக் காட்டிலும் தாழ்மையானவர்கள்; அவர்கள் படித்து மேலான பதவிகளுக்கு வந்துவிட்டால் புருஷர்களுக்கு அவமானந்தானே” என்று எத்தனை அறிவீனர்கள் எண்ணுகின்றனர். பெண்கள் படித்தால் அவர்களுக்குள்ள அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களும் கெட்டுப்போகும்; எப்பொழுதும் சிற்றின்பத்திற் கேதுவான புஸ்தகங்களையே படித்துக்கொண்டிருப்பார்கள்; புருஷர்களுக்குக் கீழ்ப் படியமாட்டார்களென்று நினைப்பர் பலர். ஒருவனிடத்திலுள்ள நல்ல குணங்களை யெடுத்துப் பேசாது அவனிடத்திலுள்ள கெட்ட குணங்களை யெடுத்து யிகழ்ந்துபேசுவது உலகத்தினியல்பு. நாம் யாரிடத்தில் ஜனித்தோம்? பெண்களிடத்திலிருந்தல்லவா. நம்மைப் பத்து மாதம்



சுமந்து கஷ்டப்பட்டு நம்மை ஈன்றெடுத்தது நம் தாய்மார்களல்லவா? அப்படி நம்மைப் பெற்றெடுத்த அன்னைகளிற் சிலர் கல்விமான்களாயிருந்தால் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி அறிவு நல்லொழுக்கம் முதலியவைகளை நன்கு போதித்து நம்மைச் சற்புத்திரர்களாக்குவது கண்கூடாகக்கண்டதே. எல்லாத் தாய்மார்களும் கல்வி கற்றிருந்தால் அவர்கள் தங்கள் மகவுகளுக்குக் கல்வியூட்டி நற்போதனை செய்வர். அப்பொழுது நம் தேசத்திற் கல்வியெங்கும் பெருகி யிருக்கும். பெண்களும் அநேகமாய்ப் படித்தேயிருப்பார்கள்.

ஸ்வாமி சத்தியதேவ் என்பவர் சுதந்திரமுற்ற அமெரிக்கா தேசத்திற்குக் கல்விக்காகச் சென்றிருந்தகாலத்தில் அவருக்கும் சில அமெரிக்க ஸ்திரீகளுக்கும் நடந்த சம்பாஷணைகளிலொன்றைக் கீழே குறிப்பிடுகிறேன்:—

ஒரு பெண்:—மிஸ்டர் தேவ்! இந்தியாவைப் பற்றியறிய ஆவலுடையவர்களாயிருக்கிறோம். பொதுவாய்ப் பாதிரிமார்களிடமிருந்து கொஞ்சம் தெரிந்துகொள்ளுவதுண்டு. இன்று உங்களிடத்திலிருந்து உண்மையையறியும் பாக்கியமடைந்ததைப் பற்றிச் சந்தோஷப்படுகிறேன். உங்களுடைய பெண்களைக் கைதிகளைப்போல் வைத்திருப்பது உண்மையா என்பதைப் பற்றி தயைபுரிந்து சொல்லவேண்டும்.

தேவ்:—“நீங்கள் தெளிவாகச் சொன்னால் பதிற் சொல்லுகிறேன்.”

பெண்:—ஹிந்துக்கள் அவர்களுடைய பெண்களைக் கைதிகளைப்போல் வீட்டிலடைத்து வைப்பது வழக்கமென்று புஸ்தகங்களின் மூலமாகவும், உபந்நியாசங்களின் வாயிலாகவும் கேள்விப்பட்டிருக்கிறோம். பெண்கள் வெளியே போனால் முகத்தை மூடிக்கொண்டு போகவேண்டுமாம். ஒரு குடும்பத்திற் பெண் குழந்தை பிறந்தால் முக்காடுபோட்டு அழுவார்களாம். கணவன் உண்ட மிச்சத்தை மனைவி உண்ணவேண்டுமாம்.

தேவ்:—“அமெரிக்கா தேசத்துப் பெண்களைப்போல் இந்தியப் பெண்கள் சுதந்திரம் அடையவில்லை. நாங்கள் அவர்களின் சுதந்திரத்தின் பொருட்டுச் சிறிது கருதுவதுமுண்மை. ஆனால் அவர்களைக் கைதிகளைப் போலடைத்துவைப்பது என்பது முற்றிலும் பொய். அவர்களுக்கு நாங்கள் மரியாதை கொடுக்கிறோம். எங்கள் தாய்மார்கள் எங்கள் வீடுகளையாட்சிபுரிந்து வருவதுமுண்மை. சில அறிவீனமான மனிதர்கள் பெண்களைக் கொடுமையாய் நடத்துவதுமுண்மை. ஆனால் கல்விமான்களும் உயர்ந்த குலத்தவர்களுமப்படி நினைப்பதில்லை, நடத்துவதில்லை. உண்மையில ஹிந்துமதத்தின் கொள்கைப்படி ஒரு மனைவி தன் புருஷனுக்குச் சமத்துவமுடையவளே. சாஸ்திரங்களை நன்கு கற்றறிந்தவர்கள் அவர்கள் மனைவிகளுக்கு எல்லாவிதமான சுதந்திரமுங் கொடுக்கின்றார்கள். எங்கள் தேசத்தில் அறியாமை நிரம்பி யிருக்கின்றது. ஆணும் பெண்ணும் சமமுடையவர்களென்று தெரிந்தும் பெண்களுக்கு விசேஷமாகக் கல்வி கற்பிப்பதில்லை.

மற்றொருத்தி:—(சம்பாஷணை முடிந்தவுடன்) “நான் அப்படிப்பட்ட தேசத்திற் பிறவாததற்காகக் கடவுளைப் போற்றுகிறேன்.”

சகோதர சகோதரிகளே! இச்சம்பாஷணையில் அம்மங்கையின் கேள்விகள் சரிதானே! நாம் நமது பெண்களுக்குத் தகுந்த சுதந்திரங் கொடுத்திருக்கிறோமோ? கல்வி கொடுத்திருக்கிறோமா? சமத்துவங் கொடுத்திருக்கிறோமா? எதுவுமில்லை. ஆயினும் முற்காலத்தையும் பிற்காலத்தையும் நன்கு ஆராய்ந்து பார்க்குமிடத்து நமது பெண்களை யார்தான் அடிமை

களென்று சொல்ல முன் வருவர்? யார் தான் அருகாராவர்? நம் தாய்மார்களின் உன்னத குணங்களையும் வீரச்செயல்களையும் நோக்குமிடத்து மங்கம்மாள் என்னும் மாது சிரோன்மணி திரிசிராபுரத்தில் செங்கோல் வழுவாது நடாத்தி உலகக் கியாதிபெற்றது நமக்கு ஞாபகமிதில்லையோ? இன்னம் தமயந்தி, திரௌபதி, சீதை, சுசிலா முதலானவர்கள் கல்வியாளர்களாய் கற்புக்கரசிகளாய் விளங்கவில்லையோ? இக்காலத்தில் சரோஜினிதேவி முதலான அம்மையர் கவிச் சக்கரவர்த்தினிகளாய்ப் பிரகாசிக்கவில்லையோ?

ஆகையால், சகோதரர்களே! நம் குடும்ப வாழ்க்கையிலும் உலக வாழ்க்கையிலும் நமக்கு உதவியாய் நிற்கக்கூடிய நம் சகோதரிகளை அடிமையாய்ப் பாவிக்காமல், அவர்களுக்குச் சுதந்திரங்கொடுத்துக் கல்விகற்பிக்க வேண்டியது நம் முக்கிய கடமை.

# கோமளம் விற்ற கும்பம்.

(ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள்.)

நாராயணபுரம் என்னும் ஊரில் நாங்கள் கொஞ்சநாள் வசிக்கலானோம். நாங்கள் வசித்து வந்த வீதியில் பதினைந்து பிராமண வீடுகள் இருந்தன. அவ்வீடுகள் ஒன்றில் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் குடியிருந்தார். அங்கிருந்த பிராமணர்களெல்லாம் ஒவ்வொரு உத்தியோகத்தி லிருப்பவர்கள். எல்லாரும் பாரிச் சம்பளத்திலும் நல்ல ஸ்திதியிலும் இருக்க, இராமஸ்வாமி அய்யர் மாத்திரம் கொஞ்சம் சுவல்ப சம்பளமும் ஏழைக் குடித்தனமும் உள்ளவராக விருந்தார். அவரது பென்ஷன் பத்து ரூபாயும், அவரது பிள்ளையின் சம்பளம் முப்பது ரூபாயும் ஆக நாற்பது ரூபாயே அவருக்குள்ள மாத வரும்படி. இந்த நாற்பது ரூபாயில் இராமஸ்வாமி அய்யரும், அவரது மனைவியான பர்வதம்மாளும், அவர்களது புத்திரனான சங்கரய்யரும் நாட்டுப்பெண்ணான செல்லம்மாள் என்பவளும் ஜீவனம் செய்து வந்தனர். இராமஸ்வாமி அய்யருக்குக் காமாக்ஷியென்று பெயருள்ள ஒருபன்னிரண்டு வயதுப் பெண்ணுமுண்டு. வரும்படி கொஞ்சமானதால் இவ்வைவருக்கும் ஜீவனம் நடப்பது கஷ்டமாகவேயிருந்தது.

இராமஸ்வாமி அய்யர் கொஞ்சம் முன் கோபக்காரர். ஆனாலும் நல்லவர்தான்.

அதே தெருவில் நரசிம்மய்யர் என்றும் ஒருவர் இருந்தார். அவரது மனைவியின் பெயர் கோமளம். அவர்களுக்கும் குழந்தைகள் இருந்தன.

அந்தக் கோமளம் என்பவளை அவளது லக்ஷணத்தைப் பார்த்துச் சூர்ப்பநகை யென்றும், கூந்தலைப் பார்த்து பத்திரகாளி யென்றும், பேச்சைப் பார்த்து வாயாடி யென்றும், சமயமறியாமல் வீடு வீடாய்ப் போவதைப் பார்த்து ஓடுகாலி யென்றும் சொல்லுவார்கள்.

எப்பொழுதும் வீடு வீடாய்ப் போய் அரட்டை யடித்துவிட்டுத் தன் புருஷன் வீடு வரும் சமயத்திற்குத் தப்பாமல் தன் வீட்டுக்குத் திரும்பி வந்துவிடுவாள். இதனால் அவளது புருஷனுக்குத் தன் மனைவியைப்போல் "உத்தமி" கிடையாதென்ற சந்தோஷம் உண்டாகும்.

இவர்களுக்கு ஒரு பிள்ளையும் உண்டு. அவனுக்குக் கலியாணமாகி, நாட்டுப்பெண்ணும் வீட்டுக்கு வந்திருந்தாள். அந்த நாட்டுப்



பெண்ணைக் கோமளம் படுத்திய பாட்டைச் சொல்லியும் எழுதியும் முடியாது. அவள் வீடு வீடாய்த் திரிந்துகொண்டு தன் நாட்டுப் பெண்ணையே வீட்டுவேலை யனைத்தையும் செய்யும்படி சொல்லி, அவள் செய்தபின் அவைகளைப் பார்த்து தூஷித்தும், அவளைக் கண்டபடி வைதும், திட்டியும் சோறு போடாமற் பட்டினி கிடத்தியும், உடுத்தத் துணி வாங்கிக் கொடாமலும் தொந்தரவு செய்வாள். அதுவுமன்றித் தன்பிள்ளையிடம்சாடிசொல்லித் தனது நாட்டுப்பெண்ணை அடிக்கச் செய்தும், தனக்குக் கோபம் வந்தபொழுது தானே அடித்தும், இப்படிப் பலவாறு கஷ்டப்படுத்தியதை அந்தப் பெண் பொறுக்க முடியாமல் தத்தளிக்கும்.

இதையறிந்த அந்தப் பெண்ணின் தாய் தந்தையர்கள் ஆராத் துயரத்துடன் "கொடிக்குக் காய் ஜாஸ்தியாகாதல்லவா? அப்படிப் போல் நாம் பிள்ளைகளைப்போலவே பெண்ணையும் அருமையாய்ப் பெற்று வளர்த்து சீர் சிறப்புகள் செய்து மாமியார் வீட்டிற்கு அனுப்பினோம். கதியில்லாமல் அனுப்பவில்லை. நமது வீட்டில் இருப்பவர்களெல்லாம் சாப்பிடவில்லையா? அப்பெண்ணுக்குக் கொஞ்சம் சாதம் போடுவதனால் நமக்கு என்ன ஏழைத்தனம் வந்துவிடும்? நம்ம பிள்ளைகள் நடுவில் ஒரே பெண்ணென்று எவ்வளவோ அருமையாய் வளர்த்தோம். அப்பெண் இம்மாதிரி கஷ்டப்படுவதைப் பார்க்கவும் கேட்கவும் முடியவில்லை. தாயின பேச்சைக் கேட்டுக் கொண்டு கணவனும் கஷ்டப்படுத்தினால் அப்பெண்ணுக்கு என்ன சுகம்! நாம் ஒரு வேளையாவது சாப்பிட்டுவிட்டு, அப்பெண்ணுக்கு ஒரு வேளை சாதம் போடலாம்" என்று பலவாறாக யோசித்துப் புறப்பட்டு, நாராயணபுரம் வந்து சேர்ந்தனர்.

அங்கு கோமளத்தின் வீட்டுக்கு வந்து, தாங்கள் பெண்ணை விட்டுப் பிரிந்து நெடுநாளாயிற்றென்றும், கொஞ்சநாள் தங்களிடம் வைத்திருக்க விருப்ப மிருப்பதாகவும் சொல்லி, அவளை அனுப்பித் தரும்படி வெகு வினயத்துடன் கேட்டனர்.

அந்தக் கோமளம் தன் நாட்டுப்பெண்ணை அனுப்ப முடியாதென்றும், "உங்கள் வீட்டில் விட்டிருக்கவா நான் என் பிள்ளைக்கு இந்தப் பெண்ணைக் கலியாணம் செய்தது?" என்றும் சண்டை போட்டாள்.

அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் வந்து இச்சண்டையைச் சமாதானம் செய்து பெண்ணை அனுப்பும்படி செய்தனர்.

பாகீரதி யென்னும் அப்பெண்ணும் தன் தாய் தகப்பனுடன் தன் பிறந்தகம் சென்றாள்.

II.

நாட்டுப் பெண் பிறந்தகம் சென்ற பின் கோமளம் "ஓடுகாலி வீடு மறந்தாள்" என்னும் பழமொழிக்கு உதாரணமாகாமல், வீடு வீடாய்ப் போவதைக் கொஞ்சம் குறைத்து, தன் வீட்டுவேலை யெல்லாம் தானே செய்ய வேண்டியதாயிற்று.

"நாட்டுப் பெண் பிறந்த வீடுபோய் உட்கார்ந்திருக்கிறாள். நாம் இங்கு வேலையெல்லாம் செய்யவேண்டியதாயிற்று!" என்ற ஆங்காரத்துடன், தன் நாட்டுப் பெண்ணையும் சம்பந்திகளையும் வைது கொண்டும், தன்னாதவள் போல மூக்கை முனகிக் கொண்டும் வீட்டு வேலைகளைச் செய்வாள்.

இப்படியிருக்கும் பொழுது, அடுத்த வீதியிலிருக்கும் சத்தியவதியம்மாள் என்னும் ஒரு கிழவி கோமளத்தின் வீட்டுக்கு ஒரு நாள் மத்தியானம் வந்தாள்.

அந்த சத்தியவதியம்மாளைப் பார்த்துக் கோமளம், 'சத்தியவதியம்மா, வாருங்கள் உட்காருங்கள், உங்களைப்பார்த்து ரொம்ப நாளாயிற்றே. இந்தப் பக்கம் வருவதேயில்லையே, நீங்கள் ஊரில் இருக்கவில்லையா என்ன? "தேடின வெள்ளி காலில் அகப்பட்டது" என்பார்கள். அப்படிப்போல் இப்பொழுதுதான் நான் உங்களை நினைத்தேன், நீங்களும் வந்தீர்கள், உங்களுக்கு ஆயுசு நூறுதான்" என்றாள்.

அதற்கு அந்தசத்தியவதியம்மாள் 'எதற்காக என்னை நினைத்தாய்?' என்றாள்.

கோமளம், 'சத்தியவதியம்மா, நான் உங்களிடம் ஒரு சமாசாரம் கேட்கவேண்டுமென்று நினைத்தேன்; வெகு ஆத்திரப்பட்டேன்; அதே சமயத்தில் "கும்பிடப்போன தெய்வம் குறுக்கோடி வந்ததாம்' என்பார்கள்; அப்படிப்போல் நான் நினைக்கும்பொழுது நீங்கள் வந்தீர்கள். இப்பொழுது நான் கேட்கும் கேழ்விக்குச் சரியான ஜவாபு சொல்லி என் சஞ்சலத்தைத் தீர்க்க முடியுமோ?" என்றாள்.

இதைக் கேட்ட சத்தியவதியம்மாள், "நீ எதைக் கேழ்க்கப்போகிறாய், அதைக் கேளேன் பார்க்கலாம்; எனக்கு அதற்கு ஜவாபு சொல்லத் தெரிந்தால் சொல்லுகிறேனே, தெரியாவிட்டால் 'தெரியாது' என்கிறேன். இதற்கென்ன கஷ்டம்" என்றாள்.

இதைக் கேட்ட கோமளம் சொல்லுகிறாள், "சத்தியவதியம்மா, நீங்களும பதினைந்துவருஷமாய் நான்கு நாட்டுப் பெண்களையும் வைத்துக்கொண்டு சம்சாரத்திலிருக்கிறீர்கள். நாட்டுப் பெண்களால் உங்களுக்குக் கெட்டபெயராவது உங்களால் நாட்டுப் பெண்களுக்குக் கெட்ட பெயராவது வந்ததாகக் கேழ்விப் பட்டதில்லை. எங்கள் வீட்டில் ஒரு நாட்டுப் பெண் வந்து ஒரு வருஷத்திற்குள் எனக்கு எவ்வளவோ கெட்ட பெயர் வந்து விட்டது! இதற்குக் காரணம் நாட்டுப் பெண்களுக்கு மாமியார் வைக்கும் மருந்து இன்னதென்று எனக்குத் தெரியாததுதானாக இருக்கலாம். உங்களுக்கு நான்கு நாட்டுப் பெண்கள் வந்தும், கெட்ட பெயரில்லாததினால் அவசியம் அம்மருந்து உங்களுக்குத் தெரிந்தேயிருக்கும். தயவுசெய்து அம்மருந்து இன்னதென்று எனக்குச் சொன்னால், நானும் அதை என் நாட்டுப் பெண்ணுக்கு அவள் பிறந்த வீட்டிலிருந்து வந்தவுடன் வைத்து விட்டுக் கைவசப்படுத்திக்கொண்டு, எனக்கும் கெட்ட பெயர் வாராமலிருக்கும்படி செய்து கொள்ள யோசித்தேன். இதற்காகத்தான் உங்களை நினைத்தது" என்றாள்.

இதைக் கேட்ட சத்தியவதியம்மாள் சிரித்து "கோமளம்! நீ சொல்வது ரொம்ப வேடிக்கையாயிருக்கின்றது. ஒரு காலத்தில் சத்தியபாமை திரௌபதியைப் பார்த்து "எனக்கு ஒரு புருஷனை அடக்கியாள முடியவில்லையே, கிருஷ்ணன் நான் சொன்னபடி கேட்காததினால் கஷ்டமாயிருக்கின்றதே, அப்படியிருக்க, நீ ஐந்து புருஷர்களையும் அடக்கி ஆளுகின்றாயே! அதெப்படி? அந்த மருந்தை எனக்கும் சொல்லிக்கொடு" என்று கேட்க, அதற்கு திரௌபதி, பதிவிரதா தர்மங்களைச் சொல்லி சத்தியபாமையைச் சமாதானப்படுத்தினதாக நாம் கேட்டிருக்கிறோம். இது உனக்குத் தெரியுமல்லவா? இப்பொழுது நீ கேட்பதும் அப்படியேயிருக்கின்றது. ஆகலால், சத்தியபாமைக்குத்திரௌபதி சொன்னது போல நானும உனக்கு நீ மருமகளிடம் நடந்து கொள்ள வேண்டிய வழிகளைச் சொல்லுகிறேன்; எனக்கு வேறொரு மருந்தும் தெரியாது" என்றாள்.

கோமளமும், "சரி உங்களது மாமியார் தர்மங்களைச் சொல்லுங்கள், கேட்கலாம்"



என்று சொல்ல சத்தியவதியம்மாள் சொல்லுகின்றாள்:—

"கோமளம், நான் சொல்வதை நன்றாய்க் கவனித்துக்கேள்; 'மாவு இருக்கிற மணம் போலிருக்கும் கூழிருக்கும் குணம்' என்பார்கள். அப்படிப்போல், நாம் மருமகளிடத்தில் எப்படியிருக்கிறோமோ அவ்விதமே அவர்களும் நம்மிடம் இருப்பார்கள். "பெண்" என்பதற்கும் "நாட்டுப் பெண்" என்பதற்கும் எவ்வாறு நான்கு எழுத்துக்கள் அதிகமாக இருக்கின்றனவோ, அப்படியே நாம் பெற்ற பெண்களைவிட நாட்டுப் பெண்களை நான்கு படங்கு அதிகமான அன்புடன் பார்த்து வரவேண்டும். நாம் அவர்களைக் கண்டபடி வைதும் வேலைகளைச் செய்யச் சொல்லியும், புருஷனிடம் பேசக்கூடாது என்று கண்டித்துப் பலவாறு பேசியும், அவர்களுக்குப் பிறந்த வீட்டார் செய்த சீர் சிறப்புகள் போதாதென்று சொல்லி அவர்களது மனதைத் துன்பப்படுத்தியும் அவர்கள் சந்தோஷ சல்லாபத்துடன் இருக்கும் காலத்தில் நாம் அவர்களை அடிமைபோல் செய்தால் அத்துன்பம் பொறுக்க முடியாமல் அவர்களால் நமக்குக் கெட்ட பெயரும், நம்மால் அவர்களுக்குக் கெட்ட பெயரும் வருகின்றது. நாமும் அவர்களைப்போல் ஒரு மாமியாரிடம் நாட்டுப் பெண்ணாக இருந்தவர்கள்தானே என்று நாம் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் நம்மவீடுகள் விளங்குவதற்காகவே அவர்களை இருதத்தாரும் ஆயிரமாயிரமாய்ச் செலவு செய்து பிறந்த வீட்டார் அனுப்பியும் புகுந்த வீட்டார் அழைக்கும் வருகின்றோம். அவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும், நமது வீட்டுக்கு வந்தபின் நாம் அவர்களைச் சீர்திருத்தி நடத்த வேண்டும். அவர்கள் மனதிற்கு இனிமையான பேச்சையே பேசியும் நமதுவீட்டுக்கு வந்தபின் அவர்களுக்கு சகலமும் நாமே ஆகையால் நாம் அவர்களுக்குப் பலவிதமாகவும் அலங்காரங்கள் செய்தும், சந்தோஷப் பார்வையால் பார்த்தும் புருஷர்களிடம் இஷ்டம் போலிருக்கும்படி செய்தும் வந்தால், ஒருவரையொருவர் பேசவதும், கெட்ட பெயரும் ஏன் வரும்? நாம் பெற்ற பெண்கள் வேறு வீடுகளுக்குப் போய் விடுகின்றார்கள். ஆகலால் நாம் நமது மருமகளையே நமது பெண்ணென்று நினைக்கவேண்டும்; இதற்கு ஒரு உதாரணம் சொல்லுகிறேன் கேள்:—ஒரு உத்தியோகஸ்தன் லீவு வாங்கிக் கொண்டால், அவனுக்கு பதில் ஒருவன் வருகிறான். அவனுக்கும் அந்த உத்தியோகத்தின் அதிகாரப்படிச் செல்லுகின்றதோ அப்படிப்போல் இவ்வீட்டிற்கு இவ்வளவு நாளாய் நாம் அதிகாரிகளாக விருந்தோம்; இப்போது நமக்குப்பதில் மருமகள் வந்தால் அவ்வதிகாரம் அவளுக்கும் செல்ல வேண்டாமா? ஆகலால் நாம் வகித்திருந்த அதிகாரத்தை நமக்கு வயதானபோல் மருமகளிடம் ஒப்பித்து அவள் அதைச் செலுத்துவதைச் சந்தோஷத்துடன் இரண்டு கண்களிலும் ஆனந்த பாஷ்பம் பொருகப் பார்ப்பதே எனது தர்மம். பிள்ளையைப் பெற்றவர்கள் எல்லாரும் இந்த தர்மத்தைக் கைப்பற்றி வந்தால் உலகத்தில் சண்டை சச்சரவுகளில்லாமல் க்ஷேமமே குடிகொண்டிருக்கும். நாம் இப்படி நடந்துகொண்டால் மருமகப் பெண்கள் நம்மை விட்டு ஏன் பிறந்த வீடு செல்வார்கள்? நம்மை ஏன் தூஷிப்பார்கள்? பெண்களுக்குப் பிறந்த வீட்டு நினைப்பு வாராமலிருப்பதற்கும் ஒருவருக்கும் கெட்ட பெயர் வாராமலிருப்பதற்கும் நமது வீட்டில் அஷ்ட லக்ஷ்மியும் வாசம் செய்வதற்கும் உள்ள மருந்து இதுதான். எனக்கு வேறொன்றும் தெரியாது. சில துஷ்ட ஸ்திரீகள் கண்ட மருந்துகளைக்கற்றுக்கொண்டு இன்னொன்று பாராமலும் கஷ்ட சுகங்களைக்

கொஞ்சமேனும் யோசியாமலும் ஆழ்ந்த துயரத்துக்கு ஆளாகின்றனர். நாம் பிள்ளைகளைப் பெறுவதும் அவர்களுக்குக் கலியாணம் செய்து மருமகளை அழைத்து வருவதும் எதற்காக? அவர்களுடன் பகை பாராட்டவும் அடிமைகளாய் வைத்திருக்கவுமா? பல பெண்பெண்டாட்டிகள் பொறுமையினால் என் மருமக்களின்மேல் என்ன சாடை சொன்னாலும் நான் கவனிக்கமாட்டேன். நீயும் இப்படி நடந்துகொண்டால் உன்னை ஒருவரும் தூஷிக்கமாட்டார்கள். எல்லாரும் பூஷிப்பவர்களாகவே யிருப்பார்கள். இதுதான் நான் உனக்குச் சொல்லும் மருந்து. இம்மருந்துதான் எனக்குத் தெரியும்" என்றாள்.

இதைக் கேட்ட கோமளம் "சத்தியவதியம்மா, நீங்கள் இப்பொழுது சொன்ன மருந்து நன்றாயிருக்கின்றது. நான் அப்படியே செய்கிறேன்" என்றாள்.

சத்தியவதியம்மாள் "நாழியாய்விட்டது. நான் வீட்டிற்குப் போகிறேன்" என்று சொல்லிவிட்டுத் தன் வீட்டிற்குப் புறப்பட்டுப் போய்விட்டாள். இது நிற்க.

## III

கோமளத்தின் கணவர் நரசிம்மய்யரை அவரது மேலதிகாரிகள் வேறு ஊருக்கு மாற்றிவிட்டார்கள். அவர்கள் சாமான் முதலியவைகளைக் கட்டிச் சிலவற்றை கூட்ஸில் (Goods) போட்டுவிட்டு சிலவற்றை லக்கேஜிலும் (Luggage) போட்டுக்கொண்டு போவதாய் உத்தேசித்திருந்தனர். பெட்டிகளெல்லாம் கட்டியானபின் ஒரு அலுமினியச் சொம்பைப் பெட்டியிற் போட மறந்துபோனதைக் கண்டு கோமளம், "ஐயோ இந்தச் சொம்பை நாம் எவ்வளவோ ஆசையுடன் வாங்கினோம். எவ்வளவோ அருமையாய் வைத்திருந்தோம். இதை வெளியில் விட்டுப்போக மனம் வரவில்லை. இதற்காகக் கட்டின பெட்டியைத் திறக்கவேண்டுமென்றால் இவர் வைவாரே; இதை யாருக்காவது கொடுக்கவும் மனம் வரவில்லையே! இவ்வீதியில் யாருக்கு இதைக் கொடுக்கலாம்? ராமஸ்வாமி அய்யர் வீட்டார்தான் ஏழைகளாவும் கபடமில்லாதவர்களாகவும் நமக்கு ரொம்ப சிநேகிதர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களுக்கே இதைக் கொடுக்கலாம்" என்று தீர்மானம் செய்துகொண்டு, தாங்கள் புறப்படுவதற்கு முதல் நாள் மத்தியானம் ராமஸ்வாமி அய்யர் வீட்டிற்கு வந்தாள்.

அப்போது இராமஸ்வாமி அய்யர் மனைவி வீட்டில் இருக்கவில்லை. அவரது நாட்டுப் பெண் கோமளத்தைப் பார்த்து "கோமளம், வாயேன், உட்காரேன். எப்பொழுது ஊருக்குப் பிரயாணம்? நீ இவ்வீதியிலிருந்தது எவ்வளவோ நன்றாயிருந்தது. நீ ஊருக்குப்போய் விடுகிறாயே என்று இருக்கிறது" என்றாள்.

கோமளம், "அடி செல்லம்மா, உங்க மாமியாரில்லையா? எங்கே போயிருக்காள்? ஒரு சமாசாரம் கேட்கலாமென்று வந்தேன்! நாங்கள் நாளைக்குப் புறப்படுகிறோம்" என்றாள்.

செல்லம்மாள், "என்ன சமாசாரம்? என்னிடந்தான் சொல்லேன். நான் என் மாமியார் வந்தமேற் சொல்லுகிறேன்" என்றாள்.

கோமளம், "அடி செல்லம்மா, நான் எவ்வளவோ அருமையாய் முக்கால் ரூபாய்க்கு வாங்கின அலுமினியச் சொம்பு ஒன்றைப் பெட்டியிற் போட மறந்துவிட்டேன். எங்க ஆத்துக்காரர் பார்த்தால் 'இதை ஏன் வெளியில் வைத்துவிட்டாய்' என்று வைவார். அதை உங்களைத் தவிர வேறு யாருக்கும் கொடுக்க மனம் வரவில்லை. ஆதலால் உங்கள் சிநேகத்துக்காக நான் பன்னிரண்டணாவுக்குவாங்கின



சொம்பை உங்களுக்கு நாலணாவுக்குக் கொடுத்துவிடுகிறேன். இஷ்டமானால் வாங்கிக்கொள்" என்றாள்.

இதைக் கேட்ட செல்லம்மாள், "எங்களுக்கு வேண்டாம். நீ வேறு யாருக்காவது கொடு" என்று சொன்னாள்.

கோமளம் "ஆனால் நான் போகிறேன். வீட்டில் வேலையிருக்கின்றது" என்று சொல்லி எழுந்து போய்விட்டாள்.

தன் மாமியார் வீட்டுக்கு வந்ததும் செல்லம்மாள் அவளைப் பார்த்து, "அம்மா, கோமளம் நாளைக்கு ஊருக்குப் போகிறாளாம். அவள் எவ்வளவோ அருமையாய் முக்கால் ரூபாய்க்கு வாங்கின அலுமினியச் சொம்பு ஒன்றை சாமானுடன் கட்டுவதற்கு மறந்துவிட்டாளாம். நமக்கு நாலணாவுக்குக் கொடுத்துவிடுகிறாளாம். வாங்கிக்கொள்ளுகிறீர்களாவென்று கேட்பதற்காக வந்திருந்தாள். நீங்கள் வீட்டில் இருக்கவில்லை. இப்பொழுது நம்ம கையிற் பணமில்லையே என்று நினைத்து நான் அது நமக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டேன்" என்றாள்.

இதைக் கேட்ட பர்வதத்தம்மாள், "ஏண்டி செல்லம்மா, உனக்கு சம்சாரத்தில் இன்னது வேணும், வேண்டாமென்று பார்க்க எப்பொழுது தெரியும்? அவள் நமக்காக முக்கால் ரூபாய்க்கு வாங்கின சொம்பைக் கால்ரூபாய்க்குக் கொடுக்கிறேன் என்கிறாள், நீ ஏன் வேண்டாமென்று சொன்னாய்? நம்ம வீட்டில் கொஞ்சம் நெய் ஜாஸ்தி வாங்கினால் வைத்துக்கொள்ள சொம்பில்லாமல் கஷ்டப்படுகிறோமே, உனக்குத் தெரியாதா? முக்கால் ரூபாய் போட்டுக் கடையில் வாங்குவதைவிடக் கால் ரூபாய் போட்டு வாங்குவது லகுவாச்சே! எப்படியாவது கால் ரூபாய் கொடுத்தால் போகிறது. நீ இப்போதே கோமளத்தின் வீட்டுக்குப் போய் அந்தச் சொம்பை அவள் இதுவரை யாருக்கும் கொடுக்காமலிருந்தால் நமக்கே கொடுக்கும்படி சொல்லிவிட்டு வா" என்றாள்.

செல்லம்மாள் கோமளத்தின் வீட்டுக்குப் புறப்படுவதைப் பார்த்த காமாக்ஷியென்னும் இராமஸ்வாமி அய்யருடைய பெண், "மன்னி, நானும் வரட்டுமா?" என்றாள். செல்லம்மாள் "வாயேன்" என்று சொல்ல, இருவரும் கோமளத்தின் வீட்டுக்குச் சென்றார்கள்.

கோமளம் இவர்களைப் பார்த்து "செல்லம்மா, காமாக்ஷி, இருவரும் வாருங்கள்" என்றாள்.

செல்லம்மாள், "கோமளம், அந்தச்சொம்பை நீ யாருக்கும் கொடாமல் இருந்தால் எங்களுக்கே கொடுக்கும்படி எங்கள் மாமியார் சொல்லிவிட்டு வரச்சொன்னார்" என்றாள்.

இதைக் கேட்ட கோமளம் "அடி செல்லம்மா, உங்க மாமியார் அந்தச் சொம்பை விடாமல் வாங்கிக்கொள்ளுவள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் இந்த சமாசாரத்தை நான் வேறொருவருக்கும் சொல்லவுமில்லை, கொடுக்கவுமில்லை. கொடுப்பதானால் இந்த நல்ல பதார்த்தத்தை உங்களுக்கேதான் கொடுப்பதென்று தீர்மானத்துடன் வைத்திருக்கிறேன். உங்களுக்கே கொடுக்கிறேன். ஆனால் நாளையதினம் நாங்கள் புறப்படும்பொழுதுதான் கொடுக்க முடியும். சாமான் எல்லாம் கட்டிவிட்டதால் தயிர் வாங்கி வைத்துக்கொள்ளக் கஷ்டமாயிருக்கிறது. அதற்காக அந்தச் சொம்பில் தயிர் வாங்கி வைத்துக்கொள்ளுகிறேன், நாளைய தினம் நாங்கள் புறப்படும்பொழுது மறக்காமல் கொடுத்துவிட்டுப் போகிறேன். ஆனால் பணம் மாத்திரம் இப்பொழுதே கொடுத்துவிடவேணும். நாளைய தினம் புறப்படும் கலாட்டாவில் மறந்துவிடு

வோம். ஆதலால் உன் மாமியாரிடம் சொல்லி நாலு அணுவையும் இப்பொழுதே வாங்கி வந்து கொடுத்துவிடு" என்றான்.

இதைக் கேட்ட காமாக்ஷி, "கோமளம், அந்தச் சொம்பைப் பார்க்கலாம்! எங்கே வைத்திருக்கிறாய்?" என்றாள்.

கோமளம் "காமாக்ஷி, அதோ பார், உறியில் வைத்திருக்கிறேன். தங்கமான சொம்பாச்சே! உங்களுக்கென்று இந்த விலைக்குக் கொடுக்கிறேன். வேறு யாருக்காவதானால் இவ்வளவு கஷ்டப்பட்டுக் கொடுப்பேனா?" என்றாள்.

இதைக் கேட்ட காமாக்ஷியும் செல்லம்மாளும் சந்தோஷித்து வீட்டுக்குப் போகிறோமென்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு வீட்டுக்கு வந்து மாமியாரைப் பார்த்துச் செல்லம்மாள் சொல்லுகிறாள் :—

"அம்மா, ஒளியாட்டமா சொம்பு நன்றாயிருக்கு. நாலணாவுக்கு நஷ்டமேயில்லை. நமக்கே கொடுக்கும்படி சொல்லி வந்திருக்கிறேன். நாளையதினம் அவாள் புறப்படும் பொழுது கொடுத்துவிடுகிறாளாம். ஆனால் பணம் இப்பொழுதே வேணுமாம்" என்றாள்.

இதைக் கேட்ட பர்வதத்தம்மாள், தன் நாட்டுப்பெண்ணைப் பார்த்து "இதற்கென்ன, நாலணாத்தானே, உன் மாமனாரிடமோ, அல்லது ஆம்படையானிடமோ கேட்டு வாங்கி இப்பொழுது கொடுத்துவிட்டால் போகிறது" என்று சொல்லிவிட்டுத் தன் மகளைப் பார்த்து, "அடி காமாக்ஷி, உங்கப்பா திண்ணையில் உட்கார்ந்திருக்கிறாரோ பார், இருந்தால் உள்ளே கூப்பிடு" என்றாள்.

உடனே காமாக்ஷி தெருத் திண்ணையில் போய்ப் பார்க்க, தகப்பனார் அங்கு உட்கார்ந்திருப்பதைக் கண்டு, "அப்பா, உங்களை அம்மா கூப்பிடுகிறாள்" என்று சொன்னவுடன், அந்த இராமஸ்வாமி அய்யர் எழுந்து, "ஏண்டி, என்னத்துக்குக் கூப்பிடுகிறாள்?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே போனார்.

உடனே பர்வதத்தம்மாள், "கோமளத்தின் ஆம்படையானை வேறே ஊருக்கு மாற்றிவிட்ட சமாசாரம் உங்களுக்குத் தெரியுமே! அவாள் நாளையதினம் புறப்படுகிறாளாம். ஒரு அலுமினியச் சொம்பை மூட்டையில் போட மறந்துவிட்டாளாம். அதை நமக்கு நாலு அணுவுக்குக் கொடுத்துவிடுகிறேன் என்கிறாள். சொம்பு நன்றாயிருக்கு. நாலணாவுக்குக் கடையில் கிடையாது. நம்ம வீட்டில் கொஞ்சம் நெய் ஜாஸ்தி வாங்கினால் வைத்துக்கொள்ள ஒன்றுமில்லாமல் கஷ்டமாயிருக்கு. ஆதலால் அதை நமக்கே கொடுக்கும்படி கோமளத்தினிடம் சொல்லியிருக்கேன். ஒரு நாலணா எப்படியாவது கொடுங்கள்" என்றாள்.

உடனே இராமஸ்வாமி அய்யர் மனைவியைப் பார்த்து, "இதற்காகவா கூப்பிட்டாய்! நான் எதற்குக் கூப்பிட்டாயோ என்று எழுந்து வந்தேன். "பண்டாரம் பிண்டத்துக்கு அழுகிறும், அவன் பிடித்துவைத்த லிங்கம் 'பரமானம், பரமானம்' என்கிறதாம்! அப்படிப்போலிருக்கு நம்ம வீட்டு சமாசாரம். மாதாமாதம் வரும் பணம் தின்பதற்கே போதவில்லையாம். நெய் வைத்துக்கொள்ளச் சொம்பு வேணுமாம்! என் கையிலே அணு கிடையாது போ!" என்று சொல்லி இராமஸ்வாமி அய்யர் வெளியே போய்விட்டார்.

இதைக் கேட்ட பர்வதத்தம்மாள் "என்ன செய்வது? நாலணா வேண்டுமே?" என்று கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது, பிள்ளை சங்கரன் ஆபீஸிலிருந்து வந்தான். உடனே பிள்ளையைப் பார்த்து "சங்கரா, உன்னிடம் ஒரு சமாசாரம் சொல்லலாமென்றிருக்கிறேன்.



நீ கோபித்துக்கொள்ளாமல் இருப்பாயானால் சொல்லுகிறேன்" என்றாள்.

உடனே சங்கரன், "என்னம்மா, சொல்லேன்" என்றான்.

பர்வதத்தம்மாள், "கோமளம் நாளைக்கு ஊருக்குப் போகிறாள். அவளிடம் ஒரு அலுமினியச் சொம்பு இருக்கின்றது. முக்கால் ரூபாய்க்கு வாங்கின சொம்பை நமக்காக நாலணாவுக்குக் கொடுக்கிறாள். நம்ம வீட்டில் நெய் வாங்கி வைத்துக்கொள்ளவேண்டியிருக்கின்றது. அதை வாங்க நாலணா கொடு" என்றாள்.

அப்போது சங்கரன், "அம்மா, இதற்குத்தானா வரும்பொழுதே கூப்பிட்டது? அந்த நாலணாவைக் கடையில் போட்டு புதுச் சொம்பு வாங்குவதைவிட்டு கோமளத்தினிடம் பழய சொம்பை ஏன் வாங்கவேண்டும்? அரிசி கொடுத்து அக்காள் உறவு என்னத்திற்கு? பணத்தைக் கொடுத்து கோமளத்தின் வீட்டுச் சொம்பு என்னத்திற்கு வாங்கவேண்டும்? இப்பொழுது என் கையிற் பணமும் இல்லை. சம்பளம் வந்தமேல் வேணுமானால் கடையிலிருந்து ஒரு சொம்பு வாங்கி வருகிறேன். நமக்கு அது வேண்டாம் என்று சொல்லிவிடு" என்றான்.

பர்வதத்தம்மாள், "அப்பா சங்கரா, உனக்குப் புண்ணியமுண்டு, ஒரு நாலணா கொடுக்கக்கூடாதா? ஜாஸ்தியில்லையே! அவளிடம் நான் எடுத்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லிவிட்டேன். இப்போது வேண்டாமென்று சொல்வதற்கு வெட்கமாயிருக்கிறது. தவிர அவள் நல்ல பெண்ணாகையால் சிநேகத்திற்காக முக்கால் ரூபாய் விலையுள்ள சொம்பை நமக்கு நாலணாவுக்குக் கொடுக்கிறாள். அதை எப்படியாவது வாங்கத்தான் வேணும். எனக்காக ஒரு நாலணா கொடுத்துவிடு, போதும்" என்றாள்.

அப்போது சங்கரன் தன் ஜேபியிலிருந்து நாலணாவை யெடுத்துத் தாயார் கையிற் கொடுத்தான். அதை வாங்கிப் பர்வதத்தம்மாள் தன் நாட்டுப்பெண்ணிடம் கொடுத்து "இதைக் கோமளத்திற்குக் கொடுத்துவிட்டு வா" என்றாள்.

செல்லம்மாள் அந்த நாலணாவை வாங்கிக்கொண்டு கோமளத்தின் வீட்டுக்கு ஓடிப்போய், "கோமளம், இதோ உன் சொம்புக்குப் பணம்!" என்றாள்.

கோமளம் வெளியே வந்து "செல்லம்மா, நீ கலாட்டா பண்ணாதே. எங்க ஆத்துக்காரர் உள்ளேயிருக்கார். அவருக்குத் தெரியக்கூடாது. தெரிந்தால் வைய்வார்" என்று சொல்லிவிட்டு நாலணாவையும் வாங்கிக்கொண்டாள்,

செல்லம்மாள் மறுபடியும் கோமளத்தைப் பார்த்து, "கோமளம், எங்களைத்தவிர யாருக்கும் இந்தச் சொம்பைக் கொடுத்துவிடாதே" என்றாள்.

அதற்குக் கோமளம், "ஏண்டி செல்லம்மா, உங்களிடம் முன் பணமும் வாங்கிக்கொண்டு சொம்பை வேறு யாருக்காவது கொடுப்பேனா? நாம் இந்த வீதியில் எவ்வளவோ நாளாய் சிநேகமாய் இருந்துவிட்டு, இந்தமாதிரி சொன்ன பேச்சைத் தப்பி நடப்பேனா? நீ பயப்படவேண்டாம். நாளைப் பன்னிரண்டுமணி வண்டிக்கு நாங்கள் புறப்படுகிறோம். அப்போது சொம்பு உங்கள் வீட்டுக்கு வந்துவிடும்" என்றாள்.

செல்லம்மாள் இதைக்கேட்டு சந்தோஷித்து வீட்டுக்கு வந்து நடந்தவைகளைத் தன் மாமியாரிடம் சொல்ல எல்லாரும் சந்தோஷமாயிருந்தார்கள்.

IV

மறுநாள் பன்னிரண்டு மணிக்குக் கோமளம் ரயிலுக்குப் புறப்படும் சமயத்தில், வீதியில் வண்டி வந்து நிற்க, அவள் சாமான்களையெல்லாம் வண்டியிற் போட்டுக் குழந்தைகளையும் ஏற்றிவிட்டு, எல்லார் வீட்டுக்கும் போய்ச் சொல்லிக்கொண்டு, பர்வதத்தம்மாள் வீட்டுக்கும் சென்று, "மாமீ, நான் ஊருக்குப் போய் வரட்டுமா?" என்றாள்.

உடனே பர்வதத்தம்மாள், "கோமளம், இவ்வளவு நாளாகப் பெற்ற பெண்ணைப்போல் பழகிவிட்டு இப்போது நீ ஊருக்குப் போகிறாயே என்று இருக்கு, என்ன செய்யலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிநேகம் எல்லாம் இவ்வளவுதான்!" என்று சொல்லிவிட்டுத் தன் பெண்ணைப் பார்த்து "காமாக்ஷி, கோமளத்திற்கு மஞ்சள், குங்குமம், வெற்றிலை பாக்குக் கொடு" என்றாள். உடனே காமாக்ஷி ஒரு தட்டில் மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்குக் கொண்டுவந்து கொடுத்தாள். கோமளம் வாங்கிக்கொண்டு "செல்லம்மா, காமாக்ஷி, நான் போய்வரட்டுமா? ஞாபகம் இருக்கட்டும்!" என்று எல்லாரிடமும் சொல்லிக்கொண்டு வீதி வாசற்படிக்குப் பக்கத்திற் போகும்பொழுது செல்லம்மாள் பின்சென்று, "ஊருக்குப் போவாரைப் பின்னால் கூப்பிடப்படாது! கோமளம், அந்தச் சொம்பு எங்கே வைத்திருக்கிறாய்?" என்றாள்.

கோமளம், "அடி செல்லம்மா, அதிலே கொஞ்சம் தயிர் மீந்திருந்தது. அந்தத் தயிரோடே பக்கத்து வீட்டுக் கமலத்தினிடம் கொடுத்திருக்கிறேன். தயிரை அவள் குழந்தைகளுக்குக் குத்தும்படிக்கும் சொல்லியிருக்கிறேன், வாங்கிக்கொள். எனக்கு நாழியாய் விட்டது, எங்க ஆத்துக்காரரும் வண்டியில் ஏறிவிட்டார். இனிமேல் பேசிக்கொண்டு நின்றால் வைவார்" என்று சொல்லிவிட்டு வண்டியில் ஏறிக்கொண்டாள், போய்விட்டாள்.

உடனே செல்லம்மாளும் வீட்டுக்கு வந்து நடந்தவைகளைத் தன் மாமியாருக்குச் சொன்னாள். எல்லாரும் "கமலத்தின் அகமுடையான் இப்போது வீட்டில் இருப்பார். அவர் ஆபீசுக்குப் போனமேல் வாங்கி வரலாம்" என்று இருந்தனர்.

மத்தியானம் மூன்று மணியானவுடன் காமாக்ஷி தன் தாயாரிடம் வந்து "அம்மா, கமலத்தின் அகமுடையான் ஆபீசுக்குப் போய்விட்டார். நான் போய் அந்தச் சொம்பை வாங்கி வரட்டுமா?" என்றாள்.

பர்வதத்தம்மாள் போய் வாங்கிவா என்று சொல்ல, காமாக்ஷி கமலத்தின் வீட்டுக்குப் போய் "கமலாமாமீ, கோமளம் சொம்பு கொடுத்திருக்காளாமே, உங்க கிட்டே. அதைத் தரையளா?" என்றாள்.

அதற்குக் கமலம், "அடி காமாக்ஷி, ஒரு காண்டி முட்டை தயிர் கோமளத்திற்கு மீந்து போய்விட்டதாம். அதை எங்க வீட்டுக்குழந்தைகள் சாப்பிடட்டும் என்று வெச்சுவிட்டுப் போனாள். அவள் கொண்டுவரும்போது எங்காத்தில் எல்லாரும் சாப்பிட்டும் ஆச்சு. அதோ வச்சிருக்குப் பாரு. அந்தத் தயிரோடயே வேணுமானாலும் எடுத்துக்கிண்டு போ. அந்தக் காண்டிமுட்டை தயிரை நீங்க சாப்பிட்டாலென்ன, நாங்க சாப்பிட்டாலென்ன?" என்றாள்.

காமாக்ஷி சந்தோஷித்து உடனே தயிருடன் சொம்பையெடுத்துக்கொண்டு தங்கள் வீட்டுக்கு வந்தாள். பர்வதத்தம்மாள், செல்லம்மாள், எல்லாரும் பார்த்து சந்தோஷித்து, "சொம்பு நன்றாயிருக்கின்றது. கடையில் போனால் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் கொடுக்கவேணும். கோமளம், தன் ஞாபகத்திற்காகவும் நம்ம பேரில் அவளுக்கு இருந்த வாஞ்சையினாலும் கொடுத்தாள். உள்ளே கொண்டு போய் வை" என்றார்கள்.



அப்பொழுது இராமஸ்வாமி அய்யர், "அடி காமாக்ஷி, அந்தத் தயிரை வேறு எதிலினாலும் கொட்டிவிட்டு, அந்தச் சொம்பை நன்றாய்த் தேய்த்துப் பாரு. ஓட்டைச் சொம்பைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டாளோ என்னவோ?" என்று சொல்ல, பர்வதத்தம்மாள் தன் புருஷனைப் பார்த்து "உங்களுக்கு எல்லாரையும் தூஷணை பண்ணவேணும். அந்தக் கோமளம் என்ன அப்படியாப்பட்ட பெண்ணா? எல்லாரையும்விட அந்தக் கோமளம் நம்மிடம் ரொம்ப விசுவாசத்துடன் இதுவரையிலும் இருந்தாள். இப்பவும், சிநேக விசுவாசத்திற்காகவே முக்கால் ரூபாய்ச் சொம்பைக் கால் ரூபாய்க்குக் கொடுத்துவிட்டுப் போனாள். இந்த மாதிரியாய் அவளைச் சொல்லுவது பாபம்!" என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே, தந்தையின் பேச்சைக் கேட்ட காமாக்ஷி, உள்ளே போய்ச் சொம்பைக் காலி செய்து தேய்த்துக்கொண்டு வந்து, "அம்மா இதோ சொம்பைத் தேய்த்துக்கொண்டு வந்தேன் பார்!" என்று சொல்லித் தன் தாயின் கையிற் கொடுத்தாள்.

அதை வாங்கிப் பார்த்த பர்வதம்மாள்,

"அடி காமாக்ஷீ, உங்கப்பா சொன்னது போலவே இருக்கின்றதே! அடி, புளியங்கொட்டை புளியங்கொட்டையாய் நாலு ஓட்டையிருக்கின்றதே. இந்தச் சொம்பில் அந்தத் தயிர் எப்படி ஒழுகாமல் இருந்தது! அடி, செல்லம்மா, கோமளம் நம்மைத் தோளிலிருந்து செவியைக் கடித்தாள் பாரடி! இப்பொழுதுதானே உன் மாமனார் சொம்பைத் தேய்த்துப் பார்க்கச் சொன்னார். நான் அவரிடம் கோமளம் அப்படிப்பட்ட பெண் அல்லவென்று சண்டை போட்டேனே!" என்றாள்.

உடனே இராமஸ்வாமி அய்யர் எழுந்து வந்து, அந்தச் சொம்பை வாங்கிப் பார்த்துவிட்டுத் தன் மனைவி, நாட்டுப்பெண், பெண் ஆகிய மூவரையும் பார்த்து, "அடி, அசட்டுப் பொம்மனாட்டிகளா, நீங்கள் மூன்றுபேரும் ஒரே மாதிரி என் வீட்டுக்கு வந்து சேர்ந்து குடியைக் கெடுக்கிறீர்களே! இந்த அநியாயத்தை என்னென்று சொல்லுவேன்? உங்களைப்போலுள்ள பெண்ணல்லவா அவள்? உங்கள் மூன்று பேரையும் ஒரு பெண்பிள்ளை ஏய்த்துவிட்டுப் போனாளே! அவள் புத்தியைப் பாரு! அவளுக்குப் பரிந்துகொண்டு சண்டைக்கு வந்தீர்களே! இப்போது என்ன செய்யப்போகிறீர்கள்! அந்த நாலணாவைப் போட்டுக் காய்கறி வாங்கினாலும் நாலு நாள் சாப்பிடலாமே! நான் என் கையிற் பணம் இல்லை, அந்தச் சொம்பு நமக்கு வேண்டாம் என்று சொன்னேனே, எனக்குத் தெரியாமல் பிள்ளையைக் கேட்டு அணா வாங்கிக் கொடுத்தாயே! உன் பிள்ளை ஆபீசிலிருந்து வரட்டும் இன்னிக்கி, என்ன சொல்லப் போகிறாய் பார்ப்போம்! அந்தக் கோமளத்தினுடைய மோச புத்தியைப் பார். அந்தச் சொம்பை நம்மிடம் கொடுக்காமல், பக்கத்து வீட்டில் வைத்து, ஓட்டையென்று தெரியாமல் இருப்பதற்காகக் கொஞ்சம் கெட்டித் தயிராய் எடுத்து அந்தச் சொம்பில் வைத்து, "தயிர் மீந்துபோயிற்று, கீழே கொட்ட மனம் வாவில்லை" என்று சொல்லி அவள் வீட்டில் வைத்துவிட்டுப் போனவளுக்கு எவ்வளவு மோச புத்தியிருக்கவேணும்! இந்தமாதிரி மோசக்காரிடம்தான் உங்களுக்கு சகவாசம்! நல்ல மனுஷாளிடம் சகவாசம் செய்தால் ஆகாதா? நேற்றையதினம், மினுக்கிக் குலுக்கிக்கொண்டு, நாத்தனாரும் மதனியுமாய் அவர் வீட்டுக்கு

எட்டுத் தடவை போய் வந்தாளே, அந்தச் சொம்பைக் கையில் வாங்கிப் பார்க்கவேண்டாமா? கண்ணால் பார்க்காமலா ஒரு பதார்த்தத்தை வாங்குகிறது உங்களைத்தான் வியாபாரம் செய்ய அனுப்பவேணும்! இந்த வீதியில் உங்களைப்போல் மோசம் போகும் ஜனங்கள் ஒருவரும் இல்லையென்று தெரிந்துதான் அவளும் இதை உங்கள் தலையில் கட்டினாள். ஏண்டி காமாச்சி, இங்கே வாடி, நான் உனக்குக் காமாச்சி என்று பேர் வைத்தது சரியாகவேயிருக்கு. அடி அசட்டுக் காமாச்சி! நேற்றைக்கு அவா வீட்டுக்குப் போனபோது சொம்பைப் பார்த்துவிட்டு வாத்துக்கென்னடி? அந்தச் சொம்பைஅப்படியேவைத்திருந்து நீ மாமியாராத்துக்குப் போகும்போது உனக்கே சீர் கொடுத்துவிடுகிறேன் பார்! அதை வைத்துக் கொண்டு நாங்கள் என்ன செய்கிறது? அது ஒன்றுக்கும் பிரயோஜனமில்லையே! எத்தனை பெரிசு பெரிசா நாலு ஓட்டையிருக்கே, உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையே!" என்று எல்லாரையும் வைதுகொண்டு இராமஸ்வாமி அய்யர் உட்கார்ந்திருக்கும்பொழுதே, பிள்ளை சங்கரன் ஆபிஸிலிருந்து வீட்டுக்கு வந்தான்.

வரும்பொழுதே தகப்பனாரைப் பார்த்து, "என்னப்பா சத்தம் போட்டுக்கொண்டேயிருக்கிறாயே, எங்கள் ஆபீசுக்கு கேழ்கிறது உங்கள் சப்தம்!" என்று சொல்லிக்கொண்டே வந்தான்.

இராமஸ்வாமி அய்யர், "நான் சப்தம் போடுவதுதான் உனக்குத் தெரியும். நீங்கள் எல்லாரும் ஒரேமாதிரியாய்க் குடியைக் கெடுப்பது யாருக்குத் தெரியும்? உங்கள் எல்லாரையும் ஒரே 'மொத்தாய்' என் வீட்டுக்குத் தான் ஏற்குமென்று பிரம்மதேவன் சிருஷ்டித்தானே! அம்மா பேச்சையும் பெண்டாட்டி பேச்சையும் கேட்டு எனக்குத் தெரியாமல் சொம்பு வாங்க அணா கொடுத்தாயே! புத்திசாலிகள் மூன்று பேருமாகச் செய்து வத்திருக்கிறதைப் போய்ப் பார்!" என்றார்.

சங்கரன் உள்ளே வந்து, "அம்மா, என்ன சமாசாரம்?" என்றான்.

பர்வதத்தம்மாள், "அப்பா சங்கரா, கோமளம் ஓட்டைச் சொம்பைக் கொடுத்து மோசம் செய்து விட்டாள். இவ்வளவு நாளாய்ப் பெற்ற பெண்ணைப்போல் பழகினவள் இம்மாதிரி மோசஞ் செய்வாள் என்றுஎங்களுக்குத் தெரியவில்லை. நீயே கையில் காசில்லாமல் கஷ்டப்படுகிற சமயத்தில் இம்மாதிரி நாலு அணாவைப் பாழ் செய்தோமே என்று வருத்தமாயிருக்கின்றது" என்று சொல்ல, சங்கரன் நடந்தவைகளைக் கேட்டுச் சிரித்துக்கொண்டு, "அந்தச் சொம்பைக் கொண்டா பார்க்கலாம்" என்று கேட்டு கையில் வாங்கிப் பார்த்து, வாய் பிடியாமற் சிரித்து "அம்மா, இந்தச் சொம்பைப் பார்த்தால் எனக்கு நாலணா நஷ்டமாயிற்றே என்று வருத்தம் தோன்றவில்லை, பொறுக்க முடியாமற் சிரிப்பே வருகின்றது. ஏனென்றால், இந்தச் சொம்பு இருப்பதைப் பார்த்தால் வீதியிலிருக்கும் குப்பைத் தொட்டியில் எறிந்துவிட்டாலுங்கூட அதைக் கண்ணெடுத்து ஒருவரும் பார்க்கமாட்டார்கள். அப்படிப்பட்ட சொம்பை, உங்களைப்போலொத்த ஒரு பொம்மனாட்டி மூன்று பொம்மனாட்டிகளை ஏய்த்து, இந்தச் சொம்பை விற்று, நாலு அணாவையும் வாங்கி முடிந்துகொண்டு போய்விட்டாளே! அப்பா சொல்வதுபோல நீங்கள் மூன்று பேரும் ஒரேமாதிரி, பொறுக்கியெடுத்தாற்போல் எனக்கு வந்து வாய்த்திர்களே என்று நினைத்து நினைத்துச் சிரிப்பே வருகின்றது. இந்த வெட்கக்கேட்டை யாரிடமும் சொல்லவேண்டாம். அந்த நாலு அணா போனால் போகிறது. அதற்காக இனிமேல்



வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்? நீங்கள் வாங்குவதற்கு முன்னதாகப் பார்த்திருக்கவேண்டும். அது உங்கள் பேரில் தப்புதான்" என்று சமாதானம் சொல்லிவிட்டு "அடிக்கடி சப்தம் போடவேண்டாம். யாருக்காவது தெரிந்தால் நன்றாயிராது" என்று தகப்பனாருக்கும் சொல்லிப் பின் சங்கரன் உலாவப் (Walking) போய்விட்டான்.

எல்லாரும் சமாதானம் அடைந்து சும்மாவிருந்தனர். என்றாலும், இராமஸ்வாமி அய்யர் மாத்திரம் கோபம் வந்தபொழுது, இதையெல்லாம் சொல்லி ஏசிக் காட்டுவார்; அவரால் இந்தச் சங்கதி அந்த வீதிக்காரருக்கெல்லாம் நான்கு நாளில் தெரிந்துவிட்டது. அதுவரை எனக்கு மாத்திரம் தெரிந்திருக்கவில்லை.

V

ஐந்தா நாட் காலையில் பர்வதத்தம்மாள், வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, அன்றையதினம் ஏகாதசியாதலால், காவேரிக்குப் போய் ஸ்நானம் செய்து வரலாம் என்று புறப்பட்டு எங்கள் வீட்டுக்கு வந்தாள்.

நான், "மாமி வாருங்கள், காரியம் எல்லாம் ஆச்சா?" என்றேன்.

அந்த அம்மாள், "ராஜலக்ஷ்மி, இன்னிக்கி ஏகாதசி, காவேரிக்குப் போகிறேன். உனக்குத்தான் நாலு நாளாய் உடம்பு சரியாயில்லையே, என் பெண்ணுக்கும் உனக்கும் வித்தியாசமில்லாமல் கேட்கிறேன், உன் புடவையைக் கொடுக்கிறாயா, தோய்த்துக்கொண்டுவருகிறேன்" என்றாள்.

நான், "மாமி, இப்பொழுது எனக்கு உடம்பு அப்படிக்கு ஒன்றுமில்லை. ஜுரம் கொஞ்சம் குணமுண்டு. தோய்க்கவும் துணி ரொம்ப இருக்கின்றது. உங்கள்கூட நானே வருகிறேன்" என்றேன்.

அதற்கு அந்த மாமி "உன்னைப்போல் நாங்களெல்லாம் நன்றாய்த் தோய்க்க மாட்டோம். அதனால் தான் கொடுக்கமாட்டேன் என்கிறாய். உன் காரியமே காரியம்! பார்த்தால் முத்தம் இட்டுக்கொள்ள வேணும் போலிருக்கிறது. இந்த மாதிரி உடம்புக்கு வந்தால் வேறு யாராவதாயிருந்தால் படுக்கையை விட்டு எழுந்திருக்க மாட்டார்கள். நீ பகலெல்லாம் ஜுரத்தில் கஷ்டப்பட்டு விட்டு விடிய ஜாமத்திற்கே எழுந்து எல்லாவேலையும் செய்து கொள்ளுகிறாய். என்னிடம் எதாவது சொன்னால் செய்து தரமாட்டேன் என்பேனா? எங்கள் வீட்டுப் பெண்ணும் நாட்டுப் பெண்ணும் பார், இன்னும் தூங்குகிறதுகள். நான் எழுந்து வேலை யெல்லாம் செய்துவிட்டுக் காவேரிக்குப் புறப்பட்டேன். உன் ஞாபகம் வந்தது. குடுத்தால் உன் புடவையையும் வாங்கிக் கொண்டு போகலாம் என்று வந்தேன்; நீயா அப்படியெல்லாம் ஒருவருக்கு சிரமத்தைக் கொடுப்பவள்?" என்றாள்.

அதற்கு நான் "மாமி, நீங்கள் அப்படியெல்லாம் நினைக்கக்கூடாது. எனக்கு இப்பொழுது உடம்புக்கு ஒன்றுமில்லை. வீட்டு வேலைகளையெல்லாம் செய்யவில்லையா? அத்துடன் இதுவும் ஒரு வேலை. அப்படிக்குத் தள்ளாமல் இருந்தால் உங்களிடம் கொடுத்தேயிருப்பேன். இதற்காக நீங்கள் மனதில் ஒன்றும் நினைக்கக்கூடாது" என்று சொல்லிவிட்டு நானும் காவேரிக்குப் புறப்பட்டு இருவரும் சேர்ந்து கொஞ்சதூரம் சென்றபின் பர்வதத்தம்மாள் "ராஜலக்ஷ்மி, என் மனதில் எது இருந்தாலும் உன்னிடம் சொன்னால் தான் சமாதானம் ஆகிறது. உன் பேரைச் சொல்லி தினம் நாலு தரம் கூப்பிட்டாலும் பண்ணின பாபம் போகும். உனது காரியங்களையும் புத்திசாமர்த்தியத்தையும் பார்த்தால் மனதிற்கு எவ்வளவோ சந்

தோஷமாகிறது. நீ எனக்குப் பெண்ணாகவா வது நாட்டுப் பெண்ணாகவாவது வாயில்லையே என்று வருத்தமாயிருக்கின்றது. உன்னைப் போலுள்ளவர்களிடம் சகவாஸம் செய்தால் செய்யவேணும்; அல்ப சகவாஸம் செய்வது மானக்கேடுதான். நீ இருக்கும் இடம் தெரி கிறதா? எங்காத்துக் கிழவர் எல்லாரையும் பழிக்கிறார். ஒரு நாளாவது உன்னைப் பழிப் பது அவர் வாயில் வருவதில்லை. நாளுக்கு நாள் உன் ஆம்படையானையும் உன்னையும் புகழ்ந்து கொள்ளுகிறார். ஒரு நாளில்லா விட் டால் ஒரு நாள் அவர் உங்களைப்பற்றி பேசிக் கொண்டிருப்பது உங்கள் காதிற்கும் எட்டியே யிருக்கும்! நான் ஏதோ சமாசாரம் சொல்ல வாயெடுத்தவள் ஏதோதோ பேசினேன். அது அப்படியிருக்கட்டும்; 'தீராத துக்கத்தைச் சொல்லித் தீரு' என்னும் பழமொழிபோல் உன்னிடம் ஒரு சமாசாரம் சொல்லி ஆறவேண் டியிருக்கிறது. உனக்குத் தெரிந்திருக்குமோ என்னவோ? இந்த வீதியார்க்கெல்லாம் தெரிந் திருக்கு'' என்றாள்.

நான் ''மாமி, என்ன சமாசாரம்? எனக்கு ஒன்றுந்தெரியாதே'' என்றேன்.

அதற்கு அந்த அம்மாள் 'அடி ராஜலக்ஷ்மி, உனக்கு இந்த வீதியில் நடக்கிறது ஒன்றும் தெரிகிறதில்லை. வீட்டைவிட்டு வெளியிலே வந்தால்தானே தெரியும்? இல்லாவிட்டால் இந்தக் காலத்துப் பெண்களைப்போல் வம்பு வீணுக்குப்போனால் தெரியும். நீயோ ஒன்றுக் கும் வெளியில் வருகிறதில்லை; போகிறது. நானே சொல்லுகிறேன்' என்று மேற்கண்ட இந்தக் கோமளத்தின் சமாசாரம் அவ்வளவை யும் ஒன்று விடாமற் சொன்னாள்.

அப்பொழுது நான் 'மாமீ, நீங்கள் மூன்று பேரும் இம்மாதிரி மோசம்போனது ஆச்சரிய மாகவே யிருக்கின்றது. நீங்கள் யாராவது ஒரு வராவது சொர்ணைக் கண்ணால் பார்க்காமல் பணத்தை ஏன் கொடுத்தீர்கள்?' என்றேன்.

அதற்கு அந்த அம்மாள் ''அடி ராஜலக்ஷ்மி, நான்தான் பழைய காலத்துப் பொம்மனாட்டி. இந்தக் காலத்துப் பெண்கள் இரண்டு பேரு மாய்த்தான் இதற்குத் தலைப்பட்டது. அவர்க ளுக்கும் தெரியவில்லை பாரேன். ''நான் ஒரு பர்வதம், எனை ஒரு குஞ்சலம், நான் பெத்த மக்களெல்லாம் கொக்கு கொக்கு'' என்று சொல்வார்கள். அது எனக்குத்தான் ஒத்திருக் கின்றது. நான்தான் பர்வதம் என்ற பெயரை மாத்திரம் வைத்துக்கொண்டு ஒன்றுந்தெரியா மல் இருக்கிறேன். என் பெண்ணும் அப்படியே யிருக்கின்றது. அது தான் போகிறதென்றால் வீட்டுக்கு வந்த நாட்டுப்பெண்ணும் அப்படியே யிருக்கின்றது. நான் என் மனதில் இந்த நாலணா போனால் போகிறதென்று சமாதானம் செய்துகொண்டுவிட்டேன். நாங்கள்கொடுத்தது ஒரு சுமங்கலி கையில் தானே கொடுத்தோம்? அதனால் எங்களுக்கு ஒரு பாபமும் இல்லை. நாம் அவளுக்கு மஞ்சள் குங்குமம் வாங்கிக் கொள்ளும்படி அந்த நாலணாவைக் கொடுத் தோம் என்று மனதைத் திருப்தி செய்து கொண்டு விட்டேன். ஆனாலும் உன்னிடம் இந்த அனியாயத்தைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. என் பிள்ளையும் அப்படியே சொல்லிவிட்டான். கிழவர் மாத்திரம் கோபம் வந்த சமயத்தில் ஏசுகிறார்' என்று சொன்னாள்.

அதற்கு நான் ''மாமீ நீங்கள் இனிமேல் துயரப்பட்டுப் பிரயோஜனமில்லை, இந்த நாலு அணாவினால் உங்களுக்கு ஏழைத் தனமும் அந்தக் கோமளத்திற்கு பிரபுத்தனமும் வந்து விடாது. சுவாமி இருக்கிறார் எல்லாவற்றையும் பார்க்க'' என்று சொல்லிச் சமாதானம் செய்து விட்டு வீடு வந்து சேர்ந்தேன்.

"ராஜலக்ஷ்மி நீ சொல்வதுதான் சரியான பேச்சு இதுக்குத்தான் எது இருந்தாலும் உன்னிடம் சொல்வது; இப்பொழுது தான் என் மனசு சமாதானமாச்சு" என்று சொல்லிவிட்டு அவர் வீட்டுக்குள் அந்த அம்மாவும் சென்றாள்.

VI.

அன்று என் கணவர் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு வந்த மேல் அவரிடம் நடந்த சமாசாரங்களைச் சொல்லி 'இதை ஒரு கதையாக எழுதட்டுமா' என்று கேட்டேன். உடனே அவர் வாய் பிடியாமற் சிரித்து "இவ்வளவு வேடிக்கையான சமாசாரங்கள் உனக்குக் கிடைக்கின்றதே, எனக்கு அந்த மாதிரி கிடைக்கிறதில்லையே! உடனே எழுது. உன் கதைகளுக்குத் தகுந்தாற்போல் சகோதரி வி. பாலம்மாளும் சகோதரா வாஞ்சையை விட்டு சகோதரி வாஞ்சைதான் பெரிதென்று நினைத்து உன் கதை போடும் பக்கத்திற்கு பொம்மை போடுகிறாள்; உன் கதைபோடும் மாசத்தில் என் கதையைப் போடாமலும் தள்ளி விடுகிறாள்! இதல்லவா சகோதரி வாஞ்சை என்பது!" என்றார். நானும் எழுதினேன்.

# மார்க்கோ போலோவின் யாத்திரைகள்.

(ஸ்ரீமான் S. R. அனந்த நாராயணய்யர்)

(673-வது பக்கத் தொடர்ச்சி)

## இருபத்தேழாம் அத்தியாயம்.

### அந்தக தேசம்—தார்த்தார் நாடு—ரஷியா.

இதுவரை கடற்கரை யோரமாக விருக்கும் பிரதேசங்களைப்பற்றிச் சொல்லி வந்தேன். இனி, வடகோடியிலுள்ள வேறு ராஜ்யங்களைப் பற்றிச் சொல்லுவேன். அங்கு தார்த்தாரியர் அனேகர் இருக்கின்றனர். அவர்களது அரசனுக்கு கையத் என்று பெயர். அவன் செங்கிஸ்கான் வம்சத்தவனாயினும் ஒருவருக்கும் கீழ்ப்பட்டவனல்லன். அவர்கள் தங்களது முன்னோர்களின் வழக்கங்களையே இப்பொழுதும் அனுசரித்து வருகின்றனர். அவர்களுக்கு நாடா, நகரமா, கோட்டையா, கொத்தளமா கிடையாது. தங்களுடைய அரசனுடன் காடுகளிலும், மலைகளிலும் வன வனாந்தரங்களிலும் வசித்து வருகின்றனர். அவர்கள் தான் சுயமான தார்த்தார்களாம்.

அவர்களிடம் ஒருவிதமான தானியமும் கிடையாது. அவர்கள் மீனும் பாலுமே ஆகாரமாகக் கொண்டு சுகஜீவனம் செய்து வருகின்றனர். ஆயினும், அவர்களிடம் குதிரைகளும், ஆடுமாடுகளும் வேறு இதர மிருகங்களும் மந்தை மந்தையாக விருக்கின்றன. அவர்கள் இருக்கும் பிரதேசத்தில் இருபது கை நீளமுள்ள பெருத்த வெள்ளைக் கரடிகளும், மிகப் பெரிய கரு நரிகளும், காட்டுக் கழுதைகளும், கருத்த சடை மயிரும் பலவிதமான புள்ளிகளுமுடைய ரோண்ட்ஸ் (Rondes) என்று சொல்லப்படும் சிறு மிருகங்களும் பாரோ எலிகளும் இருக்கின்றன. இவ்வெலிகளைத் தார்த்தார்கள் வெகு தந்திரமாய்ப் பிடிப்பார்கள்.

வெயிற் காலத்தில் இந்நாட்டிலுள்ள பெரிய ஏரிகளில் சேறு நிறைந்திருக்கும். அப்பொழுது பிரயாணிகள் அவைகளின் வழிச் செல்லார்கள். இவ்வேரிகளெல்லாம் பதினாலுநாட்

பயணமுள்ள ஒரு பெரிய பாலைவனத்தி லிருக்கின்றன. அப்பாலைவனத்திற்கு அப்பாலிருக்கும் ஜனங்கள் இந்நாட்டில் கிடைக்கும் தோல்களை வாங்க வருகையில், ஒவ்வொரு நாட் பயண முடிவிலும் நாங்கள் தங்கு நிமித்தம் ஆங்காங்கு ஓரோர் மரக் கொட்டகை கட்டியிருக்கின்றனர். இக்கொட்டகைகளிற்றான் அவர்கள் பாலைவன வாசிகளிடம் வியாபாரஞ் செய்வார்கள்.

பனி காலத்தில் அவர்கள் வழுக்குப் பலகைகளின்மேல் பிரயாணஞ் செய்வார்கள். அப் பலகைகளுக்கு ஸ்லெட்ஜ் என்று பெயர். அவைகளுக்குச் சக்கரம் கிடையாது. அவைகளின் அடிப்பக்கம் அகன்று சமனாகவும் மேற் பக்கம் சிறிது சிறிதாகக் குறுகி, கடைசியாக அரை வட்டமாகவும் இருக்கும். அவற்றில் பலகைக்காரனும் வியாபாரியும் தோல் மூட்டையுடன் உட்காருவார்கள். பெருத்த நாய்களைப் போன்ற இரண்டு மிருகங்கள் அவற்றைப் பனிக்கட்டியின்மேல் சரசரவென்று இழுத்துச் செல்லும்.

தார்த்தார்கள் வசிக்கும் இந்நாட்டின் வடகோடியில் "அந்தக தேசம்" என்று ஒரு பிரதேசம் இருக்கின்றது. குளிர்காலத்தின் பெரும் பாகத்தில் அங்கு சூரிய வெளிச்சம் சிறிதும் இல்லாமலிருப்பதினாலும், அங்கு வீசும் காற்று நமது தேசத்தில் விடியற்காலத்தில் வீசும் கொடுங் காற்றைப்போலிருப்பதினாலும் அதற்கு அப்பெயர் இடப்பட்டிருக்கின்றது.

அங்குள்ள ஜனங்கள் வெளுத்துக் குட்டையாயிருப்பார்கள். அவர்களுக்கு அரசன் ஒருவனுமில்லை. அவர்கள் மிருகங்களைப்போல் காலங் கழிக்கின்றனர்.

இருட்டுக் காலங்களில் தார்த்தார்கள் அவர்களது கால்நடைகளைத் திருடிவிடுவார்கள். திரும்புகாலில், தாங்கள் வழி தப்பி போகாமலிருக்கும்பொருட்டு அவர்கள் பால்குடிக்கும் குட்டிகளுள்ள பெண் குதிரைகளின்மேலேறிச் சென்று, அந்தக தேசத்தின் எல்லையில் அக்குட்டிகளைத் தங்களது ஆட்களிடம் ஒப்புவித்துவிட்டு இருள் மூண்ட சமயம் பார்த்து முன் சென்று, தங்களுக் கெதிர்ப்பட்ட கால்நடைகளைத் திருடிக்கொண்டு குதிரைகளைத் திருப்புவார்கள். அவைகள் தங்களது குட்டிகள் இருக்குமிடத்திற்குச் சிறிதும் தவறாமல் வேகமாக ஓடிவந்துவிடும்.

அந்நாட்டில் நீடித்திருக்கும் வெயில்காலத்தில் அவர்கள் தங்களது கால்நடைகளின் சிறந்த தோல்களைச் சேகரித்து வைத்து அவைகளிற் சிலவற்றை ருஷியாவிற்கொண்டு சென்று விற்றுவிடுவார்கள்.

ருஷியாவென்பது வடகோடியிலுள்ள இந்த அந்தக பூமிக்குச் சேர்ந்தாப்போலிருக்கும் ஒரு பெரிய தேசம். அங்குள்ள ஜனங்கள் கிரேக்க கிறிஸ்தவர்கள். அவர்கள்—ஸ்திரீகளும் புருஷர்களும்—அழகுள்ளவர்கள். அவர்கள் தங்களது தேசத்தைச் சார்ந்தாற்போலிருக்கும் மேற்கத்திய தார்த்தாரது அரசனுக்குக் கப்பங் கட்டுகின்றனர். ருஷியாவின் கிழக்குப் பக்கத்தில் தோலும் மெழுகும் விசேஷமாகக் கிடைக்கின்றன. அங்கு வெள்ளிச் சுரங்கங்களுமுண்டு. ருஷியாவானது சமுத்திரம் வரை பரவியிருப்பதாகவும், அச்சமுத்திரத்தில் ராஜாளிகளும் வல்லூறுகளுமுள்ள தீவுகளிருப்பதாகவும் நான் கேள்விப்பட்டேன்.

(முற்றிற்று).

---

# ஹென்றி பெஸ்டலோஸி.

## HENRY PESTALOZZI.

## ஒரு பெரிய உபாத்தியாயர்.

(ஸ்ரீமான் S. R. A. அய்யர்)

1827-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 11-ந் தேதி ஸ்விட்ஜர்லாந்திலுள்ள நியூஹாப்வ் (Neuhof) என்னுமூரில் தமது உடல், பொருள், ஆவியாகிய மூன்று சாதனங்களையும் தமது தேச சேவையிலேயே செலவழித்தவரும், குழந்தைகளிடம் பெற்றோரைப்போன்ற அன்பு பூண்டு, தமக்கு நேரிட்ட பலவிதமான பெருத்த கஷ்டங்களைப் பொருட்படுத்தாது அவைகளுக்கு ஈடுகொடுத்து மிகுந்த மனவலியுடன் சலியாது உழைத்து வந்தவரும், குழந்தைகளைப்போல கபடமற்ற சுபாவமுள்ளவருமாயிருந்த ஒரு மஹான் பூதவுலகை விட்டுப் புனிதவுலகெய்தினார். இவ்வாறு மிகப்பாடுபட்ட இந்தப் பெரியவருக்கு ஹென்றி பெஸ்டலோஸி யென்று பெயர். இவர் தம் காலத்தவர்க்கும் பிற்காலத்தவர்களுக்கும் செய்துள்ள உபகாரங்கள் கணக்கிட முடியாதவை.

"பிரதம வித்தைதான் பிரஜாபிவிர்த்தியை உண்டாக்கும்" என்று தற்காலம் உலகத்தார் ஒருங்கே கோஷித்துவரும் கொள்கையைப் பாவச் செய்வதிலேயே இப்பெரியார் தமது சகலத்தையும் செலவழித்து வந்தார்.

இவர் 1746-ம் வருஷம் ஜனவரி மாதம் 12-ந் தேதி ஸ்யூரிச் (Zurich) என்னும் நகரிற் பிறந்தவர். இவரது ஐந்தாம் வயதில் இவரது தந்தை தேகவியோகமாயினார். ஆகவே இவரது தாயே இவரை பால்யத்தில் ரக்ஷிக்கவேண்டியதாயிற்று. அந்த அம்மணி இவருக்கு அதிகச் செல்லங் கொடுத்து வந்ததினால் இவர் ஆண்பிள்ளைகளுக்குரிய தைரியம், திறமை முதலிய சாகச குணங்களுடன் விளங்கவில்லை. இதைக் கவனித்த இவரது பாலிய சினேகிதர்கள் இவருக்கு 'பேதைப் புரத்துப் பெருமான்' (Harry Oddity of Foolsborough) என்று ஹாஸ்ய நாமமிட்டிருந்தனர்.

பாலபருவம் நீங்கி இளங்குமாரனுனபொழுது இவர் ரோஸோ (Rousseau) வின் எமிலி (Emile) என்னும் நூலை ஓதினார். அப்போது இவருக்கு அக்காலத்து ஜனங்கள் வீட்டிலும் பள்ளியிலும் படித்துவந்த விஷயங்களிற் சிறிதும் பயனில்லையென்று தெரிந்தது.

1769-ம் வருஷத்தில் இவர் தமக்கு ஏழு வருஷம் வயதில் மூத்தவரான ஆன் ஸ்கூலேதஸ் (Anne Schulethess) என்னும் மாதை மணந்து அவருடன் நாற்பது வருஷ காலம் இல்லறம் நடாத்தி வந்தார். அந்த அம்மாள் தன்னாயுள் பரியந்தம் இவருக்கு மாறாத உதவி புரிந்து இவரைப் பாதுகாத்து வந்தார்.

இவர் முதலில் புரோஹிதராகவும் (Clergyman) பின்பு தர்ம சாஸ்திரியாகவும் (Lawyer) அதன்பின் விவசாயியாகவும் உழைத்துவந்தார். அவ்வாறு உழைத்துவருகையில், மனிதர் படும் கஷ்டங்களைக் கண்டு மனம் கசிந்துருகி, பின் உத்தமியான தனது இல்லறத் துணைவியின் சகாயங் கொண்டு, தமது வீட்டிலேயே ஒரு "தரித்திரர் சாலையம்" ஏற்படுத்தி, அதில் அக்கம்பக்கத்துக் கிராமப் பிள்ளைகளைச் சேர்த்து வைத்தார். அந்தச் சாலையம் ஏற்படுத்திய கொஞ்ச காலத்திற்குள் வீடு வாசல், சுற்றம் முதலியவை யொன்றுமில்லாத ஐம்பது பிள்ளைகள் அங்கு வந்து சேர்ந்தனர். அவர், குடியானவர்கள் ஈனஸ்திதியிலிருந்து உயர்ந்து நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமானால் அவர்களது குழந்தைகளுக்கு இளமையிலிருந்தே கல்வி கற்பிக்கவேண்டுமென்று தெளிவாயறிந்து, தமக்கு எப்

படிப்பட்ட கொடிய கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்திடினும், தமது ஆயுள், ஆஸ்தி, சக்தி முதலிய அனைத்தையும் செலவழித்து, அவர்களுக்கு அவரவர்கள் இருந்த வீட்டிலேயே கல்வி கற்பிப்பதற்கு தகுவான வழி தேடவேண்டுமென்று தீர்மானித்தார்.

மனிதர் தங்களது சரீரங்களை வளர்த்துப் பாடுபடவும் பஞ்சேந்திரியங்களை உபயோகிக்கப் பழகவும் வேண்டுவது அத்தியாவசியம் என்று அறிந்து, இவர் தம்மிடம் வந்து சேர்ந்த குழந்தைகளுக்கு விவசாயமும் கைத்தொழிலும் கற்பித்தார்.

ஆனால் சில குழந்தைகளின் பெற்றோர்கள் சிரத்தைக் குறைவினாலும், இவருக்கு அக்குழந்தைகளை அடக்கியாளப் போதுமான திறமையில்லாமல் இருந்ததினாலும் இந்தச் சாலையம் நெடுநாள் நடைபெறவில்லை. இவரிடம் சேர்ந்த குழந்தைகள் செல்வச் செழிப்பைக் கண்டதே அறியாதவர்கள்; உடுக்கப் புதிய ஆடை கிடைத்தவுடன், சாலையத்தை விட்டு ஓடிவிடுவார்கள். இதனால் பெஸ்டலோஸிக்குப் பெருத்த நஷ்டமுண்டாகிக் கடனும் ஏற்பட்டு விட்டது. ஆகவே இவர் தமது சாலையத்தைக் கலைத்துத் தமது நிலங்களையும் கடன்காரருக்கு ஒப்புக் கொடுத்துவிட்டார். இவ்வாறு இவரது பிரதம பிரயத்தனம் வீணாய் விட்டது.

இதன்பின், 1798-ம் வருஷம் வரையிலும் இவரைப் பலவிதமான கஷ்டங்கள் ஒன்றன் பின்னொன்றாகப் பிடித்தன; சோற்றுக்கும் துணிக்கும் வருந்தியும், மனத்தளர்ச்சியாலும் இவர் தமது காலத்தைக் கழித்தார். இக்காலத்தில்தான் இவர் வித்தியா விஷயமான பல கிரந்தங்களை இயற்றினார். அவற்றில் முக்கியமானவை "ஒரு தபஸ்வியின் மாலைப்பொழுது", "லியோனார்டும் ஜெர்ட்ரூடும்", "கிறிஸ்தோப்பும் எலிஸாவும்" என்பன. கதை, கற்பனை, சம்பாஷணை ஆகிய இவைகளின் மூலமாய் பெஸ்டலோஸி இந்நூல்களில் தமது கொள்கைகளைச் சித்தாந்தப்படுத்துகிறார். குழந்தைகளின் குலாசாரங்களையும், சுபாவங்களையும் நன்றாக அறிந்து, அவைகளை அனுசரித்து, இடைவிடாமலும், படிப்படியாகவும் அவர்களது சகல சக்திகளையும் விர்த்தி செய்யவேண்டும்; தாமாகவே உழைத்து, அவர்கள் கண்ணோட்டமும் கைப்பழக்கமும் பெறவேண்டும்; இவ்வாறு, அவர்களுக்குப் பிற்காலம் ஜீவனம் செய்வதற்கு ஒரு வித்தையைக் கற்பிக்கவேண்டியது அவசியம்; என்றாலும், சித்தசுத்தி, அறநெறி, கண்ணியம் முதலிய குணங்களை அவர்களுக்கு உண்டாக்குதலும் அவர்களை அன்பும், நீதியும் தயாளகுணமும் உள்ளவராக ஒழுகப் பழக்குதலுமே கல்வியின் முக்கியமான உத்தேசம்; என்னும் இவையே அவரது கொள்கைகள்.

மேற்கூறிய கிரந்தங்களால் இவருக்குப் பெரும் புகழும் உண்டாயின. கொயதே (Goethe), விலாண்டு (Wieland), ஹெர்டர் (Herder), பிஷ்டே (Fichte) முதலிய மஹாமேதாவிகள் இவரை வெகுவாக மதித்து இவரது நட்பையும் கோரினார்கள். பிரான்ஸ தேசத்தார் இவரைத் தமது நாட்டுப் பெரிய மனிதர்களுள் ஒருவராக நியமித்துக் கௌரவப்படுத்தினர். இவரது கிரந்தங்களைப் படித்த பிஷ்டே என்பவர் இவரது கொள்கைகளைச் சாஸ்திரீயமாய் ஒழுங்கு செய்து எழுதி வெளியிட்டால் உலகுக்கே பெருத்த உபகாரமாகுமென்று தெரிவிக்க, இவர் 1797-ல் "மனிதரது சுபாவத்திற்கும் அவர்களுடைய அபிவிர்த்திக்கும் உள்ள சம்பந்தம்" என்ற ஒரு கிரந்தம் எழுதினார்.

அப்போது ஹெல்வீஷியா நாட்டு அதிகாரிகள், பிரான்சுக்காரர் தீயிட்டுக் கொளுத்தக் குடியிருக்க வீடில்லாமல் பாழாக்கிய ஸ்டான்ஸ்



(Stanz) என்னும் ஊரில் வீதிவீதியாய்த் திரிந்துகொண்டிருந்த அனாதைகளைக் காப்பாற்ற வரவேண்டுமென்று இவரை வேண்டிக்கொள்ள, இவர் அவ்வூருக்குச் சென்றார். கஷ்டங்களும் அசௌகரியங்களும் மலிந்து கிடந்த அவ்வூரில் எண்பது பிச்சைக்காரப் பிள்ளைகளைக் கட்டிக்கொண்டு பெஸ்டலோஸி வெகு பாடுபட்டார். அவர்களைப்பற்றி இவர் பின்வருமாறு எழுதியுள்ளார் :—

"அந்தப் பிள்ளைகளில் அநேகர் என்னிடம் வந்தபோது மிகக் கேவலமான ஸ்திதியிலிருந்தனர். அவர்கள் மிகக் கெட்ட சொறி சிரங்குகளினாற் பிடிக்கப்பட்டவர்களாகவும், ஒரு அடிகூட எட்டி வைத்து வைக்க முடியாதவர்களாகவும் இருந்தனர். வேறு சிலரது மண்டைகள் அழுகிக்கொண்டிருந்தன. அவர்கள் உடுத்திருந்த கந்தைகளில் சீலைப்பேன்களும் அழுக்குமே நிறைந்திருந்தன. அநேகர் எலும்புந் தோலுமாயிருந்தனர். அவர்களது முகம் இருண்டு கண்களின் ஒளி மழுங்கியிருந்தது. அவர்களிற் சிலர் பிச்சைக்கார வேடம் பூண்டு மோசஞ் செய்தே காலம் கழித்தவர்கள். அவர்களது முகத்தில் விவேகங்களுக்குள்ள குறிகள் ஒன்றுமே யிருக்கவில்லை. துர்த்தசையினால் பிடிக்கப்பட்ட மற்றுஞ் சிலர் பொறாமையும், பயமும் நிறைந்தவர்களாய் ஒருவரிடமும் நம்பிக்கையும் அன்புமில்லாதவராய்த் தோன்றினர்."

பெஸ்டலோஸி, தாம் அவர்களுக்குக் கற்பிக்க உத்தேசித்திருந்த விஷயங்களை அவர்கள் எளிதிற் கற்குமாறு ஒழுங்குபடுத்திக்கொண்டு, அவர்களிடம் அன்பும் நம்பிக்கையும் பாராட்டிவர, கொஞ்சக் காலத்தில் அவர்களது கெட்ட சுபாவமெல்லாம் மாறிவிட்டது. அப்போது இவரிடம் சேர்ந்த பிள்ளைகளைக் கண்ணுற்றவர்கள் அவர்கள் க்ஷேமமாகவும், அதிதீவிரம் வளர்ந்தும், நிறம் வேறுபட்டு மிருக்கக் கண்டனர். அக்குழந்தைகளும், "வீட்டிலிருப்பதைவிட இங்கிருப்பதுதான் எங்களுக்கு சுகமாகவிருக்கின்றது" என்றன. இந்தப் பெரிய ஆச்சிரமத்தை நடத்திவருகையில், பெஸ்டலோஸிக்குக் குழந்தை சுபாவம் இன்னதென்று சாங்கோபாங்கமாகத் தெரிந்ததுமன்றி, சிறுவருக்குக் கல்வி கற்பிக்க முன் வருவோர்க்கு அந்த ஞானம் அத்தியாவசியமானது என்றும் பட்டது. இந்த ரகசியத்தை இவர் தமக்குச் சமயம் வாய்த்தபோதெல்லாம் தம் காலத்தவர்க்கு வற்புறுத்தி வந்தார். 1799-ம் வருஷத்தில் பிரஞ்சுக்காரர் திரும்பவும் இந்தப் பிரதேசத்தைப் பிடித்து இவரது பள்ளிக்கூடத்தையும் ஒரு சைனிய ஆஸ்பத்திரியாக்கிக்கொள்ளவே, இவர் அதுவரை பட்ட பாடெல்லாம் வீணாகிவிட்டது. இவரும், அச்சமயம் தமது தேகம் மிகவும் களைத்து மெலிந்திருந்தது கண்டு, அருகாமையிலிருந்த மலைப் பிரதேசங்கள் சென்று இளைப்பாறினார். ஆனால் லோகோபகாரமே கண்ணாயிருந்த இவரும் இளைப்பாறுவதுண்டோ? இல்லை. மலைகளிற் கொஞ்சக்காலம் மாத்திரமே கழித்து விட்டுப் பின், இவர் பெர்ன் (Berne) நகருக்கு அருகேயுள்ள பர்க்டார்ப் (Burgdorf) என்னும் ஊரிலும், இவர்டூன் (Yverdun) என்னும் ஊரிலுஞ் சென்று பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தார். அவைகளின் கீர்த்தி ஐரோப்பாவெல்லாம் பரவியது. வித்தியாபிவிர்த்தியில் கண்ணுங் கருத்துமாயிருந்தவரெல்லாம், தங்களது வேட்கையை ஞானசாகரமான இவர்டூனிலேதான் தீர்த்தல் வேண்டுமென்று நினைத்து, நம்மவர் தீர்த்த யாத்திரை செய்வதுபோல, மூலைமுடக்குகளிலுமிருந்து இவர்டூனுக்கு யாத்திரை செய்யலாயினர். இவர்களிற் சிலர் கடலுக் கப்பால் நெடுந்தூரத்திலிருக்கும் அமெரிக்காவிலிருந்தும் வந்தனர்.

கொஞ்சக்காலம் கழிந்தபின், இவரது உதவி உபாத்தியாயர்கள் ஒருவரோடொருவர் சண்டை சச்சரவுகள் செய்துகொள்ள இந்தப் பள்ளிக்கூடமும் க்ஷீணித்துக் கலைய ஆரம்பித்துவிட்டது. இதைக்கண்டு மனந்தளர்ந்து கவலையுங்கொண்டவராய் பெஸ்டலோஸி மிகவும் வருந்தினார். இச்சமயம் உதவியின்றி இவரது வாழ்க்கைத் துணைவியும் பரலோகம் சென்றுவிட, பெஸ்டலோஸி, தமக்கு இனி வரக்கூடிய துக்கம் வேறொன்றுமில்லை யென்று நினைத்துத் தமது சொந்த ஊராகிய நியூஹாப்புக்கு வந்து சேர்ந்தார்; அங்கு வந்தபின் "ஹம்ஸத்வனி," என்று ஒரு நூல் எழுதினார்; அதில் தமது சரித்திரத்தையும், தம் வித்தியா விஷயமாகக் கொண்டிருந்த சித்தாந்தங்களையும் விளக்கியுள்ளார். 1827-ம் வருஷம் பெப்ருவரி 17-ஆ இவர் மண்ணுலகைவிட்டு விண்ணுலகெய்தினார்; இக்கற்றுக் கவனிப்பாரின்றிக் கிடந்த ஏழைகளின் நிலைமையை உயர்த்த வேண்டுமென்றே கண்ணாயிருந்தவரும், தெய்வத்துக்குச் சமானமான இளங்குழவிகளின் நன்மையையே உத்தேசித்துக் கஷ்டங்களும் துக்கங்களும் மேன்மேலும் வந்தபோதும் அவைகளைப் பொருட்படுத்தாது எக்காரியங்களிற் சிலவற்றை நிறைவேற்றியும், மற்றுஞ் சிலவற்றை நிறைவேற்ற முடியாமலும் உழைத்துவந்த இந்த மஹானது ஆயுள் அன்றையதினம் முடிந்தது.

தமது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் பெஸ்டலோஸி, பின்வருமாறு எழுதினார்:—

"முப்பது வருஷகாலம் நான் கொடிய தரித்திரத்திற்கு ஆளாகி, இன்னது செய்வதென்று தெரியாமல் தவித்துவந்தேன். அப்போது, உயிர் தரிப்பதற்கு அத்தியாவசியமான அன்ன வஸ்திரங்களுமின்றித் தத்தளித்தேன். தரித்துக்கொள்ள ஒழுங்கான உடையின்மையால், என்னைப் போன்றவர்களது சங்கத்தையும் துறந்தேன். எவ்வளவோ நாள் சோறின்றிப் பட்டினி கிடந்திருக்கிறேன்; பரம ஏழைகளுங்கூட சுகமாக உட்கார்ந்து நிதானமாக போஜனம் செய்வதைப் பார்த்துக்கொண்டே ஒரு ரொட்டித் துண்டைத் தின்றுகொண்டு வழி நடந்து சென்றிருக்கின்றேன். நான் இந்தக் கஷ்டங்களைப் பட்டதற்கும், இன்னும் படுவதற்கும் காரணம், ஏழைகளுடைய ஸ்திதியை உயர்த்துவதற்கான எனது ஏற்பாடுகள் சபலமாகவேணுமென்ற எனது நோக்கமேயன்றி வேறொன்றுமல்ல."

இவரது சமாதியின்மேல் நாட்டிய கல்லில் ஆர்கா (Argau) நகரத்தார், "எல்லாம் பிறர்க்கு; [illegible] தமக்கு" என்று வரைந்திருக்கின்றனர். இது இவரது குணத்தை உள்ளபடி உரைக்கின்றதல்லவா?

சுருங்கச் சொல்லின், "புத்திக்கேற்ற படிப்பு" என்பதே பெஸ்டலோஸியின் கொள்கை. வித்தியார்த்தியின் சொந்த அனுபவமே அஸ்திவாரமாகக் கொண்டு எளிதில் விளங்கும் அம்சங்களிலிருந்து படிப்படியாய்க் குழந்தைகளுக்கு வயது முதிர முதிரக் கடினமான விஷயங்களை அவர்களுக்குப் போதிக்கவேண்டுவதும், குழந்தைகளின் மனோபாவங்களுக்கு ஒரு சமயம் பங்கமும் வாராமல் அவைகளை வெகு பய பக்தியுடன் காத்து வரவேண்டியதும் உபாத்தியாயரது கடன். வீட்டிலுள்ள சௌகரியங்களனைத்தும் பிள்ளைகளுக்கு அவர்களது பள்ளிக்கூடங்களில் இருத்தல் அவசியம். உபாத்தியாயர் தமது வித்தியார்த்திகளுக்குத் தகப்பனைப்போல அன்புடன் வித்தியாப்பியாசம் செய்விக்க வேண்டும். என்ற இவ்வுண்மைகளையும், இவைபோன்ற வேறு உண்மைகளையும் பெஸ்டலோஸி அறிந்தும் சலிப்பின்றித் தமது வாழ்நாள் முழுவதும் தம காலத்தவர்க்குப் போதித்து வந்தார்.

இவற்றை அமைவுறக்கொண்ட அவரது சீடரான ப்ராடரிக் ப்ரிபெல் என்பவர், தமது வதலோத்யானம் (Kinder Garten) என்னும் ஸ்தாபனங்களில் எடுத்தாண்டிருக்கின்றார்.

# வறுமையும் வாணாளும்.

(ஸ்ரீமதி ரா. கோமதியம்மாள்).



பெறற்கரிய இம்மானிட யாக்கையை யிவ்வுலகிடையே தந்தும் அவ்வான்ம கோடிகளுய்யுந் திறனை யுள்ளிருந்தோது முண்மைப் பொருளை ஒருங்குடன் வணங்கி உள்ளவாறியம்புவாம். நமது வாழ்நாளில் பலவற்றுள் வறுமையு மொன்றாகும். அஃது எத்தன்மையது? என நம் மனநிலையிற் சிறிது இடந்தந்து ஆலோசிக்கலாமல்லவா? வறுமை யென்னும் தோன்றாப் பொருள் உலகியலிலுள்ள யேனைய யெப்பொருளையு மெவ்விடத்துங் கிடைத்தற்கியலாத பெருவளமுடையது. இதனை யனுபவிக்கு மருந் திறல் அறிவுடையா ரொருவரன்றி மற்றையரால் ஆகாவாம். அறிவுடையார் ஆண்பாலிலும் பெண்பாலிலுமுளர். எந்நூலெடுத்தோதினும் உயிரும் உடலுமென வும் சதியும் பதியும் உடனிருந்து இன்ப துன்பமிசைந்தன்மை. திருட்டாந்தமாக, ஜானகி-ராமன், நள-தமயந்தி, அரிச்சந்திர-சந்திரமதி, இப்போற்றினர் வறுமைக் கடலை வாய்மை தவறாது ஆற்றினரன்றோ? அப்பால் அன்னவர் அடைந்த அரும்பேறு யாவரடைந்தனர்? அல்லாமலும் பேரறிவு படைத்த நின்மணியான திலகவதியார், காரைக்காலம்மையார், ஔவையார், மங்கையர்க்கரசியார் இவர்பாலுள்ள வறுமையும் ஓயாப் புகழ் நிறுவியதன்றோ? நமது அன்பார்ந்த அரிய சகோதரிகள் தம்மாலாய சிறிய வரங்கள் பதிபக்தி, மாதுர் பிதுர் பக்தி, பொறை, தானம், ஜீவகாருண்யம், அறிந்தடங்கும் குணம் இதுவேயென அறியாதவருளரோ? இப்போறங்கள் இவ்வறுமையாய காலத்தே அதி நுட்பமாக ஆராய்வதற்கும் அறிதற்கரிய பலனாக நமது முழுமுதற் பெருமானை வலிதில் அழைத்தற்கும், வந்து அருள் சுரத்தற்கும் ஆகிய இக்கற்காலத்தை சேக்கிழார் பெரிய புராணத்தில் எல்லா விடங்களிலும் சொன்மாரி பொழிந்திருக்கின்றார். அத்தகைய சோதனை மனித வாழ்வை சுத்தி செய்கின்றது. ஆணவ மலங்கள் அறுபடுகின்றன. பிறவிப் பெருங் கடல் எரிந்து உறிஞ்சப்படுகின்றன. இத்தகைய ஓர் நற்காலமெனக்கு எம்பெருமான் அளித்ததற்கு யான் யாது கைம்மாறு செய்குவன்.

ஆனால் யான் இன்னும் எனது அனுபவம் ஒன்றைச் சுருக்கியுங் கூறுவது அவசியமாகும். எனது நாதர் சொற்பகாலத்திற்குமுன் தனவா தரா யிருந்தபொழுது சிலகாலாவது அவர் பணி புரியாப் பாதகியாயிருந்தேன். தற்போது சிறந்த வாழ்வும் பெருந்த பணியும் இக்கி

உணர்வும் அரும் பெறல் ஞானமும் மறுமை போவென ஐயுறுமா றெய்தினோர்.

எமது அருங்குண நங்கைமீர்! டாம்பீகம், பெருஞ் செலவு, கோபம், மோகம், பேருணவு, பிணி, மடமை, சோம்பல் இவை வறுமை யாசனைக் காணில் வழிவிலகியோடி யிறக்கின்றன. பொருள் பின்னிடாது முன்னிட்டு முற்றுங் காக்கின்றன.

செய்யுள்.

உறுதியா லெனது நெஞ்சே
பேசருஞ் சுவர்க்க மென்னு
முறுதியா மூலனை யாமு
முண்மையா யடைந்த போது
மறதியாய் மீளா வண்ண
மடைவதே யில்லை யென்றால்
வறுமையாய் வாழ்ந்த லெல்லா
வழுவினையுங் காணு மாமே.

என்பதனாற் றெளிக.

எமதன்னைமீர்! யான் ஓர் சிறிய பெண்பால். அறிவாலும் அன்பாலும் முதிர்ந்த எமது நாதர் முதல் மனைவியாரின் அரிய வியாசங்கள் பலவுள. அவைகள் உலகினர்க்காக இச் சிந்தாமணியில் வெளியிடப்பெறும். தானறிந்தமை தக்கோர் அறிதல உலக வழக்கு. அது தான் என் மனோநிலையும்.

# பலமணிக் கோவை.

ஸ்ரீமான் V. நடராஜன், B.A., L.T.

(640-வது பக்கத் தொடர்ச்சி).

## 30. இரும்பு நீராவிக் கப்பல் மிதப்பது எவ்வாறு?

முன் காலத்தில் கப்பல் மிதக்க வேண்டியிருப்பதால் மரத்தால் செய்தால் தான் மிதக்கும் என்று எண்ணியிருந்தார்கள். ஆனால் இப்போது பெரிய நீராவிக் கப்பல்கள் எல்லாம் எஃகுப் பாளங்களால் செய்யப்பட்டவை. இரும்புத் தகடுகளால் கூடாகச் செய்திருப்பதால் உள்ளே ஆகாயம் நிரம்பியிருக்கும். ஆகலால் கப்பலின் பரிமாணம் முழுதும் அதேயளவு ஜலத்திற்குச் சரிக்குச் சரி லேசானது. கூடான கப்பல் உள் அதிக சாமான்களை நிரப்ப நிரப்ப உள்ளிருக்கும் ஆகாயம் (காற்று) வெளியே போய்விடக் கப்பல் கனம் அதிகமாகிறது. ஜலத்தில் சற்று அமிழ்ந்திருக்கும் வேகு அதிகமாக சாமான்கள் நிரப்பி விட்டால் கப்பல் ஒரே யடியாக அமிழ்ந்துபோம். இவ்விதம் அமிழ்ந்து போகாமல் இருப்பதற்கு ஒவ்வொரு கப்பலிலும் வெளிப்புறம் பட்டையாக ஒரு கோடு போட்டிருக்கும் இந்தக் கோடு வரையில் கப்பல் அமிழ்ந்திருக்கலாம். அதாவது அவ்வளவு சாமான் ஏற்றலாம். அந்தக் கோட்டிற்கு பிளிம்சால் கோடு (Plimsoll's Line) என்று பெயர். கப்பலில் அதிக கனம் ஏறியிருக்கும்போது அந்தக் கோடு வரையில் ஜலமட்டமிருக்கும் கப்பலில் பளு இறக்கியவுடன் கப்பல் உயர மிதக்கும். அப்போது ஜலமட்டம் அக்கோட்டிற்கு வெகு கீழாக இருக்கும்.

(தொடரும்)

# இரண்டாம் ஆண்டு முதல் சந்தாதாரராகச் சேர்ந்திருக்கும் அபிமானிகளுக்கு.

நம் சிந்தாமணி 1924ளு ஆகஸ்டு மீ முதல் ஆரம்பித்து முறையே வெளி வந்து கொண்டிருப்பினும் முதல் ஆறு மாதத்திய இதழ்கள் முற்றும் கைவசமில்லாமல் செலவழிந்து விட்டன. 1925 பிப்ரவரி மீ முதற் கொண்டு பத்திரிகைகள் யாவும் கைவசமிருக்கின்றன. அவைகளிலிருந்தே பல அரியவியாசங்களும், செலிமாபேகம் என்னும் மனதைக்கவரும் கதைத் தொடர்ச்சியும், பத்திராதிபரால் எழுதப்பட்ட ஹேமமணிபோன்ற பல சிறுகதைகளும் ஆரம்ப மாதகால் அந்த பின் ஆறு இதழ்களையும் வாங்கிப்படித்துக் களிப்பீர்களாக. இரண்டாம் வாலியத்தின் 5-வது இதழில் முடிவுபெறும் செலிமாபேகம் என்னும் இனிய கதையின் பூர்வோத்திரத்தை அறிய விருப்புற்றுப் பலபேர்கள் முதலாண்டின் எல்லா பிரதிகளையும் கேட்பதால் இவ்வறிவிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன. இவ் ஆறு தனிப்பிரதிகளும் தபால்சார்ஜ் உள்பட ரூ. 2-8-0க்கு அனுப்பப்படும்.

முதல் வருஷ ஆரம்பத்தின் ஆறு பிரதிகளும் தேவையென (1924 ஆகஸ்டிலிருந்து 1925 ஜனவரிவரை) 500 ஆர்டர்கள் பதிவானதும் அவை அச்சிடப்படும்.

மானேஜர்,
"சிந்தாமணி" ஆபீஸ்,
லஸிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாப்பூர், சென்னை.

---

ஸ்ரீமான் க. சா. அ. ராம. சண்முகம் செட்டியார் அவர்கள் குரோதன ஐப்பசி 3-ம் தேதியில் மூவாரிலிருந்து எழுதுவது.

அன்பு மிக்க சகோதரியே!

இப்பவும் தங்களால் நடத்தப் பெறும் "சிந்தாமணி"யை நம் அன்பர்கள் மூலம் ஆரம்பம் முதல் கண்ணுற்று வந்திருக்கிறேன். ஆயினும் தங்கள் பத்திரிகையை ஆதரிக்கவேண்டு மென்ற அவாமிகுதியால் நான் ஒரு சந்தா தாரராகச் சேரவெண்ணி இன்று சந்தாவை யனுப்பி யிருக்கிறேன். முறையே பத்திரிகையை யனுப்பி வைக்கக்கோருகிறேன்.

---

ஸ்ரீமான் P. சின்னத்தம்பி அவர்கள் 9—1—26ல் செங்கலில் இருந்து எழுதுவது.

இப்பூதலத்தின் கண்ணுள்ள பல நாடுகளுக்கோர் திலகம்போல் விளங்கும் நந்தமிழ் நாட்டின் கண்ணுள்ள ஜனசமூகத்திற்கு பிரதியுபகாரங்கருதாது தம் கடமையை அன்புடன் புரிந்து வரும் சகோதரி ஸ்ரீமதி பாலம்மாள் அவர்கட்கு எனது அன்பார்ந்த வந்தனம்.

நமது தாய்நாட்டின் க்ஷேமத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அதிலுதித்துள்ள பெண் மணிகளின் முன்னேற்றத்திற்கும் அரு அதிகப் பிரயாசையுடன் தங்களால் வெளியிடப்படும் "சிந்தாமணி" என்னும் சிறந்த உயர்தர மாதாந்தப் பத்திரிகையின் சில இதழ்களை யான் வாசித்தேன். இப்பத்திரிகை தமிழ்நாட்டின் பெண் பாடசாலைகளுக்கும் வீட்டிலுள்ள ஒவ்வொரு பெண்மணிகளுக்கும் ஓர் இன்றியமையாத வஸ்துவாயும் அவர்கள் தங்கள் தேச நிலையை கவனித்து அதன் முன்னேற்றத்திற்குழைக்க ஒரு முக்கிய காரியமாகவும் உதவு மென்பதை அறிவாளிகள் அனைவரும் உணர்வார்களென்பதற்கு சிறிதும் ஐயமில்லை. தங்களால் எய்தப் பெறும் பேருபகாரத்திற்கும் இந்தியப் பெண்மணிகளை மகிழ்வித்தும் சிந்தாமணியின் நெடுங் கால வாழ்விற்கும் கடவுள் அருள் புரிவாராக.

### தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார்:—

20—1—1926.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபமுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ஸ்ரீராமருடைய மகிமையை "ஸுபோதராம சரிதம்" என்னும் ராமாயண கதாரூபமாக ஸம்க்ஷிப்த ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமச்சந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச் செய்திருனென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

### (ஒரு சகோதரர் எழுதுவது.)

அம்மா,

தமிழகக்கோரும் அவசியம் அலர்ந்திருக்க வேண்டிய தங்கள் "சிந்தாமணி" நாளுக்கு நாள் நல்வளர்ச்சி யுறுவது கண்டு மகிழ்கிறேன். அதில் தாங்கள் எழுதிவருகிற கதைகளிலே பெண்கள் விசேஷப் பிரியங்கொள்ளுகிறார்கள்.

### (ஸ்ரீமதி ஆர். சி. நாயுடு, தென்னாப்பிரிகா, எழுதுவது.)

ஸ்ரீமதி சகோதரிக்கு வந்தனம்.

'சிந்தாமணி' யென்னும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகையை யான் வாசித்துக் களிப்புறுகிறேன். என் போன்ற வெளிநாட்டிற் பிறந்த பெண்மக்களுக்கு தாய் பாஷையை வாசிக்கவும், உபாயமாகக் கற்றவர்கள் அதை விருத்தி செய்து கொள்ளத்தக்க சௌகரியமும் கிடையாது. ஆதலால் பெரும்பான்மையாய் அம்பாஷையைக் கைவிட்டு இதர பாஷையைக் கைக்கொள்ளுகிறார்கள். தாங்கள் மெத்த பிரயாசை யெடுத்து வெளியிடும் "சிந்தாமணி" தமிழ்நாட்டிற்கு அளவு கடந்த நன்மையைச் செய்வதன்றி வெளிநாட்டிலுள்ள எங்களுக்கும் மிகப் பிரயோஜனமுள்ளதாகவுமிருக்கிறது.

### 4-8-26 ல் F. M. S விருந்து ஸ்ரீமதி சொர்ணலக்ஷ்மி எழுதுவது:—

சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

தாங்கள் பிரயாசை எடுத்து இயற்றிவரும் 'சிந்தாமணி'யை வாசிக்க வாசிக்க அளவு கடந்த ஆனந்தத்தையும் உற்சாகத்தையும் கொடுத்து வருகின்றது. தமிழ் நாட்டிற்கு இத்தகைய பெருமையைச் செய்துவரும் ஓர் பெண்மணியை நாங்கள் சகோதரியாக அடையப் பெற்றது நாங்கள் செய்த புண்ணியமே. தமிழ் நாட்டிலுள்ள பெண்களுக்கு மாத்திரமேயல்லாது வெளிநாடுகளிலுள்ள எம்போன்ற பெண்மக்களுக்கும் பெரிதும் நன்மையைச்செய்து வருவது தங்களின் [illegible] ஆகும். எல்லாம் வல்ல ஈசன் தங்களின் முயற்சிக்கு யாதொரு விக்கினமுமின்றி செவ்வனே நடைபெற அருள்புரிவாராக.



## சிந்தாமணி பைண்ட் வால்யூம்கள்.

1925 பிப்ரவரியிலிருந்து 1925 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்டுபுத்தகம் ரூ. 3-8-0.

1925 ஆகஸ்டிலிருந்து 26 ஜனவரிவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் ரூ. 3-8-0

1926 பிப்ரவரியிலிருந்து 26 ஜூலைவரை ஆறு இதழ்கொண்ட பைண்ட் புத்தகம் ரூ. 3-8-0

1925 ஆகஸ்டு முதல் சந்தாதாரராகவுள்ளவர்களுக்கும் 26 பிப்ரவரியிலிருந்து சந்தாதார் ஆனவர்களுக்கும் மட்டும் மேற் கண்ட ஒவ்வொரு பைண்ட் புத்தகமும் 3-ரூபாய்க்கு அனுப்பப்படும்.

பைண்ட் வால்யூம்களுக்கு ஆர்டர் செய்வோர் முன் பணமனுப்பினாலன்றி புத்தகம் அனுப்பப்படமாட்டாது.

சொற்பப்பிரதிகளே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவாக ஆர்டர் செய்யவும்.

மானேஜர், சிந்தாமணி ஆபீஸ்,
மயிலாப்பூர், சென்னை.

## சகோதரி வி. பாலம்மாள் எழுதிய தமிழ் நாவல்கள்.

### உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

Crown 8vo. 64 பக்கங்கள். விலை 0-5-0.

ஆசார சீர்திருத்தத்தின் அவசியத்தையும் பணத்திமிற் கொண்டவர்களின் துஷ்டச் செய்கைகளையும் கற்புடை மகளிரின் உயர்குணத்தையும் எடுத்துரைப்பது.

### ஸுபோத ராம சரிதம்.

Royal 16mo. 56 பக்கங்கள். விலை 0-6-0.

வடமொழி கற்க விரும்புவோர்களுக்கென சிந்தாமணியில் அர்த்தத்துடன் வெளிவந்து கொண்டிருக்கும் ராமாயண சுலோகங்களின் தனிப் புத்தகம். ஆறு காண்டங்களுமடங்கியது.

### திலகவதி.

Crown 8vo. 320 பக்கங்கள். விலை 1-4-0.

கதாநாயகியான திலகவதி தனக்கேற்பட்ட பல கஷ்டங்களையும் சகித்து தீர்க்காலோசனையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளல் படிக்கப் படிக்க உற்சாகத்தையளிக்கும். ஹிந்துக்குடும்ப சீர்திருத்தங்களைப்பற்றிய விவரங்களை இக்கதையில் நன்கறியலாம். பெண்களுக்குரிய கல்வி, தைரியம், பொறுமை, அடக்கம், சமயோசிதபுத்தி, தன் வகுப்பினரிடத்தன்பு, சாந்தம் இவைகளைத் தெளிவாயெடுத்துரைப்பது. பெண்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய உயர்தரக் கதை. ஒரு முறை படிப்பதால் மட்டும் மனம் திருப்தி யடைந்து விடாமல் பன்முறை படிக்கவேண்டுமென்ற பேராவலை விளைவிக்கும்.

## தேவதத்தன் அல்லது நேச சேவை.

Royal 16mo. 64 பக்கங்கள் விலை 0-5-0.

தேசாபிமானத்தின் உயர்வையும் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமையையும் தேசாபிமானிகளின் கடமையையும், சுய நலப்பிரியர்களின் ஆர்ப்பாட்டச் செயல்களையும் பெண்மக்களின் உயர் குணத்தையும் நன்கு எடுத்துரைப்பது. முழுதும் படிக்கும் வரை புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வாராது.

---

# இதரப் பிரசுரங்கள்.

## இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

Crown 8vo. 216 பக்கங்கள் விலை ரூ. 1.

முற்காலத்தில் இந்தியா படைத்திருந்த செல்வப்பெருக்கையும் இந்தியா செய்துவந்த தொழில் முறைகளையும் இந்தியா அயல் நாடுகளில் செய்து வந்த வியாபாரங்களின் சிறப்பையும் இந்திய நெசவுக்காரரின் வேலைத்திறனையும் இவைகள் அழிவுற்ற காரணங்களையும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு ஆடையை இந்தியா அளிக்கவல்லதா என்ற சந்தேகத்தை நீக்கக்கூடியது. இந்தியா சுபிட்சமடையும் வழியை இப்புத்தகத்தைப்படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

## ராஜ சேவையும் இந்தியரும்.

Demy 8vo. 210 பக்கங்கள் விலை 2-0-0.

உயர்தர உத்தியோகங்கள் எவ்வளவென்பதையும் அவைகளில் இந்தியர்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவென்பதையும் அதிகப்படியாக பெற இந்தியர்களுக்கு உரிமையுண்டா வென்பதையும் விளக்கிக்காட்டுவது.

மேற் கண்ட ஆறு புத்தகங்கடங்கிய செட் ஒன்றுக்கு ஆர்டர் செய்யும் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியன்றி 4-8-0 ரூபாய்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். அபேத ராம சரிதம் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபால் கூலியின்றி ஆறு அணாவுக்கு வி. பி. யிலனுப்பப்படும்.

வேண்டுவோர்

சகோதரி வி. பாலம்மாள்,

சிந்தாமணி பத்திராதிபர்,

மயிலாபூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமிகள் எளிதிற் படித்தறியும்படி அடியிற் கண்ட புத்தகங்கள் ஸ்ரீமதி P. மங்களாபாயி அவர்களால் மராட்டி பாஷையிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. மகாராஷ்டிரத்தில் இவைகள் உலாவாத வீடுகளும் பாடசாலைகளும் இல்லை. இவைகளை நம் சிறுவர்கள் படித்தல் அவசியம்.

| | |
|---|---|
| பால ராமாயணம் டபிள் கிரவுன் விலை அணா | 0—6—0 |
| பால பாரதம் டெ. 92-பக்கங்கள் அணா. | 0—8—0 |
| பால பாகவதம் டெ. 87-பக்கங்கள் அணா. | 0—8—0 |

தபாற் கூலி வேறு.

வேண்டுவோர் மானேஜர், 'சிந்தாமணி' ஆபீஸ்

மயிலாபூர், சென்னை என்றெழுதவும்.

# "சிந்தாமணி"

மூன்றாவது வருஷம்.

ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை 1924 ஆகஸ்டிலிருந்து வெளிவருவது

பத்திராதிபர் : சகோதரி வி. பாலம்மாள்.

D. Crown 8vo. 64 பக்கங்கள். உயர்ந்த அபிப்பிராயங்கள். சிறந்த வியாசங்கள்.

வருஷ சந்தா (தபாற் கூலி உள்பட) உள்நாடு ரூ. 5; வெளிநாடு ரூ. 6.

தனிப்பிரதி அணா 8. மாதிரிப்பிரதி வேண்டுவோர் 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

சிந்தாமணி இந்தியா, பர்மா, சிலோன், தென்னாபிரிக்கா, மலாய் நாடுகள் முதலிய தேசங்களிலிருக்கும் தமிழர்கள் வீடுகளில் உலாவுவதால் இதில் செய்யப்படும் விளம்பரங்கள் மிகவும் லாபகரமாகவே யிருக்கும்.

விளம்பர விகிதங்கள் :—பிரதி மாதத்திற்கும் ஒரு பக்கம் ரூ. 10; அரைப் பக்கம் ரூ. 6¼; கால் பக்கம் ரூ. 3. விளம்பரங்கள் தோன்றும் இதழ்கள் இனமாய் அனுப்பப்படும்.

முன் பணமின்றி விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

நீடித்தகால விளம்பரங்களுக்குப் பிரத்தியேகமான விகிதங்கள். விவரத்திற்குப் பின்கண்ட விலாஸத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

சிந்தாமணி ஆபீஸ்,

ஸலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாபூர், சென்னை.

---

## பத்திராதிபர் அறிவிப்பு.

1. வியாச மெழுதுவோர் தயவு செய்து ஒரே பக்கத்தில் தெளிவாய் எழுதியனுப்புவதுடன் பெண்மக்களின் முன்னேற்ற விஷயமாகவே பெரும்பாலும் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. வியாச மெழுதுவோர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

3. ஓரணா அனுப்பினால் பிரசுரிக்கப்படாத வியாசம் திருப்பியனுப்ப சௌகரியப்படும்.

4. வியாசங்கள், மதிப்புரைப் புத்தகங்கள், இவைகளை பத்திராதிபர், "சிந்தாமணி," "விவேகாச்ரமம்," சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை, என்று எழுதவும்.

5. மாதிரிக் காபி வேண்டுவோர் எட்டணா ஸ்டாம்பு அனுப்பவும்.

6. நிருபம் எழுதுவோர் அவைகளில் வரக்கூடிய பாடல்களைப் பிழையின்றிக் கவனித்து எழுதுதல் முக்கியம்.

7. நிருபங்களில் விசேஷமாகப் பாடல்களைப் போட்டு நிரப்பிவிடாமல் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும், மற்றொரு சமயம் வரக்கூடிய வியாசத்தை முழுவதும் ஒரே தடவையிலும் எழுதியனுப்பும்படி விஷயதானம் செய்வோர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

8. எட்டணா முன்பணம் அனுப்பிச் சிந்தாமணி மாதிரிக் காபி பெற்றுக் கொண்டவர் சந்தாதாராகும் பக்ஷத்தில் மாதிரிக் காபி விலை எட்டணா வருஷ சந்தாவில் கணக்கிட்டுக் கொள்ளப்படும்.

9. சந்தாவனுப்புங்கால் சந்தா நம்பர், முழு விலாசம் இவைகளுடன் இன்னாருக்காக இன்னார் அனுப்பிய தென்பதையும் தெளிவாயக் குறிப்பிடல் அவசியம்.

10. சிந்தாமணியின் நிர்வாக விஷயங்கள், விளம்பர சம்பந்தமான கடிதங்கள் முதலியவைகளுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,

சிந்தாமணி ஆபீஸ்,

சலிவன்ஸ் கார்டன் ரோட், மயிலாப்பூர், சென்னை.

கேஸரியின்

## லோத்ரா.

ஸ்திரீகளுக்குள்ள சகல கஷ்டங்களையும் நிவர்த்திக்கும்.

பயனடைந்த பெண்மணிகளின் அபிப்பிராயம்

ஸ்ரீமதி மிஸர்ஸ் காத்தர் எழுதுகிறார்: "நான் பத்து வருஷ காலமாய் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த ருது சூலை, வயிற்று வலி கேசரியின் 'லோத்ரா' வை உபயோகித்த பிறகு அத்தியாச்சரியமாய் நிவர்த்தியாயிற்று."

ஸ்ரீமதி கோபால பணிக்கர் எழுதுவதாவது:—'லோத்ரா' உபயோகித்ததால் நானும் என் சகோதரியும் ருது சூலைக் கஷ்டத்தினின்று நிவர்த்திக்கப்பட்டோம்.

இது எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,
ஆயுர்வேத அவுஷத சாலை, எழும்பூர், மதராஸ்.

---

இனாம்! இதுவே தகுந்த தருணம்—என்றுமில்லா லாபம். இனாம்!!




எங்களுடைய அழகான 18 காரெட் ரோல்டுகோல்டு ரேயர் லீவர்கோல்டு ஷைனிங் டயல் பாக்கட் கடியாரத்தைப் பிரபலப்படுத்தும் பொருட்டு நாங்கள் ஒரு "டீ" டைம் பீஸை ஷெடி கடிகாரத்தை வாங்குவோருக்கு இனாமாக கொடுக்கிறோம்.

ஐந்து வருடங்கள் உத்திரவாதம் செய்யப்பட்டுள்ளது.

ஆயுள் பரியந்தம் சரியாக ஓடக் கூடியது. விலை ரூபாய் 4—12—0.

எமது விலாசம்:— சிக்னல் வாட்ச் கம்பெனி,
தபால் பெட்டி நெம்பர் 243, மதராஸ்.

---

## ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

சனாதன தர்மப் பிரசாரம் செய்யும் சிறந்த தமிழ் மாதப் பத்திரிகை.

வருஷ சந்தா:— உள்நாடு ரூ. 3 வெளிநாடு ரூ. 4

விலாசம்:
மானேஜர், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம், ஸ்ரீராம கிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.



## குழந்தைகளின் மித்திரன்.

## பாலமித்ர மாத்திரை.

இதைக் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், வியாதிகளை வேரோடு களைந்து தேக புஷ்டியையும், பலத்தையும், தேககாந்தியையும் கொடுத்து எப்போதும் தேஜசுடனும், புன் சிரிப்புடனும் இருக்கும்படியாகச் செய்கிறதோடு மனைவியாகுலத்தையும், அழுத முகத்தையும் அகற்றுகிறது.

300-மாத்திரைகளடங்கிய டப்பி 1க்கு ரூ. 1—0—0

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்
26 பிராட்வே, மதராஸ்.

வெளியாகிவிட்டது!
வெளியாகிவிட்டது!!

"வியாசக்கோவை"

இஃதோர் சிறந்த தேசிய நூல். இதில் தேச முன்னேற்றத் திட்டங்களும், முஸ்லிம்களின் முன்னேற்றத் திட்டங்களுமான பல அரிய விஷயங்கள் காணப்படும். ஸ்ரீ வைகுண்டம் வ. மி. வம்சுதீன் சாகிப் இதன் ஆசிரியர். டாக்டர் பி. வரதராஜுலு அவர்களின் முன்னுரையுடன் கூடியது. இந் நூல் ஒவ்வொரு இந்தியன் கையிலும் இருக்க வேண்டியது. விலை ரூ 1—0—0.

ஏற்கனவே பெயரைப்பதிவு செய்து கொண்டவர்களுக்கு விலை அணா 0—12—0.

மானேஜர், "சிந்தாமணி"
சலிவன்ஸ் கார்டன் ரோட்,
மைலாப்பூர், சென்னை.

---

## சுதேச பரிபாலினி.

ரங்கூனிலிருந்து வெளியாகும் தமிழ் தினசரி பத்திரிகை.

பத்திராதிபர்: P. E. முதலியார்.

பர்மாவில் நடைபெறும் அரசியல் முதலிய சகல விஷயங்களையும் வெளியிட்டுவரும் தினசரி இது ஒன்றே. விளம்பரம் செய்வோருக்குப் பயனளிக்கக்கூடியது இதுவே.

வருஷசந்தா: உள்ளூர்: ரூ.22 வெளியூர்: ரூ. 26

விலாசம்: மானேஜர், சுதேச பரிபாலினி,
31-32 பார் ஸ்டிரீட், ரங்கூன்.

## 'தமிழ் நேசன்.'

பத்திராதிபர் கெ. நரசிம்மய்யங்கார்.

இப்பெயருள்ள தமிழ் வாரப் பத்திரிகை கோலாலம்பூரினின்றும் பிரதி புதன்கிழமை தோறும் வெளிவருவதாகும். மலேயா நாட்டிலுள்ள தொழிலாளர்களின் முன்னேற்றங் கருதி முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் பரஸ்பரம் அபிமானத்தையும் ஒற்றுமையையும் விருத்தி செய்யக்கூடிய வழியில் நடைபெறும் இப்பத்திரிகை தமிழரால் ஆதரிக்கக் கூடியதாகும். வருஷ சந்தா இந்தியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகளுக்கு ரூ. 7—0—0. வேண்டுவோர், மானேஜர், 'தமிழ்நேசன்,' 212, பத்து ரோட், கோலாலம்பூர் (F. M. S.) என்று எழுதவும்.

# தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. G. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M.A. விலை அணு 10.
   Approved as a Library Book.

2. போஜ சரித்திரம்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L. ஸப்ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணு 10.
   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

3. ராஜ ராஜ சோழன் I.—ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியா ரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணு 8.
   Approved as a Text-Book suitable for School use.

4. இட்டார்க்கு இட்ட பலன்—ஆசிரியர் மிஸ் J. பொன்னுசாமி ராவ். விலை அணு 10
   Approved as a suitable Text-Book, vide *Fort St. George Gazette*, dated 24-7-23.

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் (சிந்தாமணி பத்திராதிபர்) எழுதியது. ராவ் ஸாஹெப் S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ. 1—4—0.
   Approved as a Library Book.

6. தமிழ் வசன லக்ஷணம்—G. தாமோதர முதலியார், B.A., எழுதியது. விலை அணு 12.
   Approved as a Text-Book for Schools and Colleges, vide *Fort St. George Gazette*, 21st October 1913.

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1—6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணு 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7—12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணு 12.
   Parts I and II are approved as suitable class-books, vide *Fort St. George Gazette*, Part I-B, page 478, dated 3-6-24.

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதராஜ ராவ் இயற்றியது. விலை அணு 8.
   Approved as a Text-book suitable for School use, vide *Fort St. George Gazette*, Part I-B dated 19-5-1925.

10. மனு சரித்திரம்—சென்னை க்ரிஸ்டியன் காலேஜ் தமிழ் போதகாசிரியாரயிருந்த ஆர். இரங்காசாரியார், M.A., L.T., அவர்கள் இயற்றியது. விலை அணு. 10.

11. காளிதாஸன்—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B.A., B.L., ஸப் ஜட்ஜ், தஞ்சாவூர். விலை அணு 12.

SRINIVASA VARADACHARI & CO., 4, MOUNT ROAD, MADRAS.



ஸ்ரீமதி N. குப்பம்மாள் அவர்கள் 24-3-26-ல் டெலுக் ஆன்ஸனிலிருந்து எழுதுவது.

பூமகள் திலகம்போல் நின்றிலங்கும் அன்பிற்கினிய சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது நன்றியறிதலான வந்தனம். தங்களுடைய சிந்தாமணி என்ற உயர்தர மாதத் தமிழ்ப் பத்திரிகை தமிழ் மக்களனைவரும் ஆதரிக்கக் கூடியவாறு அமைந்திருத்தல் போற்றத் தக்கதாம். இவ்வுயர்தரப் பத்திரிகை இன் பல வழிகளிற் சிறப்புற்று விளங்க தமிழ் நாடெங்கும் பரவவேண்டுமென்பது எனது எண்ணம். ஆகையால் யான் சந்தாதாரராகச் சேர வேண்டுவதுடன் என்னால் கூடுமானவரை வியாசங்களையும் எழுத நினைக்கிறேன். பெண் கல்வியைப் பெருகச் செய்யும் செல்வியே! தங்களுடைய பதிலை எதிர் பார்க்கிறேன்.

---

ஸ்ரீமதி பெரிய நாயகம் (மிஸஸ் P. R. பத்தர்) அவர்கள் 13—3—26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

தெய்வீகம் பொருந்திய சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமுகத்திற்கு, தாங்கள் பிரசுரித்து வரும் "சிந்தாமணி"யை வாசித்து வந்ததில் ஒவ்வொன்றும் மிகவும் உற்சாகத்தையும் நல்வழிக்கு ஆதாரவையும் அளிப்பதுடன் இவ்வரிய பெரிய வியாசங்களும் பண்டைகாலத்து சரித்திரங்களும் தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றங் கருதி அவர்கள் தற்கால நிலைமையினின்றும் உயர் நிலை யெய்துவதற்கு வேண்டிய கல்வி, ஒழுக்கம், நாகரிகம் முதலிய மகளிர்க் குரித்தான நற்குணங்களைப் போதிப்பதான விஷயங்கள் தங்கள் பத்திரிகையில் வரையப்பட்டுள்ளன. ஸ்திரீகள் விஷயத்தில் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டிருக்கும் தங்களுக்கு நன்றியை எவ்விதம் பாராட்டுவதென்று எனக்குத் தெரியவில்லை.

---

ஸ்ரீமான் R. M. A. L. மாணிக்கம் பிள்ளை அவர்கள் 20-6-26-ல் மைடானிலிருந்து எழுதுவது.

சகோதரி வி. பாலம்மாள் அவர்களுக்கு எனது மனமார்ந்த வந்தனம். பெண்கள் விஷயமாய் கவனம் செலுத்தி அவர்கள் முன்னேறும் வழியைப் பற்றி தாங்கள் முயற்சி யெடுத்துக் கொண்டதைப் பற்றியும் சிரமம் பாராது பத்திரிகை நடத்தி வருவது பற்றியும் சகோதரர்கள் சந்தோஷமடைகிறார்கள். தங்களுக்கு கடவுள் பூரண ஆயுளைக்கொடுத்து சிந்தாமணியை என்றும் நடத்தி வரும்படியாய் சதா கடவுளை பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம்.

---

24—9—25-ல் சித்தியவானிலிருந்து ஸ்ரீமான் R. M. P. R. ராமசுவாமி செட்டியார் அவர்கள் எழுதுவது:—

அம்மா,

ஒரு காலத்தில் நாகரிகமே உருவாக விளங்கி மற்ற தேசங்களுக்கு வழி காட்டியாக இருந்த நம் நாடானது பல காரணங்களினால் நவ நாகரிகத்தில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருக்கும் இச்சமயத்தில் பொதுவாகத் தமிழ் மக்களின் வளர்ச்சியையும் சிறப்பாக நம் பெண் மணிகளின் வளர்ச்சியையுமே முக்கிய நோக்கமாகக் கொண்டு பல அறிஞர்களின் அரிய கட்டுரைகளுடன் சிறந்த அறிவாளியும் தேசாபிமானியுமாகிய தங்களால் நடத்தப்பெறும் நமது "சிந்தாமணி" மேலும் மேலும் அதிக சிறப்புடன் நீடூழி காலம் நிலவுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவார்.

ஸ்ரீமதி செ. ராசம்மாள் ஸிலோனிலிருந்து 2-11-1926-ல் எழுதுவது.

சாத்வீகம் தங்கிய சகோதரிக்கு நமஸ்காரம்,

தாங்கள் நந்தமிழ் நாட்டிற்கும் விசேஷமாக அதிலுதித்துள்ள பெண்மக்களுக்கும் மிகவும் பிரயாசையுடன் வெளியிட்டு வரும் சிந்தாமணியை கையில் எடுத்தவர்கள் முற்றும் வாசியாமல வைக்க விரும்பாததுடன் அடுத்த சஞ்சிகைகளையும் பார்க்க விரும்புகின்றனர். தங்களைச் சகோதரியாக அடையப் பெற்ற எங்கள் பாக்கியமே பாக்கியம். தாங்கள் புரியும் இந்நன்றிக்கு பிரதியுபகாரஞ் செய்ய எம்மால் இயலாதாயினும், தங்களுக்கும் தங்கள் சிந்தாமணிக்கும் நீடித்த ஆயுளைக் கொடுக்குமாறு படைத்தளித்துக் காக்கவல்ல பழம் பொருளைப் பன்முறை வேண்டுகிறேன்.

---

27—1—26-ல் சிலோனிலிருந்து ஸ்ரீமான் டி. ஜெ. பரமானந்தன் அவர்கள் எழுதுவது:—

சிந்தாமணி சஞ்சிகையைப் படித்ததிலிருந்து எனக்குண்டான மனமகிழ்ச்சிக் கோரளவில்லை. விசேஷமாய் தமிழ் நாட்டு ஸ்திரீகளின் நன்மைக்கென்று சகல கஷ்ட நிஷ்டூரங்களையும் பாராது மெத்தப் பிரயாசையுடன் தாங்கள் நடத்திவரும் சஞ்சிகையை எல்லாம் வல்ல இறைவன் மேன்மேலும் ஆசீர்வதிப்பாராக. "சிந்தாமணி" நீடூழி வாழ்க. தாங்கள் அன்புடன் எனக்கு சஞ்சிகையும் நிருபமுமனுப்பியதற்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். அனுப்பியிருக்கும் சந்தாவைப் பெற்றுக்கொண்டு என்னையும் ஓர் சந்தாதாராகப் பதிவுசெய்து கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

---

ஸ்ரீமான் ஜி. பக்கிரிசாமி முதலியார் அவர்கள் 22—1—25ல் சிங்கப்பூரிலிருந்து எழுதுவது.

சிந்தாமணி பத்திராதிபர் அவர்களுக்கு,

தாங்கள் வெளியிட்டு வரும் சிந்தாமணி என்னும் தமிழ் மாதப்பத்திரிகையின் 1924 டிசம்பர் இதழ் எனது நண்பர் மூலமாக சமீபத்தில் எனக்குக் கிடைத்துக் கண்ணுற்றேன் அதிலடங்கிய சில விஷயங்களைப் பார்க்க என்மனது குதூஹலமடைந்தது. ஆகையால் என்னையொரு சந்தாதாராகச் சேர்த்துக்கொண்டு பழைய பிரதிகளையுமனுப்பக் கோருகிறேன்.

ஸ்ரீமான் மு. சா. கபாலி அவர்கள் 9—2—26ல் பினாங்கிலிருந்து எழுதுவது.

நம் பாரத நாட்டில் அவதரித்து செந்தமிழ்த் திலகம் போல் விளங்கும் சிந்தாமணி வரப்பெற்றேன். உள்ளம் மகிழ்ந்தேன். பெண் கல்வி முன்னேற்றத்தைப்பற்றியும் நம் தாய் நாடு தூங்கிக் கொண்டிருந்ததைத் தட்டி எழுப்பி நல்கி செய்த நன்றிக்கு........வைகறும்........ மாற்றலரிது. நம் சகோதரிக்கு நீடித்த ஆயுளளித்து இம்முயற்சிக்கு கடவுள் கருணை புரிய வேண்டுகிறேன்.

202615
Y15m71.N24CM
N263.11-12

கணபதி துணை.

## வேதாந்த தருக்க போதகாசிரியர் திருவாளர் சென்னை கோ. வடிவேலு செட்டியாரவர்கள் அபிப்பிராயம் 8-5-26.

ஸ்ரீமதி சகோதரி வி. பாலம்மாள் அவர்கள் சமூகத்திற்கு; தாங்கள் எனது பார்வைக்குத் தந்த தங்களது 'சிந்தாமணி' என்னும் பெயரிய மாதபபத்திரிகை (மலர் 2 இதழ் 7) யை நான் முற்றுஞ் செவ்வையாகப் படித்துப் பார்த்தேன். பெண் மக்கள் அபிவிருத்தியாதற்குரிய விஷயங்கள் மிக அழகாகத் தெளிவான நடையிலெழுதபபட்டு விளங்கும் தங்கள் பத்திரிகை ஒவ்வொரு வீட்டிலும் அத்தியாவசியமாயிருக்கவேண்டு மென்பதும், இப்பத்திரிகையைப் படிப்பவர் சாஸ்திரார்த்தம், மருத்துவ முறை தேச சரித்திரம், இல்லற வொழுக்கம், கதை போக்கு முதலியவற்றினின்றியமையாதான பலவற்றையும் மிகத் தெளிவாயறிந்து கொள்ளுதற்குரியவராவாரென்பது எனதபிப்பிராயமாம்.

நேரிசை வெண்பா.

சிந்தாமணியாய்த் திகழுஞ்சிந் தாமணியை
நந்தாது நாளு நலமாகப்—பந்தமறக்
கற்பார்க்கு நல்ல கவினுண்டாம் வாழ்வுண்டாம்,
பொற்பாயி தோங்க பொலிந்து.

---

7-2-25-ல் டர்பனிலிருந்து ஸ்ரீமான் R. M. பிள்ளை அவர்கள் எழுதுவது:—

தேவரீர் சகோதரி பாலம்மா அவர்களுக்கு தங்களுக்குச் சேரவேண்டிய சந்தாவை யனுப்பியிருக்கிறேன். இற்க என்னுடைய மனைவி தங்கள் மாதாந்தப் பத்திரிகை சிந்தாமணியைப்பற்றி தன்னைப் போன்ற பெண்களிடம் பத்திரிகையிலுள்ள இனிய விஷயங்களைச் சொல்லி வருவதுடன் "சிந்தாமணி" கண்டு ஆனந்தனங் கொண்டதாக என் மூலம் தங்களுக்கு அறிக்கை செய்யச் சொன்னதுடன் தங்களைப் பார்க்கப் பிரியமாயிருப்பதால் தங்கள் உருவப்படம் ஒன்றை யனுப்பும்படிக்கும் எழுதச் சொல்லியிருப்பதால் ஒரு படம் அனுப்பி வைக்கவும்.

---

7—10—25-ல் கெட்டாவிலிருந்து ஸ்ரீமதி மிஸ் குணரத்தினம் நாயுடு எழுதுவது:—

சகோதரி அவர்களுக்கு,

தாங்களனுப்பிவரும் "சிந்தாமணி' எனும் பெயர் பெற்ற மாத சஞ்சிகையை மாதந் தோறும் வரப்பெறுகிறேன். அதன் சிறப்பை என்னென்று வரைவது! 'சிந்தாமணி' நீடூழி வாழ ஸ்ரீ கண்ணபிரான கருணைபுரிவாராக.

---

ஸ்ரீமதி அம்புஜவல்லி அம்மாள் 19—9—'26ல் எழுதுவது.

பிரியமுள்ள சகோதரி பாலம்மாளுக்கு,

சென்ற இரண்டு வருடங்களாய் நடந்து வரும் இச்சிந்தாமணியை ஆவலுடன் படித்து வருகையில், அதில் வெளிவரும் விஷயங்கள் சிறந்தவைகளாகவும், ஸ்திரீகள் முன்னேற்றத்திற்கு சாதகமானவைகளாகவும், தற்காலப் போக்கிற்கு ஏற்றவைகளாகவும் இருக்கக் காண சந்தோஷப்படுகிறேன். மேலும் சிந்தாமணியில் வெளிவரும் விஷயங்கள் தெளிந்த சுலபமான நடையில் வரயப்பட்டிருப்பதானது அதிக உயர்ந்த தமிழ் கல்வியாவது இலக்கண பரிச்சயமாவது இல்லாதவர்களும் அவரவர்கள் நுண்ணறிவிற்கு எட்டியவாறு ஏதோ சில விஷயங்களை எடுத்து கூற இடந்தருவதாய் இருக்கிறது.



ஸ்ரீமான் V. M. M. ஆச்சாரி அவர்கள் 16—3—'26ல் டர்பனிலிருந்து எழுதுவது.

அன்புள்ள சகோதரிக்கு வந்தனம். க்ஷேமம்.

இதில் வைத்திருக்கும் போஸ்டல் ஆர்டரைப் பெற்றுக்கொண்டு நமது நாட்டில் திலகமாக விளங்கும் அருமை பெருமை பொருந்திய "சிந்தாமணி" என்னும் பத்திரிகையை கீழ்க்காணும் விலாசத்திற் கனுப்பி வரவும். தாங்கள் மேரிட்ஸ்பர்க் வாலிபர்களுக்கு விடுத்த செய்தியைப் பத்திரிகையில் பார்த்து மிகவும் ஆனந்த மடைந்தேன். தாங்கள் நமது பாத கண்டத்தில் நம் பெண்மணிகளின் முன்னேற்றங்கருதி சிரமம் பாராமலும் சுயநலத்தைக் கருதாமலும் தொண்டு புரிந்து வருவதைப் பார்க்கஅதிகசந்தோஷமடைவதுடன் தங்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் தீர்க்காயுளும் திடகாத்திரமும் அளித்துத் தாங்கள் எடுத்துள்ள கைங்கரியத்தை சித்தி பெறச் செய்து தங்கள் நாமம் இவ்வுலகில் நீடித்திருக்கச் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

---

ஸ்ரீமான் மு. சி. சிற்றம்பலவன் அவர்கள் இலங்கையிலிருந்து 7-10-1926-ல் எழுதுவது.

எம் சகோதரி ஸ்ரீமதி வி. பாலம்மாள் அவர்கள் திவ்விய சமூகத்திற்கு,

தங்களாலுதிருறும் "சிந்தாமணியின்" எழுச்சியால் தமிழ் மகளிலுட் கிடந்த பேதமை அகல வாரம்பிக்கின்றது. அம்மா நந்தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் தாழ்ந்த நிலைமையை நோக்கிப் பரிதவித்து அவர்கள் முற்காலத்து வாழ்ந்த பெண்மணிகளின் சிறியவியல்லை யொட்டுமாறு வற்புறுத்தி அந்நிலைமைக்கு இவர்களை யுயர்த்து மாற்றலைக் கொண்டும் "சிந்தாமணியின்" செம்மையை வரைய இக்கடிதமுமிடந்தரா எனினும் எம் சகோதரிகளடைந்த சீர்திருத்தத்தையும் அவர்கள் தங்களினிடை கொண்டிருந்த மருலை ஒழித்ததும் இதனால் நானடைந்த உற்சாகத்தையும் இஃது போன்று நாங்களடைந்த முன்னேற்றமே இச்சிந்தாமணியின் ஆற்றலை வெளிப்படுத்தும்.

அம்மா! தங்களிடமிருந்து புறப்படும் சிந்தாமணியின் வாசனையை நுகர்ந்த பெண்மணிகளிற் சிலரை நான் கண்ட பொழுது அவர்கள் சிந்தாமணியின் கட்டுரைகளைத் தங்களுள்ளத்திற் பதித்தமையினால் அதைக் கடைபிடித்து தாங்கள் நடப்பதாலும் தாங்கள் முன்னிருந்த நிலைமையினின்றும் இப்பொழுது மறுபிறப்படைந்திருக்கின்றோம் எனக் கூறினார்கள். இதுமட்டோ!!! இச்சிந்தாமணியைக் கண்ணுறும பெண்கள் ஒவ்வொருவரும் தங்களை யுணர்ந்தது மல்லாமல் தாங்கள் இதுகாறும் நடந்து வந்த வழிகளை அறவே ஒழித்து விட்டனர்,

அம்மா! தங்களால் வெளிப்படும் சிந்தாமணிக்கும் தங்களுக்கும் எம்பெருமான் நீண்ட ஆயுளைத் தந்து அருள் புரிவாராக.

---

ஸ்ரீமதி டி. நடராஜா அவர்கள் 13—6—26ல் பாஜாமிலிருந்து எழுதுவது.

தாங்கள் அனுப்பிய சிந்தாமணி இதழ்களைப் படித்து விஷயங்களின் ரசங்களை யுணர்ந்து மகிழ்ச்சியடைந்தேன். எங்கள் தமிழ் நாட்டின் கண்ணுள்ள சகோதரிகளின் முன்னேற்றத்தை விரும்பி தாங்கள் எடுக்கும் பிரயாசையும் இரக்கமும் எவரும் வியக்கத் தக்கதே இவ்வரிய பத்திரிகை பெண்களுக்கு உற்ற துணையாயிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. தங்கள் பத்திரிகைத் தழைத்தோங்கும் பொருட்டுத் தாங்கள் நீடூழி வாழச் சிவபிரான் கிருபை பாலிப்பாராக.

# LIFE MEMBERS.

1. M.R.Ry. The Hon'ble P. K. Nambyar Avl., M.L.C. (S.S.) Penang
2. ,, Dr. K. Muttukumaru J.P., Penang.
3. ,, Rm. N. Nagappa Pillay Avl., Penang.
4. ,, V. Nadasam Pillay Avl., J.P., Penang.
5. ,, A. Veerappa Pillay Avl., J.P., Penang.
6. ,, M. Doari Ross Avl., Penang.
7. ,, O. E. Mohamed Sheriff Avl., Penang.
8. ,, S. Ramanathan Chettiar Avl., Butterworth.
9. ,, K. P. Mohamed Kassim Saheb Avl., Penang.
10. ,, C. Yahambaram Pillay Avl., Penang.
11. ,, M. A. M. Alagappa Chettiar Avl., Penang.
12. ,, S. N. S. T. Sathappa Chettiar Avl., Penang.
13. ,, S. N. S. Narayanan Chettiar Avl., Penang.
14. ,, S. Muthiah Nadar Avl., Penang.
15. ,, S. P. Nadasam Pillai Avl., Penang.
16. ,, O. R. M. O. M. Alagappa Chettiar Avl., Penang.
17. ,, S. M. P. L. Saminathan Chettiar Avl., Devakottai
18. ,, A. K. M. Meyyappa Chettiar Avl., Bukit-Mertajam.
19. ,, P. L. R. M. Arumugam Chettiar Avl., Penang.
20. ,, K. Vengadasalam Pillay Avl., Penang.
21. ,, S. Veeraswami Avl., Bar-at-law, Kuala-Lumpur.
22. ,, K. S. Dorai Avl., Kuala-Lumpur.
23. ,, Dr. A. Visvalingam, Kuala-Lumpur.
24. ,, M. S. Vadivelu Pillay Avl., Kuala-Lumpur.
25. ,, K. S. Pillai Avl., Advocate, Kuala-Lumpur.
26. ,, K. Kandiah Avl., Klang.
27. ,, T. R. Subramania Iyer Avl., Klang.
28. ,, S. S. Iyer Avl., P. W. D., Klang.
29. ,, Gopala Iyer Avl., Kuala-Lumpur.
30. ,, M. Kumaraswami Pillai Avl., J.P., Kuala-Lumpur
31. ,, R. D. Ramaswami Avl., J.P., Kuala-Lumpur.
32. ,, Nilakanta Iyer Avl., Klang.

# LIFE MEMBERS.

*(Continued from the inner page.)*

33. M.R.Ry. W. B. Rangaswami Iyengar Avl., Port Swettenham.
34. „ R. N. Ranga Iyer Avl, Kuala-Lumpur.
35. „ V. R. Subramania Iyer Avl., Kuala-Lumpur.
36. „ Dr. P. Varadaraja, Port Swettenham
37. „ K. A. Narayanan Avl, Kuala-Lumpur.
38. „ E. Devi Radha Avl., Kuala-Lumpur.
39. „ Dr John Ponnambalam Avl., Kuala-Lumpur.
40. „ W. Ponnudurai Avl., Kuala-Lumpur.
41. „ S. Paramananda Pillay Avl., Lumut.
42. „ K. S. Ananthakrishna Iyer Avl.. Port Swettenham
43. „ S. M. Ponniah Avl.. Klang (F.M S.)
44. „ S. Ponniah Avl, Port Swettenham.
45. „ A. K. Katheappa Thevar Avl., Saigon
46. „ S. K. Ramasamy Pillai Avl., Tapah
47. „ A. S. Thampoo Avl., P.W.D., Tapah.
48. „ C. Valersamy Avl., P.W.D., Sungei.
49. „ D. S. Paramesvara Iyer Avl., P.W D., Sungei.
50. „ T. B. Ramakrishnan Avl., Sungei
51. „ E. Chinnayah Avl, Sungei.
52. „ V. Subramanian Avl., Sungei
53. „ K Elankai Nayagam Avl, Bidor.
54. „ L. Thivy (திவி) Avl., J P., Kuala Kangsar.
55. „ A. Velu Pillai Avl., Tapah.
56. „ N Elaithambi Avl., J. P., Taiping.
57. „ M. Ratnasamy Pillai Avl, Taiping.
58. Miss Sornaletchumy, Mantin.
59. M.R.Ry. P. Sinnathamby Avl., Gemas.
60. Miss Kamaleswari, Port Swettenham.
61. M.R.Ry. S. Thamboo Avl. Port Swettenham.
62. „ Sona Sockalingam Chettiar Avl. Kuala Muda
63. „ O. R. M. O. M. S. P. Natchiappa Chettiar Avl., Tapah.

Printed by Srinivasa Varadachari & Co., 4, Mount Road, Madras.
and Published by Sister V. Balammal, Sullivan's Garden Road, Mylapore, Madras.—2,020—30-7-1927.